**Copies can be had from the Assistant Director, Government Publiction Depot, 110, Anna Salai, Chennai-600 002.**



©

**Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.**



வெளியீடு : *5-9-2018* Issued: 5-9-2018


# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு
# (பதினைந்தாவது பேரவை)

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT
# (FIFTEENTH ASSEMBLY)

**வியாழக்கிழமை, ஜனவரி 11, 2018—தொகுதி 36—எண் 1**

**Thursday the 11th January 2018—Volume 36—No. 1**


*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.*

**Legislative Assembly Secretariat, Chennai-600 009.**

விலை ரூ. **3.00]** **[Price Rs. 3.00**

## 11–1–2018

## உள்ளடக்கம்


பக்கங்கள்

ஆளுநரும் அமைச்சரவையும் vii-xiii

Governor and Council of Ministers xv-xix

பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் xxi-xxiv

பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) xxv-xl

**1. வினாக்கள்–விடைகள்—**

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் *1-40*

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் *3* மற்றும் *4*) *40-188*

**2. தகவல் கோரல்—** *188-198*

(அ) வெளி மாநிலங்களில் கல்வி பயிலும் தமிழக மாணவர்களுக்கு பாதுகாப்பு வழங்குதல் *188-191*

திரு. மு.க. ஸ்டாலின் *188-190*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர் *190-191*

(ஆ) அரசு நிகழ்ச்சிக்கான அழைப்பிதழில் தொகுதி சட்டமன்ற உறுப்பினரின் பெயர் விடுபட்டுள்ளது *191-192*

*திரு. துரைமுருகன் *191-192*

(இ) கன்னியாகுமரி மாவட்டம், வர்த்தகத் துறைமுகம் அமைப்பதில் எழுந்துள்ள பிரச்சினை *192-196*

திரு. எஸ். ஆஸ்டின் *192-194*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி *194-196*

பக்கங்கள்

**2. தகவல் கோரல்**—தொடர்ச்சி

(ஈ) துறையூர் தொகுதி, நாகலாபுரம் கிராமம், மாற்றுத் திறனாளி மாணவருக்கு அரசின் உதவித் தொகை வழங்குதல் — *196-198*

திரு. செ. ஸ்டாலின் குமார் — *196-197*

*மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி — *197-198*

**3. விதி 110-ன்கீழ் அறிக்கை**— **198-201**

'தமிழ்நாடு' பொன்விழா ஆண்டு கொண்டாடுதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

**4. 'தமிழ்நாடு' பொன்விழா ஆண்டு கொண்டாடுதல் குறித்த முதலமைச்சரின் அறிவிப்பிற்கு நன்றி**— *201-203*

*மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன் — *201-203*

**5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)**—

(அ) தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப் புள்ளிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018 — *203*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் — *203*

(ஆ) தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கைகள் வரிச் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018 — *204*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி — *204*

(இ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018 — *204-206*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி — *205-206*

திரு. மா. சுப்பிரமணியன் — *205*

திரு. கரி இராமசாமி — *205*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் — *205*



பக்கங்கள்

**5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)**— தொடர்ச்சி

(ஈ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018 — *206*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி — *206*

(உ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018 — *207*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி — *207*

(ஊ) தமிழ்நாடு உள்ளாட்சி மன்றங்களின் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018 — *208*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி — *208*

(எ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018 — *209*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி — *209 - 210*

திரு. கு. பிச்சாண்டி — *209*

திருமதி எஸ். விஜயதரணி — *209*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் — *209*

(ஏ) தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம், சென்னை (திருத்தம்) சட்டமுன்வடிவு, 2018 — *210-211*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர் — *210-211*

**6. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்**—தொடர்ச்சி — *211-328*

*திரு. என். முருகுமாறன் — *211-222*

*திரு. பழனிவேல் தியாக ராஜன் — *222-231, 233-235, 237-238*

பக்கங்கள்


**6. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்**—தொடர்ச்சி

| | |
|---|---|
| *மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன் | 224,232-233, 236-237, 303-304 |
| மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | 226-229, 238-244, 247-248, 252-253, 297,304, 308-314 |
| மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் | 233,265-266, 269,286-287, 302-303 |
| *மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் | 235-236,294, 296,300-301 |
| *திரு. துரைமுருகன் | 244-247, 307-309 |
| மாண்புமிகு திரு. பி. தங்கமணி | 248-249, 264-265, 287-288,302 |
| *திரு. எம். தமிமுன் அன்சாரி | 249,251-262 |
| திரு. டிடிவி தினகரன் | 249-250 |
| மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி | 258,274-276, 283-284, 289-290, 292-293, 298,305-307, 309-310, 315-318,322 |
| *மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம் | 260-261, 267,295, 326-328, |




பக்கங்கள்


**6. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்**—தொடர்ச்சி

| | |
|---|---|
| திரு. கரி. இராமசாமி | 262-264, 266-278, |
| மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர் | 265-267, 319-321 |
| மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன் | 268 |
| மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு | 272 |
| *மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு | 272-273 |
| திரு. மு.க. ஸ்டாலின் | 278-283, 285-287, **289-291**, **293**-300,307, 313-319,321-322,324-325 |
| மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார் | 281-282 |
| மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி | 288-289,301, 322-323 |
| **7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 329 |

## ஆளுநரும் அமைச்சரவையும்
## ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோகித்
## அமைச்சரவையின் உறுப்பினர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | **முதலமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** பொது, இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, இந்திய வனப் பணி, பொது நிருவாகம், மாவட்ட வருவாய் அலுவலர்கள், காவல், உள் துறை, பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனம், செயற்திட்டப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் |
| 2. | **துணை முதலமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை, தேர்தல்கள் மற்றும் கடவுச் சீட்டுகள், வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் |
| 3. | **வனத் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** வனம் |

4. **பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:**
*பள்ளிக் கல்வி*

5. **கூட்டுறவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:**
*கூட்டுறவு, புள்ளியியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்*

6. **மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி. தங்கமணி:**
*மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு மற்றும் இலஞ்ச ஒழிப்பு சட்டம்*

7. **நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:**
*நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல், சிறப்புத் திட்டங்கள் செயலாக்கம்*

8. **மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச்சீர்திருத்தத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:**
*மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம் (பயிற்சி)*



9. **சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:**
*சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்*

10. **உயர் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:**
*தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல்*

11. **சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா:**
*மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி, இரவலர் காப்பு இல்லங்கள், மாற்றுத் திறனாளிகள் நலன் மற்றும் சமூக சீர்திருத்தம் மற்றும் சத்துணவுத் திட்டம்*

12. **தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:**
*தொழில்கள், எஃகுக் கட்டுப்பாடு மற்றும் சிறப்பு முயற்சிகள்*

13. **சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்:**
*சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு*

| | | |
|---|---|---|
| 14. **உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு |
| 15. **கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** கைத்தறி மற்றும் துணிநூல் |
| 16. **கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்:** கால்நடை பராமரிப்பு |
| 17. **மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன் |
| 18. **வேளாண்மைத் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு |
| 19. **செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு:** செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு மற்றும் அரசு அச்சகம் |



| | | |
|---|---|---|
| 20. **வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** வருவாய், மாவட்ட வருவாய் நிருவாகம், துணை ஆட்சியர்கள், எடைகள் மற்றும் அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்கள் பதிவு மற்றும் பேரிடர் மேலாண்மை |
| 21. **சுற்றுலாத் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்:** சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் |
| 22. **வணிக வரித் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** வணிக வரிகள், பதிவு மற்றும் முத்திரைத்தாள் சட்டம் |
| 23. **பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:** பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி |
| 24. **ஊரகத் தொழில் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்:** குடிசைத் தொழில் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் |

| | | | |
|---|---|---|---|
| 25. | **தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்:** *தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு மற்றும் வக்ஃபு வாரியம்* |
| 26. | **போக்குவரத்துத் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்:** *போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்* |
| 27. | **தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு டாக்டர் எம். மணிகண்டன்:** *தகவல் தொழில்நுட்பம்* |
| 28. | **ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி:** *ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்* |
| 29. | **தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:** *தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்பொருளியல்* |
| 30. | **கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. க. பாஸ்கரன்:** *கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்* |



| | | | |
|---|---|---|---|
| 31. | **இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்:** *இந்து சமய மற்றும் அறநிலையங்கள்* |
| 32. | **பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி:** *பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள் மற்றும் சிறுபான்மையினர் நலன்* |
| 33. | **இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி:** *இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை* |

## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR – THIRU BANWARILAL PUROHIT

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | | |
|---|---|---|---|
| 1. | **Chief Minister** | .. | **The Hon. Thiru Edappadi K. Palaniswami:**<br>Public, Indian Administrative Service, Indian Police Service, Indian Forest Service, General Administration, District Revenue Officers, Police, Home, Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Highways and Minor Ports |
| 2. | **Deputy Chief Minister** | .. | **The Hon. Thiru O. Panneerselvam:**<br>Finance, Planning, Legislative Assembly, Elections and Passports, Hoing, Rural Housing and Housing Development, Slum Clearance Board and Accommodation Control, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority |
| 3. | **Minister for Forests** | .. | **The Hon. Thiru Dindigul C. Sreenivasan:**<br>Forests |
| 4. | **Minister for School Education** | .. | **The Hon. Thiru K.A. Sengottaiyan:**<br>School Education |
| 5. | **Minister for Co–operation** | .. | **The Hon. Thiru Sellur K. Raju:**<br>Co–operation, Statistics and Ex–Servicemen Welfare |

| | | | |
|---|---|---|---|
| 6. | **Minister for Electricity, Prohibition & Excise** | .. | **The Hon. Thiru P. Thangamani:**<br>Electricity, Non–Conventional Energy Development, Prohibition and Excise, Molasses and Prevention of Corruption Act |
| 7. | **Minister for Municipal Administrtion & Rural Development, Implementtion of Special Programme** | .. | **The Hon. Thiru S.P. Velumani:**<br>Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply, Implementation of Special Programme |
| 8. | **Minister for Fisheries and Personnel & Administrative Reforms** | .. | **The Hon. Thiru D. Jayakumar:**<br>Fisheries and Fisheries Development Corporation, Personnel and Administrative Reforms, Personnel and Administrative Reforms (Training) |
| 9. | **Minister for Law, Courts & Prisons** | .. | **The Hon. Thiru C.Ve. Shanmugam:**<br>Law, Courts and Prisons, Mines & Minerals |
| 10. | **Minister for Higher Education** | .. | **The Hon. Thiru K.P. Anbalagan:**<br>Higher Education including Technical Education, Electronics, Science and Technology |
| 11. | **Minister for Social Welfare & Nutritious Noon Meal Programme** | .. | **The Hon. Dr. V. Saroja:**<br>Social Welfare including Women's and Children's Welfare, Orphanages and Correctional Administration, Integrated Child Development, Beggar Homes, Welfare of the Differently Abled and Social Reforms & Nutritious Noon Meal Programme |



| | | | |
|---|---|---|---|
| 12. | **Minister for Industries** | .. | **The Hon. Thiru M.C. Sampath:**<br>Industries, Steel Control and Special Initiatives |
| 13. | **Minister for Environment** | .. | **The Hon. Thiru K.C. Karuppannan:**<br>Environment and Pollution Control |
| 14. | **Minister for Food & Civil Supplies** | .. | **The Hon. Thiru R. Kamaraj:**<br>Food, Civil Supplies, Consumer Protection and Price Control |
| 15. | **Minister for Handlooms & Textiles** | .. | **The Hon. Thiru O.S. Manian:**<br>Handlooms & Textiles |
| 16. | **Minister for Animal Husbandry** | | **The Hon. Thiru Udumalai K. Radhakrishnan:**<br>Animal Husbandry |
| 17. | **Minister for Health & Family Welfare** | | **The Hon. Dr. C. Vijaya Baskar:**<br>Health, Medical Education and Family Welfare |
| 18. | **Minister for Agriculture** | .. | **The Hon. Thiru R. Doraikkannu:**<br>Agriculture, Agricultural Engineering, Agro Service Co–operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Waste Land Development |
| 19. | **Minister for Information & Publicity** | .. | **The Hon. Thiru Kadambur Raju:**<br>Information & Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing and Government Press |

| | | | |
|---|---|---|---|
| 20. | **Minister for Revenue and Disaster Management** | .. | **The Hon. Thiru R.B. Udhayakumar:** Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Weights and Measures, Debt Relief including legislation on Money lending, Chits, Registration of Copanies and Disaster Management |
| 21. | **Minister for Tourism** | | **The Hon. Thiru Vellamandi N. Natarajan:** Tourism, Tourism Development Corporation |
| 22. | **Minister for Commercial Taxes** | .. | **The Hon. Thiru K.C. Veeramani:** Commercial Taxes, Registration and Stamp Act |
| 23. | **Minister for Milk & Dairy Development** | .. | **The Hon. Thiru K.T. Rajenthra Bhalaji:** Milk and Dairy Development |
| 24. | **Minister for Rural Industries** | .. | **The Hon. Thiru P. Benjamin:** Rural Industries including Cottage Industries, Small Industries |
| 25. | **Minister for Labour** | .. | **The Hon. Dr. (Tmt) Nilofer Kafeel:** Labour, Population, Employment and Training, Newsprint Control, Census, Urban and Rural Employment and Wakf Board |
| 26. | **Minister for Transport** | .. | **The Hon. Thiru M.R. Vijayabhaskar:** Transport, Nationalised Transport and Motor Vehicles Act |
| 27. | **Minister for Information Technology** | .. | **The Hon. Dr. M. Manikandan:** Information Technology |



| | | | |
|---|---|---|---|
| 28. | **Minister for Adi Dravidar & Tribal Welfare** | .. | **The Hon. Tmt V.M. Rajalakshmi:** Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour |
| 29. | **Minister for Tamil Official Language & Tamil Culture** | .. | **The Hon. Thiru K. Pandiarajan:** Tamil Official Language & Tamil Culture and Archaeology |
| 30. | **Minister for Khadi & Village Industries Board** | .. | **The Hon. Thiru G. Baskaran:** Khadi and Village Industries Board, Bhoodan and Gramadhan |
| 31. | **Minister for Hindu Religious & Charitable Endowments** | .. | **The Hon. Thiru Sevvoor S. Ramachandran:** Hindu Religious & Charitable Endowments |
| 32. | **Minister for Backward Classes & Minorities Welfare** | .. | **The Hon. Tmt S. Valarmathi:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Overseas Indians, Refugees & Evacuees and Minorities Welfare |
| 33. | **Minister for Youth Welfare and Sports Development** | .. | **The Hon. Thiru P. Balakrishna Reddy:** Youth Welfare and Sports Development Department |

**பேரவைத் தலைவர், துணைத் தலைவர்,**

**மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்**

**பேரவைத் தலைவர்**

மாண்புமிகு திரு. ப. தனபால்

**பேரவைத் துணைத் தலைவர்**

மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்

**மாற்றுத் தலைவர்கள்#**

திரு. பி.எம். நரசிம்மன்
திரு. எஸ்.பி. சண்முகநாதன்
திரு. சு. ரவி
திரு. இரா. குமரகுரு
திரு. சு. குணசேகரன்
திரு. வி.வி. இராஜன் செல்லப்பா

**செயலாளர்**

திரு. க. பூபதி

---

# 9–1–2018 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | | |
|---|---|---|
| திரு. கி. சீனிவாசன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சிறப்புச் செயலாளர் |
| திருமதி லி.சு. வசந்திமலர், எம்.ஏ., பி.ஜி.எல்., எம்.ஏ. | .. | கூடுதல் செயலாளர் |
| திரு. து. கணேசன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | கூடுதல் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. இரா. சந்திரசேகரன், பி.காம்., பி.ஜி.எல்., டி.சி.பி. | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| திரு. ந. இரவிசந்திரன், பி.எஸ்சி., பி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. பா. சுப்பிரமணியம், பி.காம்., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| திருமதி இரா. சாந்தி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| திரு. அ. அய்யன்பெருமாள், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| திருமதி ச. ஆண்டாள், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. ச. ஜெயகணேசன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. மு. ஆதிசேஷன், எம்.காம்., பி.எட்., எல்.எல்.பி. | .. | துணைச் செயலாளர் |
| திரு. ப. பத்மகுமார், எம்.எஸ்சி., பி.எட்., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. மு. கருணாநிதி, பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. ப. சிவராமன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கி. சூரியநாராயணன், எம்.ஏ., பி.ஜி.எல்., டி.டி.எல்., டி.எல்.எல். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |



| | | |
|---|---|---|
| திருமதி பி. தேன்மொழி, எம்.ஏ., பி.எட்., எம்.ஃபில்., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திருமதி டி.வி. ஜெயஸ்ரீ, பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. மு. கருணாகரன், எம்.காம்., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திருமதி பா. ரேவதி, பி.எஸ்சி., பி.எட்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. கே. ரமேஷ், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. க.லோ. சிவகுமரன், பி.எஸ்சி., பி.ஜி.எல் | .. | துணைச் செயலாளர் |
| திரு. ஜி. பாண்டுரங்கன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திருமதி பெர்லின் ரூப்குமார், எம்.ஏ., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. ஜி. கணேஷ், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. சு. பாலகிருஷ்ணன், பி.ஏ., பி.எல். | .. | குழு அலுவலர் |
| திரு. வ. பூபாலன், பி.காம்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி ஸ்ரீ. ஸ்ரீவித்யா, பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி சி. சாந்தா, எம்.காம்., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திருமதி சீ. உஷா, பி.காம்., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி வெ. சகுந்தலா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. த. ரகுபதி, எம்.காம்., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திரு. சி. ஸ்ரீதரன், எம்.காம்., பி.எட். | .. | தலைமை நிருபர் |

| | | |
|---|---|---|
| திரு. ஸ்ரீ.ரா. ரவி, எம்.காம்., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி த. சுஜாதா தேவி, பி.இ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. அ.சு. கேளுடை நம்பி, எம்.எஸ்சி., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. மு. மோகன் ராஜா, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. இரா. இராஜேந்திரன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. கி. முரளீதரன் நாயர், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி வி. சுமதி, பி.காம்., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |



## பேரவை உறுப்பினர்கள்

**(அகர வரிசைப்படி)**

**பெயர்களும் தொகுதிகளும்**

| | | | |
|---|---|---|---|
| 1. | அம்பேத்குமார், திரு. எஸ். | .. | வந்தவாசி (செ.வ.) |
| 2. | அம்மன் கே. அர்ச்சுணன், திரு. | .. | கோயம்புத்தூர் தெற்கு |
| 3. | அரசு, டாக்டர் ஆர்.டி. | .. | செய்யூர் (செ.வ.) |
| 4. | அரவிந்த் ரமேஷ், திரு. எஸ். | .. | சோழிங்கநல்லூர் |
| 5. | அருண்குமார், திரு. பி.ஆர்.ஜி. | .. | கோயம்புத்தூர் வடக்கு |
| 6. | அலெக்சாண்டர், திரு. வீ. | .. | அம்பத்தூர் |
| 7. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. | திருச்செந்தூர் |
| 8. | அன்பரசன், திரு. தா.மோ. | .. | ஆலந்தூர் |
| 9. | அன்பழகன், திரு. க. | .. | கும்பகோணம் |
| 10. | அன்பழகன், திரு. கே.பி. | .. | பாலக்கோடு |
| 11. | அன்பழகன், திரு. ஜெ. | .. | சேப்பாக்கம்—திருவல்லிக்கேணி |
| 12. | அன்பில் மகேஷ் பொய்யாமொழி, திரு. | .. | திருவெறும்பூர் |
| 13. | ஆடலரசன், திரு. ப. | .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 14. | ஆண்டி அம்பலம், திரு. மெ.ஆ. | .. | நத்தம் |

| | | | |
|---|---|---|---|
| 15. | ஆறுக்குட்டி, திரு. வி.சி. | .. | கவுண்டம்பாளையம் |
| 16. | ஆறுமுகம், திரு. பா. | .. | கந்தர்வகோட்டை (செ.வ.) |
| 17. | ஆஸ்டின், திரு. எஸ். | .. | கன்னியாகுமரி |
| 18. | இரத்தினசபாபதி, திரு. ஏ. | .. | அறந்தாங்கி |
| 19. | இரவிச்சந்திரன், திரு. கே.எஸ். | .. | எழும்பூர் (செ.வ.) |
| 20. | இராதாமணி, திரு. கு. | .. | விக்கிரவாண்டி |
| 21. | இராமசாமி, திரு. கரி. | .. | காரைக்குடி |
| 22. | இராமச்சந்திரன், திரு. ஆர்.டி. | .. | குன்னம் |
| 23. | இராமச்சந்திரன், திரு. எம். | .. | ஒரத்தநாடு |
| 24. | இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். | .. | அருப்புக்கோட்டை |
| 25. | இராமலிங்கம், திரு. கே.வி. | .. | ஈரோடு மேற்கு |
| 26. | இராஜன் செல்லப்பா, திரு. வி.வி. | .. | மதுரை வடக்கு |
| 27. | இராஜா, திரு. எஸ்.ஆர். | .. | தாம்பரம் |
| 28. | இராஜேந்திரன், திரு. இரா. | .. | சேலம் வடக்கு |



| | | | |
|---|---|---|---|
| 29. | இராஜேந்திரன், திரு. சி.வி. | .. | பர்கூர் |
| 30. | இன்பசேகரன், திரு. பி.என்.பி. | .. | பெண்ணாகரம் |
| 31. | இன்பதுரை, திரு. ஐ.எஸ். | .. | ராதாபுரம் |
| 32. | ஈஸ்வரப்பன், திரு. ஜே.எல். | .. | ஆற்காடு |
| 33. | ஈஸ்வரன், திரு. எஸ். | .. | பவானிசாகர் (செ.வ.) |
| 34. | உடுமலை K. ராதாகிருஷ்ணன், திரு. | .. | உடுமலைப்பேட்டை |
| 35. | உதயகுமார், திரு. ஆர்.பி. | .. | திருமங்கலம் |
| 36. | உதயசூரியன், திரு. தா. | .. | சங்கராபுரம் |
| 37. | எடப்பாடி கே. பழனிசாமி திரு. | .. | எடப்பாடி |
| 38. | எழிலரசன், திரு. சி.வி.எம்.பி. | .. | காஞ்சிபுரம் |
| 39. | கடம்பூர் ராஜு, திரு. | .. | கோவில்பட்டி |
| 40. | கணேசன், திரு. வெ. | .. | திட்டக்குடி (செ.வ.) |
| 41. | கணேஷ், திரு. ஆர். | .. | உதகமண்டலம் |
| 42. | கருணாநிதி, கலைஞர் மு. | .. | திருவாரூர் |

| | | | |
|---|---|---|---|
| 43. | கருணாநிதி, திரு. இ. | .. | பல்லாவரம் |
| 44. | கருணாஸ், திரு. சே. | .. | திருவாடனை |
| 45. | கருப்பணன், திரு. கே.சி. | .. | பவானி |
| 46. | கலைச்செல்வன், திரு. V.T. | .. | விருத்தாசலம் |
| 47. | கனகராஜ், திரு. ஆர். | .. | சூலூர் |
| 48. | கஸ்தூரி வாசு, திருமதி வி. | .. | வால்பாறை (செ.வ.) |
| 49. | காந்தி, திரு. ஆர். | .. | ராணிப்பேட்டை |
| 50. | காமராஜ், திரு. இரா. | .. | நன்னிலம் |
| 51. | கார்த்திகேயன், திரு. க. | .. | ரிஷிவந்தியம் |
| 52. | கார்த்திகேயன், திரு. ப. | .. | வேலூர் |
| 53. | கார்த்திக், திரு. நா. | .. | சிங்காநல்லூர் |
| 54. | காளிமுத்து, திரு. வி.எஸ். | .. | தாராபுரம் (செ.வ.) |
| 55. | கிரி, திரு. மு.பெ. | .. | செங்கம் (செ.வ.) |
| 56. | கீதா, திருமதி ம. | .. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |



| | | | |
|---|---|---|---|
| 57. | கீதா ஜீவன், திருமதி பி. | .. | தூத்துக்குடி |
| 58. | குணசேகரன், திரு. சு. | .. | திருப்பூர் தெற்கு |
| 59. | குமரகுரு, திரு. இரா. | .. | உளுந்தூர்பேட்டை |
| 60. | கோவிந்தராசு, திரு. மா. | .. | பேராவூரணி |
| 61. | சக்கரபாணி, திரு. அர. | .. | ஒட்டன்சத்திரம் |
| 62. | சக்திவேல், திரு. எ.பி. | .. | சேலம் தெற்கு |
| 63. | சக்ரபாணி, திரு. மு. | .. | வானூர் (செ.வ.) |
| 64. | சண்முகநாதன், திரு. எஸ்.பி. | .. | ஸ்ரீவைகுண்டம் |
| 65. | சண்முகம், திரு. அ. | .. | கிணத்துக்கடவு |
| 66. | சண்முகம், திரு. சி.வி. | .. | விழுப்புரம் |
| 67. | சத்திய நாராயணன், திரு. ப. | .. | தியாகராய நகர் |
| 68. | சத்யா, திருமதி ப. | .. | பண்ருட்டி |
| 69. | சந்திரசேகரன், திரு. சி. | .. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 70. | சந்திரசேகரன், திரு. துரை. | .. | திருவையாறு |

| | | | |
|---|---|---|---|
| 71. | சந்திரசேகர், திரு. இரா. | .. | மணப்பாறை |
| 72. | சந்திரபிரபா, திருமதி மு. | .. | ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ.) |
| 73. | சம்பத், திரு. எம்.சி. | .. | கடலூர் |
| 74. | சரவணன், திரு. எஸ்.எஸ். | .. | மதுரை தெற்கு |
| 75. | சரஸ்வதி, திருமதி பொன். | .. | திருச்செங்கோடு |
| 76. | சரோஜா, டாக்டர் வி. | .. | ராசிபுரம் (செ.வ.) |
| 77. | சாமி, திரு. கே.பி.பி. | .. | திருவொற்றியூர் |
| 78. | சித்ரா, திருமதி கு. | .. | ஏற்காடு (ஆ.வா.) |
| 79. | சிவகுமார் என்கிற தாயகம் கவி, திரு. ப. | .. | திரு.வி.க. நகர் (செ.வ.) |
| 80. | சிவசுப்பிரமணி, திரு. வே.பொ. | .. | மொடக்குறிச்சி |
| 81. | சின்னதம்பி, திரு. ஆர்.எம். | .. | ஆத்தூர் (செ.வ.) |
| 82. | சின்னராஜ், திரு. ஓ.கே. | .. | மேட்டுப்பாளையம் |
| 83. | சீத்தாபதி, திருமதி பெ. | .. | திண்டிவனம் (செ.வ.) |
| 84. | சீனிவாசன், திரு. ஏ.ஆர்ஆர். | .. | விருதுநகர் |



| | | | |
|---|---|---|---|
| 85. | சுதர்சனம், திரு. எஸ். | .. | மாதவரம் |
| 86. | சுந்தர், திரு. க. | .. | உத்திரமேரூர் |
| 87. | சுப்பிரமணியன், திரு. மா. | .. | சைதாப்பேட்டை |
| 88. | சுப்ரமணி, திரு. பெ. | .. | தருமபுரி |
| 89. | சுரேஷ் ராஜன், திரு. என். | .. | நாகர்கோவில் |
| 90. | செங்குட்டுவன், திரு. டி. | .. | கிருஷ்ணகிரி |
| 91. | செங்கோட்டையன், திரு. கே.ஏ. | .. | கோபிச்செட்டி பாளையம் |
| 92. | செந்தில்குமார், திரு. ஐ.பி. | .. | பழனி |
| 93. | செம்மலை, திரு. S. | .. | மேட்டூர் |
| 94. | செல்லூர் கா. ராஜு, திரு. | .. | மதுரை மேற்கு |
| 95. | செல்வமோகன்தாஸ் பாண்டியன், திரு. எஸ். | .. | தென்காசி |
| 96. | செல்வம், திரு. கு.க. | .. | ஆயிரம் விளக்கு |
| 97. | செல்வராசு, திரு. எம். | .. | முசிறி |
| 98. | செழியன், முனைவர் கோவி. | .. | திருவிடைமருதூர் (செ.வ.) |

| | | | |
|---|---|---|---|
| 99. | சேகரன், திரு. கே.வி. | .. | போளூர் |
| 100. | சேகர், திரு. C.V. | .. | பட்டுக்கோட்டை |
| 101. | சேகர்பாபு, திரு. பி.கே. | .. | துறைமுகம் |
| 102. | சேவூர் எஸ். ராமச்சந்திரன், திரு. | .. | ஆரணி |
| 103. | சௌந்தரபாண்டியன், திரு. அ. | .. | லால்குடி |
| 104. | தங்கப்பாண்டியன், திரு. சௌ. | .. | ராஜபாளையம் |
| 105. | தங்கமணி, திரு. பி. | .. | குமாரபாளையம் |
| 106. | தங்கம் தென்னரசு, திரு. | .. | திருச்சுழி |
| 107. | தமிமுன் அன்சாரி, திரு. எம். | .. | நாகப்பட்டினம் |
| 108. | தமிழ்ச்செல்வன், திரு. ரா. | .. | பெரம்பலூர் (செ.வ.) |
| 109. | தனபால், திரு. ப. | .. | அவினாசி (செ.வ.) |
| 110. | தனியரசு, திரு. உ. | .. | காங்கேயம் |
| 111. | திண்டுக்கல் சி. சீனிவாசன், திரு. | .. | திண்டுக்கல் |
| 112. | திராவிடமணி, திரு. மு. | .. | கூடலூர் (செ.வ.) |



| | | | |
|---|---|---|---|
| 113. | தினகரன், திரு. டிடிவி | .. | டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் |
| 114. | துரை. கி. சரவணன், திரு. | .. | புவனகிரி |
| 115. | துரைக்கண்ணு, திரு. இரா. | .. | பாபநாசம் |
| 116. | துரைமுருகன், திரு. | .. | காட்பாடி |
| 117. | தூசி கே. மோகன், திரு. | .. | செய்யாறு |
| 118. | தென்னரசு, திரு. கே.எஸ். | .. | ஈரோடு கிழக்கு |
| 119. | நடராஜன், திரு. அ. | .. | பல்லடம் |
| 120. | நடராஜ், திரு. ஆர். | .. | மயிலாப்பூர் |
| 121. | நந்தகுமார், திரு. ஏ.பி. | .. | அணைக்கட்டு |
| 122. | நரசிம்மன், திரு. பி.எம். | .. | திருத்தணி |
| 123. | நல்லதம்பி, திரு. அ. | .. | திருப்பத்தூர் |
| 124. | நிலோபர் கபில், டாக்டர் (திருமதி) | .. | வாணியம்பாடி |
| 125. | நீதிபதி, திரு. பா. | .. | உசிலம்பட்டி |

| | | | |
|---|---|---|---|
| 126. | நேரு, திரு. கே.என். | .. | திருச்சிராப்பள்ளி மேற்கு |
| 127. | பரமசிவம், டாக்டர் V.P.B. | .. | வேடசந்தூர் |
| 128. | பரமேஸ்வரி, திருமதி மு. | .. | மணச்சநல்லூர் |
| 129. | பலராமன், திரு. ப. | .. | பொன்னேரி (செ.வ.) |
| 130. | பவுன்ராஜ், திரு. எஸ். | .. | பூம்புகார் |
| 131. | பழனி, திரு. கே. | .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 132. | பழனிவேல் தியாக ராஜன், திரு. | .. | மதுரை மத்தி |
| 133. | பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. | .. | குறிஞ்சிப்பாடி |
| 134. | பன்னீர்செல்வம், திரு. ஓ. | .. | போடிநாயக்கனூர் |
| 135. | பன்னீர்செல்வம், திரு. வி. | .. | கலசப்பாக்கம் |
| 136. | பாண்டி, திரு.ச. | .. | முதுகுளத்தூர் |
| 137. | பாண்டியராஜன், திரு. க. | .. | ஆவடி |
| 138. | பாண்டியன், திரு. கே.ஏ. | .. | சிதம்பரம் |
| 139. | பாரதி, திரு. பி.வி. | .. | சீர்காழி (செ.வ.) |



| | | | |
|---|---|---|---|
| 140. | பாலகிருஷ்ணா ரெட்டி, திரு. பா. | .. | ஓசூர் |
| 141. | பாஸ்கரன், திரு. க. | .. | சிவகங்கை |
| 142. | பாஸ்கர், திரு. கே.பி.பி. | .. | நாமக்கல் |
| 143. | பிச்சாண்டி, திரு. கு. | .. | கீழ்பெண்ணாத்தூர் |
| 144. | பிரகாஷ், திரு. ஒய். | .. | தளி |
| 145. | பிரபு, திரு. அ. | .. | கள்ளக்குறிச்சி (செ.வ.) |
| 146. | பிரின்ஸ், திரு. ஜே.ஜி. | .. | குளச்சல் |
| 147. | புகழேந்தி, திரு. சு. | .. | மதுராந்தகம் (செ.வ.) |
| 148. | பூங்கோதை, டாக்டர் (திருமதி) | .. | ஆலங்குளம் |
| 149. | பெரியகருப்பன், திரு. கே.ஆர். | .. | திருப்பத்தூர் |
| 150. | பெரியசாமி, திரு. இ. | .. | ஆத்தூர் |
| 151. | பெரியண்ணன் அரசு, திரு. | .. | புதுக்கோட்டை |
| 152. | பெரியபுள்ளான் என்கிற செல்வம், திரு. பெ. | .. | மேலூர் |
| 153. | பென்ஜமின், திரு. பா. | .. | மதுரவாயல் |
| 154. | பொள்ளாச்சி V. ஜெயராமன், முனைவர் | .. | பொள்ளாச்சி |
| 155. | பொன்முடி, முனைவர் க. | .. | திருக்கோவிலூர் |

| | | | |
|---|---|---|---|
| 156. | போஸ், திரு. ஏ.கே. | .. | திருப்பரங்குன்றம் |
| 157. | மணிகண்டன், டாக்டர் எம். | .. | இராமநாதபுரம் |
| 158. | மணியன், திரு. ஓ.எஸ். | .. | வேதாரண்யம் |
| 159. | மதிவாணன், திரு. உ. | .. | கீழ்வேளூர் (செ.வ.) |
| 160. | மருதமுத்து, திரு. அ. | .. | கெங்கவல்லி (செ.வ.) |
| 161. | மனோகரன், திரு. அ. | .. | வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| 162. | மனோ தங்கராஜ், திரு. த. | .. | பத்மநாபபுரம் |
| 163. | மனோரஞ்சிதம், திருமதி நா. | .. | ஊத்தங்கரை (செ.வ.) |
| 164. | மனோன்மணி, திருமதி ப. | .. | வீரபாண்டி |
| 165. | மஸ்தான், திரு. கே.எஸ். | .. | செஞ்சி |
| 166. | மாசிலாமணி, டாக்டர் இரா. | .. | மயிலம் |
| 167. | மாணிக்கம், திரு. கி. | .. | சோழவந்தான் (செ.வ.) |
| 168. | முருகன், திரு. பி. | .. | வேப்பனஹள்ளி |
| 169. | முருகுமாறன், திரு. என். | .. | காட்டுமன்னார் கோவில் (செவ.) |
| 170. | முருகையா பாண்டியன், திரு. ஆர். | .. | அம்பாசமுத்திரம் |
| 171. | முஹம்மது அபூபக்கர், திரு. கே.ஏ.எம். | .. | கடையநல்லூர் |



| | | | |
|---|---|---|---|
| 172. | மூர்த்தி, திரு. கே.எஸ். | .. | பரமத்தி-வேலூர் |
| 173. | மூர்த்தி, திரு. பி. | .. | மதுரை கிழக்கு |
| 174. | மெய்யநாதன், திரு. சிவ.வீ. | .. | ஆலங்குடி |
| 175. | மைதீன்கான், திரு. டி.பி.எம். | .. | பாளையங்கோட்டை |
| 176. | மோகன், திரு. எம்.கே. | .. | அண்ணா நகர் |
| 177. | ரகுபதி, திரு. எஸ். | .. | திருமயம் |
| 178. | ரங்கநாதன், திரு. ப. | .. | வில்லிவாக்கம் |
| 179. | ரவி, திரு. சு. | .. | அரக்கோணம் (செ.வ.) |
| 180. | ராசேந்திரன், திரு. சபா. | .. | நெய்வேலி |
| 181. | ராதாகிருஷ்ணன், திரு. வி. | .. | மயிலாடுதுறை |
| 182. | ராமர், திரு. எ. | .. | குளித்தலை |
| 183. | ராமஜெயலிங்கம், திரு. ஜெ.கே.என். | .. | ஜெயங்கொண்டம் |
| 184. | ராமு, திரு. அ. | .. | குன்னூர் |
| 185. | ராஜலெட்சுமி, திருமதி வி.எம். | .. | சங்கரன்கோவில் (செ.வ.) |
| 186. | ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன், திரு. ஈ.எம்.ஆர். | .. | அந்தியூர் |

| | | | |
|---|---|---|---|
| 187. | ராஜா, திரு. சி. | .. | சங்கரி |
| 188. | ராஜா, திரு. டி.ஆர்.பி. | .. | மன்னார்குடி |
| 189. | ராஜேந்திர பாலாஜி, திரு. கே.டி. | .. | சிவகாசி |
| 190. | ராஜேந்திரன், திரு. சு. | .. | அரியலூர் |
| 191. | ராஜேந்திரன், திரு. வி.ஜி. | .. | திருவள்ளூர் |
| 192. | ராஜேஷ் குமார், திரு. செ. | .. | கிள்ளியூர் |
| 193. | லெட்சுமணன், திரு. ஏ.எல் எஸ். | .. | திருநெல்வேலி |
| 194. | லோகநாதன், திரு. கோ. | .. | கீழ்வைத்திணான் குப்பம் (செ.வ.) |
| 195. | வசந்தகுமார், திரு. எச். | .. | நாங்குநேரி |
| 196. | வரலட்சுமி, திருமதி ம. | .. | செங்கல்பட்டு |
| 197. | வளர்மதி, திருமதி சீ. | .. | ஸ்ரீரங்கம் |
| 198. | வாகை சந்திரசேகர், திரு. | .. | வேளச்சேரி |
| 199. | விருகை V.N. ரவி, திரு. | .. | விருகம்பாக்கம் |
| 200. | விஜயகுமார், திரு. க.நா. | .. | திருப்பூர் வடக்கு |
| 201. | விஜயதரணி, திருமதி எஸ். | .. | விளவங்கோடு |
| 202. | விஜய பாஸ்கர், டாக்டர் சி. | .. | விராலிமலை |
| 203. | விஜயபாஸ்கர், திரு. எம்.ஆர். | .. | கரூர் |
| 204. | விஜியகுமார், திரு. கே.எஸ். | .. | கும்மிடிப்பூண்டி |
| 205. | வீரமணி, திரு. கே.சி. | .. | ஜோலார் பேட்டை |
| 206. | வெங்கடாச்சலம், திரு. என்.டி. | .. | பெருந்துறை |



| | | | |
|---|---|---|---|
| 207. | வெங்கடாஜலம், திரு. கோ. | .. | சேலம் மேற்கு |
| 208. | வெல்லமண்டி ந. நடராஜன், திரு. | .. | திருச்சிராப்பள்ளி கிழக்கு |
| 209. | வெற்றிவேல், திரு. ச. | .. | ஓமலூர் |
| 210. | வேலு, திரு. எ.வ. | .. | திருவண்ணாமலை |
| 211. | வேலுமணி, திரு. எஸ்.பி. | .. | தொண்டாமுத்தூர் |
| 212. | ஜக்கையன், திரு. எஸ்.டி.கே. | .. | கம்பம் |
| 213. | ஜெயக்குமார், திரு. டி. | .. | இராயபுரம் |
| 214. | ஜெயராமகிருஷ்ணன், திரு. இரா. | .. | மடத்துக்குளம் |
| 215. | ஸ்டாலின் குமார், திரு. செ. | .. | துறையூர் (செ.வ.) |
| 216. | ஸ்டாலின், திரு. மு.க. | .. | கொளத்தூர் |
| 217. | நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ், டாக்டர் (திருமதி) | .. | நியமனம் |
| 218. | வெற்றிடம்* | .. | ஆண்டிப்பட்டி |
| 219. | வெற்றிடம்* | .. | அரூர் (செ.வ.) |
| 220. | வெற்றிடம்* | .. | மானாமதுரை (செ.வ.) |
| 221. | வெற்றிடம்* | .. | பெரியகுளம் (செ.வ.) |
| 222. | வெற்றிடம்* | .. | குடியாத்தம் (செ.வ.) |
| 223. | வெற்றிடம்* | .. | பாப்பிரெட்டிப் பட்டி |
| 224. | வெற்றிடம்* | .. | அரவக்குறிச்சி |

* கட்சித் தாவல் தடைச் சட்டத்தின்கீழ் 18-9-2017 அன்று பதவியிழந்தார்.

| | | | |
|---|---|---|---|
| 225. | வெற்றிடம்* | .. | பரமக்குடி (செ.வ.) |
| 226. | வெற்றிடம்* | .. | பெரம்பூர் |
| 227. | வெற்றிடம்* | .. | சோளிங்கர் |
| 228. | வெற்றிடம்* | .. | திருப்போரூர் |
| 229. | வெற்றிடம்* | .. | பூந்தமல்லி (செ.வ.) |
| 230. | வெற்றிடம்* | .. | தஞ்சாவூர் |
| 231. | வெற்றிடம்* | .. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 232. | வெற்றிடம்* | .. | ஆம்பூர் |
| 233. | வெற்றிடம்* | .. | சாத்தூர் |
| 234. | வெற்றிடம்* | .. | ஓட்டப்பிடாரம் (செ.வ.) |
| 235. | வெற்றிடம்* | .. | விளாத்திகுளம் |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்

திரு. விஜய் நாராயன் .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

* *கட்சித் தாவல் தடைச் சட்டத்தின்கீழ் 18-9-2017 அன்று பதவியிழந்தார்.*

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஹேவிளம்பி, மார்கழி 27, திருவள்ளுவர் ஆண்டு–2048

## 2018 ஜனவரி 11, வியாழக்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை."

தன்னைத் தோண்டுபவர்களையும்கூடக் கீழே விழாமல் காப்பாற்றித் தாங்குகிற நிலத்தைப் போல, தம்மை இகழ்ந்து பேசுபவரைப் பொறுத்துக்கொள்வதே மிகச் சிறந்த பண்பாகும்.

## 1. வினாக்கள்–விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 21, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். நடராஜ், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**21—**

### புதிய குடியிருப்புகள்

***22839—திரு. ஆர். நடராஜ்:**

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாப்பூர் தொகுதி, 173–வது வார்டு, வள்ளீஸ்வரன் கோவில் தோட்டத்திலுள்ள தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பழைய குடியிருப்புகளுக்கு மாற்றாக புதிய குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2018 ஜனவரி 11

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், துணை முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அறிவின் திருவடியாய், ஆற்றலின் பேருருவாய், இசையோடும் இதயத்தின் இன்னிசைத் தென்றலாய் தமிழகத்தை மெருகூட்டி, தமிழக மக்களின் எண்ணங்களை ஈடேற்றிய தமிழ்த் தாயின் தவப்புதல்வி, இந்தப் பூவுலகில், சின்னஞ்சிறு குருவிக்கும் ஒரு கூடு இருக்கிறது; அதைப்போல இங்கு வாழும் மனிதர்களுக்கெல்லாம் வீடு இருக்க வேண்டும் என்ற உயரிய சிந்தனையுடன் தமிழக மக்கள் அனைவருக்கும் வீட்டு வசதி வழங்கிட அளப்பரிய திட்டங்களை வகுத்துச் செயல்பட்ட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(அ) மற்றும் (ஆ) சென்னை மயிலாப்பூர் பகுதியைச் சார்ந்த வள்ளீஸ்வரன்கோவில் தோட்டப் பகுதியில் வாழ்ந்து வந்த குடிசைப்பகுதிவாழ் குடும்பங்களுக்கு, 1979–1980 ஆம் ஆண்டில் மக்கள் திலகம் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆணைப்படி, 488 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டு, ஒதுக்கீடு செய்யப்பட்டன. இக்குடியிருப்புகளின் கட்டமைப்பின் உறுதித்தன்மை (Structural Stability) தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் தொழில்நுட்ப வல்லுநர் குழுவினால் ஆய்வு செய்யப்படும். அந்த ஆய்வின் அடிப்படையில், வாரிய தொழில்நுட்ப வல்லுநர் குழு அளிக்கும் பரிந்துரைக்கேற்ப, இந்த அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு மத்திய மற்றும் மாநில அரசின் நிதி ஆதாரத்தினைக் கொண்டு மறு கட்டுமானம் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். நடராஜ் அவர்கள்.

**திரு. ஆர். நடராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புனித மார்கழி மாத நோன்பில் செவிக்கினிய தமிழில், ஆண்டாள் அருளிய திருப்பாவையில், இன்று “கூடாரை வெல்லும் சீர் கோவிந்தா” என்று துவங்கும் 27–வது பாடலில், பக்தியால் பக்தர்களை ஆண்டார், நங்கை ஆண்டாள். சீரிய ஆளுமையாலும், நலத் திட்டங்களாலும் தமிழகத்தை ஆண்டு வென்ற மாண்புமிகு



2018 ஜனவரி 11]

புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தியாவில் பாதுகாப்பான நகரம் சென்னை. பெண்கள் பாதுகாப்பில் முதலிடம். சட்டம்–ஒழுங்கைப் பராமரிப்பதில் முதலிடம். கோயம்புத்தூர் ஆர்.எஸ். புரம் மற்றும் சென்னை அண்ணா நகர் காவல் நிலையங்கள், அகில இந்திய அளவில் சீர்மிகு முதன்மைக் காவல் நிலையங்களாக மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட பெருமையைப் போன்று, நல்லாட்சி புரிந்து (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தை வழிநடத்தும் இரட்டைக் குழல் ஆளுமை பெற்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் நன்றி பாராட்டி, வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாப்பூர் சட்டமன்றத் தொகுதியில் 7 மாநகராட்சி வார்டுகள் உள்ளன. இதில் வார்டு எண்கள் 121 முதல் 126 வரையுள்ள 6 வார்டுகளில் 57 குடிசைப் பகுதிகளும், 173–வது வார்டில் 9 குடிசைப் பகுதிகளும் உள்ளன. மொத்தமுள்ள 66 குடிசைப் பகுதிகளில், 33 குடிசைப் பகுதிகளில், 397 குடியிருப்புத் தொகுப்புகளில், 11,164 குடியிருப்புகள் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் கட்டி வழங்கப்பட்டுள்ளன.

முற்பகல் 10–05

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள், 173–வது வார்டு வள்ளீஸ்வரன்கோவில் தோட்டத்தில் இருக்கும் 488 குடியிருப்புகளின் ஸ்திரத் தன்மையை ஆராய்ந்து மாற்று குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று உறுதி அளித்தமைக்கு நன்றி கூறுகிறேன். இதுதவிர நொச்சி நகர், ஆண்டிமான்யம் தோட்டம், நொச்சி நகர் பல்லக்குமானியம் (மறுகட்டுமானம்), நொச்சிகுப்பம் ஆகிய பகுதிகளில் உள்ள குடியிருப்புகளைத் தவிர மற்ற அனைத்துக் குடியிருப்புகளும் 35 ஆண்டுகள் முதல் 45 ஆண்டுகள் பழமையானதாக உள்ளன. இதில் 125–வது வார்டு, நொச்சிகுப்பத்தில் மாண்புமிகு அம்மா அவர்களால் விதி 110–ன்கீழ் அறிவிக்கப்பட்டு, 534 குடியிருப்புகள் கட்டி வழங்கப்பட்டுள்ளன. இக்கட்டுமானப் பணிகள் நடைபெற்றபோது மக்கள் தங்குவதற்காக நொச்சி நகர் அருகில் 3 தற்காலிகக் குடியிருப்புகள் அமைக்கப்பட்டன. தற்சமயம்

இக்குடியிருப்புகளில் இருந்தவர்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டுள்ள நிலையில் தற்காலிகக் குடியிருப்புகளை உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இந்த இடத்தில், நொச்சி நகர், நொச்சிகுப்பம் ஆகிய பகுதிகளில் குடியிருப்புகள் இல்லாத சுமார் 500 குடும்பங்கள் உள்ளன. இவர்களுக்கு தற்காலிகக் குடியிருப்புகள் உள்ள இடத்தில் குடியிருப்புகள் கட்டிக்கொடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். மேலும், நான் மேற்கூறிய 11 ஆயிரத்து 164 குடியிருப்புகளில் பல இடங்கள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளன. இக்குடியிருப்புகளை இடித்துவிட்டு புதிய குடியிருப்புகளை கட்டித்தர வேண்டிய நிலை உள்ளது. மராமத்துப் பணிகள் செய்ய வேண்டிய நிலையில் பல்வேறு பகுதிகள் இருக்கின்றன. இப்பகுதிகளில் மக்கள்தொகை அதிகரிப்பால் பயன்பாடு அதிகரித்து வருவதால் கழிவு நீர் அடைப்புகளைச் சரிசெய்ய, புதிய குழாய் மற்றும் Inspection Chambers அமைக்கப்பட வேண்டிய நிலையில் அனைத்துக் குடியிருப்புப் பகுதிகளும் உள்ளன. அந்த மராமத்துப் பணிகளைக் குறித்து மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் எனக்கு உறுதி அளிக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் முந்தைய ஆண்டுகளில் கட்டப்பட்ட சில அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டி வெகுகாலமானதாலும், பயன்பாடு மற்றும் தேய்மானத்தாலும், காற்று மண்டல விளைவுகளின் காரணத்தினாலும் பாதிப்பிற்குள்ளாகி சிதிலமடைந்து வருகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இத்தகைய குடியிருப்புகளின் பாதிப்புத் தன்மை, வாரியத் தொழில்நுட்ப வல்லுநர் குழுவினால் ஆய்ந்து அறியப்பட்டு, அதன் பரிந்துரைக்கேற்ப அவற்றின் அவசியத்தைக் கருத்தில்கொண்டு, மறுகட்டுமானம் செய்யப்பட வேண்டிய பழுதடைந்த குடியிருப்புகள் இடிக்கப்பட்டு, மீண்டும் புதிய குடியிருப்புகள் தேவைக்கேற்ப கட்டப்படுகின்றன. மயிலாப்பூர் சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தமட்டில், அங்குள்ள வள்ளீஸ்வரன்கோவில் திட்டப் பகுதியில் 2.76 ஏக்கர் நிலப் பரப்பளவில் தற்போது 488 குடியிருப்புகள் தரைத்தளம் G+3 அடுக்கு மேம்பாட்டில் ஒவ்வொரு குடியிருப்பும் 232 சதுர அடி கட்டுமானப் பரப்பளவில் உள்ளன. இக்குடியிருப்புகள்





அனைத்தும் இடிக்கப்பட்ட பின்னர் பன்னடுக்கு மேம்பாட்டில் MSB 690 அடுக்குமாடிக் குடியிருப்புகளில் ஒவ்வொரு குடியிருப்பும் 400 சதுர அடி கட்டுமானப் பரப்பளவு கொண்டதாகக் கூடுதலாக 202 குடியிருப்புகள் கட்டப்படும். மயிலாப்பூர் சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தமட்டில் இதுவரை 11,166 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. இக்குடியிருப்புகளுக்கு 2011–2017 ஆம் ஆண்டுகளில் பல்வேறு கட்டங்களில் ரூ.17.10 கோடி செலவில் பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் 1,180 அடுக்குமாடிக் குடியிருப்புகள் மறுகட்டுமானம் செய்யப்பட்டுள்ளன.

மயிலாப்பூர் சட்டமன்றத் தொகுதியிலுள்ள மாம்பலம், ஏரிக்கரை, ஜோஹி தோட்டம், ஏகாம்பரம் பிள்ளை–முனுசாமி பிள்ளை தெரு, பட்டினப்பாக்கம்–சத்தியவாணி முத்து நகர், குப்பைமேடு, வள்ளீஸ்வரன்கோவில் தோட்டம் ஆகிய ஏழு வாரிய திட்டப் பகுதிகளில் அமைந்துள்ள 1,788 அடுக்குமாடிக் குடியிருப்புகளை இடித்து மீண்டும் புதிதாகக் கட்ட வாரியத்தால் திட்டமிடப்பட்டுள்ளது என்பதையும், தமிழகம் முழுவதும் இதுவரையில் 10,009 குடியிருப்புகள் இடிக்கப்பட்டு மீண்டும் கட்டப்பட்டுள்ளன என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்தின்படி நொச்சிகுப்பம் பகுதியில் புதிதாகக் கட்டப்பட்டு, வழங்கப்பட்டிருக்கிறது. மீதம் உள்ளவர்களுக்கு தற்காலிகமாகக் குடியிருப்பு இருக்கின்ற இடத்தில் மீண்டும் தேவையிருக்கின்ற கருத்தினை மாண்புமிகு உறுப்பினர் இங்கே பதிய வைத்திருக்கின்றார். அரசினுடைய ஆய்விற்கு எடுத்துச் செல்லப்பட்டு அவர்களுக்கு வீடுகள் கட்டித் தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். நடராஜ் அவர்கள்.

முற்பகல் 10–10

**திரு. ஆர். நடராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுதியளித்த மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கு எனது தொகுதி மக்களின் சார்பாக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2018 ஜனவரி 11

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கூடியிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்" என்ற ஆண்டாள் பாசுரத்தின் வரிகளுக்கேற்ப சட்டசபை கூட்டத் தொடரை "அன்பே சிவமாய்" அமர்ந்து அன்பொழுக நடத்தி வரும் சபாநாயகருக்கு, எனக்கு வாய்ப்பளித்தமைக்காக நன்றி கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினருக்கு எனது தனிப்பட்ட நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வினா வரிசை எண் 22, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**22—**

## சாலை அமைத்தல்

***872—திரு. ஏ.பி. நந்தகுமார்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அணைக்கட்டு தொகுதி, அத்தியூர் ஊராட்சி, குருமலை மலைப் பகுதிக்கு சாலை அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார் அவர்கள் குருமலை மலைப் பகுதியில் சாலை வசதி செய்து தரப்படுமா என்கிற கேள்வியை முன் வைத்திருக்கிறார்கள். குருமலை மலைப் பகுதியானது வேலூர் வட கோட்டம், ஜவ்வாது மலைப் பகுதியில் அமைந்துள்ள ஒரு மலைவாழ் கிராமம் ஆகும். இக்கிராமமும், அதனைச் சுற்றியுள்ள நச்சுமேடு, பாலமஞ்சமேடு மற்றும் வெள்ளக்கல்மேடு என்கிற அனிம் மலையாளம் ஆகிய கிராமங்கள் அத்தியூர் காப்புக் காட்டிலிருந்து விலக்களிக்கப்பட்ட கிராமங்களாகும். இக்கிராமத்திலிருந்து மலையடிவாரத்தில் அமைந்துள்ள அத்தியூர், கல்லாங்குளம் வரை அத்தியூர் காப்புக் காட்டில் பிரிவு 16–ன்கீழ் அறிவிக்கையில் 3 அடி அகலத்திற்கு நடைபாதை உரிமை வழங்கப்பட்டு, தற்போது உபயோகத்தில் உள்ளது. இந்தச் சாலையினை சுமார் 13 கிலோ மீட்டர் நீளத்திற்கும், 6 மீட்டர் அகலத்திற்கும் அமைக்க 7.28 ஹெக்டேர் வன நிலத்தை ஒதுக்க வேண்டியுள்ளது. 1980 ஆம் வருட வனப் பாதுகாப்புச் சட்டத்தின்படி, சாலைக்கென வன நிலத்தை நிலம் மாற்றம் செய்ய வேண்டுமெனில், மத்திய அரசின் இணையதளத்தில் உரிய பிரேரணையை பதிவேற்றம் செய்து, அனுமதி பெற வேண்டும். எந்தத் துறை சாலையை அமைக்கின்றதோ, அந்தத் துறையினர் வன நில மாற்ற பிரேரணையை மத்திய அரசின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்தால், வன நிலம் ஒதுக்குவது குறித்து உரிய ஆய்வுகள் மேற்கொண்டு, வனப் பாதுகாப்புச் சட்டம், 1980–ன்படி உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2018 ஜனவரி 11]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார் அவர்கள்.

**திரு. ஏ.பி. நந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்களுக்கும், எதிர்க்கட்சியினுடைய தலைவர் அண்ணன் தளபதியார் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய அணைக்கட்டு தொகுதி, வேலூர் மாநகர் பகுதியிலிருந்து தொடங்கி, குருமலையிலிருந்து சற்றேறக்குறைய 60 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கக்கூடிய மேலரசம்பட்டு மலையடிவாரத்திலிருந்து 5½ கிலோ மீட்டர் நீளமுள்ள சாலையை அமைத்துத் தர வேண்டும். மலைக் கிராமங்களான பாலாம்பட்டு, பீஞ்சுமந்தை, ஜார்தான்கொல்லை, குருமலை ஆகிய மூன்று ஊராட்சிகள் சற்றேறக்குறைய 15,000 மக்கள்தொகை கொண்ட கிராமங்கள் ஆகும். அவசரக் காலங்களில் மருத்துவமனைக்குச் செல்ல வேண்டுமென்றாலும் ஒடுகத்தூர், அணைக்கட்டு, வேலூர் போன்ற நகரங்களுக்குச் செல்ல வேண்டியிருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார், கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. ஏ.பி. நந்தகுமார்:** அரசின் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புவது என்னவென்றால், சாலை வசதிகள் இல்லாத அந்த மூன்று கிராமங்களில் 15,000 மக்கள் வசிக்கின்றார்கள். அந்தக் கிராமத்தில் உள்ள தற்போதைய நிலையை அரசிற்கு, சட்டமன்ற

[2018 ஜனவரி 11

உறுப்பினர் என்கிற முறையில் நான் விளக்கிக் கூற வேண்டும். அந்தக் கிராமங்களில் இருக்கின்ற ஓர் ஆணுக்கோ, பெண்ணுக்கோ திருமணம் தடைபடுகின்ற நிலை இன்று வரை இருந்து வருகின்றது. அதற்குக் காரணம், சாலை வசதி இல்லாததுதான். இதனால், அந்தக் கிராமங்களில் இருக்கின்ற மலைவாழ் மக்களுக்கு பெண் தரவும், பெண் எடுக்கவும் மறுக்கின்றார்கள். அந்த நிலையைப் போக்க வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கின்றேன். மேலும், மண் சாலையாக இருப்பதால், மழைக்காலங்களில் அந்தச் சாலையில் பயணிக்கவே முடியாத நிலை இருக்கின்றது. ஓர் அரசு நிகழ்ச்சிக்காக. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நந்தகுமார், இன்னும் ஒரு கேள்வி இருக்கின்றது. ஒவ்வொரு கேள்விக்கும் இவ்வளவு நேரத்தை உறுப்பினர்கள் எல்லோரும் எடுத்துக்கொண்டால், நான் கேள்வி நேரத்தை எவ்வாறு குறிப்பிட்ட நேரத்திற்குள் முடிக்க முடியும்?

**திரு. ஏ.பி. நந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் யாரையும் புகழ்ந்து பேசவில்லை. ஓர் அரசு நிகழ்ச்சிக்காக. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நந்தகுமார், நீங்கள் புகழ்ந்து பேசவில்லை, சீக்கிரம் கேள்வியைக் கேட்டு முடியுங்கள்.

**திரு. ஏ.பி. நந்தகுமார்:** ஓர் அரசு நிகழ்ச்சிக்காக, எங்களுடைய மாவட்டத்தினுடைய அமைச்சர் மலைக்குச் சென்று கொண்டிருந்தார்; பாதி வழியில் மாவட்டத்தினுடைய அமைச்சரும், மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர் அவர்களும் நின்று கொண்டிருந்தார்கள். காரணம், சாலையில் மேற்கொண்டு போக முடியவில்லை. ஆகவே, தயவுசெய்து இந்த அரசு உடனடியாக அந்த 3 கிராமங்களில் இருக்கக்கூடிய மக்கள் பயன்பெறக்கூடிய வகையிலே சாலையினை அமைக்க வேண்டும். வனத் துறையினுடைய நிலம் என்கின்ற காரணத்தினால் திருமணங்கள் நடைபெறுவதில் தடை ஏற்படுகிறது, திருமணங்கள் நடைபெறவில்லை, சாலையிலே மக்கள் செல்ல முடியவில்லை. மருத்துவ வசதி போன்றவற்றை பெறும்பொருட்டு, அந்தச் சாலையை உடனடியாக நீங்கள் அமைத்துத் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்க விரும்புகின்றேன். நன்றி.



2018 ஜனவரி 11]

முற்பகல் 10–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நந்தகுமார் அவர்கள் அங்கிருக்கிற பிரச்சினைகளைப் பற்றி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் இங்கே தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பொதுவாகவே, வனப் பகுதிக்குள் மற்றும் வனப் பகுதிகளைச் சுற்றி வாழும் மக்களின் வாழ்வாதாரம் முன்னேற்றம் அடைய வேண்டுமென்றால் அடிப்படைக் கட்டமைப்பு,வசதியான சாலைகள் மிகவும் முக்கியமானது என்பதை மாண்புமிகு அம்மாவினுடைய அரசை நடத்தி வரும் மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களும் நன்கு அறிந்திருக்கிறார்கள். எனவேதான், கடந்த 6 ஆண்டுகளில் 906.65 கிலோ மீட்டர் தூரத்திற்கான வனச் சாலைகள் ரூபாய் 107 கோடி செலவில் புதிதாக அமைக்கப்பட்டும், மேம்படுத்தப்பட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பொதுவாகவே, வனச் சாலைகள் சட்டம் மிகக் கடுமையாக இருப்பதை உறுப்பினர்கள் அறிவார்கள். இந்தச் சட்டம் மத்திய அரசாங்கத்தின் மூலமாக இயற்றப்பட்டிருக்கிறது. எனவே, அவர் குறிப்பிட்டிருக்கிற அந்தப் பகுதிகளிலே சாலைகள் சீர்பட வேண்டும், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று சொன்னால், முதலில் மத்திய அரசாங்கக் குழுவின் பரிந்துரையின்பேரில் உச்ச நீதிமன்றத்தினுடைய அனுமதி பெற்ற பின்னரே மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. எனவே, நான் உங்களுக்கு ஏற்கெனவே குறிப்பிட்டுச் சொன்ன 1980 ஆம் வருடச் சட்டத்தின்படி எந்தத் துறை, அந்தச் சாலைப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமோ, அந்தத் துறை முதலில் online மூலமாக application–ஐ பதிவு செய்ய வேண்டும். மற்ற வேலைகளை சட்டமன்ற உறுப்பினர் என்கின்ற முறையிலே கவனத்திற்குக் கொண்டு வந்தால், மாநில அரசு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று மத்திய அரசாங்கத்திடம் விரைவில் அனுமதி பெற்று, நிதி ஆதாரத்தைப் பொறுத்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

[2018 ஜனவரி 11

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார் அவர்கள்.

**திரு. ஏ.பி. நந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய அணைக்கட்டு தொகுதிக்குட்பட்ட துத்திக்காடு ஊராட்சியில் தெள்ளை என்கின்ற ஒரு மலைப் பகுதி இருக்கின்றது. அந்த மலைவாழ் மக்கள் பயன்படுத்துவதற்கு சாலை வசதி இல்லை. நாக நதி என்கின்ற ஓர் ஆற்றைக் கடந்துதான் அவர்கள் அந்த மலைக்குச் செல்ல வேண்டிய நிலை உள்ளது. ஆகவே, நாக நதியினுடைய ஆற்றைக் கடப்பதற்கு நாக நதியில் ஒரு பாலம் அமைப்பதோடு, அங்கே இருக்கக்கூடிய மலைவாழ் மக்கள் பயன்படுத்தக்கூடிய வகையில் அந்தச் சாலையை வனத் துறையின் மூலமாக நீங்கள் செய்து தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல; எங்களுடைய வேலூர் மாவட்டம், வறட்சி மாவட்டம்; அமிர்தி என்கின்ற ஒரு சுற்றுலாத்தலம் இருக்கின்றது. நாக நதியைக் கடந்தால் மட்டுமே அமிர்திக்குச் செல்ல வேண்டிய நிலை இருக்கின்ற காரணத்தினால் விரைந்து இந்த அரசு நாக நதியிலே ஒரு பாலம் அமைத்துத் தர வேண்டும். தெள்ளை மலைவாழ் மக்களுடைய வாழ்வை முன்னேற்றத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்றால், அந்தச் சாலையை விரைந்து அமைத்துத் தர வேண்டுமென்று நான் இந்த அரசை தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நந்தகுமார் அவர்கள் குறிப்பிட்ட வேலூர் மாவட்டம், அமிர்தி என்ற பகுதியை ஏறத்தாழ 30, 40 வருடங்களுக்கு முன்பாக நானும் சென்று பார்த்திருக்கிறேன். அங்கு ஸ்ரீவள்ளி என்கிற சிவாஜி கணேசன் நடித்த திரைப்படம்கூட எடுக்கப்பட்டிருக்கிறது. அவர் கூறிய காரணங்கள் சரியான காரணங்கள். ஆனால், ஏனோ இதுவரை அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கிறது. நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி மத்திய அரசாங்கத்தினுடைய 1980 ஆம் வருட வனச் சட்டப்படி, மத்திய அரசின் அனுமதியைப் பெற முதலில் நீங்கள் மனு செய்யுங்கள். பாலம் அமைக்க வேண்டிய



2018 ஜனவரி 11]

பணியைப் பொறுத்தமட்டில், துறையினுடைய அமைச்சர்கள் மற்றுமுள்ள அதிகாரிகளைப் பார்த்து உரிய நடவடிக்கை எடுத்து, சட்டமன்ற நிகழ்ச்சிக்குப் பிறகு தனியாக ஒரு கோரிக்கையை கடிதம் மூலமாக கொடுங்கள். விரைவான நடவடிக்கை எடுத்து அதற்குரிய முறையினைச் செய்வேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு மகிழ்ச்சியான செய்தியை மாண்புமிகு உறுப்பினர் திரு. நந்தகுமார் அவர்களுக்கு நான் சொல்கிறேன். அணைக்கட்டு தொகுதிக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் எதுவுமே செய்யப்படவில்லையென்ற புள்ளிவிவரம் என்னிடம் இருக்கிறது. ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு 32.80 கி.மீ. அளவில். . . (குறுக்கீடு)

முற்பகல் 10–20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குற்றச்சாட்டு சொல்லவில்லை. உறுப்பினருடைய கோரிக்கையை நிறைவேற்றுகிறேன் என்றுதான் சொல்கிறார், விடுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் குற்றச்சாட்டு சொல்லவில்லை, நான் செய்கிறேன் என்றுதான் சொல்கிறார், விடுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** மாண்புமிகு உறுப்பினர், நான் சொல்வதைக் கேட்டுவிட்டு, பிறகு பேசுங்கள். (குறுக்கீடு) கொஞ்சம் நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். நான் புள்ளிவிவரத்தை வைத்துப் பேசுகிறேன். (குறுக்கீடு) நான் பேசுவதைக் கொஞ்சம் கேளுங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குற்றச்சாட்டு சொல்லவில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** நான் சொல்வதைக் கேளுங்கள். உங்களுக்கு ஆட்சேபணை இருந்தால், பிறகு மறுத்துப் பேசுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், நீங்கள் புள்ளிவிவரங்கள் என்ன என்பதைச் சொல்லுங்கள். (குறுக்கீடு)

[2018 ஜனவரி 11

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** நான் புள்ளிவிவரத்தைத்தான் சொல்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணைக்கட்டு தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் சீக்கிரம் உரையை முடியுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** திரு. நந்தகுமார் அவர்கள் கேள்வி கேட்டிருக்கிறார். அந்தத் தொகுதிக்கு தி.மு.க. ஆட்சியில் எந்தப் பணியும், சாலை வசதியும் செய்து தரப்படவில்லை. (குறுக்கீடு) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் 32.80 கி.மீ. தூரத்திற்கு ஏறத்தாழ ரூ.245.85 இலட்சம் செலவில். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், நீங்கள் என்ன செய்யப் போகிறீர்களோ அதைப் பற்றி மட்டும் சொல்லுங்கள். பழையதைப் பற்றி ஏன் சொல்கிறீர்கள்? இனி செய்யப் போவதைப் பற்றிச் சொல்லுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், அப்போது செய்யவில்லை, இப்போது செய்கிறேன் என்றுதான் சொல்கிறார். (குறுக்கீடு) செய்கிறேன் என்று சொல்வது தவறா? (குறுக்கீடு) செய்கிறேன் என்றுதான் சொல்கிறார். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் 32.80 கி.மீ. சாலை. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒன்றும் இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** அணைக்கட்டு தொகுதிக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், 245.85 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.



2018 ஜனவரி 11]

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** மத்திய அரசாங்கத்தின் வனச் சட்டத்தின்படி நிதி ஆதாரத்தைப் பெற்று, மாண்புமிகு உறுப்பினர் திரு. நந்தகுமார் அவர்கள் வைத்த கோரிக்கையின்மீது நல்ல முறையில் நடவடிக்கை மேற்கொள்ள பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், உறுப்பினர் வைத்த கோரிக்கையை நிறைவேற்றுகிறேன் என்றுதான் சொல்கிறார். அப்போது செய்யவில்லை, இப்போது நான் செய்கிறேன் என்றுதான் சொல்கிறார். அது ஒரு குற்றச்சாட்டு அல்ல. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன், சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணைக்கட்டு தொகுதிக்கு நீண்ட காலத்திற்குப் பிறகு இப்போதுதான் நண்பர் திரு. நந்தகுமார் எம்.எல்.ஏ.–ஆக வந்திருக்கிறார். ஆனால், இதற்கு முன்பு உங்கள் ஆட்சியின்போது, உங்கள் கட்சி உறுப்பினர்கள்தான் எம்.எல்.ஏ.–ஆக தொடர்ந்து இருந்தார்கள். திரு. பாண்டுரங்கன் என்பவர் வேளாண்மைத் துறை அமைச்சராக இருந்தார், பெரிய மீசையெல்லாம் வைத்திருப்பார். ஆக, அந்தத் தொகுதியினுடைய எம்.எல்.ஏ.–ஆகவும் இருந்தார், அமைச்சராகவும் அவர் இருந்தார். ஆகையினால், அந்தத் தொகுதிக்கு ஏதாவது செய்யப்படவில்லை என்றால், அதன் முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டியது அ.தி.மு.க. அரசே தவிர, திராவிட முன்னேற்றக் கழகம் அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் திடீரென்று வந்தார். என்ன பேசிக் கொண்டிருக்கிறோம் என்பது தெரியாமல் பேசுகிறார். (குறுக்கீடு) தயவுசெய்து நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. நந்தகுமார் அவர்கள் கேட்ட கேள்விக்கான பதிலை நான் சொல்கிறேன், கேளுங்கள். மறுத்துச் சொல்வது உங்களுடைய கடமை; பதில் சொல்வது என்னுடைய கடமை. நான் சொல்வதைக் கேளுங்கள். அதாவது, பெரிய மீசை வைத்திருந்த திரு. பாண்டுரங்கன் அவர்கள்

அமைச்சராக இருந்திருக்கிறார். அதைப்பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் அவருக்கே உரிய body language–ல் கூறினார். அதைப்பற்றி ஒன்றும் இல்லை. ஆனால், அவர் இருந்த காரணத்தினால்தான், அணைக்கட்டு தொகுதியில் 32.80 கி.மீ. தூர வனப் பாதை 245.85 இலட்சம் ரூபாய் செலவில் போடப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தி.மு.க. ஆட்சியில் ஒன்றும் செய்யப்படவில்லை. தற்போது, மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் நிதி ஆதாரத்தைப் பெற்று, உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்று பதில் சொல்லியிருக்கிறேன், அவ்வளவுதான். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதனை இத்துடன் விட்டுவிடுங்கள். (குறுக்கீடு) இருதரப்பு விவாதங்களையும் பதிவு செய்துவிட்டேன், விட்டுவிடுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறையாகச் சொல்லவில்லை. நாங்கள் செய்கிறோம் என்றுதான் சொல்லியிருக்கிறார், அவ்வளவுதான். இத்துடன் இதனை விட்டுவிடுங்கள். (குறுக்கீடு) அதற்குத்தான், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பதில் சொல்லிவிட்டாரே! (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், “உங்கள் ஆட்சியின்போது இருந்த, உங்கள் கட்சி சட்டமன்ற உறுப்பினர் செய்யவில்லை” என்ற குறையையும் சொல்லியிருக்கிறார். இரண்டும் பதிவாகி இருக்கின்றன, விட்டுவிடுங்கள். இது ஒரு விஷயமே அல்ல, விட்டுவிடுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. நந்தகுமார் அவர்களுக்கு இரண்டு கேள்விகள் கேட்க அனுமதியளித்துவிட்டேன். (குறுக்கீடு) இரண்டு கேள்விகள் கேட்கவும் அனுமதியளித்துவிட்டேன். (குறுக்கீடு) மூலக் கேள்வி மற்றும் துணைக் கேள்வி ஆகிய இரண்டு கேள்விகளையும் கேட்க அனுமதி அளித்துவிட்டேன், முடிந்துவிட்டது. (குறுக்கீடு) இரண்டு கேள்விகள் கேட்க அனுமதியளிக்கப்பட்டுவிட்டது.

வினா வரிசை எண் 23, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஆர்.ஜி. அருண்குமார், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.





**23—**

## பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***4531—திரு. பி.ஆர்.ஜி. அருண்குமார்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாநகராட்சி, ராமசாமி நகர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழர்களின். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நந்தகுமார், இரண்டு கேள்விகள் கொடுத்தாகிவிட்டது.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** உறுப்பினர், இரண்டு கேள்விகளையும் கேட்டுவிட்டீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர், நீங்கள் பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழர்களின் நெஞ்சங்களில் நிறைந்து வாழ்ந்து கொண்டும், பள்ளி மாணவர்களுக்கு 14 வகையான பொருட்களை வழங்கிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்தபோது, “ஏழைகளே இல்லாத தமிழகத்தை உருவாக்கிக் காட்டுவேன்” என்று சூளுரை ஏற்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 10–25*

அது, கல்வி ஒன்றால் மட்டுமே அது முடியும் என்ற வகையில் அந்தச் சூளுரையை நிறைவேற்றும் நம்முடைய முதல்வர் அவர்களுக்கும், துணை முதல்வர் அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[*2018 ஜனவரி 11*

*(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வினாவில் குறிப்பிட்டிருக்கின்ற கோவை மாநகரத்திலே, ராமசாமி நகர் நடுநிலைப் பள்ளியில், 36 மாணவர்கள் இருக்கின்ற காரணத்தின் அடிப்படையிலும், அருகிலே 5 கிலோ மீட்டர் தொலைவிற்குள் கவுண்டம்பாளையம் உயர்நிலைப் பள்ளியும், மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியும் இருக்கின்ற காரணத்தினாலும் அந்த நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தித் தருவதற்கு வாய்ப்பு இல்லை என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஆர்.ஜி. அருண்குமார் அவர்கள்.*

**திரு. பி.ஆர்.ஜி. அருண்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் குழந்தைகளுக்கு சத்துணவுத் திட்டம் தந்த சரித்திர நாயகன் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் வாரிசாகத் தோன்றி, தமிழகத்தை தரணியிலே தலைசிறந்த மாநிலமாக மாற்றிட, குறிப்பாக பள்ளிக் கல்வித் துறைக்கு ஏராளமான திட்டங்களை அறிவித்து, அவற்றில் முதன்மைத் திட்டமான மடிக்கணினி வழங்கும் திட்டத்தின்மூலம் பார் போற்றிடும் வகையில் நம்மை ஆண்ட நம் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு (மேசையைத் தட்டும் ஒலி) நடைபெறும் அம்மாவின் அரசினை தலைமையேற்று நடத்திடும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

கோயம்புத்தூர் மாநகராட்சி, ராமசாமி நகரில் செயல்பட்டு வரும் இந்தப் பள்ளி சுமார் 58 ஆண்டுகளுக்கு முன்னர் துவக்கப்பட்டது. இன்று சுமார் 280 மாணவ, மாணவிகளோடு நடுநிலைப் பள்ளியாக சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது. இந்தப் பள்ளியைச் சுற்றி செயல்பட்டு வரும் அரசு உயர்நிலைப் பள்ளிகள், அதிக தொலைவில் உள்ள காரணத்தினால் இந்தப் பள்ளியை தரம் உயர்த்த வேண்டி 2000 ஆம் ஆண்டு பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் மூலமாக ஒரு இலட்சம் ரூபாய் செலுத்தப்பட்டு, தரம் உயர்த்தக் கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். 280 மாணவர்கள் இந்தப் பள்ளியிலே படித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, கேட்டதையெல்லாம் கொடுக்கும் இந்த அரசு மற்றும் சாதனை மன்னனாக திகழ்ந்து கொண்டிருக்கின்ற இந்தத் துறையினுடைய அமைச்சர் அவர்கள் இந்தப் பள்ளியையும் தரம் உயர்த்தித் தர வேண்டுமாய் தொகுதி மக்களின் சார்பாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



*2018 ஜனவரி 11*]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டிருக்குமேயானால் உறுப்பினர் திரு. அருண்குமார் அவர்களுக்கு அடுத்த ஆண்டு அருள் கிடைக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஆர்.ஜி. அருண்குமார் அவர்கள்.*

**திரு. பி.ஆர்.ஜி. அருண்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 24, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

**24—**

## பாதாள சாக்கடைத் திட்டம்

***342—திரு. அர. சக்கரபாணி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்திட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் திட்ட அறிக்கை தயார்*

[2018 ஜனவரி 11

செய்யப்பட்டு வருகிறது. திட்ட அறிக்கை பெறப்பட்டவுடன் உரிய நிதி ஆதாரங்களைப் பெற்று, பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டன்சத்திரம் நகராட்சியானது, 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள்தொகை கொண்ட நகராட்சியாக விளங்குகிறது. தென் மாவட்டங்களை இணைக்கின்ற நகரமாகவும் விளங்குகிறது. அங்கே பெரிய காய்கறி மார்க்கெட் நகரின் மையப் பகுதியில் அமைந்திருக்கிறது. வெண்ணெய், தயிர் மார்க்கெட், வாரச் சந்தை போன்றவையும், 30–க்கும் மேற்பட்ட தனியார் மருத்துவமனைகள், அரசு மருத்துவமனைகள், அதேபோல வர்த்தக நிறுவனங்கள் அதிகமாக இருக்கின்றன. அந்த நகராட்சி 23 உட்கடை கிராமங்களையும், 13 சதுர கிலோ மீட்டர் பரப்பளவையும் கொண்டது. அந்த நகராட்சியைப் பொறுத்த அளவிலே 5,112 குடிநீர் இணைப்புகள் தனியார் மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல, திறந்தவெளி கழிவுநீர் வாய்க்காலின் மொத்த நீளம் 65 கிலோ மீட்டர். இதனால் கழிவுநீர் வெளியே செல்கின்ற சமயத்திலே, அங்கே தேங்குகின்ற நீரால் தொற்று நோய் ஏற்படுகிறது. அதேபோல, மலேரியா, டெங்கு போன்ற காய்ச்சலும் ஏற்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 'தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு நிதியொதுக்கப்படும்' என்று அறிவித்திருக்கிறார்கள். பாதாள சாக்கடைத் திட்டப் பணியினை இந்த ஆண்டே தொடங்க வேண்டும். ஏனென்றால் திறந்தவெளி கழிவுநீர்க் கால்வாயினால் தண்ணீர் தேங்குகின்ற காரணத்தினால் மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, இந்த ஆண்டே பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கி, விரைவில் அந்தப் பணியைத் தொடங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.



2018 ஜனவரி 11]

முற்பகல் 10–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் நகராட்சியானது இரண்டாம் நிலை நகராட்சியாகும். இந்நகராட்சியின் மக்கள் தொகை 2011 ஆம் ஆண்டைய கணக்கெடுப்பின்படி 30,064 ஆகும். இந்நகராட்சியின் பரப்பளவு 13.05 சதுர கிலோ மீட்டர் ஆகும். இந்நகராட்சி 18 வார்டுகளை உள்ளடக்கியது. ஒட்டன்சத்திரம் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது. திட்ட அறிக்கை பெறப்பட்டவுடன் உரிய நிதி ஆதாரங்களைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும். ஏனென்றால், நிதி ஆதாரம்தான் இதில் மிக முக்கியம். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருந்தபோது, பல்வேறு திட்டங்களுக்கு 1,623 கோடி ரூபாய் ஒதுக்கினார்கள். மேலும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஒரு மாநகராட்சி, 21 நகராட்சிகள், 5 பேரூராட்சிகளுக்குக் கிட்டத்தட்ட 2,949 கோடி ரூபாயை ஒதுக்கினார்கள்; சென்னைக்கு 1,200 கோடி ரூபாயை ஒதுக்கினார்கள். World Bank அல்லது பல Schemes–லிருந்து நிதியுதவி பெற்று இத்திட்டங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது. அதைப்போல, இதில் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பது மிக முக்கியமானதாக இருக்கிறது. நேற்று பேசும்போதுகூட, இதுகுறித்துச் சொன்னேன். அங்கே சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு இடமும் வேண்டும். அதற்கு நீங்கள் ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும். ஆகவே, வருகின்ற காலத்திலே கண்டிப்பாக இந்தத் திட்டம் குறித்து அறிக்கை பெறப்பட்டு, பணி எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டன்சத்திரம் நகராட்சியிலே சுமார் 27 ஏக்கர் நிலம் கொண்ட சின்னகுளம் என்ற குளம் இருக்கிறது. அந்தக் குளம் பல ஆண்டுகளாகத் தூர்வாரப்படாமல் இருக்கின்றது. அது

*[2018 ஜனவரி 11*

*நகரின் மையப் பகுதியில் இருக்கின்றது. அந்த நகராட்சியைப் பொறுத்தளவில் சிறுவர், சிறுமியர் விளையாடுவதற்கு ஒரு பூங்கா இல்லை; அதுமட்டுமல்லாமல், பொது மக்கள் நடைபயிற்சி செய்வதற்கு நடைபாதை இல்லை. எனவே, அந்தக் குளத்தைத் தூர்வாரி, பொது மக்கள் நடைபயிற்சி செய்வதற்கேற்ற வகையில், அந்தக் குளத்தைச் சுற்றி வேலி அமைத்து, மின் விளக்குகளை அமைக்க வேண்டும். திண்டுக்கல் மாநகராட்சியில்கூட இதுபோன்று அமைத்திருக்கிறார்கள். அதேபோன்ற வசதியை ஏற்படுத்தி, பூங்கா அமைத்துக் கொடுத்தால் சிறுவர், சிறுமியர் பயன்பெறுவார்கள்; ஒரு நடைபாதை ஏற்படுத்தித் தந்தால், பொது மக்கள் நடைபயிற்சி மேற்கொள்வதற்கு வசதியாக இருக்கும். எனவே, அந்தக் குளத்தைத் தூர்வாரி, அங்கே நடைபாதை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லையென்றாலும்கூட அந்தத் தொகுதி மக்களின்மீது இருக்கிற அக்கறையில் உறுப்பினர் கேட்டிருக்கிறார். கண்டிப்பாக, இதுகுறித்து துறை அதிகாரிகளுடன் ஆய்வு செய்து, அந்தப் பூங்கா அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள்.*

**திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை வாழ வைத்த தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். பெருந்துறை பேரூராட்சிக்கு பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளுக்காக 52 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிற மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*



*2018 ஜனவரி 11]*

*கே.சி. பாளையம் பேரூராட்சி, பெருந்துறை பேரூராட்சி என்ற இரண்டு பேரூராட்சிகளை உள்ளடக்கிய பகுதிதான் பெருந்துறை நகரமாக இருந்து கொண்டிருக்கிறது. பெருந்துறை பேரூராட்சியினுடைய எல்லைகள் கருமாண்டிசெட்டிப்பாளையம் பேரூராட்சியிலும், கே.சி. பாளையம் பேரூராட்சியினுடைய எல்லைகள் பெருந்துறை பேரூராட்சியிலும் என இரண்டும் மாறி, மாறி உள்ளடக்கியிருக்கிற ஒரு பகுதிதான் பெருந்துறை நகரமாக இன்றைக்கு விளங்கிக் கொண்டிருக்கிறது. அதாவது பாம்பு நெளிந்து, வளைந்து செல்வதைப்போல இரண்டு பகுதிகளின் எல்லைகளும் ஒன்றோடொன்று கலந்திருப்பதன் காரணத்தினாலே தற்போது பெருந்துறை பேரூராட்சிக்கு மட்டும் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். ஆகவே, இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதிலே சிரமம் இருக்கிறது. தைப் பொங்கல் பரிசாக கே.சி. பாளையம் பேரூராட்சிக்கும் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கி, இரண்டு பேரூராட்சிகளின் மக்களுடைய குறைகளைத் தீர்ப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்தை மேற்கொள்வது சம்பந்தமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலிலே 5 பேரூராட்சிகளை அறிவித்தார்கள். நகராட்சிகள், மாநகராட்சிகளில் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்குத் தேவையான இடம் எடுப்பதில் ஒரு பெரிய பிரச்சினை இருக்கிறது. இப்போது, பேரூராட்சியிலும் அது மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. முக்கியமாக* Septage Management *என்ற ஒரு புதிய தொழில்நுட்பம் உள்ளது. கவுண்டன்பாளையம் தொகுதிக்குட்பட்ட பெரியநாயக்கன்பாளையத்தில் அது* implement *செய்யப்பட்டிருக்கிறது. அதேபோன்ற ஒரு புது* technology*–ஐக் கொண்டு வரலாம் என முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதை துறை அதிகாரிகளோடு கலந்து ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய*

[2018 ஜனவரி 11

கவனத்திற்கு எடுத்துச் சென்று செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள்.

**திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தெரிவித்ததற்கிணங்க, மாண்புமிகு அமைச்சர் அவர்களும் உடனடியாக நகராட்சி ஆணையரிடம் சொல்லி, அந்தப் பாதாள சாக்கடைத் திட்டத்திற்குண்டான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து, Detailed Project Report அரசுக்கு வந்திருக்கிறது. அதை, விரைவிலே செயல்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும்.

*முற்பகல் 10–35*

இன்னொன்று, அங்கு கழிவுநீர்த் தொட்டி, மாநகராட்சி அருகிலேயே இருக்கிறது. அங்கு நிறைய குடியிருப்புகள் இருக்கின்றன. அத்தொட்டியின் கொள்ளளவைவிட அதிகமாகக் கழிவுநீர் வருகின்ற காரணத்தால், அதை வெளியேற்றுகின்ற மோட்டாரின் திறன் குறைவாக இருப்பதால், பாசன வாய்க்காலான உய்யக்கொண்டான் வாய்க்காலில் திறந்துவிடுகிறார்கள். இதுபற்றி கடந்த ஆண்டே குறிப்பிட்டேன். அதற்கு ஒரு மூடி போட்டு, Motor Horse Power–ஐ அதிகரித்துக் கொடுத்தால், அந்தக் கழிவுநீர் பஞ்சப்பூரை சரியாகச் சென்றடையும் என்ற விவரத்தை கூறிக்கொள்வதுடன், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தி, அதை உடனடியாகச் செய்து தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் அமைச்சர் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுகுறித்து ஏற்கெனவே குறிப்பிட்டிருந்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களால், இந்த added area பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு, விதி 110–ன்கீழ் திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு 325 கோடி ரூபாய் நிதி அறிவிக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தை எடுத்துக்கொள்ளும்போது அந்த மின் மோட்டாரும் பழுது நீக்கம்



2018 ஜனவரி 11]

செய்து தரப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள்.

**திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய திருவெறும்பூர் தொகுதியிலே கடந்த 6 ஆண்டுகாலமாக பாதாள சாக்கடைத் திட்டம் செயல்பாட்டிற்கு வராத ஒரு நிலை இருக்கிறது. நான் சொல்வது பாதாள சாக்கடைத் திட்டம் பற்றி மட்டுமல்ல; அந்த UGD system செயல்பாட்டிற்கு வந்தால் மட்டும்தான், அந்தச் சாலைகளைப் போட முடியும் என்ற நிலையும் இருக்கிறது. வாக்கு சேகரிக்கச் சென்றபோதும் சரி, அதற்குப் பிறகு வெற்றிபெற்ற பிறகு சென்றபோதும் சரி, மக்கள் எங்களிடம் முன்வைத்த பிரச்சினை என்னவென்றால், இந்தச் சாலைகளை தற்காலிகமாகவாவது நீங்கள் செயல்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டுமென்பதுதான். அதுகுறித்து உரிய அதிகாரிகளிடம் நாங்கள் பேசும்போது, கடந்த பிப்ரவரி மாதம் டெண்டர் விடப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். தற்போதுகூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 325 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த டெண்டர் தற்போது எந்த நிலையில் இருக்கிறது என்று தெரியவில்லை. எனவே, அதை விரைவுபடுத்தி அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, நிதி ஒதுக்கப்பட்டு tender process–ல் இருக்கிறது. விதி 110–ன்கீழ் அறிவிக்கப்பட்டு, நிதி ஒதுக்கப்பட்டுவிட்டது. பாதாள சாக்கடைத் திட்டம் என்பது ஒரு long process. அதில் முக்கியமானது சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதுதான். வீட்டு இணைப்பு கொடுப்பதற்கு ஒவ்வொருவரும் apply செய்து, அதற்குப் பிறகு plumber சென்று குழாய் இணைப்பு தர வேண்டியிருக்கிறது. இந்தியாவிலேயே இல்லாத அளவிற்கு மாண்புமிகு முதலமைச்சர்

[2018 ஜனவரி 11

அவர்களின் உத்தரவிற்கிணங்க, இன்றைக்கு புதிய system ஏற்படுத்தப்பட்டுள்ளது. நேற்று பேசும்போதுகூட இதுகுறித்துச் சொன்னோம். இதுநாள்வரை செயல்படுத்தப்பட்ட/முடிவுற்ற பாதாள சாக்கடைத் திட்டங்களில் வீட்டு இணைப்பு வழங்க அந்தந்த வீடுகளில் வெளிப்புற சுற்றுச் சுவர் வரை மட்டும் குழாய் பதிக்கப்பட்டு இணைப்பு வழங்கப்பட்டது. வீட்டு இணைப்பு பெற, திட்டம் முழுமையாக முடிந்த பின்னர், வீட்டு உரிமையாளர்கள் உள்ளாட்சி அமைப்புகளை அணுகி, உரிய படிவங்கள் மற்றும் ஒருமுறை செலுத்த வேண்டிய வைப்புத் தொகையைச் செலுத்த வேண்டும். பின்னர், உள்ளாட்சி அமைப்பு பொறியியல் பிரிவு அலுவலர்கள் ஒவ்வொரு கட்டடத்தையும் கள ஆய்வு செய்து, மதிப்பீடு தயாரித்து, உரிய அறிவிப்பினை செய்து centage செலுத்த வேண்டும். பின்னர், உரிய வழிமுறைகளின்படி, முதுநிலையின்படி (on seniority basis) வீட்டு இணைப்பு வழங்குவதில் மாதக் கணக்கில் காலதாமதம் ஏற்பட்டு வந்தது. மேலும், அனைத்து வீட்டு உரிமையாளர்களும் வீட்டு இணைப்பைப் பெற முன்வருவதில் சுணக்கம் இருக்கிறது. எல்லோரும் எடுக்க முன்வருவதில்லை. எனவே, திட்டம் முழுமையாக வரமுடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. சில நிகழ்வுகளில் திட்டம் முடிவதற்கு ஆண்டுக்கணக்கில், அதாவது, 5 ஆண்டுகளுக்கும் மேலாகி இருக்கிறது. சில நேரங்களில் 7, 8, 9 ஆண்டுகள்கூட ஆகியிருக்கின்றன. இப்போது இத்திட்டம் முடிவடைவதில் காலதாமதமாகின்ற காரணத்தினால் சில நகர்ப்புற உள்ளாட்சிகளில் திட்டப் பணிகள் முடிவடைந்து நடைமுறைக்குக் கொண்டுவர இயலாமல் பாதிப்பு ஏற்படுகிறது. உரிய காலத்தில் வீட்டு இணைப்பு தந்து, கட்டணம் வசூல் செய்யாததால் மேற்படி உள்ளாட்சிகளுக்கு பெரியளவில் நிதியிழப்பும் ஏற்பட்டது. இதனை எளிதாக்கும் முயற்சியாக இந்திய நாட்டிலேயே முதன்முறையாக ஒவ்வொரு நகராட்சியின் உட்பகுதியிலும் அந்தந்த வீடுகளில் உருவாகும் கழிவுநீரினை வீட்டிற்கு வெளியே உள்ள குழாயுடன் இணைக்கும்விதமாக, வீட்டிற்குள் குழாய்கள் பதித்தல், ஆய்வுக் குழிகள் கட்டுதல் போன்ற பணிகள் திட்ட மதிப்பீட்டிலேயே சேர்க்கப்பட்டு, தற்போது ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் பாதாள சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்திட முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதனால், பாதாள சாக்கடைத் திட்டப் பணி முடிவுற்று, பயன்பாட்டிற்கு வரும் நாளிலேயே, கழிவு நீர் உடனடியாக திட்டக் குழாய்களுக்குள் செல்ல வழிவகை செய்யப்பட்டு திட்டம் முழுமையாக பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும். இத்திட்டம் இந்தியாவிலேயே முதன்முதலாக



2018 ஜனவரி 11]

தமிழகத்தில்தான் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. எனவே, இந்தக் காலதாமதம் முழுமையாகக் குறையும். மேலும், வெட்டப்பட்ட சாலைகளை இணைப்பதைப் பொறுத்தவரையில், cutting செய்யப்பட்ட பகுதிகளில் மட்டும்தான் சாலைகள் போடப்பட வேண்டும். அதற்கும்கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், முழுமையாகவே அந்தச் சாலைகளை எடுத்துச் செய்யலாம் எனச் சொல்லியிருக்கிறார்கள். வருங்காலங்களில் அதுவும் செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள். சுருக்கமாகக் கேளுங்கள், நேரமாகிவிட்டது.

முற்பகல் 10–40

**திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஆலந்தூர் தொகுதிக்குட்பட்ட 156–வது வட்டம் முகலிவாக்கம், 157–வது வட்டம் மணப்பாக்கம், 158–வது வட்டம் நந்தம்பாக்கம் ஆகிய பகுதிகள் சென்னை மாநகராட்சியோடு சேர்க்கப்பட்டு கிட்டத்தட்ட ஏழு ஆண்டுகளுக்குமேல் ஆகின்றன. ஆனால், அந்தப் பகுதியிலே பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் இதுவரை தொடங்கப்படாமல் இருக்கின்றன. அவை எப்போது தொடங்கப்படும் என்பதை இந்த அரசின் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியுடன் 42 உள்ளாட்சி அமைப்புகள் சேர்க்கப்பட்டன. அதிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் கிட்டத்தட்ட 1,600 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, படிப்படியாக எடுத்துக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன்னாள் அமைச்சராக இருந்தவர், அந்தப் பகுதிகள் படிப்படியாக கண்டிப்பாக எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய பகுதியும் துறை அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு, படிப்படியாக

[2018 ஜனவரி 11

எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 25, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**25—**

## சிப்காட் தொழிற்பேட்டை

***25120—டாக்டர் V.P.B. பரமசிவம்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஊராட்சி ஒன்றியம், D. கூடலூர், லந்தக்கோட்டை ஊராட்சியில் சிப்காட் தொழிற்பேட்டை அமைக்க நிலம் கையகப்படுத்தும் பணிக்கு நிதி ஒதுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டம், லந்தக்கோட்டை, தீண்டக்கல் மற்றும் D. கூடலூர் ஆகிய கிராமங்களில் சுமார் 1,645 ஏக்கர் பரப்பளவு நிலம் சிப்காட் தொழிற்பூங்கா அமைப்பதற்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மாவட்ட நிருவாகம் மூலமாக பிரேரணைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. நிருவாக அனுமதிப் பிரேரணை தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது. நிருவாக அனுமதி அரசாணை வெளியிட்ட பிறகு, சிப்காட் நிறுவனம் மூலமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, நில எடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2018 ஜனவரி 11]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம் அவர்கள்.

**டாக்டர் V.P.B. பரமசிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியம் தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய பகுதி. அந்தப் பகுதியில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கருணையினாலே அழகு சாதனப் பொருட்கள் மற்றும் பல்வேறு தொழிற்சாலைகள் அமைப்பதற்காக சிப்காட் நிறுவனம் அறிவிக்கப்பட்டிருந்தது. எங்களுடைய ஒன்றியத்திலிருந்து கிட்டத்தட்ட 50 ஆயிரத்திற்கும் அதிகமான இளைஞர்களும், இளம் பெண்களும் கரூருக்கு textile தொழிலுக்காக சென்று கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சிப்காட் தொழிற்பேட்டை விரைவிலே அமைவதற்கான அத்தனை பணிகளையும் எங்களுக்கு செய்து தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, தொழில் துறையில் பின்தங்கிய எங்களுடைய வேடசந்தூர் தொகுதி போன்ற இடங்களுக்கு தமிழ்நாட்டில் இருக்கின்ற தொழில் துறையின்கீழ் வருகின்ற அனைத்து பெரு நிறுவனங்களிலே கூலி அடிப்படையிலே செய்யப்படுகின்ற பணிகள் என்னவெல்லாம் இருக்கின்றன என்ற ஒரு list–ஐ ஒரு database ஆக தயாரித்து, Small Scale Industries Minister அவர்களிடத்திலே கொடுக்க வேண்டும். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அற்புதமான திட்டமான இந்த NEEDS திட்டத்திலே நிறைய இளைஞர்கள் எந்தத் தொழிலை மேற்கொள்வது என்று தெரியாமல் இருக்கிறார்கள். ஆகவே, enormous amount, நிறைய நிதியினை Small Scale Industries–க்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இளைஞர்களுக்கு தரத் தயாராக இருக்கிறது. அந்த இளைஞர்களிடம் எந்தத் தொழிலைத் தேர்வு செய்வது என்ற விவரம் இல்லாததால் job works குறித்த details–ஐ எல்லாம் Small Scale Industries–க்கு வழங்கி இளைஞர்களுடைய அறியாமையைப் போக்குவதற்கு அரசு முன்வருமா என்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிருவாக அனுமதி அரசாணை வெளியிட்ட பிறகு, உடனடியாக சிப்காட் நிறுவனம்மூலம் நிதியொதுக்கீடு செய்யப்பட்டு, நில எடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்

அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம் அவர்கள்.

**டாக்டர் V.P.B. பரமசிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே வேடசந்தூர் தொகுதி Industrially backward area ஆக அறிவிக்கப்பட்டு, 65–க்கும் அதிகமான நூற்பாலைகள் அங்கே வந்து, இன்றளவும் ஏழையெளியவர்களுக்கு அது தொழில் ஆதாரமாக இருந்து கொண்டிருக்கின்றது. இன்று 30 ஆண்டுகளைக் கடந்து விட்ட நிலையில், கடந்த மாதம் கூட 3 நூற்பாலைகளை மூடுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே, தமிழ்நாட்டிலே இதுபோன்ற நிறைய பகுதிகள் இருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களும் மீண்டும் ஒரு முறை கருணையோடு 1980 ஆம் ஆண்டு அறிவித்ததைப்போல, தமிழ்நாட்டிலுள்ள பின்தங்கிய பகுதிகளைக் கண்டறிந்து, ஒரு சில பகுதிகளையாவது Industrially backward area ஆக அறிவித்து, அத்துணை சலுகைகளையும் வழங்க வேண்டும். குறிப்பாக அவர்களுடைய தேவை மின்சாரம். மின்சாரத்தில் மின் மிகை மாநிலமாக தமிழகத்தை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு வைத்திருக்கிறது. அந்த மின்சாரத்தை மானிய விலையிலே கொடுத்து அந்தத் துறைகளை ஊக்கப்படுத்த வேண்டும். புதிய தொழில்கள் உருவாக உறுதுணையாக இருக்க வேண்டும். அதுகுறித்து நம்முடைய தொழில் துறை அமைச்சர் அவர்களிடத்திலே அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தென் மாவட்டங்களை தொழிலில் பின்தங்கிய மாவட்டங்களாக அறிவித்துள்ளார்கள். அதில், சிவகங்கை, இராமநாதபுரம், புதுக்கோட்டை, திண்டுக்கல், தேனி, விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 9 மாவட்டங்களும் அடங்கும். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பின்தங்கிய





மாவட்டங்களாக அறிவித்த மாவட்டங்களில் திண்டுக்கல் மாவட்டமும் இருக்கிறது. குறிப்பாக, வேடசந்தூர் பகுதியும் இருக்கிறது. வேடசந்தூர் தொகுதியில் கிட்டத்தட்ட 1,645 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்த பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது. சிப்காட் நிறுவனம் மூலமாக நிதியொதுக்கீடு செய்யப்பட்டு, நில எடுப்பு நடவடிக்கையும் தொடங்கப்பட்ட பிறகு, சிப்காட் நிலம் ஒதுக்கப்பட்ட பிறகு அதில் தொழில் தொடங்குவதற்குண்டான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும். நிச்சயமாக பல்வேறு தொழில் நிறுவனங்களை அங்கே கொண்டு வருவதற்குண்டான வழிவகையும் செய்து தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 26, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

**26—**

## நவீன அரிசி ஆலை

***17374—திரு. துரை. சந்திரசேகரன்:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, பூதலூரில் ஒருங்கிணைந்த நவீன அரிசி ஆலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு திருத்திய விடையை அளிக்கிறேன்.

[2018 ஜனவரி 11

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதியிலுள்ள அம்மன்பேட்டையில் அதிநவீன இயந்திரங்களுடன் நவீனமயமாக்கப்பட்ட அரிசி ஆலை இயங்கி வருவதால், தற்போது பூதலூரில் ஒருங்கிணைந்த நவீன அரிசி ஆலை அமைக்கும் அவசியம் எழவில்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள்.

**திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூதலூர் பகுதியில் சென்ற ஆண்டு 2016–2017–ல் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக 1,682 மெட்ரிக் டன்னும், அதேபோல திருவையாறு பகுதியில் 6,577 மெட்ரிக் டன்னும் அரசாங்கத்தின் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்மூலம் நெல் வாங்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருவையாறு தொகுதியில், அம்மன்பேட்டையில் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிக்காலத்தில் தொடங்கப்பட்ட நவீன அரிசி ஆலை பற்றி குறிப்பிட்டார்கள். நான் கேட்க விரும்புவது, பூதலூரிலிருந்தும், திருவையாறு பகுதியிலிருந்தும் நெல்லை ஏற்றி அம்மன்பேட்டைக்குக் கொண்டு செல்வதற்கான போக்குவரத்து சிரமத்தைக் குறைக்கின்ற வகையில், நெல் அதிகமாக உற்பத்தியாகின்ற தஞ்சை மாவட்டத்தின் ஒரு பகுதியாக விளங்குகின்ற பூதலூரில் நவீன அரிசி ஆலை அமைக்கப்பட வேண்டும். திருவையாறு பகுதியில் பூதலூர் இரயில்வே நிலையம் மிக அருகில் அமைந்திருக்கின்றது. Goods train மூலமாக வெளி மாநிலங்களுக்கும் மற்றும் வெளி மாவட்டங்களுக்கும், நெல்வினை கொண்டு செல்ல, அரிசியைக் கொண்டு செல்ல அது ஏதுவாக அமையும். அதேபோல, நாகை–கூடலூர் தேசிய நெடுஞ்சாலை மிக அருகில் இருக்கிறது. மானாமதுரை–பெரம்பலூர் சாலையும் அதில் இணைகிறது. திருக்காட்டுப்பள்ளி–பட்டுக்கோட்டை சாலை இருக்கிறது. திருச்சி–தஞ்சை தேசிய நெடுஞ்சாலை இருக்கிறது. இப்படி எல்லா தேசிய நெடுஞ்சாலைகளும், மாநில அரசாங்கத்தின் சாலைகளும் அருகில் இருக்கின்றன. இந்த நவீன அரிசி ஆலை அமைந்தால் அரசாங்கத்திற்கு செலவு மீதமாகும், விவசாயிகளுக்கும் பயனுள்ளதாக அமையும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.



2018 ஜனவரி 11]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் தற்போது தமிழகம் முழுவதும் 21 நவீன அரிசி ஆலைகள் இயங்கி வருகின்றன. குறிப்பாக, தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரு கோட்டத்திற்கு ஒன்று அதாவது ஒரு division–க்கு ஒன்று என உள்ளது. தஞ்சாவூர் கோட்டம் என்று சொல்கிறபொழுது, தஞ்சாவூர் கோட்டத்தில் அமைந்திருக்கிற நவீன அரிசி ஆலை திருவையாறு தொகுதியிலேயே அமைந்திருக்கிறது. அதேபோல கும்பகோணம் division–ல் திருநாகேஸ்வரத்திலும், பட்டுக்கோட்டை division–ல் பட்டுக்கோட்டையிலும் என ஒரு division–க்கு ஒரு நவீன அரிசி ஆலை என்கிற அளவிலே தஞ்சாவூர் மாவட்டத்திலேயும், திருவாரூர் மாவட்டத்தில் 2 நவீன அரிசி ஆலைகளும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் 4 நவீன அரிசி ஆலைகளும் உள்ளன. மொத்தம் இருக்கிற 21 நவீன அரிசி ஆலைகளில் 11 நவீன அரிசி ஆலைகள், பக்கத்தில் இருக்கிற திருச்சி, கடலூர் உள்ளிட்ட மாவட்டங்களில் இயங்கி வருகின்றன. எனவே, அது தற்பொழுது போதுமானதாக இருக்கிறது என்பதனாலும், புதிதாக ஒரு நவீன அரிசி ஆலை அமைக்க வேண்டும் என்று சொன்னால், அதற்கு இடம், கிடங்கு கட்டுதல், மற்றபடி உள்ள தேவைகள், செலவுகள் எல்லாம் சேர்த்து 20 கோடி ரூபாய் செலவாகிறது. எனவே, வருங்காலத்தில் தேவையைக் கருதி, நிதிநிலைமையைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள்.

**திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொல்கிறேன். சென்ற ஆண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நவீன அரிசி ஆலையை வலங்கைமான் பகுதியில் அறிவித்தார்கள். திருவையாறு தொகுதியில் அது ஏற்கெனவே தலைவர் கலைஞர் காலத்தில் கொண்டு வந்தது. மேட்டுப் பகுதியில் மழை பெய்தால் அடுத்த 5 வது நிமிடம் அந்த மழைநீர் வடியக்கூடிய அளவுக்கு பூதலூர் மேடான பகுதி. அதேபோல இரயில் நிலையம் மிக அருகில் இருக்கிறது.

*[2018 ஜனவரி 11*

*தஞ்சாவூருக்கு goods van yard–ல் கொண்டு போய்தான் நீங்கள் நெல்லை இறக்குகிறீர்கள். அதற்கு லாரியில் ஏற்ற வேண்டியதாக இருக்கிறது. அந்த நேரத்தில் லாரி strike செய்தால், அதைத் தனியாரிடம் விட வேண்டியிருக்கிறது. அரசாங்கத்திடம் அந்த அளவுக்கு லாரி வசதி இல்லை. எனவேதான் அதை வலியுறுத்திக் கேட்கின்றேன். இது அரசாங்கத்திற்கு ஏராளமான பொருள் செலவை மிச்சப்படுத்தும். எனவே, ஒரு மேட்டுப் பகுதியில் நல்ல நவீன அரிசி ஆலையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலித்து எதிர்காலத்தில் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் இருக்கின்ற 21 நவீன அரிசி ஆலைகள், 3 கட்டங்களாக, 95 கோடி ரூபாய் செலவில் நவீனமயமாக்கப்பட்டு, அனைத்து நவீன அரிசி ஆலைகளையும் Colour Sortex–அதாவது தனியார் நவீன அரிசி ஆலைகளுக்கு நிகராக, அரிசியை தரமாகக் கொடுப்பதற்குரிய அத்தனை நடவடிக்கைகளையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது. அதனடிப்படையில் ஓர் ஆண்டிற்கு 5 இலட்சம் மெட்ரிக் டன் வரை அரிசியை, நவீன அரிசி ஆலைமூலம் அரைக்கின்ற வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம். அதுமட்டுமல்லாமல், நம்மிடத்திலே நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் அரைவை முகவர்கள் 425 பேர் இருக்கின்றார்கள். இவர்கள்மூலம் 15 இலட்சம் மெட்ரிக் டன் அரிசியை அரைப்பதற்குரிய வாய்ப்பையும் பெற்றிருக்கிறோம். எனவே, அதிகபட்சமாக 20 இலட்சம் மெட்ரிக் டன்னை டெல்டாவிலிருந்து நாம் கொள்முதல் செய்தால், அதனை முழுவதுமாக அரைப்பதற்குரிய வாய்ப்புகளை முழுமையாகப் பெற்றிருக்கிறோம். எனவே, வருங்காலத்தில் தேவையின் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதனை மீண்டும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்கள்.*



*2018 ஜனவரி 11]*

**டாக்டர் (திருமதி) பூங்கோதை:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓரிரு நாட்களுக்கு முன்பு நம்முடைய மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள், மின்னணு குடும்ப அட்டைகளை, சுமார் 99 சதவிகிதம் அளவிற்கு வழங்கிவிட்டதாக ஒரு தகவலைக் கூறினார். என்னுடைய ஆலங்குளம் தொகுதியில் பல்வேறு இடங்களில் பகுதிநேர நியாய விலைக் கடைகள் தேவைப்படுகின்றன. முக்கியமாக, பாப்பாக்குடி ஒன்றியத்திலுள்ள பாப்பாக்குடி கிராமம், ரெங்கசமுத்திரம் கிராமம், கடையம் ஒன்றியத்திலுள்ள மேலாம்பூரிலுள்ள கருத்தப்பிள்ளையூர், கீழாம்பூரிலுள்ள தட்டாரன்பட்டி, தெற்கு மடத்தூர் போன்ற இடங்களில் பகுதிநேர நியாய விலைக் கடைகள் தேவைப்படுகின்றன. இந்தக் கோரிக்கையை சுமார் ஒன்றரை வருடங்களாக துணைச் செயலரிடமும், மாவட்ட ஆட்சியரிடத்திலும் வைத்துள்ளேன். ஏனென்றால், சட்ட விதிகளுக்குட்பட்டு இங்கெல்லாம் பகுதிநேர நியாய விலைக் கடைகளைத் தொடங்கலாம். அப்போது மாவட்ட ஆட்சியர் என்னிடம் கூறிய செய்தி என்னவென்றால், மின்னணு குடும்ப அட்டைகளை முழுவதுமாக வழங்கி முடித்த பிறகுதான் நாங்கள் புதிய கடைகளை அமைப்போம் என்று கூறினார். அதுபோன்றதொரு கருத்துரு இருப்பது உண்மையென்றால், தயவுசெய்து நீங்கள் சொன்னமாதிரி இப்போது 99 சதவிகிதம் மின்னணு குடும்ப அட்டைகளைக் கொடுத்து முடித்துவிட்டீர்கள். எங்கெல்லாம் பகுதிநேர மற்றும் முழுநேரக் கடைகள் தேவைப்படுகின்றனவோ அங்கெல்லாம் உடனே அமைத்திட தாங்கள் ஆவன செய்ய வேண்டும். ஏனென்றால், இதற்கு முக்கியமான காரணம், 4 நாட்களுக்கு முன்பு, அதாவது 6 ஆம் தேதி அன்று நான் ஒரு கடையை ஆய்வு செய்வதற்குச் சென்றிருந்தேன். கடை எண் 013பி1 என்பதாகும். இந்தக் கடையில் 622 குடும்ப அட்டைகள் இருக்கின்றன. இதில் 450 குடும்ப அட்டைகளுக்குத்தான் நீங்கள் பாமாயில் கொடுத்திருக்கிறீர்கள். தயவுசெய்து பாமாயிலை பாக்கெட்டில் கொடுப்பதுபோல், துவரம் பருப்பையும், சர்க்கரையையும் பாக்கெட்டில் கொடுங்கள். அப்போது எடைப் பிரச்சினையும் இருக்காது. மேலும், அனைவருக்கும் முழுமையான அளவில் பொருட்களையும் வழங்கிட வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

[2018 ஜனவரி 11

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வி மூலக் கேள்விக்குத் தொடர்பில்லை என்று சொன்னாலும், உணவுத் துறைக்குச் சம்பந்தப்பட்ட கேள்வி என்பதனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற அந்த இடங்களையெல்லாம் ஆய்வு செய்து, தேவை ஏற்படின் மக்களுக்குப் பிரச்சினையில்லாமல் செய்வதற்காக பகுதிநேர அங்காடிகள் திறப்பதற்கான முயற்சிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று செய்து தரப்படும் என்பதனை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒவ்வொரு மாதமும் பாமாயிலைப் பொறுத்தவரையில் சுமார் ஒரு கோடியே 50 இலட்சம் pouches வாங்குகிறோம். அது சரியாக எல்லாக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் ஒவ்வொரு மாதமும் சென்றடைகிறது. அதேபோல அனைத்துப் பொருட்களும் சரியாகச் சென்றடைகின்றன என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 27, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**27—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

***3349—திரு. பி.எம். நரசிம்மன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், ஆர்.கே. பேட்டை ஒன்றியம், பாலாபுரம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தை பிறந்தால் வழி பிறக்கும். பாலாபுரம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையத்தை வெகுவிரைவிலே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைப்பார்கள் என்கின்ற



2018 ஜனவரி 11]

நல்ல செய்தியினை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

முற்பகல் 10–55

இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழிகாட்டியபடி உயர்தர சுகாதாரச் சேவைகளை வழங்குவதிலும், சுகாதாரக் குறியீடுகளின் இலக்குகளை அடைவதிலும் இந்தியாவிலேயே தமிழ்நாடு ஒரு முன்மாதிரி மாநிலமாகச் சிறந்து விளங்குகிறது. அதற்கு எடுத்துக்காட்டாகத்தான் சற்றுமுன் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். நான் சார்ந்திருக்கிற திருத்தணி தொகுதியில், பாலாபுரம் என்கின்ற கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் வெகு விரைவிலே அமைக்கப்படும் என்று சொன்னார்கள். பொங்கல் பரிசினை திருத்தணி தொகுதிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும் அளித்திருக்கிறார்கள். அதற்காக தொகுதி மக்களின் சார்பிலே நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், வளர்ந்த நாடுகள் அடைந்துள்ள சுகாதாரக் குறியீடுகளை 2023 ஆம் ஆண்டுக்குள் அடைய வேண்டுமென்ற இலக்கு, இதய தெய்வம் அம்மா அவர்களால் வெளியிடப்பட்ட, ‘தொலைநோக்குத் திட்டம் 2023’—ல் சேர்க்கப்பட்டுள்ளது. அந்த வகையில் நான் சார்ந்திருக்கிற திருத்தணியில் அரசு பொது மருத்துவமனை உள்ளது. இதுகுறித்த பல திட்டங்களை இந்தப் பொது மருத்துவமனையிலே செய்திட வேண்டுமென்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும், திருத்தணியிலே இருக்கிற அரசு பொது

மருத்துவமனையை 3 முறை பார்வையிட்டிருக்கிறார்கள். இதிலே சில வசதிகளை உருவாக்க வேண்டுமென்பதற்காக கோரிக்கை வரப்பெற்றிருக்கிறது. Blood Bank கட்டடம் வேண்டுமென்றும், பச்சிளம் குழந்தைகள் பிரிவுக்கு ஒரு கட்டடம் வேண்டுமென்றும், Trauma Care Building with Operation Theatre வேண்டுமென்றும், புற நோயாளிகள் சிகிச்சைப் பிரிவுக்குக் கூடுதல் கட்டடம் வேண்டுமென்றும், ஆண்கள் பகுதிக்கும் பெண்கள் பகுதிக்கும் கூடுதல் கட்டடம் வேண்டுமென்றும், கண் பிரிவுக்குக் கூடுதல் கட்டடம் மற்றும் Operation Theatre வேண்டுமென்றும், கூடுதலாக மருத்துவர்கள் வேண்டுமென்றும் கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன. இந்த வசதிகளை இந்த ஆண்டிலேயே அம்மாவின் நல்லரசு நிறைவேற்றிடுமா எனக் கேட்க விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய ஆரம்ப சுகாதார நிலையம் தங்களுக்கு பொங்கல் பரிசாக தை மாதத்திலே திறக்கப்படும். அதோடு சேர்த்து தாங்கள் கேட்டிருக்கக்கூடிய திருத்தணி அரசு மருத்துவமனைக்கு மாண்புமிகு அம்மா அரசினுடைய சார்பிலே Accident Trauma Care Centre ரூ.3 கோடியே 89 இலட்சம் செலவிலும், CT Scan உள்ளிட்ட பல்வேறு உபகரணங்கள் மொத்தம் ரூ.5 கோடியே 84 இலட்சத்து 50 ஆயிரம் அளவிற்கான வசதிகளும் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அது இந்த நடப்பு நிதியாண்டிலே அமல்படுத்தப்படும் என்ற நல்ல செய்தியையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் திருத்தணி தொகுதி மக்களின் சார்பிலே நன்றிதனைத் தெரிவித்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள்.





**திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கீழ்வேளூர் தொகுதி, கீழ்வேளூர் அரசு மருத்துவமனையை 30 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனையாக அறிவித்து செயல்படுத்திட வேண்டும். தற்போதைக்கு அந்தத் தாலுகா தலைநகர மருத்துவமனையிலே 2 மருத்துவர்கள் இருக்கிறார்கள். ஒருவர் deputation–ல் இருக்கிறார். மகப்பேறு பார்ப்பதற்குக்கூட மருத்துவர்கள் இல்லாத நிலை இருக்கிறது. எனவே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் 30 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனையையும், போதுமான மருத்துவர்களையும் அமர்த்திட நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சார்ந்திருக்கக்கூடிய நாகப்பட்டினம் மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும், மக்கள் நல்வாழ்வுத் துறையிலே மிகக் கூடுதல் கவனத்தைச் செலுத்தியிருக்கின்றோம். நாகப்பட்டினம் மாவட்டத்தில் மகப்பேறு மருத்துவர்கள் நியமனம் என்பது துறைக்கு ஒரு சவாலாக இருக்கிறது. அதையெல்லாம் தாண்டிதான் தொடர்ந்து, நாம் என்ன சட்டமன்றத்தில் அறிவித்தோமோ அதன்படி 556 Speciality Doctors-ஐ முதல் முறையாக பெரிய அளவில் இப்போதுதான் நியமனம் செய்திருக்கின்றோம். நாகப்பட்டினம், ஊட்டி, கொடைக்கானல், இராமநாதபுரம் போன்ற பகுதிகளில் பணிபுரிய கூடுதலாக ஊக்கத் தொகையை இப்போது நாம் அறிவித்திருக்கிறோம். அதாவது, 2 மடங்காக அந்தத் தொகையை நாம் அதிகரித்திருக்கின்றோம். தாங்கள் சொல்லியிருக்கிற கீழ்வேளூர் பகுதியில் 385 ஒன்றியங்களிலும் upgradation–ஐ முடித்துவிட்டோம். தாங்கள் குறிப்பிடுகின்ற கீழ்வேளூரில் நோயாளிகளுடைய எண்ணிக்கைக்கேற்ப வருங்காலத்திலே உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு அவர்கள்.

**திருமதி வி. கஸ்தூரி வாசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூற்றாண்டு விழா கண்ட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களை வணங்கி, ஏழையெளிய மக்களுக்கு நல்ல பல திட்டங்களை அறிவித்து, அனைவர் மனதிலும் வீற்றிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

*முற்பகல் 11–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திருமதி வி. கஸ்தூரி வாசு:** ஆனைமலை ஒன்றிய மக்கள் நீண்ட நாட்களாக எதிர்பார்த்த ஆனைமலை வட்டத்தை பொள்ளாச்சி வட்டத்திலிருந்து பிரித்து ஆனைமலையைத் தனி வட்டமாக அறிவித்த மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும், பரிந்துரை செய்த எங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வால்பாறை தொகுதி, ஆனைமலை ஒன்றியத்திலுள்ள பெத்தநாயக்கனூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆனைமலை போன்ற மலைப் பகுதிகளுக்கு மத்திய அரசு முன்னுரிமை கொடுக்கிறது. மாநில அரசும் முன்னுரிமை அடிப்படையிலே விதிகளையெல்லாம் சற்று தளர்த்தி தேவைப்படுகின்ற அளவிற்கு அதுகுறித்து பரிசீலனை செய்து கொண்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த மருத்துவமனையைத் தரம் உயர்த்துவது குறித்து அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன் அவர்கள்.





**திரு. எம். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றிய மருத்துவமனைகளாக இருந்தவற்றையெல்லாம் ஆரம்ப சுகாதார மருத்துவமனைகளாக மாற்றியமைக்கிற ஒரு சூழ்நிலை கலைஞர் ஆட்சிக் காலத்திலே ஏற்படுத்தப்பட்டது. அப்போது, ஒரத்தநாட்டைச் சேர்ந்த பிண்ணையூரிலே ஒன்றிய மருத்துவமனை இருந்தது. ஒன்றிய மருத்துவமனை இப்போது நீக்கப்பட்டுவிட்ட காரணத்தினால், அதனை மீண்டும் செயல்பட வைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதனாலே, அந்த மருத்துவமனையின் செயல்பாடு நிறுத்தப்பட்டுவிட்டது. ஆனால், அந்தக் காலத்தில் ஒன்றிய மருத்துவமனை இருந்த இடங்களிலெல்லாம் ஆரம்ப சுகாதார மருத்துவமனை ஆரம்பிப்பது வழக்கம். அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கிறபோது, ஒரத்தநாடு தொகுதி, பிண்ணையூரிலே செயல்பட்டு வந்த ஒன்றிய மருத்துவமனையின் செயல்பாடு நிறுத்தப்பட்டுவிட்ட நிலையில், மறுபடியும் ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டுமென்று பலமுறை கேள்விகள் கேட்டும், அதற்கு அரசு இதுவரையிலே தக்க பதிலை அளிக்கவில்லை. ஆகையினால் நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பிண்ணையூரிலே ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது Union Dispensary பற்றியதாகும். அந்த மருத்துவமனை ஏற்கெனவே Union Dispensary–ஆகச் செயல்பட்டது. பஞ்சாயத்து யூனியன் ஆளுகையின்கீழ் அந்த மருத்துவமனை செயல்பட்டு வந்தது. அதனைத் தொடர்ந்து, அரசின் பொது சுகாதாரத் துறையின்கீழ் கொண்டு வந்து, அரசாணை பிறப்பிக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல, எங்கெல்லாம் viability இருக்கிறதோ, எந்தெந்த Union Dispensary–ஐ நாம் ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்ற முடியுமோ, அவற்றையெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலும் மாற்றி அரசாணை பிறப்பிக்கப்பட்டது. அவற்றில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கக்கூடிய சட்டமன்றத் தொகுதியிலே, எனக்கு நினைவு சரியாக இருந்தால், கீழவேளூர் என்ற இடத்தில், நம்முடைய மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு. ஆர். வைத்திலிங்கம்

[2018 ஜனவரி 11

அவர்கள் குறிப்பிட்டு, அது ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தப்பட்டது. பிண்ணையூர் விதிமுறைகளுக்கு உட்படவில்லை. அங்கும் முயற்சி செய்தோம்; பிண்ணையூர் விதிமுறைகளைப் பூர்த்தி செய்யவில்லை. வருங்காலத்தில் அப்பகுதியின் மக்கள்தொகைக்கேற்ப அரசு கவனத்திலே எடுத்துக்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மீதமுள்ள வினாக்கள் நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

## பட்டியல்கள் 3 மற்றும் 4 @

## பட்டியல் 3

**1—**

### பாலம் கட்டுதல்

**வினா எண் 8639—திரு. சி. ராஜா:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சங்கரி தொகுதி, காவேரிப்பட்டி ஊராட்சி, வட்ராம்பாளையம் கிராமம், மேட்டூர் மாரியம்மன் கோயில் அருகில் வாய்க்காலில் பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சங்கரி தொகுதி, காவேரிப்பட்டி ஊராட்சி, வட்ராம்பாளையம் கிராமம், மேட்டூர் மாரியம்மன் கோயில் அருகில் வாய்க்காலில் காவேரிப்பட்டி ஊராட்சி நிதிமூலம் 2016–2017 ஆம் நிதியாண்டில் பாலம் கட்டப்பட்டுள்ளது.*

---

@ இப்பட்டியல்களிலுள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.



2018 ஜனவரி 11]

**2—**

### விருந்தினர் மாளிகையை புதுப்பித்தல்

**வினா எண் 8968—திரு. வே.பொ. சிவசுப்பிரமணி:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கொடுமுடியிலுள்ள விருந்தினர் மாளிகையை புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:**

கொடுமுடியிலுள்ள விருந்தினர் மாளிகையானது, 1865 ஆம் ஆண்டு ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட புராதன கட்டடமாகும். இக்கட்டடம் 152 வருடங்கள் பழமையான கட்டடமாகும். இக்கட்டடம் மிகவும் பழமையானதாகவும், பழுதடைந்த நிலையிலும் உள்ளதால் சாதாரண தொழில்நுட்பத்தில் புதுப்பிக்க இயலாத நிலையிலுள்ளது. எனவே, பொதுப் பணித் துறை மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களின் ஆலோசனை பெற்று புதுப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**3—**

### சாலையை அகலப்படுத்தி சீரமைத்தல்

**வினா எண் 9204—திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, வெள்ளலூர்–உறங்கான்பட்டி சாலையை அகலப்படுத்தி, சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:**

மேலூர் தொகுதி, வெள்ளலூர்–உறங்கான்பட்டி சாலையானது, மாவட்ட முக்கிய சாலையான வெள்ளலூர்–உறங்கான்பட்டி மாவட்ட எல்லைச் சாலை கி.மீ. 0/0–6/200 வரையுள்ள இரு வழித்தட சாலையாகும். இச்சாலை 2012–2013 ஆம் ஆண்டில் மத்திய சாலை நிதித் திட்டத்தின்கீழ் தேசிய நெடுஞ்சாலை அலகின்மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, தற்பொழுது போக்குவரத்திற்கு ஏற்றவாறு நல்ல நிலையில் உள்ளது.

**4—**

**சாலையைச் சீரமைத்தல்**

**வினா எண் 9206—திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மேலூர் தொகுதி, தும்பைப்பட்டி, அட்டப்பட்டி, பூதமங்கலம், கொடக்கம்பட்டி வழியாக சிங்கம்புணரி வரை செல்லும் சாலையை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:**

*மேலூர் தொகுதி, தும்பைப்பட்டி, அட்டப்பட்டி, பூதமங்கலம், கொடக்கம்பட்டி வழியாக சிங்கம்புணரி வரை சீரமைக்கக் கோரும் சாலைகளானது, மாவட்ட முக்கியச் சாலைகளான தும்பைப்பட்டி–ஜெயங்கொண்டான்நிலை சாலை கி.மீ. 0/0–8/8, 9/260–12/060 மற்றும் கோட்டநத்தம்பட்டி–கொடுக்கம்பட்டி சாலை கி.மீ. 0/0–14/180, 14/380–20/980 எனும் சாலைப் பகுதிகளில் அமைந்துள்ளது. மேலும், தும்பைப்பட்டி–ஜெயங்கொண்டான்நிலை சாலை கி.மீ. 0/0–3/2 வரை 2015–2016 ஆம் ஆண்டில் சிறப்பு பழுதுபார்த்தல் பணிகளும், கோட்டநத்தம்பட்டி–கொடுக்கம்பட்டி சாலை கி.மீ. 9/6–14/8 மற்றும் 14/38–20/98 வரையுள்ள சாலைப் பகுதி 2011–2012 ஆம் ஆண்டில் மத்திய சாலை நிதித் திட்டத்தின்கீழ் தேசிய நெடுஞ்சாலை அலகின்மூலம் சீரமைப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு, தற்பொழுது மேற்படி சாலைகள் நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.*

**5—**

**ஏரிக்கு நீர்வரத்து பெறுதல்**

**வினா எண் 9427—திரு. எ. ராமர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) குளித்தலை தொகுதி, கிருஷ்ணராயபுரம் ஒன்றியம், காவேரி ஆற்றிலிருந்து பஞ்சப்பட்டி ஏரிக்கு நீர்வரத்து பெற அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*





**விடை—**

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) குளித்தலை தொகுதி, கிருஷ்ணராயபுரம் ஒன்றியம், பஞ்சப்பட்டி ஏரிக்கு காவேரியிலிருந்து தண்ணீர் வழங்க தொழில்நுட்ப ரீதியாக சாத்தியக்கூறுகள் இல்லை.*

**6—**

**தார்ச் சாலையைச் சீரமைத்தல்**

**வினா எண் 9447—திரு. பி. மூர்த்தி:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மதுரை கிழக்கு தொகுதி, ஒத்தக்கடை நரசிங்கம் கடச்சனேந்தல் வழியாக ஊமச்சிகுளம், வீரபாண்டி வழியாக அலங்காநல்லூர் வரையுள்ள தார்ச் சாலையைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:**

*சட்டமன்ற வினாவில் சீரமைக்க குறிப்பிடப்பட்டுள்ள சாலையானது மாவட்ட முக்கிய சாலையான ஒத்தக்கடை–பி. முத்துப்பட்டி சாலை கி.மீ.0/0–10/8 வரையுள்ள சாலைப்பகுதி ஆகும். இச்சாலையில் கி.மீ. 0/0–0.6, 0/8–1/0, 1/2–1/6, 1/8–2/0, 2/6–3/6, 4/0–4/2, 5/4–5/6, 6/4–7/0, 7/6–9/8, 10/0–10/2 வரையுள்ள சாலைப் பகுதிகள் 2012–2013 ஆம் ஆண்டில் சி.ஆர்.ஐ.டி.பி. திட்டத்தின்மூலம் மேம்பாடு செய்யப்பட்டுள்ளன. மேலும், இச்சாலையில் கி.மீ. 0/6–0/8, 1/0–1/2, 2/0–2/6, 3/6–4/0, 4/2–4/8, 5/0–5/4, 5/6–6/4, 7/0–7/2 பழுதடைந்த சாலைப் பகுதிகள் 2012–2013 ஆம் ஆண்டில் சிறப்பு பழுதுபார்த்தல் திட்டத்தின்கீழ் சீர்செய்யப்பட்டு தற்பொழுது சாலை போக்குவரத்திற்கு ஏற்றவாறு நல்ல நிலையில் உள்ளது.*

**7—**

**தார்ச் சாலையைச் சீரமைத்தல்**

**வினா எண் 9448—திரு. பி. மூர்த்தி:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மதுரை கிழக்கு தொகுதி, அழகர்கோவில் சாலையிலிருந்து சீவகப்பட்டி வழியாக நத்தம் சாலை வரையிலும், நத்தம்*

*சாலையிலிருந்து தொண்டைமான்பட்டி வெளிச்சநத்தம் பிரிவு, மாலைப்பட்டி வாவிடைமருதூர் வழியாக அலங்காநல்லூர் வரையுள்ள தார்ச் சாலையை புதுப்பித்து தர அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:**

*அழகர்கோவில்–நத்தம் சாலை கி.மீ. 0/0–4/400 வரையுள்ள மாவட்ட முக்கிய சாலையாகும். இச்சாலையானது 2007–2008 ஆம் ஆண்டில் சுற்றுச்சாலை பகுதி–2 திட்டத்தின்மூலம் பழுது பார்க்கப்பட்டு தற்பொழுது போக்குவரத்திற்கேற்ப உகந்த நிலையில் உள்ளது. தனிச்சியம்–சீவகப்பட்டி சாலை (வழி) அலங்காநல்லூர்–வாவிடைமருதூர் சாலையானது கி.மீ. 0/0–19/400 வரையுள்ள மாவட்ட முக்கிய சாலையாகும். இச்சாலையின் கி.மீ. 0/0–1/0, 3/0–3/6, 4/0–5/0, 8/2–8/4 வரை சி.ஆர்.ஐ.டி.பி.* (CRIDP) *திட்டம் 2014–15 ஆம் ஆண்டிலும், கி.மீ. 9/8–10/8 வரை சி.ஆர்.ஐ.டி.பி.* (CRIDP) *திட்டம் 2015–16 ஆம் ஆண்டிலும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், கி.மீ. 13/2–14/4, 15/0–16/0, 16/8–17/0, 18/4–19/4 வரை 2007–08 ஆம் ஆண்டு சுற்றுச் சாலை பகுதி–2 திட்டத்தின் கீழும், கி.மீ. 14/4–15/0, 16/0–16/8, 17/0–18/4 வரையுள்ள சாலைப்பகுதியில் 2012–13 ஆம் ஆண்டிலும், கி.மீ. 1/0–3/0, 3/6–4/0, 5/0–8/2 வரையுள்ள சாலைப்பகுதியில் 2013–14 ஆம் ஆண்டிலும் சிறப்புப் பழுதுபார்த்தல்மூலம் பணிகள் செய்து முடிக்கப்பட்டு, மீதமுள்ள சாலைப் பகுதியான கி.மீ.8/4–13/2 வரை தற்பொழுது போக்குவரத்திற்கேற்ப நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.*

**8—**

## உயர்மட்டப் பாலம் அமைத்தல்

**வினா எண் 10990—திரு. அர. சக்கரபாணி:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஒட்டன்சத்திரம் தொகுதியில் அம்பிளிக்கை–குத்திலிப்பை இடையே கி.மீ. 9/6–ல் உயர்மட்டப் பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*





**விடை—**

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) உயர்மட்டப் பாலம் அமைக்கக் கோரப்பட்டுள்ள இடமானது அம்பிளிக்கை–குத்திலிப்பை சாலை 0/0–11/4 வரையுள்ள மாவட்ட முக்கிய சாலையாகும். இச்சாலையில் கி.மீ. 9/6–ல் எவ்வித ஆறும் சாலையின் குறுக்கே செல்லவில்லை. தற்போது இச்சாலையின் கி.மீ. 8/8–ல் காட்டாற்று ஓடைப்பட்டி என்ற இடத்தில் தரைமட்ட தாம்போகி* (bed level causeway) *உள்ளது. தாம்போகியின் மேல்புறத்தில் 100 மீட்டர் தொலைவில் ஊராட்சி ஒன்றியம் சார்பில் கட்டப்பட்ட ஓர் உயர்மட்டப் பாலம் போக்குவரத்துக்கு ஏற்றவகையில் பயன்பாட்டில் உள்ளது. அதனால் மழைக்காலங்களில் போக்குவரத்து தடை ஏதும் ஏற்படாது. எனவே, மேற்படி இடத்தில் தற்சமயம் உயர்மட்டப் பாலம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.*

**9—**

## ஆற்றைத் தூர்வாருதல்

**வினா எண் 11988—திரு. சே. கருணாஸ்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னை அடையாற்றில் கொட்டப்படும் கழிவுகளை அகற்றி, ஆற்றைத் தூர்வார அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சென்னை அடையாற்றில் உள்ள குப்பை மற்றும் கழிவுகளை அகற்றுதல் மற்றும் தூர்வாரும் பணிகள் 2016–ம் ஆண்டு மழைக் காலத்திற்கு முன்னரே மேற்கொள்ளப்பட்டு தண்ணீர் சீராக செல்ல வழிவகை செய்யப்பட்டுள்ளது.*

[2018 ஜனவரி 11

**10—**

## யானைகள் புகுவதைத் தடுத்தல்

**வினா எண் 6373—திருமதி வி. கஸ்தூரி வாசு:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை மேல்பகுதியிலுள்ள குடியிருப்புப் பகுதிகளுக்குள் யானைகள் புகுவதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை மேல்பகுதியிலுள்ள குடியிருப்புப் பகுதிகளுக்குள் யானைகள் புகுவதைத் தடுக்க வால்பாறை வனப் பகுதியின் எல்லைகளில் 51.015 கி.மீ. தூரத்திற்கு ரூ.94.418 இலட்சம் செலவில் சூரிய மின் வேலி அமைக்கப்பட்டுள்ளது. மேலும், 37.000 கி.மீ. தூரத்திற்கு ரூ.80.625 இலட்சம் செலவில் யானைகள் புகா அகழிகள் அமைக்கப்பட்டு யானைகள் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இது தவிர யானைகள் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

1. யானைகள் நடமாட்டம் குறித்து முன்னெச்சரிக்கை செய்யும் ஒலி / ஒளி எழுப்பும் கருவி நிறுவப்பட்டுள்ளது.

2. யானைகள் நடமாட்டம் குறித்து முன்கூட்டியே தகவல் தெரிவிக்க ஏதுவாக கட்டணமில்லா தொலைபேசி இணைப்பு பெறப்பட்டுள்ளது.

3. பொதுமக்கள் குடியிருக்கும் பகுதியில் யானைகள் நடமாட்டத்தைக் கண்காணித்து, அவற்றை வனப்பகுதிக்குள் திருப்பி அனுப்பும் பணியில் 24 மணி நேரமும் செயல்படும் விதமாக அவசர மேலாண்மைக் குழு ஒன்று அமைக்கப்பட்டு, கண்காணிப்பு பணிக்கு தினக்கூலி பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.



2018 ஜனவரி 11]

4. யானைகள் விரும்பி உண்ணும் வாழை, கரும்பு போன்ற பயிர்களை குடியிருப்புப் பகுதியின் அருகில் பயிரிட வேண்டாம் என பொதுமக்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. நியாய விலைக் கடைகள், பள்ளிக் கூடங்கள் மற்றும் பொதுமக்கள் பயன்படுத்தும் அங்காடிகளிலும் உப்பு, சர்க்கரை மற்றும் அரிசி போன்ற பொருட்களை வெளியில் வைக்காமல் பாதுகாப்பான பகுதிகளில் வைத்து விற்பனை செய்யவும், பயன்படுத்தவும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

5. யானைகள் நடமாட்டம் குறித்து அறியும்வண்ணம் பேருந்துகளில் தன்னார்வ நிறுவனத்துடன் இணைந்து எச்சரிக்கை விடுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**11—**

## பணி நிரந்தரம்

**வினா எண் 7228—திரு. த. மனோ தங்கராஜ்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்ட அரசு இரப்பர் கழகத்தில் பணிபுரியும் பால் வெட்டும் தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்:**

அரசு இரப்பர் கழகம் தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான ஒரு பொதுத் துறை நிறுவனமாகும். இதில் இரப்பர் பால் வடிப்பிற்கு, பால் வடிப்பு தொழிலாளர்கள் மற்றும் களை அகற்றுதல், உரம் போடுதல், பாதுகாப்பு பணி போன்ற களப்பணிகளை செய்ய களப்பணி தொழிலாளர்கள் தற்போது 1,123 பேர் நிரந்தர அடிப்படையில் வேலை செய்து வருகின்றனர். பொதுவாக, தோட்டத் தொழிலாளர்களின் மத்தியில் வேலைக்கு வராமை (Absenteeism) அதிகமாக இருக்கும். இந்த நிரந்தர தொழிலாளர்களுக்கு தோட்டத் தொழிலாளர்கள் சட்டப்படி 20 நாட்கள் வேலை செய்தால் 1 நாள் ஈட்டிய விடுப்பும், வருடத்திற்கு 14 நாட்கள் மருத்துவ விடுப்பும் வழங்கப்பட்டு வருகிறது. இது தவிர இதர காரணங்களுக்காகவும்

வேலைக்கு வராமல் இருப்பர். இவ்வாறு நிரந்தர தொழிலாளர்கள் வேலைக்கு வராமல் இருக்கும்போது அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட டாஸ்குகளின் உற்பத்தி இழப்பைத் தவிர்க்கும்பொருட்டு, அந்தக் காலியிடங்களில் தற்காலிக நிலை பால் வடிப்பு தொழிலாளர்களை தேவைக்கேற்ப பயன்படுத்துவதுண்டு.

மேலும், இரப்பர் தோட்டங்களில் களை வெட்டுதல், உரமிடுதல், பாதுகாப்பு பணி, தீ தடுப்பு பணி போன்ற வேலைகளுக்கு நிரந்தர களப்பணி தொழிலாளர்கள் குறைவாக இருப்பதால் தேவைக்கேற்ப இந்த அத்தியாவசிய வேலைகளுக்காக தற்காலிக நிலை தொழிலாளர்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றனர்.

இந்த தற்காலிக நிலை தொழிலாளர்களில் பலர் நிரந்தரத் தொழிலாளர்களாக மாற்றப்பட தகுதியுடையவர்களாக உள்ளனர். (மொத்தமுள்ள 600 தற்காலிகத் தொழிலாளர்களில் ஏறக்குறைய 100 பேர்) ஆனால், அரசாணை எண் 1157, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 19–7–1979 மற்றும் வேலைவாய்ப்பு பரிவர்த்தனை (கட்டாய காலிப் பணியிட அறிவிப்பு) சட்டம் 1959, (Employment Exchange (Compulsory Notification of Vacancies) Act 1959), ஆகியவற்றின்படி நிரந்தர தொழிலாளர்கள், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் வாயிலாக மட்டுமே நியமனம் செய்ய இயலும். மேலும், இந்த தற்காலிக நிலை தொழிலாளர்கள் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம்மூலம் அல்லாது நேரடியாக தேவைக்கேற்ப பயன்படுத்தப்பட்டு வருவதால் இவர்களை அரசு இரப்பர் கழகத்தால் நிரந்தரம் செய்ய இயலாது.

**12—**

### வனச் சாலை அமைத்தல்

**வினா எண் 9762—திரு. மு.பெ. கிரி:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, ஜவ்வாதுமலை ஊராட்சி ஒன்றியம், தென்மலை அத்திப்பட்டு கிராமத்திற்கு சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அத்திப்பட்டு கிராமமானது ஜவ்வாதுமலை, தென்மலை காப்புக் காட்டில் அமைந்துள்ள என்குளோசர் கிராமமாகும். இக்கிராமத்திற்கு இதர மலைவாழ் கிராமங்களிலிருந்து செல்ல 5.4 மீ. அகலத்திற்கு அனுமதிக்கப்பட்ட வழித்தடம் தென்மலை காப்புக் காட்டில் பிரிவு 16–ன்கீழ் அறிவிக்கையில் அனுமதிக்கப்பட்டு, உபயோகத்தில் உள்ளது. இக்கிராமத்திற்கு 2013–2014–ம் ஆண்டில் மலைவாழ் மக்கள் முன்னேற்றத் திட்டத்தின்கீழ் சுமார் 2.5 கி.மீ நீளத்திற்கு ஜமுனாமரத்தூர் முதல் புலியூர் மேல்பட்டு வழியாக செங்கம் வரை செல்லும் முக்கிய தார்ச் சாலையிலிருந்து இணைப்பு சாலையாக ஓரடுக்கு கப்பிச் சாலை ரூ.25.00 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு உபயோகத்தில் உள்ளது.

**13—**

### வனச் சாலை அமைத்தல்

**வினா எண் 9763—திரு. மு.பெ. கிரி:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, ஜவ்வாதுமலை ஊராட்சி ஒன்றியம், தென்மலை அத்திப்பட்டு ஊராட்சி, பெரிய கீழ்பட்டு கிராமத்திற்கு சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெரிய கீழ்பட்டு கிராமமானது ஜவ்வாது மலை, தென்மலை காப்புக்காட்டில் அமைந்துள்ள கிராமமாகும். இக்கிராமத்திற்கு, இதர மலைவாழ் கிராமங்களிலிருந்து செல்ல 5.4 மீ. அகலத்திற்கு அனுமதிக்கப்பட்ட வழித்தடம் தென்மலை காப்புக் காட்டில் தமிழ்நாடு வனச் சட்டம் 1882, பிரிவு 16–ன்கீழ்

[2018 ஜனவரி 11

அறிவிக்கையில் அனுமதிக்கப்பட்டு உபயோகத்தில் உள்ளது. இக்கிராமத்திற்கு செல்லும் வழியில் அமைந்துள்ள அத்திப்பட்டு கிராமத்திற்கு ஜமுனாமரத்தூர் முதல் புலியூர், மேல்பட்டு வழியாக செங்கம் செல்லும் முக்கிய தார்ச் சாலையிலிருந்து இணைப்பு சாலையாக ஓரடுக்கு கப்பிச் சாலை ரூ.25.00 இலட்சம் செலவில் 2013–2014–ம் ஆண்டில் வனத் துறையால் அமைக்கப்பட்டு உபயோகத்தில் உள்ளது. மேற்கண்ட அத்திப்பட்டு கூட்டுச் சாலையிலிருந்து பெரிய கீழ்பட்டு சுமார் 1.8 கி.மீ. தூரத்தில் உள்ளது. தற்போது உபயோகித்துவரும் இந்த வழித்தடத்தை மேம்படுத்த சம்பந்தப்பட்ட துறையிடமிருந்து உரிய பிரேரணை வரப்பெறின், அனுமதி வழங்க, வனத் துறைமூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**14**—

**வனச் சாலை அமைத்தல்**

**வினா எண் 9764—திரு. மு.பெ. கிரி:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* செங்கம் தொகுதி, ஜவ்வாதுமலை ஊராட்சி ஒன்றியம், தென்மலை அத்திப்பட்டு ஊராட்சி, சின்ன கீழ்பட்டு கிராமத்திற்கு சாலை அமைக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சின்ன கீழ்பட்டு கிராமமானது ஜவ்வாதுமலை, தென்மலை காப்புக் காட்டில் அமைந்துள்ள உள்ளடங்கிய கிராமமாகும். இக்கிராமத்திற்கு இதர மலைவாழ் கிராமங்களிலிருந்து செல்ல 5.4 மீ. அகலத்திற்கு அனுமதிக்கப்பட்ட வழித்தடம் தென்மலை காப்புக் காட்டில் தமிழ்நாடு வனச் சட்டம் 1882 பிரிவு 16–ன்கீழ் அறிவிக்கையில் அனுமதிக்கப்பட்டு உபயோகத்தில் உள்ளது. இக்கிராமத்திற்கு ஜமுனாமரத்தூர் முதல் புலியூர், மேம்பட்டு வழியாக செங்கம் செல்லும் முக்கிய தார்ச் சாலையிலிருந்து 1.8 கி.மீ. நீளத்திற்கு வழித்தடம் உள்ளது. அது



2018 ஜனவரி 11]

தற்போது உபயோகத்தில் உள்ளது. இச்சாலையை மேம்படுத்த சம்பந்தப்பட்ட துறையிடமிருந்து உரிய பிரேரணை வரப்பெறின், அனுமதி வழங்க துறைமூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**15**—

**வனச் சாலையைச் சீரமைத்தல்**

**வினா எண் 9766—திரு. மு.பெ. கிரி:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* செங்கம் தொகுதி, ஜவ்வாதுமலை ஊராட்சி ஒன்றியம், மேல்சிலம்படி ஊராட்சி, வண்ணாங்குட்டை சாலையைச் சீரமைக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* வண்ணாங்குட்டை கிராமமானது ஜவ்வாதுமலை, பலாமரத்தூர் காப்புக் காட்டில் என்குளோசர் கிராமமாக அமைந்துள்ளது. இக்கிராமத்திற்கு வெளிச்சானூர் என்ற கிராமத்திலிருந்து செல்வதற்கு 1.6 கி.மீ. நீளத்திற்கு 5.4 மீ. அகலத்திற்கு பலாமரத்தூர் காப்புக் காட்டில் பிரிவு 16–ன்கீழ் அறிவிக்கையில் வழித்தடம் அனுமதிக்கப்பட்டு அது தற்போது உபயோகத்தில் உள்ளது. இவ்வழித்தடத்தை சீரமைக்க சம்பந்தப்பட்ட துறையிடமிருந்து உரிய பிரேரணை வரப்பெறின் சாலை அமைக்க அனுமதி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**16**—

**வனச் சாலை அமைத்தல்**

**வினா எண் 9769—திரு. மு.பெ. கிரி:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* செங்கம் தொகுதி, ஜவ்வாதுமலை ஊராட்சி ஒன்றியம், புலியூர் ஊராட்சி, மேல்தட்டியாப்பட்டு கிராமத்திற்கு சாலை அமைக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

[2018 ஜனவரி 11

**விடை—**

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மேல்தட்டியாப்பட்டு கிராமமானது ஜவ்வாதுமலை, தென்மலை காப்புக் காட்டில் அமைந்துள்ள உள்ளடங்கிய கிராமமாகும். இக்கிராமத்திற்கு இதர மலைவாழ் கிராமங்களிலிருந்து செல்ல 5.4 மீ. அகலத்திற்கு அனுமதிக்கப்பட்ட வழித்தடம் தென்மலை காப்புக் காட்டில் பிரிவு 16—ன்கீழ் அறிவிக்கையில் அனுமதிக்கப்பட்டு உபயோகத்தில் உள்ளது. இக்கிராமத்திற்கு செல்லும் வழியில் அமைந்துள்ள மேல்தட்டியாப்பட்டு கிராமத்திற்கு ஜமுனாமரத்தூர் முதல் புலியூர் மேல்பட்டு வழியாக செங்கம் செல்லும் முக்கிய தார்ச் சாலையிலிருந்து (புலியூர் கிராமத்தை ஒட்டி) 1 கி.மீ. நீளத்திற்கு ஊராட்சி ஒன்றியத்தின்மூலம் காப்புக் காடு அல்லாத பகுதியில் தார்ச் சாலை அமைக்கப்பட்டுள்ளது. மீதம் வனப்பகுதியில் அமைந்துள்ள 2 கி.மீ. தூரத்திற்கு அனுமதிக்கப்பட்ட வழித்தடத்தினை மேம்படுத்த உரிய பிரேரணை வரப்பெறின் அனுமதி வழங்க துறைமூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**17—**

## வனச் சாலை அமைத்தல்

**வினா எண் 9771—திரு. மு.பெ. கிரி:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, ஜவ்வாதுமலை ஊராட்சி ஒன்றியம், புலியூர் ஊராட்சி, எருக்கம்பட்டு கிராமத்திற்கு சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புலியூர் ஊராட்சி, எருக்கம்பட்டு கிராமமானது ஜவ்வாதுமலை, தென்மலை காப்புக் காட்டில் அமைந்துள்ள என்குளோசர் கிராமமாகும். இக்கிராமத்திற்கு இதர மலை



2018 ஜனவரி 11]

கிராமங்களிலிருந்து செல்ல 5.4 மீட்டர் அகலத்திற்கு தென்மலை காப்புக் காட்டில், பிரிவு 16—ன்கீழ் அறிவிக்கையில் வழித்தடம் அனுமதிக்கப்பட்டு உபயோகத்தில் உள்ளது. இந்த எருக்கம்பட்டு கிராமமானது, ஜமுனாமரத்தூர் முதல் புலியூர் மேல்பட்டு வழியாக செங்கம் செல்லும் முக்கிய தார்ச் சாலையிலிருந்து 1.40 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. இச்சாலையை மேம்படுத்த சம்பந்தப்பட்ட துறையிடமிருந்து உரிய கருத்துரு வரப்பெறின், அனுமதி வழங்க துறைமூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**18—**

## வனச் சாலையைச் சீரமைத்தல்

**வினா எண் 9773—திரு. மு.பெ. கிரி:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, மேல்கரிப்பூர் முதல் உச்சிமலைகுப்பம் இடையில் உள்ள வனச் சாலையைச் சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மேல்கரிப்பூர் முதல் உச்சிமலைகுப்பம் கிராமத்திற்கு இடைப்பட்ட தூரம் (சாலை வழியாக) சுமார் 5 கி.மீ. ஆகும். மேற்கண்ட இடைப்பட்ட சாலைப் பகுதியில் உச்சிமலை காப்புக் காடு அமைந்துள்ளது. மேற்கண்ட காப்புக் காட்டின் எல்லையிலே இருபுறமும் ஊரக வளர்ச்சி துறையால் தார்ச் சாலை அமைக்கப்பட்டு உபயோகத்தில் உள்ளது. இடைப்பட்ட பகுதியில் காப்புக் காட்டினுள் சுமார் 400 மீ. நீளத்திற்கு சாலை அமைக்கப்படாமல் உள்ளது. மேற்கண்ட உச்சிமலை காப்புக் காட்டில் தமிழ்நாடு வனச் சட்டம் 1882, பிரிவு 16—ன்கீழ் அறிவிக்கையில் இந்த இடைப்பட்ட கிராமத்திற்குள் வரும் காப்புக் காட்டில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு 4 அடி அகலத்திற்கு அனுமதிக்கப்பட்ட வழித்தடம் உள்ளது. இந்த வழித்தடத்தை சாலையாக மாற்ற வேண்டியிருப்பின் தற்போதுள்ள 4 அடி அகலம் போதுமானதல்ல. எனவே கூடுதலாக வன நிலம் தேவைப்படும்.

இதற்கு நடைமுறையிலுள்ள மத்திய அரசின் வனப் பாதுகாப்புச் சட்டம் 1980, பிரிவு 2–ன்படி, மத்திய அரசுக்கு அனுப்பி ஒப்புதல் பெறப்பட வேண்டும். எனவே, மத்திய அரசின் அனுமதி பெற்ற பின்பே சாலை அமைக்க இயலும்.

**19—**

**வனச் சாலை அமைத்தல்**

**வினா எண் 9774—திரு. மு.பெ. கிரி:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, அறியாகுஞ்சூருக்கு சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அறியாகுஞ்சூர் கிராமமானது பொன்னையார் காப்புக் காட்டில் என்குளோசர் ஆக அமைந்துள்ள கிராமமாகும். இக்கிராமத்திற்கு சின்னகல்தாம்பாடி கிராமத்திலிருந்து காப்புக் காட்டின் வழியாக 2.20 கி.மீ. நீளத்திற்கு 5.45 மீட்டர் அகலத்தில் கப்பிச் சாலை வனத் துறையால் 2006–2007 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டு, பொதுமக்கள் உபயோகத்தில் உள்ளது.

**20—**

**நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம்**

**வினா எண் 9387—திரு. அ. மருதமுத்து:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செந்தாரப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்க நியாய விலைக் கடைகளுக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், கெங்கவல்லி தொகுதி, செந்தாரப்பட்டி பேரூராட்சி பகுதியிலுள்ள எஸ்.612 செந்தாரப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்க கட்டுப்பாட்டின்கீழ் 10 நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. மேற்கண்ட நியாய விலைக் கடைகளில் செந்தாரப்பட்டி–2 முழுநேர நியாய விலைக் கடை சங்க கட்டடத்திலும், செந்தாரப்பட்டி–5, மண்மலை முழுநேர நியாய விலைக் கடைகள் மற்றும் கொண்டையம்பள்ளி ரோடு பகுதி நேர நியாய விலை கடை ஆகியவை அரசு கட்டடத்தில் செயல்பட்டுவருவதாலும், செந்தாரப்பட்டி–1 முழுநேர நியாய விலைக் கடை, செங்கட்டு பகுதிநேர நியாய விலைக் கடை ஆகிய இரண்டு கடைகள் இலவசக் கட்டடத்திலும் செயல்பட்டுவருவதால், மேற்கண்ட கடைகளுக்கு மீண்டும் சொந்தக் கட்டடம் கட்ட அவசியம் எழவில்லை. மேலும், செந்தாரப்பட்டி பொன்னி–1, செந்தாரப்பட்டி பொன்னி–2, செந்தாரப்பட்டி பொன்னி–3, மற்றும் செந்தாரப்பட்டி–4 ஆகிய முழுநேர நியாய விலைக் கடைகள், வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றன. செந்தாரப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் சொந்த இடமோ, நிதி வசதியோ இல்லாததால், மேற்கண்ட நான்கு நியாய விலைக் கடைகளுக்கு சொந்தக் கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகளில்லை.

**21—**

**புதிய நியாய விலைக் கடை**

**வினா எண் 8632—திரு. சி. ராஜா:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, அரசிராமணி பேரூராட்சி, காட்டக்கவுண்டனூர் கிராமம், குண்டநதெரு, சோளக்கவுண்டனூர் மற்றும் வெள்ளைப்பிள்ளையார்கோவில் ஆகிய பகுதிகளுக்கு புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2018 ஜனவரி 11

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சங்கரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அரசிராமணி பேரூராட்சி, கே.மேட்டுப்பாளையம் முழுநேர தாய் நியாய விலைக் கடையில் 530 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. இதில், காட்டக்கவுண்டனூர் கிராமம், குண்டநதெரு, சோளக்கவுண்டனூர் மற்றும் வெள்ளைப்பிள்ளையார்கோவில் பகுதியைச்சேர்ந்த 196 குடும்ப அட்டைகளும் அடங்கும். புதிய நியாய விலைக் கடைக்கு கிராமப்புறப் பகுதியில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். ஆனால், புதியதாக நியாய விலைக் கடை தோற்றுவிக்க உத்தேசிக்கப்படும் வெள்ளைப்பிள்ளையார்கோவில் பகுதியில் 196 குடும்ப அட்டைகள் உள்ளதால் அரசின் நிபந்தனை பூர்த்தி ஆகாத நிலையில் சங்கரி தொகுதி, அரசிராமணி பேரூராட்சி, காட்டக்கவுண்டனூர் கிராமம், குண்டநதெரு, சோளக்கவுண்டனூர் மற்றும் வெள்ளைப்பிள்ளையார்கோவில் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய பகுதியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**23—**

## புதிய நியாய விலைக் கடை

**வினா எண் 10703—திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழிங்கநல்லூர் தொகுதி, புனித தோமையர் மலை ஊராட்சி ஒன்றியம், பெரும்பாக்கம் ஊராட்சியில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக குடியமர்த்தப்பட்டவர்களுக்காக புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2018 ஜனவரி 11]

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சோழிங்கநல்லூர் தொகுதி, பெரும்பாக்கம் ஊராட்சியில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக குடியமர்த்தப்பட்டவர்களுக்காக காஞ்சிபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் கட்டுப்பாட்டின்கீழ் நாக்கம்பாளையம் (KD 193) நியாய விலைக் கடை 1651 குடும்ப அட்டைகளுடன் வாடகையில்லா அரசு கட்டடத்தில் 7–1–2016 முதல் செயல்பட்டு வருகிறது. எனவே, மேலும் ஒரு புதிய நியாய விலைக் கடை அதே பகுதியில் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

**24—**

## புதிய நியாய விலைக் கடை

**வினா எண் 13198—திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூரைக்குண்டு ஊராட்சி, சூலக்கரை மேட்டில் புதிய நியாய விலைக் கடை கட்ட அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், விருதுநகர் தொகுதி, கூரைக்குண்டு ஊராட்சியிலுள்ள சூலக்கரை மேட்டில் சூலக்கரை முழுநேர நியாய விலைக் கடை 1318 குடும்ப அட்டைகளுடன், வாடகைக் கட்டடத்தில் மாத்திநாயக்கன்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகிறது. மேற்குறிப்பிட்டுள்ள சூலக்கரை மேட்டில் புதிய நியாய விலைக் கடை கட்ட மாத்திநாயக்கன்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் சொந்த இடமோ, நிதி வசதியோ இல்லை. எனவே, சங்கத்தில் சொந்த இடமோ, நிதி வசதியோ இல்லாததால் சூலக்கரை மேட்டில் புதிய நியாய விலைக் கடை கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

**25—**

## புதிய நியாய விலைக் கடை

**வினா எண் 13359—திரு. எ.பி. சக்திவேல்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாநகர், கொண்டலாம்பட்டி பகுதி, 50–வது கோட்டம் K.P. கரடு பகுதியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், கொண்டலாம்பட்டி பகுதி S.439 சேலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் கட்டுப்பாட்டில் 07KB 069 PN கந்தப்பா காலனி முழுநேர நியாய விலைக் கடை 988 குடும்ப அட்டைகளுடன் அரசு கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மேற்படி புதிய நியாய விலைக் கடை கோரும் K.P. கரடு பகுதியைச் சேர்ந்த 195 குடும்ப அட்டைகளும் இதில் அடங்கும். புதிய நியாய விலைக் கடை கோரும் நகர்ப்புற பகுதியில் குறைந்தது 800 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்னும் அரசின் நிபந்தனை பூர்த்தி ஆகாத நிலையில் K.P. கரடு பகுதியில் நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.*

**26—**

## நியாய விலைக் கடைக்கு கட்டடம்

**வினா எண் 14165—திரு. க. கார்த்திகேயன்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ரிஷிவந்தியம் தொகுதி, திருக்கோவிலூர் ஒன்றியம், செங்கனாங்கொல்லை ஊராட்சியில் உள்ள நியாய விலைக் கடைக்கு கட்டடம் கட்ட அரசு முன் வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் ஒன்றியம் II.67 T. அரியூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில், செங்கனாங்கொல்லை முழுநேர நியாய விலைக் கடை 612 குடும்ப அட்டைகளுடன் பஞ்சாயத்து கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மேற்படி சங்கத்தில் சொந்த இடம் இல்லாததால் செங்கனாங்கொல்லை முழுநேர நியாய விலைக் கடைக்கு, புதிய கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.*

**28—**

## நியாய விலைக் கடையைப் பயன்பாட்டிற்கு கொண்டுவருதல்

**வினா எண் 17376—திரு. துரை. சந்திரசேகரன்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருவையாறு தொகுதி, பாளையபட்டி வடக்கு ஊராட்சி, துருசுப்பட்டி கிராமத்தில் புதிய நியாய விலைக் கடை கட்டடத்தை பயன்பாட்டிற்கு கொண்டுவர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, பூதலூர் ஊராட்சி ஒன்றியம் மற்றும் வட்டாரத்தில் ட்டி1749 செங்கிப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் இயங்கும் AP076P1 துருசுப்பட்டி பகுதிநேர நியாய விலைக் கடை 255 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வந்தது. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் புதிய கட்டடம் கட்டப்பட்டு 23–9–2016 அன்று திறக்கப்பட்ட மேற்படி கட்டடத்தில் இந்த பகுதிநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது.*

[2018 ஜனவரி 11

**29**—

## காய்கறி அங்காடி அமைத்தல்

**வினா எண் 16003—திரு. எச். வசந்தகுமார்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாங்குநேரி தொகுதி, ரெட்டியார்பட்டி ஊராட்சி, 3–வது வார்டு, நாராயணசாமி கோயில் தெரு, ஜே.ஜே. நகர், நாடார் தெரு ஆகிய பகுதிகளை மையமாகக் கொண்டு காய்கறி அங்காடி அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை**—

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி தொகுதி, ரெட்டியார்பட்டி ஊராட்சி, 3–வது வார்டு, நாராயணசாமி கோயில் தெரு, ஜே.ஜே. நகர், நாடார் தெரு ஆகிய பகுதிகள் O.2162 ரெட்டியார்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்க செயல் எல்லையில் உள்ள பகுதிகள் ஆகும். மேற்படி மூன்று பகுதிகளில் முறையே சுமார் 40, 60 மற்றும் 170 குடும்பங்களே உள்ளன. ரெட்டியார்பட்டி கிராமத்தின் மொத்த மக்கள் தொகை 7,405 நபர்கள் ஆகும். இப்பகுதி மக்கள் கிராமம் சார்ந்த விவசாயிகளாகவும், கூலித் தொழிலாளர்களாகவும் உள்ளனர். எனவே, இப்பகுதிகளை மையமாக கொண்டு வியாபார ரீதியாக காய்கறி அங்காடி அமைக்க தற்சமயம் வாய்ப்புகள் இல்லை.*

**30**—

## நியாய விலைக் கடை கட்டடத்தைப் பயன்பாட்டிற்கு கொண்டுவருதல்

**வினா எண் 17375—திரு. துரை. சந்திரசேகரன்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2018 ஜனவரி 11]

*(அ) திருவையாறு தொகுதி, செங்கிப்பட்டி ஊராட்சி, அயோத்திபட்டியில் கட்டப்பட்டுள்ள புதிய நியாய விலைக் கடைக் கட்டடத்தை பயன்பாட்டிற்கு கொண்டுவர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை**—

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி மற்றும் தாலுகா, பூதலூர் ஊராட்சி ஒன்றியம், பூதலூர் வட்டாரத்தில் ட்டி.1749 செங்கிப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில், AP038 செங்கிப்பட்டி முழுநேர நியாய விலைக் கடையின் பகுதிநேர நியாய விலைக் கடை AP038P1 அயோத்திப்பட்டி பகுதிநேர நியாய விலைக் கடையாகும். இக்கடைக்கு திருவையாறு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து புதிய கட்டடம் கட்டப்பட்டு 2–2–2017 அன்று முதல் அக்கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.*

**31**—

## நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம்

**வினா எண் 17785—திரு. அ. பிரபு:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கள்ளக்குறிச்சி தொகுதி, சின்னசேலம் ஊராட்சி ஒன்றியம், நமச்சிவாயபுரம், கனியாமூர் மற்றும் அம்மகளத்தூர் பகுதிகளிலுள்ள நியாய விலைக் கடைகளுக்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2018 ஜனவரி 11

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி மற்றும் சின்னசேலம் ஊராட்சி ஒன்றியம், ஐஐ.624 பங்காரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் மற்றும் கருங்குழி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் கட்டுப்பாட்டில் செயல்படும் நமச்சிவாயபுரம், கனியாமூர் மற்றும் அம்மகளத்தூர் ஆகிய 3 முழுநேர நியாய விலைக் கடைகளும் அரசு கட்டடத்தில் செயல்பட்டு வருவதால் புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.*

**32—**

## நியாய விலைக் கடைக்கு கட்டடம்

**வினா எண் 17788—திரு. அ. பிரபு:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கள்ளக்குறிச்சி தொகுதி, சின்னசேலம் ஊராட்சி ஒன்றியம், பங்காரம் ஊராட்சி மற்றும் இராயர்பாளையம் ஊராட்சியில் நியாய விலைக் கடைகளுக்கு கட்டடம் கட்ட அரசு முன் வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி தொகுதி மற்றும் சின்னசேலம் ஊராட்சி ஒன்றியம், ஐஐ.624 பங்காரம் மற்றும் பெத்தானூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் செயல்படும் பங்காரம் மற்றும் இராயர்பாளையம் ஊராட்சிகளின் இரு நியாய*



2018 ஜனவரி 11]

*விலைக் கடைகளும் அரசு கட்டடத்தில் செயல்பட்டு வருவதால் அதே பகுதிகளுக்கு புதிய கட்டடங்கள் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.*

**33—**

## பகுதிநேர நியாய விலைக் கடை

**வினா எண் 17922—திரு. க. அன்பழகன்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், சோழபுரம் ஊராட்சி, மேலானமேடு குடியானத் தெரு குடும்ப அட்டைதாரர்களுக்காக பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் தொகுதி மற்றும் ஊராட்சி ஒன்றியம், சோழபுரம் 2 முழுநேர நியாய விலைக் கடை 667 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இதில் புதிய பகுதிநேர கடை அமையக் கோரும் மேலானமேடு குடியானத் தெரு பகுதியைச் சேர்ந்த 180 குடும்ப அட்டைகளும் அடங்கும். இவற்றைப் பிரித்தால் சோழபுரம் 2 தாய் நியாய விலைக் கடையில் 487 குடும்ப அட்டைகள் மட்டுமே எஞ்சியிருக்கும். மேலும் இரு பகுதிகளுக்குமிடையே இடைப்பட்ட தூரம் 1 கி.மீ. ஆகும். புதிய பகுதிநேர நியாய விலைக் கடைக்கு குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டபின் தாய் நியாய விலைக் கடையில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் தாய் நியாய விலைக் கடைக்கும் புதிய பகுதிநேர நியாய விலைக் கடைக்குமிடையே குறைந்தபட்சம் 1.5 கி.மீ. தூர இடைவெளி இருக்க வேண்டும். மேற்கூறிய அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத*

நிலையில், மேலானமேடு குடியானத் தெருவில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகளில்லை.

**34—**

## நியாய விலைக் கடைக்கு சுற்றுச் சுவர் மற்றும் கூரை அமைத்தல்

**வினா எண் 17927—திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், சோழன் மாளிகை ஊராட்சியில், நியாய விலைக் கடைக்கு சுற்றுச் சுவர் மற்றும் சிமெண்ட் ஓடுகளாலான கூரை அமைத்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் தொகுதி மற்றும் ஒன்றியம், இசட்.874 சோழநாடு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில், DD078 சோழன் மாளிகை முழுநேர நியாய விலைக் கடை 636 குடும்ப அட்டைகளுடன் பஞ்சாயத்து கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மேற்படி நியாய விலைக் கடையானது இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமைந்துள்ளது. சோழன் மாளிகை முழுநேர நியாய விலைக் கடை கட்டடத்திற்கும் சாலைக்கும் இடைவெளி மிகவும் குறைவாக உள்ளதால் சுற்றுச் சுவர் அமைத்தால் சாலைகளில் போக்குவரத்து பாதிக்கக்கூடிய நிலை ஏற்படும். மேலும் நியாய விலைக் கடையின் முன்பகுதியில் நிழல் தரும் கூரை அமைக்கவும் போதிய இடவசதி இல்லாததால் சோழன் மாளிகை முழுநேர நியாய விலைக் கடை முன்பு நிழற்குடை அமைக்கவும் வழிவகையில்லை.





**35—**

## மீன் குஞ்சுகளை ஆராய்ச்சி செய்தல்

**வினா எண் 12125—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) புதியரக மீன் குஞ்சுகளை ஆராய்ச்சி செய்து, கடலில் விட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதியரக மீன் குஞ்சுகளை கடலில் இருப்பு செய்வதற்கு சுற்றுப்புற சூழ்நிலைக்கு உகந்தவாறு பல வழிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டிய அவசியம் உள்ளது. நமது மாநிலத்தில் உள்ள கடற்பகுதியில் வளர்ப்பதற்கு உகந்த இந்திய ஆராய்ச்சி நிறுவனங்களால் பரிந்துரைக்கப்பட்ட மீன்குஞ்சுகள் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்றன. எனவே புதியரக மீன்குஞ்சுகளை ஆராய்ச்சி செய்து, கடலில் இருப்பு செய்வது குறித்து நடவடிக்கை தற்பொழுது இல்லை.

**36—**

## அடையாள அட்டை வழங்குதல்

**வினா எண் 22084—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓய்வூதியதாரர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்:**

*(அ) ஒய்வூதியம் மற்றும் குடும்ப ஒய்வூதியம் பெறுவோர் பயன்பெறும்வகையில் ஒய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஒய்வூதியர்களுக்கு அடையாள அட்டை வழங்க அரசாணை (நிலை) எண் 87, நிதி (ஒய்வூதியம்) துறை, நாள் 10–4–2017–ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.*

*(ஆ) கேள்வி எழவில்லை.*

**37**—

### மீன் எடை பார்க்கும் கருவி வழங்குதல்

**வினா எண் 22104—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாட்டிலுள்ள மீன்பிடித் துறைமுகங்களில் மீனவர்களுக்கு மீன் எடை பார்க்கும் கருவிகள் மற்றும் பனிக் கட்டிகளைத் தூளாக்கும் இயந்திரங்கள் வழங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நீடித்த வாழ்வாதாரத்திற்கான மீன் வள மேலாண்மைத் திட்டத்தின்கீழ்* (Fisheries Management for Sustainable Livelihood FIMSUL) *மீன்பிடித் துறைமுகங்களுக்கு 100 விழுக்காடு மானியத்தில் மீன் எடை பார்க்கும் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் கன்னியாகுமரி மாவட்டம், சின்னமுட்டம் மற்றும் குளச்சல் மீன்பிடித் துறைமுகங்களுக்கு முறையே ஐந்து (5) எண்ணம் மற்றும் மூன்று (3) எண்ணம் மீன் எடை பார்க்கும் கருவிகள் வழங்கப்பட்டு, மீன்பிடி துறைமுக மேலாண்மை குழுவின் மேற்பார்வையில் பயன்பாட்டில் உள்ளன. மேலும், இத்திட்டத்தின்கீழ் மீன்பிடித் துறைமுகம் /மீன் இறங்கு தளங்களுக்கு பனிக்கட்டி தூளாக்கும் இயந்திரம் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*





**38**—

### மீன் விதைப் பண்ணைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

**வினா எண் 22105—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாடு அரசு மீன் விதைப் பண்ணைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டிலுள்ள அரசு மீன் விதைப் பண்ணைகளின் உட்கட்டமைப்பு வசதிகள் நபார்டு வங்கி மற்றும் தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் நிதியுதவிகளுடன் 2012–2013 ஆம் ஆண்டு முதல் மேம்படுத்தப்பட்டு வருகிறது.*

**39**—

### தனி கட்டடம் கட்டுதல்

**வினா எண் 9355—திரு. ஐ.பி. செந்தில்குமார்:** *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பழனி தொகுதி, பழனியிலுள்ள நீதிமன்றத்தில் வழக்குரைஞர்களுக்கான சட்ட அரங்கிற்கு* (Law Chamber) *தனி கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2018 ஜனவரி 11

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பழனி தொகுதி, பழனியிலுள்ள நீதிமன்றத்தில் வழக்குரைஞர்களுக்கான சட்ட அரங்கிற்கு தனி கட்டடம் கட்டும் செயற்குறிப்பினை கட்டடக் குழு தற்போதைக்கு நிராகரித்துள்ளது. மேலும், இது தொடர்பான திட்ட வரைவு மற்றும் மதிப்பீடு, பொதுப் பணித் துறை மற்றும் கட்டடக் குழுவின் ஒப்புதலுக்குப்பின் அரசுக்கு அனுப்பப்படும் என உயர் நீதிமன்ற பதிவாளர் (நிருவாகம்) தெரிவித்துள்ளார். எனவே, இது தொடர்பான கருத்துரு உயர் நீதிமன்றத்திடமிருந்து பெறப்படும்பட்சத்தில் அக்கருத்துருமீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**40**—

## கழிப்பறை வசதி

**வினா எண் 13231—திரு. சே. கருணாஸ்:** *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழகத்தில் உள்ள நீதிமன்ற வளாகங்களில் கழிப்பறை வசதி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டிலுள்ள அனைத்து சார்நிலை நீதிமன்றங்களில் கழிப்பறை வசதி செய்வதற்கு ரூ.1664.56 இலட்சம் வழங்கி அரசாணை நிலை எண் 918, உள் (நீதிமன்றங்கள்—3) துறை, நாள் 15—12—2015, அரசாணை நிலை எண் 121, உள் (நீதிமன்றங்கள்—3) துறை, நாள் 9—2—2017 மற்றும் அரசாணை நிலை எண் 194, உள் (நீதிமன்றங்கள்—3) துறை, நாள் 1—3—2017—ல் ஆணைகள் வெளியிடப்பட்டு, அதற்கான கட்டுமானப் பணிகள் பொதுப் பணித் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*



2018 ஜனவரி 11]

**41**—

## நீதிமன்றம் அமைத்தல்

**வினா எண் 19401—டாக்டர் ஆர்.டி. அரசு:** *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) செய்யூரில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூரில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைப்பது தொடர்பாக எந்த கருத்துருவும் அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும் உரிமையியல் அதிகாரத்துடன்கூடிய 17 சிறப்பு குற்றவியல் நீதிமன்றங்கள் அமைக்க அரசாணை நிலை எண் 319, உள் (நீதிமன்றங்கள்—2) துறை, நாள் 6—4—2017—ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இவற்றில் காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் தாலுகாவில் ஒரு நீதிமன்றம் அமையவுள்ளது. மேலும் இந்நீதிமன்றம் அமைக்க உயர் நீதிமன்றத்தால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.*

**43**—

## உளவியல் நிபுணர்கள் நியமனம்

**வினா எண் 7969—திருமதி எஸ். விஜயதரணி:** *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சிறார் கூர்நோக்கு இல்லங்களில் சிறுவர்களை ஆற்றுப்படுத்த உளவியல் நிபுணர்களை நியமனம் செய்ய அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2018 ஜனவரி 11

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு அமைச்சர் (சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டம்) அவர்களால் சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட துறையின் 2016–2017 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின்போது அறிவிக்கப்பட்ட அறிவிப்பைத் தொடர்ந்து, அரசாணை (நிலை) எண் 86, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 25–11–2016–ல் 7 அரசு கூர்நோக்கு இல்லங்கள் மற்றும் 2 அரசு சிறப்பு இல்லங்கள் ஆகிய 9 இல்லங்களில் தங்கியிருக்கும் சிறார்களுக்கு, ஆற்றுப்படுத்துநர்கள்மூலம் ஆற்றுப்படுத்துதல் சேவை வழங்க ஒரு நாளைக்கு ரூ.1000/–வீதம் 180 நாட்களுக்கு (இரு தினங்களுக்கு ஒரு முறை வீதம் ஆண்டு முழுவதும்) செலவினமாக ரூ.16.20 இலட்சம் (ரூபாய் பதினாறு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து இது சம்பந்தமாக உளவியலாளர்களை நியமனம் செய்வதற்கான சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக பத்திரிகை செய்திகள் வெளியிட்டும், சமூகப் பாதுகாப்புத் துறை இணையதளம் மூலமாக செய்தி குறிப்பு வழங்கியும், சேவை அடிப்படையில் கட்டணமின்றி இச்செய்தியினை வழங்க முன்வரும் ஊடகங்கள் மூலமாகவும் செய்தி வெளியிடப்பட்டு சிறார்களுக்கு ஆற்றுப்படுத்துதல் சேவை வழங்குவதற்கு சமூக பாதுகாப்பு இயக்குநரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**44—**

## சீருடை வழங்குதல்

**வினா எண் 8009—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்துணவு வழங்கப்படும் அனைத்து மாணவர்களுக்கும் சீருடை இலவசமாக வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2018 ஜனவரி 11]

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட அனைத்து மாணவ மாணவியர்களுக்கும் சத்துணவு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட 1 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களுக்கு 4 இணை இலவச சீருடைகள் வழங்கப்படுகின்றன.

9 ஆம் வகுப்பு மற்றும் 10 ஆம் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு இலவச சீருடை வழங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

**45—**

## பரிசோதனை மையம்

**வினா எண் 12871—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எல்லா மாவட்டங்களிலும் செவித் திறன் குறைபாடுள்ள குழந்தைகளுக்கான பரிசோதனை மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காது கேளாமையை தொடக்க நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சை அளிக்க செவித் திறன் குறைபாடுள்ள குழந்தைகளுக்கான பரிசோதனை மையம் முதற்கட்டமாக 2010–11 ஆம் நிதியாண்டில் தூத்துக்குடி மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2011–12 ஆம் நிதியாண்டில் 2 மாவட்டங்களிலும், 2013–14 ஆம் நிதியாண்டில் 10 மாவட்டங்களிலும், 2014–15 ஆம் நிதியாண்டில் 16 மாவட்டங்களிலும் ஆக மொத்தம் 29 மாவட்டங்களில் பரிசோதனை மையம் அமைக்கப்பட்டு நல்ல முறையில்

[2018 ஜனவரி 11

செயல்பட்டு வருகின்றன. மேலும், ஏனைய மாவட்டங்களில் தேவைகளின் அடிப்படையில் ஏற்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**46**—

**சமையலறை கட்டடத்தை சீரமைத்தல்**

**வினா எண் 13111—திரு. கே.எஸ். மஸ்தான்:** *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) செஞ்சி தொகுதி, செஞ்சி ஒன்றியம், கவரை ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளியில் உள்ள சமையலறை கட்டடத்தை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை**—

**மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், செஞ்சி ஊராட்சி ஒன்றியம், கவரை அரசு ஆதி திராவிடர் மேல்நிலைப் பள்ளிக்கு சமையலறைத் திட்டம் NP–NSPE 2008–2009–ன்கீழ் 1,00,000/– (அரசு நிதி 60,000/– மற்றும் ஒன்றிய பொது நிதி 40,000/–) மாவட்ட ஆட்சியர் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண் பி.இ4/669/2015, நாள் 14–1–2016–ன்படி திருத்திய நிருவாக அனுமதி வழங்கப்பட்டு தற்போது Lintel level வரை பணி நடைபெற்று வருகிறது.*

**47**—

**கட்டடத்தைச் சீரமைத்தல்**

**வினா எண் 2969—திரு. வாகை சந்திரசேகர்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வேளச்சேரி தொகுதி, கானகத்திலுள்ள தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் கட்டடத்தை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?*



2018 ஜனவரி 11]

**விடை**—

**மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*வேளச்சேரி தொகுதி, கானகம் திட்டப் பகுதியில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் 480 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டு கடந்த 1997–1998 ஆம் ஆண்டு குறைந்த வருவாய் பிரிவினருக்கான வெளிச்சந்தை விற்பனை அடிப்படையில் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டது. இக்குடியிருப்புகள் குடிசைப்பகுதிவாழ் குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படவில்லை. எனவே, இத்திட்டப் பகுதியின் பராமரிப்புப் பணிகளை ஒதுக்கீடுதாரர்களே மேற்கொள்ள வேண்டும்.*

**48**—

**குடிசை மாற்று வாரிய வீடுகளைச் சீரமைத்தல்**

**வினா எண் 4169—திரு. எஸ்.ஆர். இராஜா:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தாம்பரம் தொகுதி, தாம்பரம் நகராட்சி, 13–வது வார்டு பகுதியிலுள்ள 128 குடிசை மாற்று வாரிய வீடுகளைச் சீரமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை**—

**மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) தாம்பரம் தொகுதி, சேலையூர் திட்டப் பகுதியில் 128 அடுக்குமாடி குடியிருப்புகளிலுள்ள பழுதடைந்த படிக்கட்டுகள் ரூ.50,000/– செலவில் பழுதுபார்க்கப்பட்டுள்ளன. மேலும், இக்குடியிருப்புகளை ரூ.6,00,000/– செலவில் சீரமைக்க திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. நிதி ஆதாரம் பெறப்பட்டபின், அனைத்து வீடுகளும் சீரமைக்கப்படும்.*

[2018 ஜனவரி 11

**49**—

## சுற்றுச் சுவர் மற்றும் பேருந்து வசதி

**வினா எண் 9311—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பல்லடம் தொகுதி, திருப்பூர் மாநகராட்சி, 80—வது வார்டு பகுதியில் கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தின்மூலம் செயல்படும் குமரன் மகளிர் கலைக் கல்லூரியிலுள்ள விளையாட்டு மைதானத்திற்கு சுற்றுச் சுவர் அமைக்கவும், கல்லூரி நிருவாகமே சொந்தமாக பேருந்து இயக்கவும் அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை**—

**மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, திருப்பூர் மாநகராட்சி, 80—வது வார்டு பகுதியில் கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தின்மூலம் செயல்படும் குமரன் மகளிர் கலைக் கல்லூரியிலுள்ள விளையாட்டு மைதானத்திற்கு, நடப்பு ஆண்டில் சுற்றுச் சுவர் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

*மேலும், கலைக் கல்லூரியில் தற்போதுள்ள மாணவிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப 14 பேருந்து வாகனங்கள் தேவைப்படுகின்றன. ஆண்டுதோறும் இரண்டு பேருந்துகள், கல்லூரி நிருவாகத்தின்மூலம் சொந்தமாக இயக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. படிப்படியாக வரும் ஆண்டுகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.*

**50**—

## ஊதியம் வழங்குதல்

**வினா எண் 9328—திரு. பி. மூர்த்தி:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2018 ஜனவரி 11]

*(அ) கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு ஊதியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை**—

**மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கூட்டுறவுச் சங்கங்கள் தனது பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குவது அச்சங்கத்தின் பொறுப்பாகும். சில சங்கங்களில் நிதி தட்டுப்பாடு காரணங்களாலும், கடன் வசூலாகாத நிலையிலும் ஊதியம் வழங்க இயலாத நிலை ஏற்படுகிறது. இது போன்ற சூழ்நிலையில் அச்சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்களை மறுபரவலாக்கம்மூலம் பிற சங்கங்களில் பணியமர்த்தி, ஊதியம் பெற வழிவகை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

*பொது சேவை மையம் மற்றும் நகைக் கடன் வழங்கி வருமானம் ஈட்டிட, சிறப்புக் காசுக் கடன் தகுதியுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. இவ்வாறாக படிப்படியாக இத்தகைய சங்கங்களை கண்டறிந்து நடவடிக்கை எடுக்கப்படும். எனவே, கூட்டுறவுச் சங்க பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க அரசால் இயலாது.*

**51**—

## மருத்துவமனையை மேம்படுத்துதல்

**வினா எண் 4053—திரு. செ. ராஜேஷ் குமார்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*கிள்ளியூர் தொகுதி, கீழ்குளம் ஊராட்சி, செந்துறை பகுதியில் உள்ள அரசு மருத்துவமனையை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

**விடை**—

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

[2018 ஜனவரி 11

கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் ஊராட்சி ஒன்றியம், செந்துறை பகுதியில் கீழ்குளம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இவ்வூராட்சி ஒன்றியத்தில் கீழ்க்காணும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன:

(1) கிள்ளியூர் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம்

(2) கீழ்குளம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம்

(3) நட்டாலம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம்.

கீழ்குளம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிகிச்சைபெற்ற பயனாளிகளின் விவரம்:

சராசரியாக நாளொன்றிற்கு பயனடைந்த வெளிப்புற நோயாளிகளின் எண்ணிக்கை: 90

சராசரியாக மாதமொன்றிற்கு பயனடைந்த உள்புற நோயாளிகளின் எண்ணிக்கை: 43

மாதம் ஒன்றுக்கு சராசரியாக நடைபெறும் பிரசவங்களின் எண்ணிக்கை: 43

ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் ஊராட்சி ஒன்றியத்தில் கிள்ளியூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் அரசு ஆணை (நிலை) எண் 52, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (அஉதி–II) துறை, நாள் 21–2–2014–ன்படி ஏற்கெனவே மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்பட்டு, அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருவதால், இதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கீழ்குளம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**52**—

## அமரர் அறை கட்டடம் மற்றும் பிரேத பரிசோதனைக் கருவி வழங்குதல்

**வினா எண் 4054—திரு. செ. ராஜேஷ் குமார்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2018 ஜனவரி 11]

கிள்ளியூர் தொகுதி, கருங்கல் அரசு மருத்துவமனையில் அமரர் அறை கட்டவும், பிரேத பரிசோதனைக்கான வசதி ஏற்படுத்தவும் அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் தொகுதி, கருங்கல் அரசு மருத்துவமனை 18 படுக்கை வசதியுடன்கூடிய வட்டம்சாரா மருத்துவமனையாக இயங்கி வருகிறது. இம்மருத்துவமனையில் ஆண்கள், பெண்கள், மகப்பேறு, சித்தா பிரிவு போன்ற பிரிவுகள் உள்ளன. மேலும், குளிர்சாதன வசதியுடன்கூடிய அறுவை அரங்கம், மின்னாக்கி வசதி, சமையல் அறை போன்றவை உள்ளன. மருத்துவர் மற்றும் பணியாளர் குடியிருப்பு வசதி உள்ளது. இங்கு நாளொன்றுக்கு 370 வெளி நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகிறார்கள். மாதம் ஒன்றுக்கு சராசரியாக 4138 ஆய்வக பரிசோதனை, 48 எக்ஸ்ரே, 30 இசிஜி எடுக்கப்படுகிறது. மேலும், மாதம் ஒன்றுக்கு 55 சிறிய வகை அறுவை சிகிச்சையும் நடைபெற்று வருகிறது. கிள்ளியூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதிமூலம் ரூ.1,00,000/–ல் உள் நோயாளிகள் பிரிவு கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மேலும், தமிழ்நாடு சுகாதார திட்டத்தின்மூலம் ரூ.64.20 இலட்சத்தில் அறுவை அரங்கம், ஆய்வகம், அவசர ஊர்தி நிறுத்தும் இடம், மருத்துவ கழிவு சேகரிப்பு அறை, மின்னாக்கி அறை, சமையல் அறை போன்றவற்றுடன் பிணவறையும் பயன்பாட்டில் உள்ளது. இம்மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்கு எப்பொழுதாவதுதான் பிரேதம் கொண்டு வரப்படுகிறது. அவை உடனுக்குடன் பரிசோதனை செய்யப்பட்டு உரிய நபர்களிடம் ஒப்படைக்கப்படுகிறது. எனவே, கருங்கல் அரசு மருத்துவமனையில் பிணவறை வசதி உள்ளது.

**53**—

## மருத்துவமனையை தரம் உயர்த்துதல்

**வினா எண் 4678—திரு. எஸ். ஈஸ்வரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*ஈரோடு மாவட்டம், தாளவாடி வட்ட தலைமை மருத்துவமனையை தரம் உயர்த்தி பிரேத பரிசோதனை வசதியும் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

*ஈரோடு மாவட்டம், தாளவாடி ஊராட்சி ஒன்றியத்தில், தாளவாடி வட்ட தலைமை மருத்துவமனை எதுவும் செயல்படவில்லை. இவ்வூராட்சி ஒன்றியத்தில் தாளவாடி பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இவ்வாரம்ப சுகாதார நிலையம், அரசு ஆணை (நிலை) எண் 320, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ப்பி–2) துறை, நாள் 29–3–2003–ன்படி தரம் உயர்த்தப்பட்டு, மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிரேத பரிசோதனை செய்யப்படுவதில்லை. அரசு மருத்துவமனைகளில் மட்டுமே பிரேத பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது.*

**54—**

## பிரேத பரிசோதனை அறை கட்டுதல்

**வினா எண் 5070—திரு. ஐ.எஸ். இன்பதுரை:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ராதாபுரம் தொகுதி, திசையன்விளை அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனை அறை கட்ட அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

*திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஊராட்சி ஒன்றியம், திசையன்விளையில் அரசு மருத்துவமனை எதுவும் செயல்படவில்லை. இவ்வூராட்சி ஒன்றியத்தில் திசையன்விளை பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.*





*இந்த ஆரம்ப சுகாதார நிலையம், அரசு ஆணை (நிலை) எண் 142, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ப்பி–2) துறை, நாள் 30–4–2007–ன்படி தரம் உயர்த்தப்பட்டு, மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிரேத பரிசோதனை செய்யப்படுவதில்லை. அரசு மருத்துவமனைகளில் மட்டுமே பிரேத பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது. எனவே, திசையன்விளை பிரதான ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு பிரேத பரிசோதனை அறை கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.*

**55—**

## காலிப் பணியிடங்களை நிரப்புதல்

**வினா எண் 5825—திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கடையநல்லூர் தொகுதி, செங்கோட்டை அரசு பொது மருத்துவமனையிலுள்ள அனைத்து காலிப் பணியிடங்களையும் நிரப்ப அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கடையநல்லூர் தொகுதி, செங்கோட்டை அரசு மருத்துவமனை 60 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டுவரும் வட்ட மருத்துவமனையாகும். இம்மருத்துவமனையில் நாள் ஒன்றுக்கு 695 வெளி நோயாளிகள், 40 உள் நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகிறார்கள். மாதமொன்றுக்கு சராசரியாக 6072 ஆய்வக பரிசோதனை, 110 எக்ஸ்ரே, 50 USG, 129 இசிஜி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், மாதம் ஒன்றுக்கு சராசரியாக 5 பெரிய வகை அறுவை சிகிச்சை, 97 சிறிய வகை அறுவை சிகிச்சைகள் நடைபெறுகின்றன. இம்மருத்துவமனையில் ஆண்கள், பெண்கள் மகப்பேறு, குடும்ப நலம், சித்தா பிரிவு, அறுவை சிகிச்சை பின்கவனிப்பு, குளிர் சாதன வசதியுடன் கூடிய 2 அறுவை அரங்கம், மின்னாக்கி, போதுமான உபகரணங்கள் ஆகியவை*

[2018 ஜனவரி 11

உள்ளன. இம்மருத்துவமனையின் செயல்பாட்டினைக் கருத்தில் கொண்டு, 10 மருத்துவர்கள், 1 பல் மருத்துவர், 14 செவிலியர்கள் உட்பட 44 பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டு, 36 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. இதில் அனைத்து மருத்துவர்கள் மற்றும் செவிலியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. அவ்வப்போது பதவி உயர்வு மற்றும் பணி ஓய்வினால் ஏற்படும் காலிப்பணியிடங்கள் எதிர்வரும் பணி நியமனம் மற்றும் பதவி உயர்வு கலந்தாய்வுகளின்மூலம் நிரப்பப்பட்டு வருகின்றன. இம்மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட படுக்கை எண்ணிக்கையை விட குறைவான எண்ணிக்கையிலேயே உள் நோயாளிகள் மற்றும் குறைந்த எண்ணிக்கையிலேயே வெளி நோயாளிகள் சிகிச்சைக்கு வருவதால் தற்போதுள்ள மருத்துவர்கள், மருத்துவம்சாரா மற்றும் இதர பணியாளர்களைக் கொண்டும், பிற வசதிகளைக் கொண்டும் நோயாளிகளுக்கு 24 மணி நேரமும் சிறப்பான சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

**58**—

## ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துதல்

**வினா எண் 8076—திருமதி வி. கஸ்தூரி வாசு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், பெரியபோது ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை**—

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை ஊராட்சி ஒன்றியம், பெரியபோது பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கெனவே அரசு ஆணை (நிலை) எண் 52, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (அஉதி–II) துறை, நாள் 21–2–2014–ன்படி, மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இப்பிரதான ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிகிச்சைபெற்ற



2018 ஜனவரி 11]

பயனாளிகளின் விவரம்:

| | | |
|---|---|---|
| சராசரியாக நாளொன்றிற்கு பயனடைந்த வெளிப்புற நோயாளிகளின் எண்ணிக்கை | : | 303 |
| சராசரியாக மாதமொன்றிற்கு பயனடைந்த உள்புற நோயாளிகளின் எண்ணிக்கை | : | 62 |
| மாதம் ஒன்றுக்கு சராசரியாக நடைபெறும் பிரசவங்களின் எண்ணிக்கை | : | 8 |

**59**—

## மகப்பேறு மருத்துவமனை அமைத்தல்

**வினா எண் 9004—திரு. நா. கார்த்திக்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் ஆவாரம்பாளையம் பகுதியில் மகப்பேறு மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை**—

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் ஆவாரம்பாளையம் பகுதியிலிருந்து 10 கிலோ மீட்டரில் கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. இவ்வியக்குநரகத்தின்கீழ் எந்த அரசு மருத்துவமனையும் கோயம்புத்தூரில் செயல்படவில்லை. மேலும், கோயம்புத்தூரிலேயே தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் மாநகராட்சியின்கீழ் மகப்பேறு நிலையங்கள், மகப்பேறு வசதிகளுடன்கூடிய அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. எனவே, கோயம்புத்தூர் ஆவாரம்பாளையம் பகுதியில் தனியாக மகப்பேறு மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

**60**—

## ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

**வினா எண் 9382—திரு. ஆர்.எம். சின்னதம்பி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2018 ஜனவரி 11

(அ) ஆத்தூர் தொகுதி, பெத்தநாயக்கன்பாளையம் வட்டம், பெரியகல்வராயன்மலை, கீழ்நாடு ஊராட்சி, குன்னூர் கிராமத்தை மையமாகக் கொண்டு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப்பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப்பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. குன்னூர் கிராமம், பெத்தநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,23,106. இவ்வூராட்சி ஒன்றியத்தில் முறையே ஆரியபாளையம், ஏத்தாப்பூர், கருமந்துறை, தும்பல், சூலாங்குறிச்சி ஆகிய ஐந்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. குன்னூர் கிராமத்தின் மக்கள்தொகை 787. இக்கிராமத்தில் துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இத்துணை சுகாதார நிலையம், கருமந்துறை ஆரம்ப சுகாதார நிலையத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப, இங்கு செயல்பட்டுவரும் ஐந்து ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதால், பெத்தநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியம், குன்னூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.*

**61—**

## சிறப்புத் திட்டம் உருவாக்குதல்

**வினா எண் 4147—திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2018 ஜனவரி 11]

(அ) இரப்பர் விவசாயத்தைப் பாதுகாக்க சிறப்பு திட்டம் உருவாக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் 23903.76 ஹெக்டேர் பரப்பில் இரப்பர் பயிர் சாகுபடி செய்யப்படுகிறது.*

*இரப்பர் பயிர் தொடர்பான அனைத்து மேம்பாட்டுத் திட்டங்களும் இரப்பர் வாரியம்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.*

*இரப்பர் வாரியத்தின்மூலம் செயல்படுத்தப்படும் முக்கியமான திட்டங்கள் பின்வருமாறு:*

**1. இரப்பர் வளர்ச்சித் திட்டம்**

*1 ஹெக்டேர் இரப்பர் பயிருக்கு ரூ.25000/– மானியமாக 12–வது ஐந்தாண்டுத் திட்டத்தில் இருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. 0.10 ஹெக்டேர் முதல் 2 ஹெக்டேர் வரை பயிர் செய்யப்படும் இரப்பர் விவசாயிகளுக்கு மூன்று தவணையாக ரூ.12000/–, ரூ.5000/– மற்றும் ரூ. 8000/– முதல் வருடம், மூன்றாவது வருடம் மற்றும் ஆறாவது வருட பயிர்களுக்கு வழங்கப்படுகிறது.*

**2. இடுபொருட்கள் வழங்கும் திட்டம்**

*மழை பாதுகாப்பு கருவிகள், காப்பர் ஆக்ஸிகுளோரைடு, தெளிப்பு எண்ணெய் போன்ற பயிர் பாதுகாப்பு பொருட்கள் மானிய விலையில் வழங்கப்படுகின்றன.*

**3. மழையிலிருந்து பாதுகாப்பு, பால் வெட்டுதல் மற்றும் பால் பதப்படுத்துதல்**

*மழையிலிருந்து பாதுகாப்பு, பால் வெட்டுதல் மற்றும் பால் பதப்படுத்துதல் போன்ற தொழில்நுட்பங்களுக்கு பயிற்சியும் தேவைக்கேற்ப அளிக்கப்படுகிறது.*

**4. சந்தைப்படுத்துதல்**

*இடைத்தரகரிடமிருந்து இரப்பர் விவசாயிகளைப் பாதுகாக்கவும், உரிய விலை நிர்ணயம் கிடைக்கவும், தரமான இரப்பர் பொருட்களுக்கு உரிய விலை வழங்கப்படுகிறது.*

**தோட்டக்கலை**

PMSKY நுண்ணீர் பாசன திட்டத்தின்மூலம் நடப்பு நிதியாண்டு முதல் இரப்பர் விவசாயிகளுக்கு சொட்டு நீர் பாசனம் சிறு/குறு விவசாயிகளுக்கு 100 சத மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சத மானியமும் வழங்க அனுமதி பெறப்பட்டுள்ளது. (ஒரு நபருக்கு அதிகபட்சமாக 4 ஹெக்டேர்)

**62**—

## தானிய சேமிப்புக் கிடங்கு

**வினா எண் 5279—திரு. எம். இராமச்சந்திரன்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழகத்தில் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் தானிய சேமிப்புக் கிடங்கு அமைக்க அரசு முன்வருமா?*

**விடை**—

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*தமிழகத்தில் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் துறையின்கீழ் 22 விற்பனைக் குழுக்களும், அதன் கட்டுப்பாட்டில் 277 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களும் செயல்பட்டு வருகின்றன. அவ்வொழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் 191 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் 4.53 இலட்சம் மெ.டன் கொள்ளளவு கொண்ட 420 சேமிப்புக் கிடங்குகள் தற்போது பயன்பாட்டில் உள்ளன. எனவே, மேற்காணும் கிடங்குகளை அனைத்து ஊராட்சிகளிலும் உள்ள விவசாயிகள் தானிய சேமிப்பு கிடங்காக குறைந்த வாடகையில் பயன்படுத்திக்கொள்ளலாம்.*

*எனவே, தமிழகத்தில் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும், தானிய சேமிப்பு கிடங்கு அமைக்கும் வினா எழவில்லை.*





**65**—

## மானியத்தில் இடுபொருள் வழங்குதல்

**வினா எண் 17321—திரு. துரை. சந்திரசேகரன்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வெற்றிலைக் கொடிக்கால் பயிர் செய்யும் விவசாயிகளுக்கு மானியத்தில் இடுபொருள் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை**—

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வெற்றிலை சாகுபடிக்கு மானியம் வழங்கும் திட்டம் ஏதும் தற்சமயம் தோட்டக் கலை மற்றும் மலைப் பயிர்கள் துறைமூலம் செயல்படுத்தப்படவில்லை.*

**66**—

## விதை நெல் குறித்த விவரம்

**வினா எண் 17325—திரு. துரை. சந்திரசேகரன்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழக விவசாயிகளுக்கு ஆண்டுக்கு தாளடி, குறுவை மற்றும் சம்பா சாகுபடிக்கு அரசு விதைப் பண்ணை மூலமாகவும் மற்றும் தனியார் விதைப் பண்ணை மூலமாகவும், எவ்வளவு விதை நெல் வாங்கப்படுகிறது என்பதை தெரிவிக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை**—

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் ஆண்டுதோறும் சுமார் 20,000 மெ.டன் (நெல் சான்று விதை) உற்பத்தி செய்வதற்கு தேவைக்கேற்ற*

[2018 ஜனவரி 11

422 மெ.டன் நெல் ஆதார விதைகள் அரசு விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படுகின்றன. உற்பத்தி செய்த ஆதார விதைகளை முன்னோடி விவசாயிகளின் நிலங்களில் சான்று விதைப் பண்ணைகள் அமைத்து அவற்றிலிருந்து சான்று பெற்ற விதைகள் உற்பத்தி செய்து விநியோகிக்கப்படுகிறது. மேலும், தனியார் விதைப் பண்ணை மூலமாக 83,657 மெ.டன் சான்று விதைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

**67**—

## வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 7571—திரு. மா. சுப்பிரமணியன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிண்டி தொழிலாளர் குடியிருப்பு பகுதியில் வசிப்பவர்களுக்கு பட்டா வழங்க அரசு முன்வருமா?

**விடை**—

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:**

சென்னை மாவட்டம், கிண்டி வட்டம், ஆலந்தூர் கிராமம், பகுதி எண் 3, புல எண்கள் 28, 29, 30, 31, 32, 33, 34, 35, 36, 37, 38/1 மற்றும் 47–ல் உள்ள புலங்கள் அனைத்தும் கிண்டி வட்ட அலுவலக நிரந்தர நிலப் பதிவேட்டின்படி சர்க்கார் புறம்போக்கு, அரசாங்க தொழிற்பேட்டை கிண்டி என பதிவாகியுள்ளது. தற்போது மேற்படி புலம் சிட்கோ நிறுவனம்வசம் உள்ளது. எனவே, சிட்கோ நிறுவனம் தொழிலாளர் குடியிருப்பில் வசிக்கும் ஒதுக்கீடு பெற்ற உரிமையாளர்களுக்கு விற்பனை ஆவணம் வழங்கும்பட்சத்தில், மேற்கண்ட புலத்தினை சர்க்கார் புறம்போக்கு என்பதிலிருந்து ரயத்துவாரி மனை என வகைபாடு மாற்றம் செய்தபின் தொழிலாளர் குடியிருப்பு பகுதியில் வசிப்பவர்களுக்கு பட்டா வழங்க பரிசீலிக்கப்படும்.



2018 ஜனவரி 11]

**68**—

## வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 8711—திருமதி வி. கஸ்தூரி வாசு:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், ஒடையகுளம் வருவாய் கிராமம் குப்புச்சி புதூர் பகுதியில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை**—

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், ஒடையகுளம் மஜரா, குப்புச்சி புதூர் கிராம எல்லைக்குட்பட்ட புல எண் 991/1, 992/1 ஆகிய சாலைகள் பொதுப் பணித் துறை என்ற வகைப்பாட்டில் கிராம ஆவணங்களில் தாக்கலாகியுள்ளது. மேற்படி இடத்தில் வீடற்ற ஏழை மக்கள் 23 நபர்கள் வீடுகட்டி குடியிருந்து வருகின்றனர். அரசுக்கு சொந்தமான ஆட்சேபனையற்ற புறம்போக்கு நிலங்களில் வீடுகட்டி குடியிருந்து வருபவர்களுக்கு ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்தி வீட்டுமனைப் பட்டா வழங்கும் சிறப்புத் திட்டம் 31–3–2015 அன்றுடன் நிறைவுற்றதாலும், பொதுப் பணித் துறை பரம்பிக்குளம் வடிநில கோட்ட செயற்பொறியாளரின் இசைவு கோரி, கிடைக்கப் பெறாததாலும், மேற்படி நபர்களது ஆக்கிரமிப்புகளை வரன்முறை செய்து வீட்டுமனைப் பட்டா வழங்க இயலவில்லை.

**69**—

## வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 9478—திரு. ஐ.பி. செந்தில்குமார்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2018 ஜனவரி 11

*(அ) பழனி தொகுதி, கொடைக்கானல் ஊராட்சி ஒன்றியம், வடகவுஞ்சி ஊராட்சி, ஜீவா நகரில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கொடைக்கானல் ஊராட்சி ஒன்றியம், வடகவுஞ்சி ஊராட்சி, ஜீவா நகரில் வசிக்கும் நபர்கள் பட்டா கோரும் புலம் அரசுப் புறம்போக்கு நிலமாகும். அரசு புறம்போக்கில் வீடுகட்டி குடியிருந்து வருபவர்களுக்கு வரன்முறைப்படுத்தி வீட்டுமனைப் பட்டா வழங்கும் சிறப்புத் திட்டம்* (One Time Special Scheme) *31–3–2015 உடன் முடிவுற்றது என்பதால் தற்சமயம் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.*

**70**—

## மாற்று இடம் வழங்குதல்

**வினா எண் 17601—திரு. க. அன்பழகன்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் அருள்மிகு நாகேஸ்வர சுவாமி திருக்கோயிலுக்கு சொந்தமான சூரியகுளத்தின் அருகில் வசிப்பவர்களுக்கு மாற்று இடம் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:**

*தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், கும்பகோணம் நகரம் அருள்மிகு நாகேஸ்வர சுவாமி திருக்கோயிலுக்கு சொந்தமான சூரிய புஷ்கரணி மற்றும் சந்திர புஷ்கரணி ஆகியவற்றில் குடியிருந்த 41 குடும்பங்கள் மற்றும் புஷ்கரணிக்கு செல்லும்*



2018 ஜனவரி 11]

*வழியில் குடியிருந்த 16 குடும்பங்கள் மகாமகம் 2016 பெருவிழாவை முன்னிட்டு நீர்நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றும் பணிகள் மேற்கொண்டதில் அங்கு குடியிருந்த 57 குடும்பங்களின் வீடுகள் அகற்றப்பட்டன. மேற்படி அகற்றப்பட்ட நபர்களுக்கு கும்பகோணம் நகராட்சிமூலம் கரிகுளம் வீட்டு வசதி வாரியக் குடியிருப்பில் பிளாக் எண் 9–ல் 3 வீடுகளும், பிளாக் எண் 10–ல் 18 வீடுகளும், பிளாக் எண் 12–ல் 18 வீடுகளும் ஆக கூடுதல் 57 குடும்பங்களுக்கும் வீடுகள் ஒதுக்கீடு செய்து வழங்கப்பட்டுள்ளன. இதில் 45–க்கும் மேற்பட்ட நபர்கள் வீட்டு வசதி வாரியத்தில் குடியேறிவிட்டனர்.*

**71**—

## முதியோர் ஓய்வூதியம்

**வினா எண் 18044—திரு. க. அன்பழகன்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் வட்டத்தில் வழங்கப்பட்ட முதியோர் ஓய்வூதியம் குறித்த விவரங்களை அளிக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:**

*சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின்கீழ் 9 வகையான ஓய்வூதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 2011 ஆம் ஆண்டு முதல் சமூகப் பாதுகாப்பு முதியோர் ஓய்வூதிய திட்டங்களின்கீழ் ரூ.500/–ஆக இருந்த உதவித் தொகை ரூ.1000/– ஆக அரசாணை (நிலை) எண் 41, சமூக நலன் மற்றும் சத்துணவு திட்டத் [சந.6(1)] துறை, நாள் 17–5–2011–ன்படி உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.*

*தஞ்சாவூர் மாவட்டத்தில், கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் வட்டத்தில் மட்டும் 4453 முதியோர்கள் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர்.*

**72—**

## வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 18756—திரு. க. அன்பழகன்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நகராட்சி 17-வது வார்டு சிங்காரம் தெரு, வண்ணாங்கன்னியில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:**

*தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம் மற்றும் நகரம்–3 வார்டு 14 TS.No. 693 சர்க்கார் புறம்போக்கு 0.1782.5 சதுர மீட்டர் குசவன் குளம் என்பது நீர்நிலை புறம்போக்கு நிலம். ஆகையால், அங்கு வசிப்பவர்களுக்கு பட்டா வழங்க இயலாது.*

**73—**

## கண்காணிப்புக் கேமரா பொருத்துதல்

**வினா எண் 16672—திரு. கே.எஸ். மஸ்தான்:** *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) செஞ்சிக்கோட்டையை மாற்றுத் திறனாளிகள் சுற்றிப்பார்க்கும்வகையில் மின்கல ஊர்தி வசதியும், கோட்டையின் நுழைவு வாயிலில் கண்காணிப்பு கேமரா பொருத்தவும் அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சியில் உள்ள செஞ்சிக்கோட்டை இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னமாக*





*பராமரிக்கப்படுவதால், இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறையினருடன் கலந்தாலோசித்து, செஞ்சிக் கோட்டையை மாற்றுத் திறனாளிகள் சுற்றிப் பார்க்கும்வகையில் மின்கல ஊர்தி வசதியும், கோட்டை நுழைவு வாயிலில் கண்காணிப்பு கேமரா பொருத்துவதற்கும் சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**74—**

## பயணியர் விடுதி அமைத்தல்

**வினா எண் 16856—திரு. ஆர். கணேஷ்:** *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*உதகமண்டலத்தில் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக இளைஞர் விடுதிகள் மற்றும் பயணியர் விடுதிகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

*நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக இளைஞர் விடுதிகள் மற்றும் பயணியர் விடுதிகள் போதிய அளவு இருப்பதால், சுற்றுலாத் துறைமூலம் விடுதிகள் கட்டுவதற்கு அவசியம் எழவில்லை. எனவே, இளைஞர் விடுதிகள் மற்றும் பயணியர் விடுதிகள் கட்டும் திட்டம் ஏதும் தற்போதைக்கு இல்லை.*

**75—**

## பயணியர் விடுதி அமைத்தல்

**வினா எண் 16889—திரு. கே.ஏ. பாண்டியன்:** *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சிதம்பரம் தொகுதி, பிச்சாவரம் சுற்றுலா மையத்தில் புதிய சுற்றுலா பயணியர் விடுதி கட்ட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2018 ஜனவரி 11

**விடை—**

**மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின்கீழ் பிச்சாவரம் சுற்றுலா மையம் இயங்கி வருகிறது. தற்சமயம் பிச்சாவரம் சுற்றுலா மையத்திலுள்ள கட்டடங்கள் (படகு போக்குவரத்து தவிர) தனியாருக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. மேலும், தனியார்மூலம் புதிய கட்டடங்களும் கட்டப்பட்டு, அங்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகளின் பயன்பாட்டில் உள்ளன.

கடலூர் மாவட்டம், சிதம்பரம் தொகுதியிலுள்ள பிச்சாவரத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தங்கும் விடுதியில் 13 இருவர் தங்கும் அறைகளும், 3 குடில்களும் உள்ளன. இந்த தங்கும் விடுதி தற்சமயம் குத்தகைக்கு விடப்பட்டு தனியார்மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

எனவே, கடலூர் மாவட்டம், சிதம்பரம் தொகுதி, பிச்சாவரம் சுற்றுலா மையத்தில் புதிய சுற்றுலாப் பயணியர் விடுதி கட்டுவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, சிதம்பரம் தொகுதி, பிச்சாவரத்தில் பயணியர் விடுதி கட்டும் திட்டம் ஏதும் தற்போதைக்கு இல்லை.

**76—**

## பணிமனைக்கு உட்கட்டமைப்பு வசதி

**வினா எண் 1771—திரு. சிவ.வீ. மெய்யநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதியிலுள்ள போக்குவரத்து பணிமனைக்கு உட்கட்டமைப்பு வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

ஆலங்குடி பணிமனை கடந்த 19–2–2014 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. மேற்படி பணிமனை பணியாளர்கள் ஓய்வறை, உணவகம், தானியங்கி



2018 ஜனவரி 11]

பேருந்து சுத்தம் செய்யும் இயந்திரம், பாதுகாவலர் அறை, மின்னாக்கி அறை, அலுவலகம், கழிவறை மற்றும் பராமரிப்புக் கூடம் ஆகிய போதுமான உட்கட்டமைப்பு வசதிகளுடன் செவ்வனே இயங்கி வருகிறது.

**77—**

## இலவச பேருந்து பயணச் சீட்டு

**வினா எண் 14795—திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் யானைக்கால் நோயாளிகளுக்கு ஆசாரிபள்ளம் மருத்துவமனையில் மருத்துவ சிகிச்சை பெற இலவச பேருந்து பயணச் சீட்டு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) யானைக்கால் நோயாளிகளுக்கு அரசு மருத்துவமனை மற்றும் அரசு மருத்துவமனைக் கல்லூரியில் மருத்துவ சிகிச்சை பெற இலவசப் பேருந்து பயணச் சீட்டு வழங்குவது குறித்த கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**78—**

## போக்குவரத்துப் பணிமனையின் தரையை உயர்த்தியமைத்தல்

**வினா எண் 21506—திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதியில் உள்ள போக்குவரத்துக் கழகப் பணிமனையின் தரையை உயர்த்தியமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2018 ஜனவரி 11

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* நத்தம் தொகுதியில் உள்ள தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், நத்தம் பணிமனையில் தற்போது செம்மண் சரளை தளம் அமைக்கப்பட்டு நல்லமுறையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**79**—

## திருக்கோயிலைப் பராமரித்தல்

**வினா எண் 5029—திரு. சி. ராஜா:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சங்கரி தொகுதி, அரசிராமணி கிராமம், செட்டிபட்டியிலுள்ள அருள்மிகு செல்லியம்மன் திருக்கோயிலை அகலப்படுத்தவும், நாடார் தெருவிலுள்ள அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலுக்கு சிமெண்ட் தரை தளம் அமைக்கவும், வன்னியர் தெருவில் உள்ள அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலை பராமரிக்கவும் அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* (i) சேலம் மாவட்டம், சங்கரி வட்டம், அரசிராமணி, செட்டிப்பட்டியிலுள்ள அருள்மிகு செல்லியம்மன் திருக்கோயில், இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள பட்டியலில் சேர்க்கப்படாத சுமார் 70 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலில் போதிய நிதி வசதி இல்லை. எனவே, தற்போது உடனடியாக இத்திருக்கோயிலை விரிவுபடுத்துவதற்கான திருப்பணியினை மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது.



2018 ஜனவரி 11]

(ii) சேலம் மாவட்டம், அரசிராமணி கிராமம், வன்னியர் தெருவில் உள்ள அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள சிறிய திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் கடந்த 10 ஆண்டுகளுக்குமுன் ஊர் பொதுமக்கள் பங்களிப்புடன் கட்டப்பட்டுள்ளது. இத்திருக்கோயிலுக்கு போதிய நிதி வசதி இல்லை. எனவே, தற்போது இத்திருக்கோயிலில் சிமெண்ட் தரைதளம் அமைக்க இயலாத நிலை உள்ளது.

(iii) சேலம் மாவட்டம், அரசிராமணி கிராமம், நாடார் தெருவில் உள்ள அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டின்கீழ் இல்லாததால் இத்துறையின்மூலம் பராமரிக்க வழிவகை இல்லை.

**80**—

## கோயில் குளத்தைச் சீரமைத்தல்

**வினா எண் 5527—திரு. வீ. அலெக்சாண்டர்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அம்பத்தூர் 89–வது வார்டு, மேனாம்பட்டு பகுதி, TNEB காலனியில் உள்ள அருள்மிகு சிவா விஷ்ணு திருக்கோயில் குளத்தை சீரமைத்து, குளக்கரையில் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* அம்பத்தூர் 89–வது வார்டு, மேனாம்பட்டு பகுதி, TNEB காலனியில் உள்ள அருள்மிகு சிவா விஷ்ணு திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இல்லாத திருக்கோயிலாகும். எனவே, இந்து சமய அறநிலையத் துறையின் மூலமாக குளத்தை சீரமைத்து குளக்கரையில் பூங்கா அமைத்திட வழிவகை இல்லை.

**81**—

## கோயில் குளத்தைச் சீரமைத்தல்

**வினா எண் 5528—திரு. வீ. அலெக்சாண்டர்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அம்பத்தூர் பகுதி, பாடியிலுள்ள அருள்மிகு திருவல்லீஸ்வரர் திருக்கோயில் குளத்தை சீரமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை**—

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அம்பத்தூர் பகுதி, பாடியிலுள்ள அருள்மிகு திருவல்லீஸ்வரர் திருக்கோயிலுக்கு சொந்தமான திருக்குளம் திருக்கோயிலின் வடக்குப்புறத்தில் அமைந்துள்ளது. இத்திருக்குளத்தினை ரூ.22 இலட்சம் மதிப்பீட்டில் தூர்வாரி சுத்தம் செய்து படித்துறை அமைத்தும், மழைக் காலங்களில் மழை நீர் திருக்குளத்திற்கு வந்து சேருமாறு வடிவமைத்தும் திருப்பணி செய்யப்பட்டுள்ளது. தற்போது திருக்குளம் நல்ல நிலையில் உள்ளதால் சீரமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.*

**83**—

## நவீன அங்காடியாக மாற்றியமைத்தல்

**வினா எண் 5572—திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) எழும்பூர் தொகுதி, 58–வது வார்டில் உள்ள அருள்மிகு ஸ்ரீ எல்லையம்மன் திருக்கோயிலுக்கு சொந்தமான அங்காடியை நவீன அங்காடியாக மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*





**விடை**—

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சென்னை, எழும்பூர் அருள்மிகு ஸ்ரீ எல்லையம்மன் திருக்கோயில், சட்டப்பிரிவு 46* (ii)*–ன்கீழ் பட்டியலில் சேர்ந்த திருக்கோயில் ஆகும். இத்திருக்கோயிலுக்கு சொந்தமான இடத்தில் ரூ.11,50,000/– செலவில் நவீன வசதிகளுடன் கூடிய அங்காடி கட்டி முடிக்கப்பட்டு, தற்போது நல்ல நிலையில் பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேற்கொண்டு நவீனப்படுத்த வேண்டிய நிலை எழவில்லை.*

**84**—

## கோயில் குளத்தைத் தூர்வாரி சீரமைத்தல்

**வினா எண் 5573—திரு. எம். இராமச்சந்திரன்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஒரத்தநாடு தொகுதி, பரிதிக்கோட்டை ஊராட்சி, மாங்குழி என்கிற கன்னிமார் அம்மன் திருக்கோயில் குளத்தைத் தூர்வாரி, சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை**—

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தொகுதி, பரிதிக்கோட்டை அருள்மிகு மாங்குழி என்கிற கன்னிமார் அம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் நேரடி கட்டுப்பாட்டின்கீழ் இல்லாத திருக்கோயிலாகும். எனவே, மேற்காணும் திருக்கோயில் குளத்தை துறைமூலம் சீரமைக்க வழிவகை இல்லை.*

**85—**

## கோயில் ஊரணியில் படித்துறை கட்டுதல்

**வினா எண் 5937—திரு. ஏ. இரத்தினசபாபதி:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியம், வேள்வரை ஊராட்சி, பாப்பனேந்தல் கிராம கோயில் ஊரணியில் படித்துறை கட்ட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, வேள்வரை ஊராட்சி, பாப்பனேந்தல் கிராமம், அருள்மிகு பிள்ளையார் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் நேரடி கட்டுப்பாட்டின்கீழ் இல்லாத திருக்கோயிலாகும். எனவே, மேற்காணும் திருக்கோயில் திருக்குளத்திற்கு இந்து சமய அறநிலையத் துறைமூலம் படித்துறை கட்ட வழிவகை இல்லை.*

**86—**

## கோயில் ஊரணிக்கு சுற்றுச் சுவர் கட்டுதல்

**வினா எண் 5938—திரு. ஏ. இரத்தினசபாபதி:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியம், சாட்டியகுடி ஊராட்சி, தச்சமல்லி கிராமத்தில் உள்ள அம்மன் கோயில் ஊரணிக்கு சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*





**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியம், சாட்டியகுடி ஊராட்சி, தச்சமல்லி கிராமத்தில் உள்ள அருள்மிகு அம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் நேரடி கட்டுப்பாட்டின்கீழ் இல்லாத திருக்கோயிலாகும். எனவே, இந்து சமய அறநிலையத் துறைமூலம் ஊரணிக்கு சுற்றுச் சுவர் கட்ட வழிவகை இல்லை.*

**87—**

## கோயிலில் சமுதாயக் கூடம் அமைத்தல்

**வினா எண் 6054—திரு. எம். செல்வராசு:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) முசிறி தொகுதி, தொட்டியத்திலுள்ள சிவன் கோயிலில் புதிய சமுதாயக் கூடம் கட்ட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருச்சி மாவட்டம், தொட்டியம் வட்டம் மற்றும் நகரில் அமைந்துள்ள அருள்மிகு அனலாடீஸ்வரர் திருக்கோயிலில் போதிய நிதி வசதி இல்லை. எனவே, இத்திருக்கோயிலில் சமுதாயக் கூடம் கட்ட இயலாத நிலை உள்ளது.*

**88—**

## கோயிலுக்கு திருப்பணி செய்தல்

**வினா எண் 6359—திரு. ஏ. இரத்தினசபாபதி:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2018 ஜனவரி 11

(அ) அறந்தாங்கி தொகுதி, அரிமளம் ஒன்றியம், இரும்பாநாடு மாரியம்மன் கோயிலில் முன்மண்டபம் கட்டி, திருப்பணி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் வட்டம், இரும்பாநாடு கிராமம், அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் நேரடி கட்டுப்பாட்டின்கீழ் இல்லாத திருக்கோயிலாகும். எனவே, இந்து சமய அறநிலையத் துறைமூலம் முன்மண்டபம் கட்டி திருப்பணி செய்ய வழிவகை இல்லை.

**89—**

## கோயிலுக்கு ஆழ்குழாய் கிணறு அமைத்தல்

**வினா எண் 6362—திரு. ஏ. இரத்தினசபாபதி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி தொகுதி, மணமேங்குடி ஒன்றியம், நெற்குப்பம் ஊராட்சி, கட்டுக்கரை செல்லியம்மன் கோயிலுக்கு ஆழ்குழாய் கிணறு அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, மணமேங்குடி ஒன்றியம், நெற்குப்பம் ஊராட்சி, கட்டுக்கரை அருள்மிகு செல்லியம்மன் திருக்கோயில், இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இல்லாத திருக்கோயிலாகும். எனவே, இந்து சமய அறநிலையத் துறைமூலம் ஆழ்குழாய் கிணறு அமைக்க வழிவகை இல்லை.



2018 ஜனவரி 11]

**90—**

## கோயில் முன்மண்டபம் கட்டுதல்

**வினா எண் 6358—திரு. ஏ. இரத்தினசபாபதி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் ஒன்றியம், பண்ணியூரிலுள்ள அருள்மிகு பிள்ளையார் கோயிலின் முன்மண்டபம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியம், பண்ணியூர் கிராமத்தில் உள்ள அருள்மிகு பிள்ளையார் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் நேரடி கட்டுப்பாட்டின்கீழ் இல்லாத திருக்கோயிலாகும். எனவே, இந்து சமய அறநிலையத் துறைமூலம் திருக்கோயிலுக்கு முன்மண்டபம் கட்ட வழிவகை இல்லை.

**91—**

## கோயில் ஊரணி படித்துறை கட்டுதல்

**வினா எண் 6361—திரு. ஏ. இரத்தினசபாபதி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி தொகுதி, மணமேங்குடி ஒன்றியம், நெற்குப்பம் ஊராட்சி, கட்டுக்கரை அக்ரஹாரம் குடியிருப்பில் உள்ள பிள்ளையார் கோயில் ஊரணிக்கு படித்துறை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் வட்டம், நெற்குப்பம் ஊராட்சி, கட்டுக்கரை அக்ரஹாரம் அருள்மிகு பிள்ளையார் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இல்லாத திருக்கோயிலாகும். எனவே, இந்து சமய அறநிலையத் துறைமூலம் ஊரணிக்கு படித்துறை கட்ட வழிவகை இல்லை.*

**92**—

## கோயில் குளத்துக்கு தடுப்புச் சுவர் கட்டுதல்

**வினா எண் 6364—திரு. ஏ. இரத்தினசபாபதி:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அறந்தாங்கி தொகுதி, அரிமளம் ஒன்றியம், திருவாகுடி கிராமத்தில் விநாயகர் கோயில் குளத்துக்கு தடுப்புச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, அரிமளம் ஒன்றியம், திருவாகுடி கிராமத்தில் உள்ள அருள்மிகு விநாயகர் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் நேரடி கட்டுப்பாட்டின்கீழ் இல்லாத திருக்கோயிலாகும். எனவே, இந்து சமய அறநிலையத் துறைமூலம் மேற்படி திருக்கோயில் குளத்துக்கு தடுப்புச் சுவர் கட்ட வழிவகை இல்லை.*





**93**—

## கோயில் முன் மண்டபம் அமைத்தல்

**வினா எண் 6781—திரு. சே. கருணாஸ்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருவாடனை தொகுதி, திருவாடனை வட்டம், செங்குடி ஆதி திராவிடர் குடியிருப்பில் உள்ள இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள அருள்மிகு ஸ்ரீ மாரியம்மன் திருக்கோயில் முன்பு மண்டபம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருவாடனை தொகுதி, திருவாடனை வட்டம், செங்குடி கிராமம் ஆதி திராவிடர் குடியிருப்பில் உள்ள அருள்மிகு ஸ்ரீ மாரியம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள ஒரு கால பூஜை நடைபெறும் திருக்கோயிலாகும். மேற்படி திருக்கோயில் முன்பு மண்டபம் அமைக்க போதிய நிதி வசதி இல்லை. எனவே, உபயதாரர்கள் எவரேனும் நிதியுதவி வழங்க முன்வரின் இதுகுறித்து பரிசீலனை செய்யப்படும்.*

**94**—

## கோயிலுக்கு தெப்பக்குளம் அமைத்தல்

**வினா எண் 7058—திரு. அம்மன் கே. அர்ச்சுணன்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கோயம்புத்தூர் தெற்கு தொகுதிக்கு உட்பட்ட கோணியம்மன் கோயிலுக்கு சொந்தமான தெப்பக்குளத்தின் இடத்தை மாநகராட்சியிடமிருந்து பெற்று அவ்விடத்தில் மீண்டும் தெப்பக்குளம் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2018 ஜனவரி 11

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* கோவை மாநகர், பெரிய கடைவீதி, அருள்மிகு கோணியம்மன் திருக்கோயிலுக்கு சொந்தமாக திருக்குளம் இருந்ததற்கான விவரங்கள் திருக்கோயில் பதிவேட்டில் இல்லை.

**95—**

**கோயில் குளத்தில் படித்துறையுடன் தடுப்புச் சுவர் கட்டுதல்**

**வினா எண் 7128—திரு. வி. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* மயிலாடுதுறை தொகுதி, சேத்தூர் ஊராட்சி, பிள்ளையார் குளத்தில் படித்துறையுடன் தடுப்புச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், சேத்தூர் ஊராட்சி, அருள்மிகு பிள்ளையார் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின்கீழ் உள்ள சிறிய திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலுக்கு சொந்தமான திருக்குளம் ஏதும் இல்லை. எனவே படித்துறையுடன் தடுப்புச் சுவர் கட்டும் நிலை எழவில்லை.

**96—**

**கோயிலுக்கு படித்துறை கட்டுதல்**

**வினா எண் 7149—திரு. வே.பொ. சிவசுப்பிரமணி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2018 ஜனவரி 11]

மொடக்குறிச்சி தொகுதி, முத்துக்கவுண்டன்பாளையம் ஊராட்சி, காவேரிக் கரையில் அமைந்துள்ள சாமுண்டீஸ்வரி கோயிலுக்கு படித்துறை கட்ட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், முத்துக்கவுண்டன்பாளையம் ஊராட்சி, காவேரி கரையில் அமைந்துள்ள அருள்மிகு சாமுண்டீஸ்வரி திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இல்லாத திருக்கோயில் என்பதால் இந்து சமய அறநிலையத் துறையின் மூலமாக இத்திருக்கோயிலில் படித்துறை கட்ட வழிவகை இல்லை.

**97—**

**பக்தர்கள் தங்கும் விடுதி மற்றும் சாலை வசதி செய்தல்**

**வினா எண் 7150—திரு. வே.பொ. சிவசுப்பிரமணி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கொடுமுடி அருள்மிகு மகுடேஸ்வரர் கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு தங்கும் விடுதிகள் கட்டவும், சாலை வசதி செய்யவும் அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

ஈரோடு மாவட்டம், கொடுமுடி வட்டம், கொடுமுடி அருள்மிகு மகுடேஸ்வரர் வீரநாராயணப்பெருமாள் திருக்கோயிலுக்கு முன்புறம் பக்தர்கள் தங்கும் விடுதி கட்டப்பட்டு முதல் தளத்தில் எட்டு அறைகள் மற்றும் தரைதளத்தில் இரண்டு அறைகள் பயன்பாட்டில் உள்ளன. இத்திருக்கோயிலின் தங்கும் விடுதியின் அறைகள் பக்தர்களுக்கு தங்கிச் செல்ல போதுமானதாக உள்ளது. பக்தர்களின் வசதிக்காக தார்ச் சாலை அமைக்க மாவட்ட நிருவாகத்துடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**98—**

## கோயில் குளங்களைத் தூர்வாருதல்

**வினா எண் 7256—திரு. ஆர். நடராஜ்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மயிலாப்பூர் தொகுதி, சித்திரைக் குளம் மற்றும் அருள்மிகு மாதவபெருமாள் திருக்கோயிலின் குளங்களை தூர்வார அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

சென்னை மயிலாப்பூர், அருள்மிகு ஆதிகேசவபெருமாள் திருக்கோயிலுக்கு சொந்தமான சித்திரைக் குளத்தினை சுற்றிலும் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில், காய்கனி கடை, சிற்றுண்டி சாலை உள்ளிட்ட நிறைய கடைகள் உள்ளன. இந்தக் கடைகளின் கழிவுகளை திருக்குளத்தின் உள்ளே கொட்டிவிடுகின்றனர். இதனைத் தடுக்கும் வகையில் மேற்படி கடைகளை அகற்றிடக்கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் W.P. No. 15354/2007 வழக்கு தொடரப்பட்டுள்ளது. இவ்வழக்கு முடிவுக்கு வரப்பெற்றவுடன் குளத்தினை தூர்வாரி செப்பனிட திருக்கோயில் நிருவாகத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மயிலாப்பூர் தொகுதி, அருள்மிகு மாதவபெருமாள் திருக்கோயில் திருக்குளத்தில் மாதம் ஒருமுறை புல் பூண்டுகள் அகற்றப்பட்டு முறையாக தூர்வாரப்பட்டு வருகிறது.

**99—**

## கோயில் நிலங்களை மீட்டல்

**வினா எண் 8017—திரு. கே.வி. சேகரன்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*போளூர் வட்டத்தில் கோயில் நிலங்களை தனியார் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்க அரசு முன்வருமா?*





**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

போளூர் வட்டத்தில் உள்ள திருக்கோயில் நிலங்களில் தனி நபர் பெயரில் தவறுதலாக UDR பட்டா மாற்றம் செய்யப்பட்ட 12 திருக்கோயில் நிலங்கள் 10.68 ஏக்கர் கண்டறியப்பட்டு, மாவட்ட வருவாய் அலுவலரிடம் மேல்முறையீடு செய்யப்பட்டு மீண்டும் திருக்கோயில் பெயரில் பட்டா பெறப்பட்டுள்ளது. மேலும், இந்து சமய அறநிலையத் துறையின் அனுமதியின்றி திருக்கோயில் நிலத்தில் தனி நபர் ஆக்கிரமிப்பு, திருக்கோயிலுக்குச் சொந்தமான கட்டடம், மனை, குடியிருப்பு வாடகைதாரர்கள், துறை விதிகளை மீறி செயல்படுதல் போன்ற இனங்கள் கண்டறியப்பட்டு, சட்டவிதிகளின்படி நீதிமன்றத்தின்மூலம் ஆக்கிரமிப்புகளை அகற்றிட இணை ஆணையரால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**100—**

## கால்நடை ஆய்வாளர் நிலை–1 பணியிடம் நிரப்புதல்

**வினா எண் 9743—திரு. அ. நல்லதம்பி:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருப்பத்தூர் தொகுதி, மடவாளம் கால்நடை மருத்துவமனையில் காலியாக உள்ள கால்நடை ஆய்வாளர் நிலை–1 பணியிடத்தை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கால்நடை பராமரிப்புத் துறையில் காலியாக உள்ள கால்நடை ஆய்வாளர் பணியிடங்களை நேரடி நியமனம்மூலம் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[2018 ஜனவரி 11

அவ்வாறு நிரப்பப்படும்போது மேற்காண் மடவாளம் கால்நடை மருத்துவமனையில் காலியாக உள்ள கால்நடை ஆய்வாளர் நிலை–1 பணியிடம் நிரப்ப ஆவன செய்யப்படும்.

*(18–9–2017 முதல் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களால் தகுதி நீக்கம் செய்யப்பட்ட உறுப்பினர்களால் கொடுக்கப்பட்ட வினா வரிசை எண்கள் 22, 27, 42, 56, 57, 63, 64 மற்றும் 82–க்கான வினாக்கள்–விடைகள் பட்டியல் 3-ல் இடம் பெறவில்லை.)*

## பட்டியல்–4

**1—**

### கிராம்பு மரங்கள் குறித்த விவரம்

**வினா எண் 20708—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் தனியார் ஆக்கிரமிப்பிலிருந்து கையகப்படுத்தப்பட்ட கிராம்பு மரங்கள் வனத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளதா என்பதைத் தெரிவிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எத்தனை மரங்கள் உள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 2007 ஆம் ஆண்டு முதல் கன்னியாகுமரி வனக்கோட்டம் வன உயிரின சரணாலயமாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளதால் வன உயிரினங்கள் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு கருதி இயற்கையாக வளர்ந்த தாவர வகைகளுக்கு இடையே கிராம்புத் தோட்டங்கள் உள்ளதால் வனத்தினுள் புகுந்து பராமரிப்புப் பணி செய்யப்படுவதில்லை. இந்நிலையில் அடர்த்தியான காட்டுப் பகுதிக்குள் வன உயிரினங்களும் உள்ளன. அவற்றின் வளர்ச்சிக்கு குந்தகமில்லாமல் வனத்திலுள்ள சிறு வன மகசூல் மற்றும் துறைச் சார்ந்த எவ்விதமான பணிகளும் வன உயிரினச் சட்டத்தின்படி



2018 ஜனவரி 11]

மேற்கொள்ளப்படுவதில்லை. எனவே, தனியார் ஆக்கிரமிப்பிலிருந்து கையகப்படுத்தப்பட்ட கிராம்பு மரங்களின் எண்ணிக்கை விவரம் துல்லியமாகக் கணக்கிட்டு தெரிவிக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**2—**

### பள்ளிகளைத் தரம் உயர்த்துதல்

**வினா எண் 16519—திரு. அ. பிரபு:** மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி தொகுதி, தியாகதுருகம் ஊராட்சி ஒன்றியம், எறஞ்சி, குருபீடபுரம் மற்றும் நின்னையூர் ஊராட்சிகளிலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2017–2018 ஆம் கல்வியாண்டில் 150 ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதால், நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை கள்ளக்குறிச்சி தொகுதி, தியாகதுருகம் ஊராட்சி ஒன்றியம், எறஞ்சி, குருபீடபுரம் மற்றும் நின்னையூர் ஊராட்சிகளிலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகள் பூர்த்தி செய்யும்பட்சத்தில் தகுதி மற்றும் தேவையின் அடிப்படையில், அப்பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த பரிசீலிக்கப்படும்.

**3—**

### கூட்டுறவுச் சங்கம் அமைத்தல்

**வினா எண் 643—திரு. சபா. ராசேந்திரன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2018 ஜனவரி 11

நெய்வேலி தொகுதியிலுள்ள வேகாக்கொல்லை மற்றும் சத்திரம் கிராமங்களிலுள்ள நாற்றங்கால் பண்ணை விவசாயிகளுக்கு ஒரு கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

நெய்வேலி சட்டமன்ற தொகுதியில் வேகாக்கொல்லை மற்றும் சத்திரம் ஆகிய கிராமப் பகுதிகளில் நாற்றங்கால் பண்ணை கூட்டுறவுச் சங்கம் அமைக்க அந்தப் பகுதி விவசாயிகளிடமிருந்து கோரிக்கை மனு எதுவும் பெறப்படவில்லை.

**4—**

**நியாய விலைக் கடையை மாற்றியமைத்தல்**

**வினா எண் 3883—திரு. எஸ். சுதர்சனம்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாதவரம் தொகுதி, புழல் அண்ணா நினைவு நகர், மின்வாரிய தெருவில் உள்ள நியாய விலைக் கடையை 4–வது பிரதான மெயின் சாலையில் உள்ள அண்ணா பூங்கா அமைந்துள்ள காலி இடத்தில் மாற்றியமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சைதாப்பேட்டை தாலுகா வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் நடத்தும் கதிர்வேடு 1 (GP001) நியாய விலைக் கடை 777 குடும்ப அட்டைகளுடன், புழல் அண்ணா நினைவு நகர், மின்வாரிய தெருவில் இயங்கி வருகிறது. இந்நியாய விலைக் கடையை 4–வது பிரதான சாலையில் உள்ள அண்ணா பூங்காவில் அரசு கட்டடம் ஏதும் இல்லாத காரணத்தால் அவ்விடத்தில் மாற்றி அமைத்திட வழிவகையில்லை.

**5—**

**நியாய விலைக் கடை அமைத்தல்**

**வினா எண் 7550—திரு. மா. சுப்பிரமணியன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2018 ஜனவரி 11]

(அ) சைதாப்பேட்டை தொகுதி, வார்டு எண் 142–ல் வரசித்தி விநாயகர் கோயில் தெருவில் நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சைதாப்பேட்டை தொகுதி, பெருமாள் கோயில் தெருவில் திருவல்லிக்கேணி நகர் கூட்டுறவுச் சங்கத்தின் கட்டுப்பாட்டில், சைதாப்பேட்டை 3 (LC006) நியாய விலைக் கடை 1,218 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. மேற்படி புதிய நியாய விலைக் கடை கோரும் வார்டு எண் 142–ல் உள்ள வரசித்தி விநாயகர் கோயில் தெருவில் உள்ள 30 குடும்ப அட்டைகளும் இதில் அடங்கும். அரசு வழிகாட்டு நெறிகளின்படி, நகர்ப்புற பகுதியில் புதிய நியாய விலைக் கடை துவக்க குறைந்தபட்சம் 800 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். புதிய நியாய விலைக் கடை கோரும் வரசித்தி விநாயகர் கோயில் தெருவில் 30 குடும்ப அட்டைகள் மட்டும் இணைக்கப்பட்டுள்ளன. எனவே, அரசின் நிபந்தனை பூர்த்தியாகாததால் வரசித்தி விநாயகர் கோயில் தெருவில் புதிய நியாய விலைக் கடை அமைத்திட சாத்தியக்கூறுகள் இல்லை.

**6—**

**நியாய விலைக் கடை அமைத்தல்**

**வினா எண் 9360—திரு. ஐ.பி. செந்தில்குமார்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி தொகுதி, பழனி நகராட்சி, 8–வது வார்டு, சத்யா நகரில் நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், பழனி தொகுதி, பழனி நகராட்சி இரயில்வே ஸ்டோர்–1 நியாய விலைக் கடை

[2018 ஜனவரி 11

தென்னக இரயில்வே கூட்டுறவு பண்டகசாலைமூலம் 1,114 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. அரசு வழிகாட்டு நெறிகளின்படி தாய் அங்காடிக்கும், பகுதிநேர கடைக்கும் குறைந்தது 1.5 கி.மீ. இருக்க வேண்டும். ஆனால், மேற்படி சத்யா நகர் பகுதி, இரயில்வே ஸ்டோர் கடை எண்–1–லிருந்து 1 கி.மீ. தூரம் மட்டுமே இருப்பதால் மேற்படி சத்யா நகரில் நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**7—**

## நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

**வினா எண் 9362—திரு. ஐ.பி. செந்தில்குமார்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பழனி தொகுதி, நெய்க்காரன்பட்டி பேரூராட்சி, பெரியகலையம்புத்தூர் 9, 10, 11 மற்றும் 12 ஆகிய வார்டுகளுக்கு உட்பட்ட நியாய விலைக் கடைகளுக்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், பழனி தொகுதி, நெய்க்காரன்பட்டி பேரூராட்சி, பெரியகலையம்புத்தூர் 9, 10, 11 மற்றும் 12 ஆகிய வார்டுகளுக்கு உட்பட்ட நியாய விலைக் கடை, பெரியகலையம்புத்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் 944 குடும்ப அட்டைகளுடன், வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மேற்படி பெரியகலையம்புத்தூர்–2 முழுநேர நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்ட, சங்கத்தில் இடம் மற்றும் நிதி வசதி இல்லாததால், புதிய கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.*



2018 ஜனவரி 11]

**8—**

## நியாய விலைக் கடை அமைத்தல்

**வினா எண் 12436—திரு. மு.பெ. கிரி:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் தொகுதி, தீத்தாண்டப்பட்டியிலுள்ள நியாய விலைக் கடையிலிருந்து குடும்ப அட்டைகளைப் பிரித்து, பரமனந்தல் பாரியூர் பகுதிக்கு பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் தொகுதி எச்.எச். 537 செங்கம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் தீத்தாண்டப்பட்டி முழுநேர நியாய விலைக் கடை 557 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் பரமனந்தல் பாரியூரைச் சேர்ந்த 22 குடும்ப அட்டைகளும் இதில் அடங்கும். அரசு வழிகாட்டு நெறிகளின்படி பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் பகுதியில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் தாய் அங்காடிக்கும் பகுதிநேர கடைக்கும் 1.5 கி.மீ. இருக்க வேண்டும். தாய் அங்காடிக்கும், பரமனந்தல் பாரியூர் பகுதிக்கும் 0.5 கி.மீ. தூரம் மட்டுமே உள்ளது. மேற்கூறிய அரசின் நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில் பரமனந்தல் பாரியூர் பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.*

**9—**

## நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

**வினா எண் 14711—திரு. என். முருகுமாறன்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2018 ஜனவரி 11

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, டி.புத்தூர் ஊராட்சியில் உள்ள நியாய விலைக் கடைக்கு கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் வட்டாரத்தில், சிதம்பரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் கட்டுப்பாட்டில் டி.புத்தூர் முழுநேர நியாய விலைக் கடை 244 குடும்ப அட்டைகளுடன் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மேற்படி, சிதம்பரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் சொந்த இடம் இல்லாததால், டி.புத்தூர் முழுநேர நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

**10—**

## நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

**வினா எண் 16844—திரு. அ. பிரபு:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி தொகுதி, தியாகதுருகம் ஊராட்சி ஒன்றியம், கனங்கூர் ஊராட்சியில் உள்ள நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டம், ஐ.ஐ. 549 K. முடியனூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் கனங்கூர் ஊராட்சியில், கனங்கூர் முழுநேர நியாய விலைக் கடை 634 குடும்ப அட்டைகளுடன் ஜவஹர் வேலைவாய்ப்பு திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட அரசு கட்டடத்தில் செயல்பட்டு வருவதால், கனங்கூர் முழுநேர நியாய விலைக் கடைக்கு மேலும் ஒரு சொந்தக் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.



2018 ஜனவரி 11]

**11—**

## சுற்றுச்சுவர் கட்டுதல்

**வினா எண் 16846—திரு. அ. பிரபு:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி தொகுதி, தியாகதுருகம் ஊராட்சி ஒன்றியம், முடியனூர் ஊராட்சியில் உள்ள கூட்டுறவுக் கடன் சங்கக் கட்டடத்திற்கு சுற்றுச்சுவர் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) முடியனூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் போதிய நிதி ஆதாரம் இல்லாததால் சுற்றுச்சுவர் கட்ட இயலாது.

**12—**

## நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

**வினா எண் 17782—திரு. அ. பிரபு:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி தொகுதி, சின்னசேலம் ஒன்றியம், பூண்டி அம்மையகரம் மற்றும் மேல்நாரியப்பனூரில் நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், சின்னசேலம் ஒன்றியத்தில் I.I. 717 பூண்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில், பூண்டி முழுநேர நியாய விலைக் கடை 538 குடும்ப அட்டைகளுடன் சங்கத்திற்குச் சொந்தமான

கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. அம்மையகரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் செயல்படும் அம்மையகரம் முழுநேர நியாய விலைக் கடை ஜவஹர் வேலைவாய்ப்பு திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட அரசு கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மேல்நாரியப்பனூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில், மேல்நாரியப்பனூர் முழுநேர நியாய விலைக் கடை எண் 1, 454 குடும்ப அட்டைகளுடன் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மேல்நாரியப்பனூர் பகுதிநேர நியாய விலைக் கடை எண் 2, 622 குடும்ப அட்டைகளுடனும் சங்கத்திற்கு சொந்தமான கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. எனவே, பூண்டி, மேல்நாரியப்பனூர் கடை எண் 2 மற்றும் அம்மையகரம் நியாய விலைக் கடைகள் முறையே சங்கக் கட்டடத்தில் மற்றும் அரசுக் கட்டடத்தில் செயல்பட்டு வருவதால் புதிய கட்டடம் கட்ட வேண்டிய நிலை எழவில்லை. மேல்நாரியப்பனூர் முழுநேர நியாய விலைக் கடை எண் 1–க்கு புதிய கட்டடம் கட்ட சங்கத்தில் சொந்த இடம் இல்லாததால் புதிய கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

**13—**

## உரக் கிடங்கு கட்டுதல்

**வினா எண் 17920—திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், தேவனாஞ்சேரி ஊராட்சி, தேவனாஞ்சேரி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் (எண் 2826) சங்கத்திற்காக புதிதாக உரக் கிடங்கு கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தேவனாஞ்சேரி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திலிருந்து 50 அடி தூரத்தில் உள்ள, பஞ்சாயத்து யூனியன் கட்டடத்தில், 30 டன் கொள்ளளவு கொண்ட உரக் கிடங்கில், தேவையான உரங்களை இருப்பு*





*வைத்து, அப்பகுதியில் உள்ள விவசாயிகளுக்குத் தேவையான அனைத்து வகையான உரங்களும் தங்குதடையின்றி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, தேவனாஞ்சேரி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு புதிதாக உரக் கிடங்கு கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.*

**14—**

## நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

**வினா எண் 17924—திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நகராட்சி, 25–வது வார்டில் உள்ள நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், கும்பகோணம் வட்டாரத்தில் சந்திரசேகரபுரம் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை கட்டுப்பாட்டில், கும்பகோணம் நகராட்சியில் வார்டு எண் 25–ல் 19DD019 ஸ்ரீராம் நகர் முழுநேர நியாய விலைக் கடை 903 குடும்ப அட்டைகளுடன் தனியாருக்கு சொந்தமான வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மேற்படி சங்கத்தில் சொந்த இடம் மற்றும் நிதி வசதியின்மையால் ஸ்ரீராம் நகர் முழுநேர நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.*

**15—**

## நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம்

**வினா எண் 17925—திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கும்பகோணம் தொகுதி, திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியம், சீனிவாசநல்லூர் ஊராட்சி, சீனிவாசபுரத்தில் நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் தொகுதி, சீனிவாசநல்லூர் ஊராட்சி, சீனிவாசபுரம் கிராமத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களால் நடத்தப்பட்டுவரும் சீனிவாசபுரம் முழுநேர நியாய விலைக் கடை 466 குடும்ப அட்டைகளுடன் தற்போது ஊராட்சிக்குட்பட்ட கட்டடத்தின் ஓர் அறையில், இலவசமாக செயல்பட்டு வருவதால், சீனிவாசபுரம் முழுநேர நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

**16—**

## நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

**வினா எண் 18935—திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நகராட்சி, 25–வது வார்டு, ராதா நகரிலுள்ள நியாய விலைக் கடைக்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், கும்பகோணம் வட்டாரத்தில், சந்திரசேகரபுரம் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை கட்டுப்பாட்டிலுள்ள வார்டு எண் 25–ல் ராதா நகர் மற்றும் ஸ்ரீராம் நகர் முழுநேர நியாய விலைக் கடையில் 903 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டு, தனியாருக்கு சொந்தமான வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மேற்படி, சங்கத்தில் சொந்த இடம் இல்லாததால் 25–வது வார்டில் உள்ள நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.





**17—**

## பகுதிநேர நியாய விலைக் கடை

**வினா எண் 19342—திரு. எம். இராமச்சந்திரன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* ஒரத்தநாடு தொகுதி, ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், பூவத்தூர் ஊராட்சிக்குட்பட்ட பூவத்தூர் சேதுராயன் தெரு குடும்ப அட்டைதாரர்களுக்காக பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தொகுதி, ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், டி.4474 பூவத்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் EPO60 பூவத்தூர் முழுநேர நியாய விலைக் கடை 607 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் சேதுராயன் பகுதியைச் சேர்ந்த 168 குடும்ப அட்டைகளும் இதில் அடங்கும். அரசு வழிகாட்டு நெறிகளின்படி பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் பகுதியில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். பிரிக்கப்பட்டபின் தாய் அங்காடியில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் தாய் அங்காடிக்கும், பகுதிநேர கடைக்கும் குறைந்தது 1.5 கி.மீ. இருக்க வேண்டும். பகுதிநேர நியாய விலைக் கடைக் கோரும் சேதுராயன் தெருவில் 168 குடும்ப அட்டைகள் இருந்தபோதிலும், பிரிக்கப்பட்ட பின் தாய் அங்காடியில் 439 குடும்ப அட்டைகள் மட்டுமே எஞ்சியிருக்கும். மேலும், பகுதிநேர நியாய விலைக் கடைக் கோரும் சேதுராயன் தெரு பகுதிக்கும், தாய் நியாய விலைக் கடைக்கும் 0.5 கி.மீ. தூரம் மட்டுமே உள்ளது. பகுதிநேர நியாய விலைக் கடை அமைப்பதற்கு சேதுராயன் தெரு கிராமத்தில்

[2018 ஜனவரி 11

தனியாக அரசு கட்டடம், பஞ்சாயத்து கட்டடம், இலவச இடம் ஏதும் இல்லை. எனவே, அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில் சேதுராயன் தெருவில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை தொடங்கிட சாத்தியக்கூறுகள் இல்லை.

**18—**

## விற்பனை மையம் அமைத்தல்

**வினா எண் 20207—திரு. அ. பிரபு:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், தென்கீரனூர் கூட்டுறவு வங்கியில் விற்பனை மையம் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்தில் செயல்படும் தென்கீரனூர் கூட்டுறவு வங்கியிலிருந்து 3 கி.மீ. தொலைவில், கள்ளக்குறிச்சி நகரத்தில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் செயல்பட்டு வருவதால், தென்கீரனூர் கூட்டுறவு வங்கியில் விற்பனை மையம் அமைக்க வழிவகை இல்லை.

**19—**

## ஆலைக் கழிவுகளைத் தடுத்தல்

**வினா எண் 2088—திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) காவேரி நதியின் கிளை நதியாகிய அமராவதி ஆற்றில் கலக்கும் சாயப்பட்டறை ஆலைக் கழிவுகளைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2018 ஜனவரி 11]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* கரூர் மாவட்டத்தில் மொத்தம் 487 சாய மற்றும் சலவை ஆலைகள் இயக்கப்பட்டு வந்தன. அவற்றுள் 391 ஆலைகள், 8 பொதுக்கழிவு சுத்திகரிப்பு நிலையங்களின் மூலமாகவும் மற்ற 96 நிறுவனங்கள் தனிப்பட்ட சுத்திகரிப்பு நிலையங்கள் மூலமாகவும் தங்களது கழிவுநீரை சுத்திகரித்து அருகில் இருந்த கால்வாய்கள் மற்றும் அமராவதி ஆற்றில் வெளியேற்றி வந்தன. இதனால் கரூர் மாவட்ட நிலத்தடி நீர் பாதுகாப்பு மற்றும் சாயக்கழிவால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் சங்கம் சென்னை உயர் நீதிமன்றத்தில் W.P.24650/2003–ல் வழக்கு தொடர்ந்தனர். சென்னை உயர் நீதிமன்றம் 16–9–2009 தேதியிட்ட ஆணையில் கரூரில் செயல்பட்டு வந்த சாய மற்றும் சலவை ஆலைகளுக்கு மூடுதல் உத்தரவு வழங்கியது. இதனால், அனைத்து சாய மற்றும் சலவை ஆலைகள், பொது சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் அதன் உறுப்பினர் ஆலைகளும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் நவம்பர், டிசம்பர் 2011 மற்றும் ஜனவரி 2012–ல் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு மூடப்பட்டன. தற்போது, கரூரில் 425 சாய மற்றும் சலவை ஆலைகள் மூடப்பட்டுள்ளன. இவை பெரும்பாலும் சிறிய அளவிலான கை சாயமிடும் மின்சாரம் தேவையில்லாத தொழிலகங்களாகும். அவற்றுள் சில ஆலைகள் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய அனுமதியின்றி இயக்க முற்படுகின்றன. இதுபோன்ற அனுமதியற்ற இயக்கங்கள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன. இதற்கென மாவட்ட அளவில் அலுவலர்களைக் கொண்ட ஒருங்கிணைப்புக் குழு (District Co-ordination Committee) அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவினரால் மூடப்பட்டுள்ள சாயமிடும் தொழிலகங்கள் இரவு நேரத்தில் ஆய்வு செய்யப்பட்டு, அனுமதியின்றி செயல்படும் தொழிலகங்களின்மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. தற்போது, கரூரில் 62 சாயமிடும் தொழிலகங்களுக்கு மட்டும் வாரிய இசைவாணை வழங்கப்பெற்று, இயக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இந்தத் தொழிலகங்கள், தங்களுடைய தொழிற்சாலை கழிவுநீரை எதிர்மறை சவ்வூடு பரவல் அமைப்புடன்கூடிய சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிப்பு செய்து சுத்திகரிப்பு செய்த கழிவுநீரை மறுசுழற்சி செய்கின்றன. இந்தத் தொழிலகங்கள் அவ்வப்போது ஆய்வு செய்யப்பட்டு

[2018 ஜனவரி 11

*கழிவுநீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு ஆய்வகத்தில் பரிசோதனை செய்யப்பட்டு, அதன் கழிவுநீர் சுத்திகரிப்பு மற்றும் மறுசுழற்சி முறைகள் கண்காணிக்கப்படுகின்றன. இதனால் அமராவதி ஆற்றில் சாயக் கழிவுநீர் எதுவும் கலப்பதில்லை.*

**20—**

## நியாய விலைக் கடைகளில் சிறு தானியங்களை விற்பனை செய்தல்

**வினா எண் 14130—திரு. பெரியண்ணன் அரசு:** மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பருப்பு வகைகள், மிளகாய், சிறு தானியங்கள் மற்றும் எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றிற்கு குறைந்தபட்ச ஆதார விலையை நிர்ணயித்து தேவையான அளவு சிறுதானியங்களை அரசே கொள்முதல் செய்து நியாய விலைக் கடைகள் மூலம் விற்பனை செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழகத்திலுள்ள மாவட்டங்களில் தானியங்கள் பயிரிடப்படும் விவசாய நிலத்தின் அளவு மிகவும் குறைவாக உள்ளது. எனவே, சிறு தானியங்களை குறைந்தபட்ச ஆதார விலையை நிர்ணயித்து அனைத்து நியாய விலைக் கடைகளுக்கும் விற்பனை செய்வது சாத்தியமில்லை.*

**21—**

## காலிப் பணியிடங்களை நிரப்புதல்

**வினா எண் 16259—திரு. எஸ். சுதர்சனம்:** மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் காலியாக உள்ள உதவியாளர் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2018 ஜனவரி 11]

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் காலியாக உள்ள உதவியாளர் பணியிடங்களை நிரப்பும்பொருட்டு குழுமத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி கோப்பு நடவடிக்கையில் உள்ளது.*

**22—**

## அமுதம் அங்காடி கட்டடத்தைச் சீரமைத்தல்

**வினா எண் 17921—திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், அகராத்தூர் ஊராட்சியில் உள்ள அமுதம் அங்காடி கட்டடத்தைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அகராத்தூர் ஊராட்சியில் அமைந்துள்ள அகராத்தூர் நியாய விலைக் கடை (19DD050PN) 364 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இந்த நியாய விலைக் கடை கட்டடத்தின் மேற்கூரை பழுதடைந்து இருந்தது. இதனை கடந்த ஆகஸ்டு 2016-ல் பழுதுபார்த்து சீரமைக்கப்பட்டுவிட்டது.*

**23—**

## செறிவூட்டப்பட்ட மாவு வழங்குதல்

**வினா எண் 22160—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2018 ஜனவரி 11

(அ) நியாய விலைக் கடைகளில் மீண்டும் செறிவூட்டப்பட்ட மாவு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் நியாய விலைக் கடைகளில் ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த செறிவூட்டப்பட்ட கோதுமை மாவினை பொதுமக்கள் வாங்க விருப்பப்படாததாலும், செறிவூட்டப்பட்ட கோதுமை மாவினை பாக்கெட்டுகளில் அடைத்து நியாய விலைக் கடைகளுக்கு அனுப்பப்படும்பொழுதும், அவற்றினை வாகனங்களில் ஏற்றி இறக்கும்போதும் கோதுமை மாவு பாக்கெட்டுகள் உடைந்து வீணாக போய்விடுகிறது. மேலும், செறிவூட்டப்பட்ட கோதுமை மாவினை பாக்கெட்டுகளில் அடைக்கும்போது பூச்சி மற்றும் சிறு புழுக்கள் வருவதால் செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு வழங்கப்படுவது அரசால் கைவிடப்பட்டுள்ளது. எனவே, மீண்டும் நியாய விலைக் கடைகளின்மூலம் செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு வழங்குவதற்கான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**24—**

## கான்கிரீட் தளம் அமைத்தல்

**வினா எண் 4472—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாநராட்சி, நாராயணவலசு பகுதியில் உள்ள குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் அடுக்குமாடி குடியிருப்புகளிலுள்ள கழிவுநீர் தொட்டியினை சீரமைக்கவும், குடியிருப்புகளைச் சுற்றியுள்ள பகுதிகளில் கான்கிரீட் தளம் அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?



2018 ஜனவரி 11]

**விடை—**

**மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

ஆம். ஈரோடு மாநகராட்சி, நாராயணவலசு பகுதியில் உள்ள குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின்மூலம் 256 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. இத்திட்டப் பகுதியில் அமைந்துள்ள பழுதடைந்த கழிவுநீர்த் தொட்டியினை முழுவதுமாக இடித்து அப்புறப்படுத்திவிட்டு ரூ.29.70 இலட்சம் செலவில் புதிய கழிவுநீர்த் தொட்டி மற்றும் குடியிருப்புகளைச் சுற்றியுள்ள பகுதிகளில் கான்கிரீட் நடைபாதை அமைக்கும் பணிகளுக்கு வாரிய ஒப்புதல் பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

**25—**

## வீடுகள் ஒதுக்கீடு செய்தல்

**வினா எண் 7385—திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி தொகுதியில், சாலை விரிவாக்கத்திற்காக ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டதால் குடியிருப்புகளை இழந்த மக்களுக்கு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக கூடுதலாக வீடுகள் ஒதுக்கீடு செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

ஆம். தூத்துக்குடி மாநகராட்சியால் சாலை விரிவாக்கத்திற்காக, ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட 822 வீடுகள் அகற்றப்பட்டன. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், அவற்றுள் 78 குடும்பங்களுக்கு துரைசிங் நகர் பகுதியில் 13–வது நிதிக் குழுத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. 444 பயனாளிகளுக்கு தற்சமயம் மாப்பிள்ளை ஊரணியில் ராஜீவ் ஆவாஜ் யோஜனா

வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. மீதமுள்ள 300 பயனாளிகளுக்கு குடியிருப்புகள் கட்ட, தேவையான நிலத்தினை வழங்க தூத்துக்குடி மாவட்ட நிருவாகத்திடம் கோரப்பட்டுள்ளது. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் "அனைவருக்கும் வீட்டு வசதி திட்டத்தின்" கீழ் இக்குடும்பங்களுக்கு அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**26**—

## புதிய வீடுகள் கட்டுதல்

**வினா எண் 12739—திரு. அ. ராமு:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) குன்னூர் நகராட்சி, 19–வது வார்டு, சித்தி விநாயகர் கோயில் தெருவில் வசித்து வரும் மக்களுக்கு மாற்றிடத்தில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக புதிய வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) நீலகிரி மாவட்டம், குன்னூர் பிரகாசபுரம் மற்றும் அல்லன்ஜி பகுதிகளில் 372 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான நிலம் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. "அனைவருக்கும் வீட்டு வசதி திட்டத்தின்" கீழ் குன்னூர் நகராட்சி, 19–வது வார்டில் உள்ள சித்தி விநாயகர் கோயில் தெருவில் வசிக்கும் குடும்பங்கள் பிரகாசபுரத்தில் கட்டப்படவிருக்கும் அடுக்குமாடிக் குடியிருப்புகளில் குடிபெயர்ந்து செல்ல விருப்பம் தெரிவித்தால், அக்குடியிருப்புகளில் அவர்களை குடியமர்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*





**27**—

## குடியிருப்புகள் கட்டுதல்

**வினா எண் 16206—திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாநகராட்சி துப்புரவுப் பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்ட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

"அனைவருக்கும் வீட்டு வசதி" திட்டத்தின்கீழ் தூத்துக்குடி மாநகராட்சி துப்புரவுப் பணியாளர்களுக்கு வீடுகள் கட்ட, மாவட்ட நிருவாகம் மற்றும் மாநகராட்சிமூலம் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் நிலம் கண்டறியப்பட்டு வருகின்றது. எனவே, வாரியத்தின் பெயரில் நிலமாற்றம் செய்யப்பட்டபின், தகுதியுள்ள பயனாளிகளுக்கு வீடுகள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**28**—

## மனைகளை வரன்முறைப்படுத்துதல்

**வினா எண் 21793—திரு. ஆர். நடராஜ்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) ஊராட்சிகளின் அங்கீகாரம் பெற்ற மனைகளை வரன்முறை செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டத்தின் 113 ஆம் பிரிவின்கீழ் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, 122 ஆம் பிரிவின்கீழ்,*

ஒப்புதல் அளிக்கப்படாத மனைகள் மற்றும் மனைப் பிரிவுகளை வரன்முறைப்படுத்துவதற்கான விதிகள் 4–5–2017 நாளிட்ட அரசாணை (நிலை) எண் 78–ல் வெளியிடப்பட்டு, அன்றே அரசிதழில் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.

**29**—

## மருத்துவமனைக்கு போதிய மருந்துகள் வழங்குதல்

**வினா எண் 3183—திரு. சிவ.வீ. மெய்யநாதன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, ஆலங்குடி அரசு மருத்துவமனைக்கு போதிய மருந்துகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை**—

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி அரசு மருத்துவமனை 56 படுக்கை வசதிகள் கொண்ட வட்ட அரசு மருத்துவமனையாகும். இங்கு நாளொன்றிற்கு சராசரியாக 28 உள் நோயாளிகளும், 550 வெளி நோயாளிகளும் சிகிக்சைப் பெற்று வருகின்றனர். மாதமொன்றுக்கு 5,048 ஆய்வகப் பரிசோதனை, 93 எக்ஸ்ரே, 83 இ.சி.ஜி. USG 14 எடுக்கப்படுகிறது. மாதமொன்றுக்கு சராசரியாக 3 பிரசவங்களும், 270 சிறிய அறுவை சிகிச்சைகளும் நடைபெறுகிறது. இம்மருத்துவமனையில் ஆண்கள், பெண்கள், மகப்பேறு போன்ற பிரிவுகள், போதுமான குடிநீர் வசதி, குளிர்சாதன வசதியுடன்கூடிய 1 அறுவை அரங்கம், இரத்த செயல்பாட்டினைக் கருத்தில் கொண்டு போதிய அளவு மருத்துவம், மருத்துவம் சாரா மற்றும் இதரப் பணியாளர்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளனர். தமிழ்நாடு சுகாதார திட்டத்தின்கீழ் 164.15 இலட்சம் செலவில் வெளி நோயாளிகள் பிரிவு, இருசக்கர வாகனம் நிறுத்துமிடம் மற்றும் மருத்துவக் கழிவு சேமிப்பு அறை ஆகியவை கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. இம்மருத்துவமனையில் சிகிச்சைக்கு வரும் நோயாளிகளுக்கு தேவையான அனைத்து மருந்துகளும் போதிய அளவில் வழங்கப்பட்டு வருகிறது. இம்மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட படுக்கை எண்ணிக்கையைவிட குறைவான





எண்ணிக்கையிலே உள் நோயாளிகள் சிகிச்சைக்கு வருவதால், தற்போதுள்ள பணியாளர்களைக் கொண்டு இம்மருத்துவமனை சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

**30**—

## பிணவறை கட்டடத்திற்கு குளிர்சாதன வசதி ஏற்படுத்துதல்

**வினா எண் 3190—திரு. சிவ.வீ. மெய்யநாதன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, ஆலங்குடி அரசு மருத்துவமனையின் பிணவறைக் கட்டடத்திற்கு குளிர்சாதன வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

**விடை**—

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி அரசு மருத்துவமனை 56 படுக்கை வசதிகள் கொண்ட வட்ட அரசு மருத்துவமனையாகும். இங்கு நாளொன்றிற்கு சராசரியாக 28 உள் நோயாளிகளும், 550 வெளி நோயாளிகளும் சிகிச்சைப் பெற்று வருகின்றனர். மாதமொன்றுக்கு 5,048 ஆய்வகப் பரிசோதனை, 93 எக்ஸ்ரே, 83 இ.சி.ஜி. USG 14 எடுக்கப்படுகிறது. மாதமொன்றுக்கு சராசரியாக 3 பிரசவங்களும், 270 சிறிய அறுவை சிகிச்சைகளும் நடைபெறுகிறது. இம்மருத்துவமனையில் ஆண்கள், பெண்கள், மகப்பேறு போன்ற பிரிவுகள், போதுமான குடிநீர் வசதி, குளிர்சாதன வசதியுடன்கூடிய 1 அறுவை அரங்கம், இரத்த சேமிப்பு மையம், எக்ஸ்ரே, இசிஜி போன்ற வசதிகள் உள்ளன. தற்போது இம்மருத்துவமனையில் குளிர்சாதன வசதியுடன்கூடிய பிணவறை வசதி உள்ளது.

**31**—

## இரண்டு மருத்துவமனைகளை ஒரே இடத்தில் அமைத்தல்

**வினா எண் 3436—திரு. கே.வி. சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2018 ஜனவரி 11

போளூர் தொகுதி, போளூர் பேரூராட்சியிலுள்ள இரண்டு அரசு மருத்துவமனைகளையும் ஒரே இடத்தில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் அரசு மருத்துவமனை அத்திமூர் சாலையில் சுமார் 5 ஏக்கர் பரப்பளவுள்ள இடத்தில் ஆண்கள், பெண்கள், முன்னாள் இராணுவத்தினர் பிரிவு, தற்காலிக தொழுநோய் சிகிச்சைப் பிரிவு போன்ற பிரிவுகளுடன் 64 படுக்கை வசதிகளுடன்கூடிய வட்ட அரசு மருத்துவமனையாக செயல்படுகிறது. இப்பகுதி போளூர் பேருந்து நிலையத்திலிருந்து 5 கிலோ மீட்டரில் உள்ளதால், மகப்பேறு சிகிச்சைக்கு வரும் தாய்மார்களின் நலன் கருதி, மகப்பேறுப் பிரிவு 8 படுக்கை வசதிகளுடன் நகரத்திற்குள்ளேயே கட்டப்பட்டு செயல்பட்டு வந்தது. இங்கு IPP—V திட்டத்தின்கீழ் அறுவை அரங்கம் கட்டப்பட்டது. மேலும், சிகிச்சைக்கு வரும் ஏழை, எளிய பொதுமக்களின் நீண்டகால கோரிக்கையை கருத்தில் கொண்டு மகப்பேறுப் பிரிவு செயல்பட்டு வந்த இடத்திலேயே வெளி நோயாளிகள் பிரிவு செயல்படுத்தப்பட்டது. இந்நிலையில் நோயாளிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு சுகாதார திட்டத்தின்கீழ் ரூ.84.30 இலட்சம் செலவில் வெளி நோயாளிகள் பிரிவு, மகப்பேறுப் பிரிவு செயல்படும் இடத்திலேயே 6 படுக்கை வசதிகளுடன்கூடிய குடும்ப நல சிகிச்சைப் பிரிவு மற்றும் ஆழ்துளை கிணறுடன்கூடிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி போன்றவை கட்டப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. பொதுமக்களின் வசதியையும், நலனையும் கருத்தில் கொண்டு அவர்கள் விரைவாக மருத்துவமனைக்கு வருவதற்கு ஏதுவாக பேருந்து நிலையத்திற்கு அருகிலேயே இருக்கும் மருத்துவமனை கட்டடத்தில் மகப்பேறு, குடும்ப நலப் பிரிவு, பச்சிளங் குழந்தை பராமரிப்புப் பிரிவு, குடும்ப நலப் பிரிவு, வெளி நோயாளிகள் பிரிவு போன்றவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன. நகரத்திற்குள் இருக்கும் இம்மருத்துவமனை வளாகத்திற்குள் இதற்கு மேல் கூடுதல் கட்டடங்கள் கட்டுவதற்கு இடவசதி இல்லை. மருத்துவமனை விரிவுபடுத்துவதற்கு ஏதுவான இடவசதி அத்திமூர் சாலையில் அமைந்துள்ள மருத்துவமனை வளாகத்தினுள்



2018 ஜனவரி 11]

உள்ளது. எனவே, பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு இம்மருத்துவமனை இரு இடங்களில் செயல்பட்டு வருகிறது. மேலும், இம்மருத்துவமனையில் நாளொன்றுக்கு சராசரியாக 766 வெளி நோயாளிகளும், 36 உள் நோயாளிகளும் சிகிச்சைப் பெற்று வருகின்றனர். இம்மருத்துவமனையில் மாதமொன்றுக்கு சராசரியாக 13,308 ஆய்வகப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகிறது. மாதமொன்றுக்கு சராசரியாக 48 பிரசவங்களும், 2 அறுவை சிகிச்சை பிரசவங்களும், 18 பெரிய மற்றும் 920 சிறிய அறுவை சிகிச்சை நடைபெறுகிறது. 94 எக்ஸ்ரே, 104 யு.எஸ்.ஜி. மற்றும் 31 இசிஜியும் எடுக்கப்படுகிறது. தற்பொழுதுள்ள பணியாளர்களைக் கொண்டு அப்பகுதி மக்களுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

**32—**

## மருத்துவமனை அமைத்தல்

**வினா எண் 3868—திரு. எஸ். சுதர்சனம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாதவரம் தொகுதி, புழல் அண்ணா நினைவு நகரின் பிரதான சாலையிலுள்ள மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் மருத்துவமனை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் தொகுதி, மாதவரம் மருத்துவமனை 38 படுக்கை வசதிகளுடன்கூடிய வட்டம் சாரா அரசு மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 527 வெளி நோயாளிகளும், 35 உள் நோயாளிகளும் சிகிச்சை பெறுகிறார்கள். இம்மருத்துவமனையில் மாதமொன்றுக்கு சராசரியாக 5,990 ஆய்வகப் பரிசோதனை, 192 இசிஜி, 61 USG எடுக்கப்படுகிறது. மாதமொன்றுக்கு சராசரியாக 15 பிரசவங்களும், 10 அறுவை சிகிச்சை பிரசவங்களும், 14 பெரிய மற்றும் 27 சிறிய அறுவை சிகிச்சைகளும் நடைபெறுகின்றன.

[2018 ஜனவரி 11

மேலும், இம்மருத்துவமனையில் ஆண்கள், பெண்கள், மகப்பேறுப் பிரிவு, அவசர சிகிச்சைப் பிரிவு, சித்தா, அறுவை சிகிச்சைப் பிரிவு, குளிர்சாதன வசதியுடன்கூடிய அறுவை அரங்கம், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, மின்னாக்கி போன்ற வசதிகள் உள்ளன. மருத்துவமனையின் செயல்பாட்டிற்கேற்ப மருத்துவம், மருத்துவம் சாரா மற்றும் இதரப் பணியாளர்கள் போன்ற அனைத்து பணியிடங்களும் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. மாதவரம் தனி தாலுகாவாக வருவாய்த் துறையால் தரம் உயர்த்தப்பட்டதைத் தொடர்ந்து அரசாணை (நிலை) எண் 233, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எப்2) துறை, நாள் 23–9–2016–ன்படி மாதவரம் வட்டம் சாரா மருத்துவமனை 60 படுக்கைகளைக் கொண்ட வட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. மேற்படி அரசாணை வழி கூடுதல் பணியாளர்கள், மருத்துவ உபகரணங்கள், தளவாடங்கள், துணிவகைகள் மற்றும் கட்டட வசதிகளும் ஒப்பளிக்கப்பட்டு அவற்றை நிறுவுவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. எனவே, மாதவரம் தொகுதி, புழல் அண்ணா நினைவு நகரின் பிரதான சாலையிலுள்ள மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் அரசு மருத்துவமனை கட்ட அவசியம் எழவில்லை.

**33—**

## மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்

**வினா எண் 4300—திரு. செ. ராஜேஷ் குமார்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*கிள்ளியூர் தொகுதி, கருங்கல்லிலுள்ள மருத்துவமனையைத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் தொகுதி, கருங்கல் அரசு மருத்துவமனை 18 படுக்கை வசதிகளுடன்கூடிய வட்டம் சாரா மருத்துவமனையாக இயங்கி வருகிறது. இம்மருத்துவமனையில் ஆண்கள், பெண்கள், மகப்பேறு, சித்தா பிரிவு போன்ற பிரிவுகள் உள்ளன. மேலும், குளிர்சாதன வசதியுடன்கூடிய அறுவை அரங்கம், மின்னாக்கி வசதி, சமையலறை போன்றவை உள்ளன. மேலும், எக்ஸ்ரே, இசிஜி, ஸ்கேன் போன்ற உபகரணங்கள், குடிநீர் வசதி போன்றவை உள்ளன. மருத்துவர் மற்றும் பணியாளர் குடியிருப்பு வசதி உள்ளது. இங்கு நாளொன்றிற்கு 370 வெளி நோயாளிகள், 15 உள் நோயாளிகள் சிகிச்சைப் பெற்று வருகிறார்கள். மாதம் ஒன்றுக்கு சராசரியாக 4,138 ஆய்வகப் பரிசோதனை, 48 எக்ஸ்ரே, 30 இசிஜி எடுக்கப்படுகிறது. மேலும், மாதம் ஒன்றுக்கு 55 சிறிய வகை அறுவை சிகிச்சைகளும் நடைபெற்று வருகின்றன. கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதிமூலம் ரூ.1,00,000/–ல் உள் நோயாளிகள் பிரிவு கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மேலும், தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின்மூலம் ரூ.64.20 இலட்சத்தில் அறுவை அரங்கம், ஆய்வகம், அவசர ஊர்தி நிறுத்துமிடம், மருத்துவக் கழிவு சேகரிப்பு அறை, மின்னாக்கி அறை, சமையலறை போன்றவை கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. இம்மருத்துவமனையிலிருந்து 6 கிலோ மீட்டரில் குளச்சல் அரசு மருத்துவமனையும், 12 கிலோ மீட்டரில் அனைத்து சிறப்பு வசதிகளுடன்கூடிய பத்மநாபபுரம் மருத்துவமனையும் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. தேவைப்பட்டால், நோயாளிகள் இம்மருத்துவமனைகளுக்கு பரிந்துரைக்கப்படுகிறார்கள். இம்மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட படுக்கை எண்ணிக்கையை விட குறைவான உள் நோயாளிகள் மற்றும் குறைந்த எண்ணிக்கையிலேயே வெளி நோயாளிகள் சிகிச்சைக்கு வருவதால் இம்மருத்துவமனையை மேலும் தரம் உயர்த்த தற்போது அவசியம் எழவில்லை. இம்மருத்துவமனை தற்போதுள்ள வசதிகளைக் கொண்டு இப்பகுதி மக்களுக்கு சிறப்பான மருத்துவச் சேவையினை வழங்கி வருகிறது.



2018 ஜனவரி 11]

**34—**

## சமையல் கூடம் அமைத்தல்

**வினா எண் 5117—திரு. வி. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) மயிலாடுதுறை அரசு பெரியார் மருத்துவமனையில் சமையல் கூடம் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2018 ஜனவரி 11

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை அரசு மருத்துவமனை 324 படுக்கை வசதிகள் கொண்ட வட்ட மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் சராசரியாக நாள் ஒன்றுக்கு 2,240 நபர்கள் வெளி நோயாளிகளாகவும், 292 நபர்கள் உள் நோயாளிகளாகவும் சிகிச்சை பெறுகின்றனர். இம்மருத்துவமனையில் மாதமொன்றுக்கு சராசரியாக 43,918 ஆய்வகப் பரிசோதனை, 859 இசிஜி, 721 எக்ஸ்ரே மற்றும் 913 ஸ்கேன் எடுக்கப்படுகிறது. மாதமொன்றுக்கு சராசரியாக 321 பிரசவங்களும், 204 பிரசவ அறுவை சிகிச்சைகளும், 494 பெரிய மற்றும் 676 சிறிய அறுவை சிகிச்சைகளும் நடைபெறுகிறது. மேலும், இங்கு ஆண்கள், பெண்கள், குழந்தைகள், மகப்பேறு, தீவிர இருதய சிகிச்சை, பேறுகாலபின் கவனிப்பு மையம், வெளி நோயாளிகள் பிரிவு, சித்தா, சீமாங் மற்றும் குளிரூட்டப்பட்ட அறுவை அரங்கம், NICU, SNCU உள்ளிட்ட சிறப்புப் பிரிவுகள் உள்ளன. இம்மருத்துவமனையில் இசிஜி, எக்ஸ்ரே, ஸ்கேன், இரத்த வங்கி, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி ஆகியவை உள்ளன. 108 அவசர சிகிச்சை ஊர்தி வசதி உள்ளது. மேலும், இம்மருத்துவமனையில் சமையல் எரிவாயு அடுப்புடன்கூடிய சமையலறை வசதி உள்ளது. நோயாளிகளின் விருப்ப அடிப்படையில் மாதமொன்றுக்கு சராசரியாக 65% நோயாளிகளுக்கு உணவு வழங்கப்படுகிறது.*

**35—**

## மருத்துவமனைக்கு மின்னாக்கி வசதி செய்தல்

**வினா எண் 5356—திரு. அ. பிரபு:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி அரசு தலைமை மருத்துவமனையில் மின்னாக்கி வசதி செய்ய அரசு முன்வருமா?*



2018 ஜனவரி 11]

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

*கள்ளக்குறிச்சி அரசு மருத்துவமனை 196 படுக்கை வசதிகளுடன் மாவட்ட தலைமை மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றிற்கு சராசரியாக 1,299 வெளி நோயாளிகளும், 195 உள் நோயாளிகளும் சிகிச்சைப் பெற்று வருகிறார்கள். மேலும், மாதமொன்றுக்கு சராசரியாக 27,296 ஆய்வகப் பரிசோதனைகள், 640 எக்ஸ்ரே, 720 USG, 326 இசிஜி, 366 சிடி ஸ்கேன் மேற்கொள்ளப்படுகிறது. மாதமொன்றுக்கு சராசரியாக 337 பிரசவங்களும், 85 அறுவை சிகிச்சை பிரசவங்களும், 176 பெரிய அறுவை சிகிச்சைகளும், 528 சிறிய அறுவை சிகிச்சைகளும் செய்யப்படுகின்றன. இம்மருத்துவமனையில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள், மகப்பேறு, விஷமுறிவு சிகிச்சை, விபத்து மற்றும் அவசர சிகிச்சை, தலைக்காய சிகிச்சை, கண், குடும்ப நல அறுவை சிகிச்சை, 24 மணி நேர சீமாங் பிரிவு, SNCU, NICU, தொற்றா நோய் பிரிவு போன்ற பிரிவுகள், குளிர்சாதன வசதியுடன்கூடிய 4 அறுவை அரங்கம், இரத்த வங்கி, நவீன சமையலறை, உள்ளிருப்பு சாலை வசதி போன்ற வசதிகள் உள்ளன. இங்கு 108 ஆம்புலன்ஸ் வசதியும் உள்ளன. இம்மருத்துவமனை 40 கே.வி. மின்னாக்கி–1, 1.5 கே.வி. மின்னாக்கி–5 என மொத்தம் 6 மின்னாக்கிகளுடன் செயல்பட்டு வருகிறது. தற்போது போதுமான வசதிகளுடன் இம்மருத்துவமனை செயல்பட்டு வருகிறது.*

**36—**

## மருத்துவமனைக்கு கூடுதல் வசதி

**வினா எண் 8077—திருமதி வி. கஸ்தூரி வாசு:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை அரசு மருத்துவமனையில் ஆய்வுக்கூடம், சிடி ஸ்கேன், நடமாடும் நுண்கதிர் கருவி, இரத்தப் பரிசோதனை, அறுவை சிகிச்சை மையம், இரத்த சேமிப்பு வங்கி மற்றும் இசிஜி போன்ற மருத்துவ வசதிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2018 ஜனவரி 11

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை குறைந்த மக்கள்தொகை கொண்ட இடமாக உள்ளது. வால்பாறை அரசு மருத்துவமனை 38 படுக்கை வசதிகள் கொண்ட வட்ட மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றிற்கு சராசரியாக 21 உள் நோயாளிகளும், 447 வெளி நோயாளிகளும் சிகிச்சைப் பெற்று வருகிறார்கள். இம்மருத்துவமனையில் ஆய்வுக்கூடம் உள்ளது. மாதமொன்றுக்கு சராசரியாக 5,763 ஆய்வகப் பரிசோதனையும், 36 எக்ஸ்ரே (நுண்கதிர் கருவி), 43 இசிஜி எடுக்கப்படுகிறது. மாதமொன்றுக்கு சராசரியாக 2 பிரசவங்களும், 3 பெரிய மற்றும் 30 சிறிய அறுவை சிகிச்சைகளும் நடைபெறுகின்றன. இங்கு USG ஸ்கேன் வசதி உள்ளது. மாதமொன்றுக்கு சராசரியாக USG ஸ்கேன் 10 எடுக்கப்படுகிறது. சிடி ஸ்கேன் தற்போது மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளுக்கும், தேவையின் அடிப்படையில் சில பெரிய வட்ட மருத்துவமனைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. சிடி ஸ்கேன் தேவைப்படும் நோயாளிகள் மிக மிகக் குறைவாகவே உள்ளனர். சிடி ஸ்கேன் தேவைப்படும் நோயாளிகள் அருகிலுள்ள பொள்ளாச்சி அரசு தலைமை மருத்துவமனைக்கு பரிந்துரைக்கப்படுகிறார்கள். அறுவை சிகிச்சையின்போது இரத்தம் தேவையான நோயாளிகளுக்கு அருகிலுள்ள பொள்ளாச்சி அரசு தலைமை மருத்துவமனையிலிருந்து இரத்தம் பெறப்பட்டு, பல்வேறு அவசர சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சைகளின்பொழுது இரத்தம் கொடுக்கப்பட்டு நோயாளிகளின் உயிர் காக்கப்படுகிறது. ஏற்கெனவே, நுண்கதிர் கருவி வசதி உள்ளதாலும், குறைந்த எண்ணிக்கையிலேயே அறுவை சிகிச்சை நடைபெறுவதாலும் நடமாடும் நுண்கதிர் கருவி மற்றும் இரத்த சேமிப்பு மையம் ஆகியவை அமைப்பதற்கு தற்போது அவசியம் எழவில்லை. மேலும், இம்மருத்துவமனையில் ஆண்கள், பெண்கள், வெளி நோயாளிகள், மகப்பேறு, ஆய்வகம், சித்தா, அறுவை அரங்கம், ஸ்கேன் வசதி, நுண்கதிர் கருவி, இசிஜி, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, 2 மின்னாக்கி, பிணவறை போன்ற வசதிகள் உள்ளன. இம்மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்டுள்ள



2018 ஜனவரி 11]

படுக்கை எண்ணிக்கையைவிட குறைவான எண்ணிக்கையிலேயே உள் நோயாளிகளும், குறைந்த எண்ணிக்கையிலேயே வெளி நோயாளிகளும் சிகிச்சைக்கு வருகிறார்கள். தற்போதுள்ள மருத்துவ வசதிகள், மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவம் சாரா மற்றும் இதர பணியாளர்களைக் கொண்டு இப்பகுதி மக்களுக்கு சிறப்பான சேவை வழங்கப்பட்டு வருகிறது.

**37—**

## மருத்துவமனையை மேம்படுத்துதல்

**வினா எண் 8224—திரு. சே. கருணாஸ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு வட்டம், பொதட்டூர்பேட்டை அரசு மருத்துவமனையை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், பொதட்டூர்பேட்டை அரசு மருத்துவமனை 36 படுக்கை வசதிகள் கொண்ட வட்டம் சாரா அரசு மருத்துவமனையாகும். இங்கு நாளொன்றிற்கு சராசரியாக 30 உள் நோயாளிகளும், 419 வெளி நோயாளிகளும் சிகிச்சைப் பெற்று வருகின்றனர். மேலும், மாதமொன்றுக்கு சராசரியாக 20 பெரிய மற்றும் 250 சிறிய அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டு வருகிறது. இங்கு மாதமொன்றுக்கு சராசரியாக 2 பிரசவங்கள் நடைபெறுகிறது. மேலும், மாதமொன்றுக்கு சராசரியாக 8,442 ஆய்வகப் பரிசோதனைகள், 55 யுஎஸ்ஜி, 238 இசிஜி எடுக்கப்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் ஆண்கள், பெண்கள், மகப்பேறு போன்ற பிரிவுகள், 40 கே.வி. மின்னாக்கி, சுற்றுச்சுவர் வசதி, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் (RO Plant) போன்ற வசதிகள் உள்ளன. மேலும், இம்மருத்துவமனையில் USG, ECG, Semi Auto Analyser போன்ற கருவிகள் உள்ளன. இங்கு 108 ஆம்புலன்ஸ் வசதியும்

[2018 ஜனவரி 11

உள்ளது. தற்போது தமிழ்நாடு சுகாதார அமைப்புத் திட்டத்தின்கீழ் ரூ.125.01 இலட்சம் செலவில் 30 படுக்கை வசதிகளுடன்கூடிய General பிரிவு கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மேலும், இம்மருத்துவமனையில் போதுமான மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் இதரப் பணியாளர்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. பொதட்டூர்பேட்டை அரசு மருத்துவமனை தற்போதுள்ள வசதிகளைக் கொண்டு இங்குள்ள மக்களுக்கு சிறப்பாக சேவையை வழங்கி வருகிறது. இம்மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்டுள்ள படுக்கை எண்ணிக்கையைவிட குறைவான எண்ணிக்கையிலேயே உள் நோயாளிகள் சிகிச்சைக்கு வருவதால், பொதட்டூர்பேட்டை அரசு மருத்துவமனையை மேம்படுத்த தற்போது அவசியம் எழவில்லை.

**38—**

## கூடுதல் கட்டடம் கட்டுதல்

**வினா எண் 9239—திருமதி மு. பரமேஸ்வரி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மண்ணச்சநல்லூர் தொகுதி, ஓமந்தூர் அரசு மருத்துவமனையில் என்.சி.டி. மற்றும் சித்த மருத்துவப் பிரிவிற்குக் கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

திருச்சி மாவட்டம், ஓமந்தூர் அரசு மருத்துவமனை 54 படுக்கை வசதிகளுடன் சிறப்பாக செயல்பட்டு வரும் வட்டம் சாரா அரசு மருத்துவமனையாகும். இங்கு நாளொன்றிற்கு சராசரியாக 231 வெளி நோயாளிகளும், 26 உள் நோயாளிகளும் சிகிச்சைப் பெற்று வருகிறார்கள். மேலும், மாதமொன்றுக்கு சராசரியாக 6,865 ஆய்வகப் பரிசோதனைகள், 69 எக்ஸ்ரே, 60 இசிஜி, 8 ஸ்கேன் எடுக்கப்பட்டு வருகிறது. இங்கு மாதமொன்றுக்கு சராசரியாக 2 பிரசவங்களும், 102 அறுவைச் சிகிச்சைகளும் நடைபெறுகின்றன. இம்மருத்துவமனையில் ஆண்கள், பெண்கள், மகப்பேறு, குழந்தைகள் நலம், NBSU ஆகிய பிரிவுகள் உள்ளன.



2018 ஜனவரி 11]

குளிரூட்டப்பட்ட அறுவை அரங்கம், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, மின்னாக்கி வசதி ஆகியவை உள்ளன. சித்தா, தொற்றா நோய் சிகிச்சைப் பிரிவும் போதிய வசதிகளுடன் சிறப்பாகச் செயல்படுகிறது. இம்மருத்துவமனையில் ஒப்பளிக்கப்பட்ட படுக்கை எண்ணிக்கையைவிட குறைவான உள் நோயாளிகள் மற்றும் குறைந்த எண்ணிக்கையிலே வெளி நோயாளிகள் சிகிச்சைக்கு வருகின்றனர். ஓமந்தூர் அரசு மருத்துவமனையில் அனைத்துப் பிரிவுகளும் போதிய அளவு கட்டட வசதிகளுடன் செயல்படுவதால் என்.சி.டி. மற்றும் சித்த மருத்துவப் பிரிவுக்குக் கூடுதலாக கட்டடம் கட்ட அவசியம் எழவில்லை.

**39—**

## மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள் நியமனம்

**வினா எண் 9411—திரு. ப. பலராமன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொன்னேரியிலுள்ள மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் மருத்துவர்கள் மற்றும் பணியாளர்களை நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி அரசு மருத்துவமனை 88 படுக்கை வசதிகளுடன் வட்ட மருத்துவமனையாக சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. நாளொன்றுக்கு சராசரியாக 1,037 வெளி நோயாளிகளும், 71 உள் நோயாளிகளும் சிகிச்சைப் பெறுகிறார்கள். இங்கு மாதமொன்றுக்கு சராசரியாக 18,073 ஆய்வகப் பரிசோதனை, எக்ஸ்ரே, 411 ஸ்கேன், 513 இசிஜி எடுக்கப்படுகிறது. இங்கு மாதமொன்றுக்கு சராசரியாக 71 பிரசவங்கள், 34 அறுவை சிகிச்சை பிரசவங்கள் நடைபெறுகின்றன. இம்மருத்துவமனையில் சித்தா பிரிவு, குடும்ப நலப் பிரிவு, மகப்பேறு பிரிவு, கண் அறுவை சிகிச்சைப் பிரிவு, விஷமுறிவு சிகிச்சைப் பிரிவு, குழந்தைகள் நலப் பிரிவு, காசநோய்ப் பிரிவு, எய்ட்ஸ் மற்றும் பால்வினை நோய் பிரிவு, சீமாங், NBSU, இரத்த சேமிப்பு நிலையம், அறுவை சிகிச்சைப் பிரிவு

[2018 ஜனவரி 11

மற்றும் நோயாளிகளுடன் வரும் உதவியாளர்கள் தங்க இடவசதி ஆகிய வசதிகள் உள்ளன. மேலும், இம்மருத்துவமனையில் இரண்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய குடிநீர் வசதி மற்றும் 5 மின்னாக்கிகள் ஆகியவை உள்ளன. இம்மருத்துவமனையின் செயல்பாட்டினைக் கருத்தில் கொண்டு 19 மருத்துவர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. இதில், சிறப்பு மருத்துவர்கள் உட்பட 17 மருத்துவர்கள் பணியில் உள்ளனர். அவ்வப்போது பதவி உயர்வு மற்றும் பணி ஓய்வினால் ஏற்படும் காலிப் பணியிடங்கள், எதிர்வரும் பணி நியமனம் மற்றும் பதவி உயர்வு கலந்தாய்வுகளின்மூலம் பணி நிரப்பப்பட்டு வருகிறது. மேலும், போதிய அளவு மருத்துவம் சாரா மற்றும் இதரப் பணியாளர்கள் பணியிடங்களும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இம்மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட படுக்கை எண்ணிக்கையைவிட குறைவான எண்ணிக்கையிலேயே உள் நோயாளிகள் மற்றும் குறைந்த எண்ணிக்கையிலேயே வெளி நோயாளிகள் சிகிச்சைக்கு வருவதால் தற்போதுள்ள மருத்துவர்கள், மருத்துவம் சாரா மற்றும் இதரப் பணியாளர்களைக் கொண்டு இப்பகுதி மக்களுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

**40**—

## மருத்துவமனையாகத் தரம் உயர்த்துதல்

**வினா எண் 10297—திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, சுரண்டை பேரூராட்சியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு, மகப்பேறு பிரிவு அமைத்து மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை**—

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தென்காசி தொகுதி, சுரண்டை பேரூராட்சியிலிருந்து 9 கிலோ மீட்டரில், தென்காசி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை 256 படுக்கை வசதிகள், ஆண்கள் பிரிவு, பெண்கள் பிரிவு, மகப்பேறு பிரிவு, தலைக்காய சிகிச்சைப் பிரிவு, விபத்து சிகிச்சைப் பிரிவு, விஷமுறிவு சிகிச்சைப் பிரிவு, தீவிர சிகிச்சைப் பிரிவு, சீமாங் பிரிவு, NICU பிரிவு போன்ற பல்வேறு பிரிவுகளுடன் செயல்பட்டு வருகிறது. இங்கு இரத்த வங்கி வசதி உள்ளது. மேலும், இம்மருத்துவமனையில் சிடி ஸ்கேன், ECHO Cardiogram, Digital X–ray, USG, ECG, Semi Auto Analyser போன்ற கருவிகள் உள்ளன. இங்கு 108 ஆம்புலன்ஸ் வசதியும் உள்ளன. எனவே, சுரண்டை பேரூராட்சியில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த தற்போது அவசியம் எழவில்லை.



2018 ஜனவரி 11]

**41**—

## மருத்துவமனையில் கூட்ட அரங்கம் கட்டுதல்

**வினா எண் 10685—திருமதி பெ. சீத்தாபதி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் தொகுதி, திண்டிவனம் பொது சுகாதார மருத்துவமனையில் கூட்ட அரங்கம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை**—

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திண்டிவனம் தொகுதி, திண்டிவனம் அரசு மருத்துவமனை 177 படுக்கை வசதிகளுடன் சிறப்பாகச் செயல்பட்டுவரும் வட்ட அரசு மருத்துவமனையாகும். இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 1,406 வெளி நோயாளிகளும், 147 உள் நோயாளிகளும் சிகிச்சைப் பெற்று வருகிறார்கள். மேலும், மாதமொன்றுக்கு சராசரியாக 15,513 ஆய்வகப் பரிசோதனைகள், 364 எக்ஸ்ரே, 210 இசிஜி, 136 ஸ்கேன் எடுக்கப்பட்டு வருகிறது. இங்கு மாதமொன்றுக்கு சராசரியாக 138 பிரசவங்களும், 83 அறுவை சிகிச்சைப் பிரசவங்களும், 277 பெரிய மற்றும் 1,003 சிறிய அறுவை சிகிச்சைகளும் நடைபெறுகின்றன. இம்மருத்துவமனையில் உள் நோயாளிகள் பிரிவு, தலைக்காய சிகிச்சைப் பிரிவு, சீமாங்,

NBSU, விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு, இரத்த வங்கி, குளிர்சாதன வசதியுடன்கூடிய அறுவை அரங்கம் போன்ற வசதிகள் உள்ளன. நோயாளருடன் வருவோர் தங்கும் வசதி உள்ளது. குளிர்சாதன வசதியுடன்கூடிய பிணவறை வசதியுள்ளது. இம்மருத்துவமனையில் தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின்கீழ் ரூ.144.83 இலட்சம் செலவில் மகப்பேறு பிரிவு, வெளி நோயாளிகள் பிரிவு, நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய ஆழ்குழாய் கிணறு, 40 கே.வி.ஏ. மின்னாக்கி, மின்னாக்கி அறை ஆகியவை கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. இம்மருத்துவமனையில் போதுமான கட்டட வசதியுள்ளது. தேவையான நேரங்களில் மருத்துவமனையில் நிருவாக சம்பந்தமான கூட்டங்கள் நடத்தப்படுகிறது. எனவே, திண்டிவனம் தொகுதி, திண்டிவனம் பொது சுகாதார மருத்துவமனையில் தனியாகக் கூட்ட அரங்கம் கட்ட அவசியம் எழவில்லை. தற்போதுள்ள மருத்துவர்கள், மருத்துவம் சாரா மற்றும் இதரப் பணியாளர்களைக் கொண்டு இப்பகுதி மக்களுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

**42**—

## மருத்துவமனைக்கு புதிய கட்டடம்

**வினா எண் 11052—திரு. அ. நடராஜன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் வட்டம், அரசு மருத்துவமனைக்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், பல்லடம் தொகுதி, பல்லடம் அரசு மருத்துவமனை 91 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டுவரும் வட்ட மருத்துவமனையாகும். இம்மருத்துவமனையில் நாளொன்றுக்கு சராசரியாக 986 வெளி நோயாளிகள், 82 உள் நோயாளிகள் சிகிச்சைப் பெற்று வருகிறார்கள். மாதம் ஒன்றுக்கு சராசரியாக 10,162 ஆய்வகப் பரிசோதனைகள், 221 எக்ஸ்ரே, 149 USG, 369 இசிஜி எடுக்கப்படுகிறது. மேலும், மாதம் ஒன்றுக்கு சராசரியாக 80 பெரிய வகை மற்றும் 568 சிறிய வகை அறுவை சிகிச்சைகள் நடைபெறுகின்றன. இம்மருத்துவமனையில் வெளி நோயாளிகள் பிரிவு, ஆண்கள் பிரிவு, பெண்கள் பிரிவு, பேறுகால பின் கவனிப்பு பிரிவு, குழந்தைகள் நலப் பகுதி போன்ற உள் நோயாளிகள் பிரிவு, தொற்றா நோய் பிரிவு (NCD), குளிர்சாதன வசதியுடன்கூடிய அறுவை அரங்கம் போன்ற வசதிகள் உள்ளன. மின்னாக்கி, போதுமான சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, அவசர ஊர்தி 108 ஆம்புலன்ஸ், சமையலறை மற்றும் நோயாளிகளின் உடனாளர் தங்குமிடம் போன்ற வசதிகளுடன் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் பேபி இங்குபேட்டர், பல்ஸ் ஆக்சி மீட்டர், ரேடியன் வார்மர், ECG, எக்ஸ்ரே, USG ஸ்கேன் போன்ற தேவையான கருவிகள் உள்ளன. இங்கு குளிர்சாதன வசதிகளுடன்கூடிய பிணவறை வசதி உள்ளது. தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின்மூலம் ரூ.50 இலட்சத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கூடுதல் வெளி நோயாளிகள் பிரிவு கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. கட்டடப் பராமரிப்புப் பணிக்கு 2016–2017–ன்கீழ் கட்டடப் பணிகளுக்கு ரூ.3 இலட்சம், மின்சாரப் பணிகளுக்கு ரூ.2 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தேவையான கட்டடப் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இம்மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட படுக்கை எண்ணிக்கையைவிட குறைவான உள் நோயாளிகள் மற்றும் குறைந்த எண்ணிக்கையிலேயே வெளி நோயாளிகள் சிகிச்சைக்கு வருவதால் கூடுதல் கட்டடம் கட்டுவதற்கான அவசியம் எழவில்லை.*



**43**—

## பல் மருத்துவப் பிரிவு அமைத்தல்

**வினா எண் 11446—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் பல் மருத்துவர்களை நியமித்து, பல் மருத்துவப் பிரிவு அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் மாவட்ட தலைமை மருத்துவமனைகள், வட்டம் மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில், அனைத்து மாவட்ட தலைமை மருத்துவமனைகள், அனைத்து வட்ட மருத்துவமனைகள் மற்றும் சில வட்டம் சாரா மருத்துவமனைகள் சேர்ந்து மொத்தம் 195 மருத்துவமனைகளில் பல் சிகிச்சைப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு பொதுமக்களுக்கு பல் சிகிச்சை சேவை வழங்கப்பட்டு வருகிறது. தேவையினைக் கருத்தில் கொண்டு தேசிய சுகாதாரத் திட்டத்தின்மூலம் பல் சிகிச்சைப் பிரிவு மேலும் சில மருத்துவமனைகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டு, தற்போது 225 அரசு மருத்துவமனைகளில் பல் சிகிச்சைப் பிரிவு போதிய வசதிகளுடன் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. தேவை ஏற்படின் பல் சிகிச்சைப் பிரிவு பிற வட்டம் சாரா அரசு மருத்துவமனைகளிலும் ஏற்படுத்தப்படும். தற்போது, அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகள், வட்டம் மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகளில் மாதமொன்றுக்கு சராசரியாக 1,22,187 நோயாளிகள் பல் சிகிச்சைப் பெறுகிறார்கள். மாதமொன்றுக்கு சராசரியாக 105 பெரிய அறுவை சிகிச்சைகளும், 32,855 சிறிய அறுவை சிகிச்சைகளும் நடைபெறுகின்றன.*

**44—**

## இரத்த வங்கிக்கு உபகரணங்கள் வழங்குதல்

**வினா எண் 13905—திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனையின் இரத்த வங்கிக்கு தேவைப்படும் உபகரணங்களை வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*





**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனை 116 படுக்கை வசதிகள் கொண்ட வட்ட அரசு மருத்துவமனையாகும். இங்கு நாளொன்றிற்கு சராசரியாக 102 உள் நோயாளிகளும், 1,250 வெளி நோயாளிகளும் சிகிச்சைப் பெற்று வருகின்றனர். இம்மருத்துவமனையில் எக்ஸ்ரே மற்றும் USG வசதி செய்யப்பட்டுள்ளது. மாதமொன்றுக்கு 18,746 ஆய்வகப் பரிசோதனை, 249 இசிஜி, 232 எக்ஸ்ரே, 78 USG மேற்கொள்ளப்படுகிறது. மாதமொன்றுக்கு சராசரியாக 89 பிரசவங்களும், 66 அறுவை சிகிச்சை பிரசவங்களும், 136 பெரிய மற்றும் 440 சிறிய அறுவை சிகிச்சைகளும் நடைபெறுகின்றன. இம்மருத்துவமனையில் ஆண்கள், பெண்கள், மகப்பேறு, முதலமைச்சரின் காப்பீட்டுத் திட்டம், விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு, குடும்ப நல அறுவை சிகிச்சைப் பிரிவு, சீமாங், தொற்று நோய் பிரிவு போன்ற பிரிவுகள் உள்ளன. இங்கு போதுமான குடிநீர் வசதி, குளிர்சாதன வசதியுடன்கூடிய 2 அறுவை அரங்கம், இரத்த வங்கி போன்ற வசதிகள் உள்ளன. மேலும், இம்மருத்துவமனையில் எக்ஸ்ரே, ஸ்கேன், Ventilator, Elisa Reader போன்ற கருவிகள் உள்ளன. மேலும், 12 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் நலப் பிரிவும், 6 படுக்கைகள் கொண்ட பச்சிளங் குழந்தைகள் பராமரிப்புப் பிரிவும் உள்ளன. Baby Incubator, Warmer, Photo Therapy Unit போன்ற குழந்தை நல சிகிச்சைப் பிரிவுக்குத் தேவையான கருவிகள் போதிய அளவில் உள்ளன. இம்மருத்துவமனையில் குழந்தைகள் நலப் பிரிவு போதுமான படுக்கை வசதிகளுடன் உள்ளதால், கூடுதல் படுக்கை வசதிகள் ஏற்படுத்த தற்போது அவசியம் எழவில்லை.*

**45—**

## மருத்துவர் மற்றும் MRI ஸ்கேன் தொழில்நுட்புநர் நியமனம்

**வினா எண் 13985—திரு. ஆர். கணேஷ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) உதகமண்டலம் அரசு பொது மருத்துவமனைக்கு இணை இயக்குநர், நிலைய மருத்துவ அலுவலர், முதுகலைப் பட்டம்*

[2018 ஜனவரி 11

(M.S., M.D.,) பெற்ற மருத்துவர்கள் மற்றும் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் இயந்திர தொழில்நுட்புநர் ஆகியோரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர். சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) உதகமண்டலம் அரசு பொது மருத்துவமனைக்கென தனியாக இணை இயக்குநர் பதவி ஒப்பளிக்கப்படவில்லை. இருப்பினும், உதகமண்டலம் மாவட்டத்திற்கென இணை இயக்குநர் பதவியில் தற்பொழுதுள்ள மருத்துவர் 25–11–2016 முதல் பணிபுரிந்து வருகின்றார். உதகமண்டலம் அரசு பொது மருத்துவமனை 421 படுக்கை வசதிகளுடன் மாவட்ட தலைமை மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றிற்கு சராசரியாக 579 வெளி நோயாளிகளும், 170 உள் நோயாளிகளும் சிகிச்சைப் பெற்று வருகிறார்கள். மேலும், மாதமொன்றுக்கு சராசரியாக 158 பிரசவங்களும், 92 அறுவை சிகிச்சை பிரசவங்களும், 128 பெரிய அறுவை சிகிச்சைகளும், 380 சிறிய அறுவை சிகிச்சைகளும் செய்யப்படுகின்றன.*

*அப்பகுதி மக்களின் நலன் கருதி மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பின்படி மேற்படி மருத்துவமனை, அரசாணை எண் 127/மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 19–5–2014–ன்படி ரூ.2.51 கோடி செலவில் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு இணையாகத் தரம் உயர்த்தப்பட்டு கூடுதல் கட்டடம், உபகரணங்கள் மற்றும் கூடுதல் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.*

*அரசாணை எண் 32, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 4–2–2014–ன்படி, 21 சிறப்பு மருத்துவர்கள், மயக்கவியல் மருத்துவர், குழந்தைகள் நல மருத்துவர், நுண்கதிர் இயக்க மருத்துவர் மற்றும் சிறுநீரகவியல் மருத்துவர், சிறுநீரகப் பாதை அறுவை சிகிச்சை மருத்துவர், நரம்பியல் மருத்துவர், இதய மருத்துவர், முகமாற்று அறுவை சிகிச்சை மருத்துவர், நரம்பு அறுவை சிகிச்சை மருத்துவர் உட்பட 7 உயர் சிறப்பு மருத்துவர்* (Super Specialist) *பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. மேலும்,*



2018 ஜனவரி 11]

*மேற்படி மருத்துவமனைக்கு நிலைய மருத்துவ அலுவலர் உட்பட மொத்தம் 61 மருத்துவர் பணியிடங்கள், தொழில்நுட்ப பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டு பணியாளர்கள் பணியில் உள்ளனர். இம்மருத்துவமனையில் மாதமொன்றுக்கு சராசரியாக 15 எம்.ஆர்.ஐ. ஸ்கேன் எடுக்கப்படுகிறது. அவ்வப்போது பதவி உயர்வு மற்றும் பணி ஓய்வினால் ஏற்படும் காலிப் பணியிடங்கள், எதிர்வரும் பணி நியமனம் மற்றும் பதவி உயர்வு கலந்தாய்வுகளின்மூலம் நிரப்பப்பட்டு வருகின்றன.*

**46—**

## ஊடுகதிர் இயந்திரம் அமைத்தல்

**வினா எண் 13996—திரு. ஆர். கணேஷ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) உதகமண்டலம் தொகுதி, கீழ்குந்தா பேரூராட்சி, மஞ்சூரில் உள்ள அரசு மருத்துவமனையில் ஊடுகதிர் இயந்திரம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர். சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மஞ்சூர் அரசு மருத்துவமனை 30 படுக்கை வசதிகளுடன்கூடிய வட்ட அரசு மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றிற்கு சராசரியாக 197 வெளி நோயாளிகளும், 20 உள் நோயாளிகளும் சிகிச்சைப் பெற்று வருகிறார்கள். மாதம் ஒன்றுக்கு சராசரியாக 5,433 ஆய்வகப் பரிசோதனைகள், 26 இசிஜி எடுக்கப்படுகிறது. மாதம் ஒன்றுக்கு சராசரியாக 1 பிரசவமும், 182 சிறிய அறுவை சிகிச்சைகளும் நடைபெறுகின்றன. இம்மருத்துவமனையில் தேசிய ஊரக நலத் திட்டத்தின்கீழ் ரூ.83.00 இலட்சம் செலவில் மகப்பேறுப் பிரிவு மற்றும் அவசர ஊர்தி நிறுத்துமிடம் ஆகியவை கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. இம்மருத்துவமனையில் ஒப்பளிக்கப்பட்ட படுக்கை எண்ணிக்கையைவிட குறைவாக உள் நோயாளிகள் மற்றும் குறைந்த எண்ணிக்கையிலேயே வெளி நோயாளிகள்*

சிகிச்சைக்கு வருகின்றனர். மஞ்சூரில் ஆய்வக வசதி, ஸ்கேன் வசதி போன்றவை உள்ளன. அனைத்து நோயாளிகளுக்கும் எக்ஸ்ரே (ஊடுகதிர்) வசதி தேவையில்லை. 108 அவசர கால ஊர்தி வசதி உள்ளது. எக்ஸ்ரே (ஊடுகதிர்) தேவைப்படும் நோயாளிகள் அருகில் உள்ள உதகமண்டலம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு பரிந்துரைக்கப்படுகிறார்கள். மேலும், இம்மருத்துவமனையில் தற்போதுள்ள வசதிகளைக் கொண்டு இப்பகுதி மக்களுக்கு சிறப்பான சேவை வழங்கப்பட்டு வருகிறது.

**47**—

## இணை இயக்குநர் அலுவலகக் கட்டடம்

**வினா எண் 14257—திரு. பா. நீதிபதி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி, மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் இணை இயக்குநர் அலுவலகத்திற்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை**—

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி அரசு மருத்துவமனை 135 படுக்கை வசதிகள் கொண்ட மாவட்ட அரசு மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றிற்கு சராசரியாக 135 உள் நோயாளிகளும், 1,086 வெளி நோயாளிகளும் சிகிச்சைப் பெற்று வருகின்றனர். மாதமொன்றுக்கு சராசரியாக 33,491 ஆய்வகப் பரிசோதனை, 233 இசிஜி, 753 எக்ஸ்ரே, 1,267 USG, 112 CT-Scan மேற்கொள்ளப்படுகிறது. மாதமொன்றுக்கு சராசரியாக 254 பிரசவங்களும், 138 அறுவை சிகிச்சைப் பிரசவங்களும், 232 பெரிய மற்றும் 648 சிறிய அறுவை சிகிச்சைகளும் நடைபெறுகின்றன. இம்மருத்துவமனையில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள், மகப்பேறு, விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு, விஷமுறிவு சிகிச்சைப் பிரிவு, CEmONC, NICU, SNCU போன்ற பிரிவுகள், போதுமான குடிநீர் வசதி, குளிர்சாதன வசதியுடன்கூடிய அறுவை அரங்கம், இரத்த வங்கி போன்ற வசதிகள் உள்ளன. மேலும்,





இம்மருத்துவமனையில் எக்ஸ்ரே, ஸ்கேன், ECHO, Digital Radiography, Ventilator போன்ற கருவிகள் உள்ளன. இம்மருத்துவமனையில் தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின்கீழ் ரூ.264.00 இலட்சம் செலவில் 50 படுக்கை வசதிகள் கொண்ட மகப்பேறுப் பிரிவு ஆகியவை கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. உசிலம்பட்டி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் இணை இயக்குநர் அலுவலகம் தற்போது போதிய அளவு கட்டட வசதிகளுடன் செயல்படுகிறது. எனவே, புதியதாக கட்டடம் கட்ட தற்போது அவசியம் எழவில்லை.

**49**—

## மருத்துவமனைக்கு கட்டட வசதி

**வினா எண் 16847—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் அரசு மருத்துவமனையில் அலுவலகம், தலைமை மருத்துவக் கிடங்கு மற்றும் சமையலறைக் கூடம் ஆகியவற்றுக்கு கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை**—

**மாண்புமிகு டாக்டர். சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், பல்லடம் அரசு மருத்துவமனை 91 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டுவரும் வட்ட மருத்துவமனையாகும். இம்மருத்துவமனையில் நாளொன்றுக்கு சராசரியாக 986 வெளி நோயாளிகள், 82 உள் நோயாளிகள் சிகிச்சைப் பெற்று வருகிறார்கள். மாதம் ஒன்றுக்கு சராசரியாக 10,162 ஆய்வகப் பரிசோதனைகள், 221 எக்ஸ்ரே, 149 USG, 369 இசிஜி எடுக்கப்படுகிறது. மேலும், மாதம் ஒன்றுக்கு சராசரியாக 80 பெரிய வகை மற்றும் 565 சிறிய வகை அறுவை சிகிச்சைகள் நடைபெறுகின்றன. இம்மருத்துவமனையில் வெளி நோயாளிகள் பிரிவு, ஆண்கள் பிரிவு, பெண்கள் பிரிவு, பேறுகால பின் கவனிப்பு பிரிவு, குழந்தைகள் நலப் பகுதி போன்ற உள் நோயாளிகள் பிரிவு, தொற்றா நோய் பிரிவு (NCD), குளிர்சாதன வசதியுடன்கூடிய

அறுவை அரங்கம் போன்ற வசதிகள் உள்ளன. மின்னாக்கி, போதுமான சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி, அவசர ஊர்தி 108 ஆம்புலன்ஸ், சமையலறை மற்றும் நோயாளர்களின் உடனாளர் தங்குமிடம் போன்ற வசதிகளுடன் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் பேபி இங்குபேட்டர், பல்ஸ் ஆக்சி மீட்டர், ரேடியன் வார்மர், ECG, எக்ஸ்ரே, USG ஸ்கேன் போன்ற தேவையான கருவிகள் உள்ளன. இங்கு குளிர்சாதன வசதிகளுடன்கூடிய பிணவறை வசதி உள்ளது. தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின்மூலம் ரூ.50 இலட்சத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கூடுதல் வெளி நோயாளிகள் பிரிவு கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. கட்டடப் பராமரிப்பு பணிக்கு 2016–2017–ன்கீழ் கட்டடப் பணிகளுக்கு ரூ.3 இலட்சம், மின்சாரப் பணிகளுக்கு ரூ.2 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தேவையான கட்டட பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இம்மருத்துவமனை தற்போது போதுமான கட்டட வசதிகளுடன் செயல்பட்டு வருவதால், சமையற்கூடம் மற்றும் மருத்துவக் கிடங்கு ஆகியவற்றிற்கு கட்டடம் கட்டுவதற்கான அவசியம் எழவில்லை.

**50—**

## மருத்துவமனையை மேம்படுத்துதல்

**வினா எண் 18201—திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி வட்ட தலைமை மருத்துவமனையை நவீன மருத்துவமனையாக மேம்படுத்தி பிரேத பரிசோதனைக் கூடத்தை செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி அரசு மருத்துவமனை 52 படுக்கை வசதிகள் கொண்ட வட்ட அரசு மருத்துவமனையாகும். இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 22 உள் நோயாளிகளும், 504 வெளி நோயாளிகளும் சிகிச்சைப் பெற்று





வருகின்றனர். மாதமொன்றுக்கு 7,077 ஆய்வகப் பரிசோதனைகள், 79 எக்ஸ்ரே, 140 ஸ்கேன், 120 இசிஜி மேற்கொள்ளப்படுகிறது. மாதமொன்றுக்கு சராசரியாக 23 பிரசவங்கள், 9 அறுவை சிகிச்சை பிரசவங்கள், 26 பெரிய அறுவை சிகிச்சைகள், 76 சிறிய அறுவை சிகிச்சைகள் நடைபெறுகின்றன. இம்மருத்துவமனையில் ஆண்கள், பெண்கள், மகப்பேறு, வெளி நோயாளிகள் பிரிவு, காசநோய், சீமாங், NCD பிரிவு உள்ளிட்ட சிறப்புப் பிரிவுகள் உள்ளன. அரசாணை எண் 219, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 31–7–2015–ன்படி 10 அரசு மருத்துவமனைகளுக்கு பிணவறை கட்டடம் அமைக்க ரூ.3.50 கோடி செலவில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி அரசு மருத்துவமனையில் ரூ.35.00 இலட்சத்தில் பிணவறை கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இம்மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட படுக்கை எண்ணிக்கையைவிட மிகக் குறைவான எண்ணிக்கையிலேயே உள் நோயாளிகள், குறைந்த எண்ணிக்கையிலேயே வெளி நோயாளிகள் சிகிச்சைக்கு வருகிறார்கள். தற்போது இம்மருத்துவமனையில் உள்ள வசதிகளைக் கொண்டு இப்பகுதி மக்களுக்கு சிறப்பான மருத்துவ சேவை வழங்கப்பட்டு வருகிறது. மேல் சிகிச்சை தேவைப்படும் நோயாளிகள் இங்கிருந்து 45 கிலோ மீட்டரில் உள்ள திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரைக்கப்படுகிறார்கள். எனவே, நாங்குநேரி அரசு மருத்துவமனையை நவீன மருத்துவமனையாகத் தரம் உயர்த்த தற்போது அவசியம் எழவில்லை.

**51—**

## மருத்துவமனைக்கு அடிப்படை வசதிகள் செய்தல்

**வினா எண் 18354—திரு. அ. பிரபு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், கள்ளக்குறிச்சி அரசு பொது மருத்துவமனையில் தேவையான அடிப்படை வசதிகள் செய்ய அரசு முன்வருமா?

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2018 ஜனவரி 11

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கள்ளக்குறிச்சி அரசு மருத்துவமனை 196 படுக்கை வசதிகளுடன் மாவட்ட தலைமை மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றிற்கு சராசரியாக 1,299 வெளி நோயாளிகளும், 195 உள் நோயாளிகளும் சிகிச்சைப் பெற்று வருகிறார்கள். மேலும், மாதமொன்றுக்கு சராசரியாக 27,296 ஆய்வகப் பரிசோதனை, 640 எக்ஸ்ரே, 720* USG, *326 இசிஜி, 366 சிடி ஸ்கேன் மேற்கொள்ளப்படுகிறது. மாதமொன்றுக்கு சராசரியாக 337 பிரசவங்களும், 85 அறுவை சிகிச்சை பிரசவங்களும், 176 பெரிய அறுவை சிகிச்சைகளும், 528 சிறிய அறுவை சிகிச்சைகளும் செய்யப்படுகின்றன. இம்மருத்துவமனையில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள், மகப்பேறு, விஷமுறிவு சிகிச்சை, விபத்து மற்றும் அவசர சிகிச்சை, கண், குடும்ப நல அறுவை சிகிச்சை, 24 மணி நேர சீமாங் பிரிவு,* SNCU, NICU, *தொற்றா நோய் பிரிவு போன்ற பிரிவுகள், குளிர்சாதன வசதியுடன்கூடிய 4 அறுவை அரங்கம், 40 கே.வி. மின்னாக்கி வசதி, இரத்த வங்கி, நவீன சமையலறை, உள்ளிருப்பு சாலை வசதி போன்ற வசதிகள் உள்ளன. மேலும், இம்மருத்துவமனையில் டிஜிட்டல் எக்ஸ்ரே, சிடி ஸ்கேன்,* Echo, Ultra sound scan, video Laparoscope *போன்ற கருவிகள் உள்ளன. இங்கு 108 ஆம்புலன்ஸ் வசதியும் உள்ளது. கள்ளக்குறிச்சி அரசு தலைமை மருத்துவமனையில் ஆழ்துளைக் குழாய் கிணறுடன்கூடிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, சவ்வூடு பரவல்மூலம் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்* (RO plant) *வசதி மற்றும் நகராட்சி மூலமும் குடிநீர் பெறப்படுகிறது. உள் நோயாளிகளுக்கு, உள் நோயாளிகள் பிரிவில் குளியலறை மற்றும் கழிவறை வசதியும், பொதுமக்களுக்கு தனியே கழிவறை வசதியும் செய்து தரப்பட்டுள்ளது. இதனை* Cristal *என்ற புற ஆதார அமைப்பினைக் கொண்டு பராமரிக்கப்படுகிறது. தற்போது, கள்ளக்குறிச்சி அரசு பொது மருத்துவமனையில் தேவையான அடிப்படை வசதிகளுடன் இங்குள்ள பொது மக்களுக்கு சிறப்பான சேவை வழங்கப்பட்டு வருகிறது.*



2018 ஜனவரி 11]

**52—**

## மருத்துவமனைக்கு உட்கட்டமைப்பைச் சீரமைத்தல்

**வினா எண் 19408—டாக்டர் ஆர்.டி. அரசு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) செய்யூர் தொகுதி, செய்யூர் அரசு மருத்துவமனை கட்டடத்தையும், உட்கட்டமைப்பையும் சீரமைத்து, பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் அரசு மருத்துவமனை 42 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டுவரும் வட்ட மருத்துவமனையாகும். இம்மருத்துவமனையில் நாள் ஒன்றுக்கு சராசரியாக 790 வெளி நோயாளிகள், 31 உள் நோயாளிகள் சிகிச்சைப் பெற்று வருகிறார்கள். மாதம் ஒன்றுக்கு சராசரியாக 9,070 ஆய்வகப் பரிசோதனைகள், 142 எக்ஸ்ரே, 17* USG, *342 இசிஜி எடுக்கப்படுகிறது. மேலும், மாதம் ஒன்றுக்கு சராசரியாக 673 சிறிய வகை அறுவை சிகிச்சைகள் நடைபெறுகின்றன. இம்மருத்துவமனையில் வெளி நோயாளிகள் பிரிவு, உள் நோயாளிகள் பிரிவு, நுண்கதிர் பிரிவு* ICTC *மையம், பிரசவ வார்டு, தொற்றா நோய் பிரிவு,* (NCD), *குளிர்சாதன வசதியுடன்கூடிய அறுவை அரங்கம் போன்ற வசதிகள் உள்ளன. மின்னாக்கி, போதுமான சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, 108 ஆம்புலன்ஸ் வசதி, சமையலறை மற்றும் நோயாளர்களின் உடனாளர் தங்குமிடம் போன்ற வசதிகளுடன் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் பேபி இங்குபேட்டர், போட்டோ தெரபி யூனிட், பல்ஸ் ஆக்சி மீட்டர்,* ECG, *எக்ஸ்ரே,* USG *ஸ்கேன், மல்டி பேரா மானிடர், டயா தெர்மி, நெபுலைசர், செமி ஆட்டோ அனலைசர் போன்ற தேவையான மருத்துவக் கருவிகள் உள்ளன. இங்கு பிணவறை வசதியும்*

உள்ளது. மாவட்ட ஆட்சியர் அவர்களின் நிதியின்கீழ் ரூ.10 இலட்சம் மதிப்புள்ள அவசர சிகிச்சை கட்டடம் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின்மூலம் வெள்ள பாதிப்பு ஏற்பட்ட கட்டடம் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பிற்காக ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கட்டடப் பராமரிப்பு பணிக்கு 2016–2017–ன்கீழ் ரூ.2 இலட்சம், மின்சார பணிகளுக்கு ரூ.1 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தேவையான கட்டடப் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்பொழுது செய்யூர் அரசு மருத்துவமனை போதுமான கட்டட மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளுடன் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

**53**—

## சூரிய ஒளி மின் திட்டத்தைச் செயல்படுத்துதல்

**வினா எண் 4623—திருமதி வி. கஸ்தூரி வாசு:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை பகுதியில் விவசாயத்திற்கு சூரிய ஒளி மின் திட்டம் வாயிலாக விவசாய பம்புசெட் இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவை விதி எண் 110–ன்கீழ், 31–8–2016 அன்று 10 குதிரை திறன் வரையிலான சூரிய சக்தியால் இயங்கும் நீர் இறைப்பான்கள் 80 சதவீத மானியத்தில், 500 விவசாயிகள் பயனடையும் வகையில் ரூ.21.90 கோடி செலவில் வழங்கப்படும் என சட்டமன்றத்தில் அறிவித்தார்கள்.*





*அதனடிப்படையில், இத்திட்டத்திற்கென ரூ.21.90 கோடி தொகை நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், இதுவரை 533 எண்களுக்கு பணியாணை வழங்கப்பட்டு, 488 சூரிய சக்தியால் இயங்கும் நீர் இறைப்பான்கள் நிறுவப்பட்டுள்ளன. கோயம்புத்தூர் மாவட்டத்தில் 36 சூரிய சக்தி மோட்டார்களுக்கு பணியாணை வழங்கப்பட்டு, இதுவரை 28 சூரிய சக்தி நீர் இறைப்பான்கள் நிறுவப்பட்டுள்ளன. ஆனைமலைப் பகுதியில் 9 எண்களுக்கு பணியாணை வழங்கப்பட்டு, இதுவரை 5 எண்கள் சூரிய சக்தி நீர் இறைப்பான்கள் நிறுவப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் ஜூன் 2017–க்குள் முடிக்கப்படும். மேலும், ஆனைமலைப் பகுதியில் விவசாயிகளின் தேவைக்கேற்ப சூரிய சக்தி பம்புசெட்டுகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்கும்.*

**54**—

## பயிர்க் காப்பீட்டு முறையைச் செயல்படுத்துதல்

**வினா எண் 17319—திரு. துரை. சந்திரசேகரன்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வாழை மற்றும் வெற்றிலைக் கொடிக்கால் பயிரிடும் விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டு முறையை செயல்படுத்த அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) 2016–2017 முதல் செயல்படுத்தப்படும் பிரதம மந்திரியின் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்மூலம் அனைத்து மாவட்டங்களிலும் ஏற்கெனவே வாழைப் பயிருக்கு காப்பீடு செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் சேர்ந்த அனைத்து விவசாயிகளுக்கும் காப்பீட்டிற்கான அரசு மானியத் தொகை வழங்கப்பட்டுள்ளது.*

[2018 ஜனவரி 11

சென்ற ஆண்டைப் போன்றே, நடப்பு 2017–2018 ஆம் ஆண்டிலும் பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் அறிவிப்பு செய்யப்பட்ட வருவாய் கிராமங்களில் வாழைப் பயிருக்கு பயிர்க் காப்பீடு செய்யப்பட்டு வருகிறது.

வெற்றிலைப் பயிர் அரியலூர், நாகப்பட்டினம், பெரம்பலூர், புதுக்கோட்டை, நீலகிரி மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் நீங்கலாக இதர மாவட்டங்களில் மொத்தம் 1,937 ஹெக்டேர் பரப்பளவில் மட்டுமே பரவலாக சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டுத் திட்ட வழிகாட்டுதலின்படி உணவு தானியங்கள் மற்றும் ஓராண்டு பணப் பயிர்கள்/தோட்டக்கலைப் பயிர்கள் மட்டுமே காப்பீடு செய்ய முடியும். எனவே, பல்லாண்டு பயிரான வெற்றிலையை காப்பீடு செய்வதற்கு வழிவகை இல்லை.

**55—**

## வட்டத்தை மாற்றி அமைத்தல்

**வினா எண் 701—திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அந்தியூர் தொகுதி, சந்திராபுரம் ஊராட்சியை பவானி வட்டத்திலிருந்து கோபிசெட்டிபாளையம் வட்டத்திற்கு மாற்ற அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:**

*அரசாணை (நிலை) எண் 103, வருவாய், நாள் 18–4–2017–ன்படி ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், சந்திராபுரம் கிராமம், கோபிசெட்டிபாளையம் வட்டத்துடன் இணைக்கப்பட்டது.*

**56—**

## புதிய வட்டம் உருவாக்குதல்

**வினா எண் 1397—திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2018 ஜனவரி 11]

(அ) திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் வட்டத்தை இரண்டாகப் பிரித்து சிங்கம்புணரியை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 168, வருவாய், நாள் 8–5–2017–ன்படி சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டத்தினைப் பிரித்து சீரமைத்து புதிய சிங்கம்புணரி வட்டம் உருவாக்கப்பட்டது.*

**57—**

## புதிய வட்டம் உருவாக்குதல்

**வினா எண் 5678—திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டத்திலிருந்து பிரித்து ஆண்டிமடம் அல்லது தா.பழூர் ஆகிய இடங்களை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் உருவாக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:**

*அரசாணை (நிலை) எண் 167, வருவாய், நாள் 8–5–2017–ன்படி அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டத்தைப் பிரித்து புதிய ஆண்டிமடம் வட்டம் உருவாக்கப்பட்டது.*

**58—**

## தனி வட்டம் உருவாக்குதல்

**வினா எண் 11255—திரு. மு.பெ. கிரி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2018 ஜனவரி 11

*(அ)* செங்கம் தொகுதி மற்றும் கலசப்பாக்கம் தொகுதிக்குட்பட்ட ஜவ்வாது மலையை தனி வட்டமாக உருவாக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலைப் பிரதேசத்தில் வசிக்கும் மலைக் கிராம மக்கள் அரசால் வழங்கப்படும் பல்வேறு நல உதவிகளைப் பெறுவதற்காக சுமார் 2 நாட்கள் பயணம் செய்து சம்பந்தப்பட்ட வட்ட தலைமையிடங்களுக்கு வர வேண்டிய நிலைமை உள்ளது. இம்மலை கிராம மக்களின் வசதிக்கேற்பவும், அனைத்து அரசு நலத் திட்ட உதவிகளும் அவர்களுக்கு உடனுக்குடனேயும், செவ்வனேயும் கிடைக்கச் செய்திட ஏதுவாகவும் அவர்களுக்கென பிரத்யேகமாக ஒரு தாலுகா உருவாக்கிட வேண்டும். எனவே, கலசப்பாக்கம் வட்டத்திலுள்ள ஜமுனாமரத்தூர் என்கிற கோவிலூர் என்கிற வருவாய் கிராமத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வட்டம் அமைத்திடலாம். எனினும், வட்டம் உருவாக்குவது என்பது அரசின் கொள்கை முடிவாகும்.

**59—**

## படகு குழாம் அமைத்தல்

**வினா எண் 1979—திரு. எம். இராமச்சந்திரன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் பெரிய கோயிலையொட்டியுள்ள அகழியில் படகு குழாம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் பெரியகோயிலை சுற்றியுள்ள பெரிய அகழியில் 15–10–2014 முதல் செக்கடி பகுதியில் படகு சவாரி துவக்கப்பட்டது. அகழிப் பகுதிகளில் கடந்த ஆண்டு மேம்பாலம் கட்டுமானப் பணிகள் துவங்கப்பட்டதால் படகு சவாரி நிறுத்தப்பட்டது. பாலம் கட்டும் பணி நிறைவு பெற்றவுடன் அகழியில் படகு சவாரி தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



2018 ஜனவரி 11]

**60—**

## படகு குழாம் அமைத்தல்

**வினா எண் 2779—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளச்சல் தொகுதி, மணவாளக்குறிச்சி பேரூராட்சி, பெரியகுளத்தில் படகு குழாம் அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

குளச்சல் தொகுதி, மணவாளக்குறிச்சி பேரூராட்சியில் உள்ள பெரியகுளத்தின்மூலம் மணவாளக்குறிச்சி கிராமத்தில் உள்ள விவசாய நிலங்கள் பாசன வசதி பெற்று வருகிறது. இக்குளத்தில் மழைக் காலத்தில் மட்டும் நீர்ப் பிடிப்பு இருக்கும். கோடைக் காலத்தில் குளம் முழுவதும் வறண்டு காணப்படும். எனவே, குளச்சல் தொகுதி, மணவாளக்குறிச்சி பேரூராட்சி, பெரியகுளத்தில் படகு குழாம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஏதும் தற்சமயம் இல்லை.

**61—**

## பூங்கா அமைத்தல்

**வினா எண் 2842—திரு. வி. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கலசப்பாக்கம் தொகுதிக்குட்பட்ட மிருகண்டா நதி அணையின் அருகில் சுற்றுலாத் துறை மூலமாக பூங்காக்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

[2018 ஜனவரி 11

**விடை—**

**மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலையிலிருந்து வேலூர் செல்லும் சாலையில் உள்ள கலசப்பாக்கத்திலிருந்து சுமார் 29 கி.மீ. தூரத்தில் மேல்சோழங்குப்பம் கிராமத்தில் மிருகண்டா நதி அணை அமைந்துள்ளது. போளூரிலிருந்து 23 கி.மீ. தொலைவில் இவ்வணை அமைந்துள்ளது.

இவ்வணை பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. பருவமழை காலங்களில் மட்டுமே இவ்வணையில் நீர் இருக்கும். கோடைக் காலங்களில் வறண்டும் காணப்படும். இவ்வணைக்கு வாரத்திற்கு 150 முதல் 300 உள்ளூர் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர்.

எனவே, மிருகண்டா நதி அணைக்கு வருகைத் தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்பட்சத்தில் அடிப்படை வசதிகள் தேவைப்படின் மாவட்ட ஆட்சியர்/சுற்றுலா ஆணையரின் கருத்துரு பெற்று சுற்றுலாத் துறையின் நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.

**62—**

## உணவு விடுதி அமைத்தல்

**வினா எண் 2917—திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியம், லீபுரம் ஊராட்சி, வட்டக்கோட்டை சுற்றுலாத் தலத்தில் உணவு விடுதி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**



2018 ஜனவரி 11]

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியம், லீபுரம் ஊராட்சி, வட்டக்கோட்டை சுற்றுலாத் தலத்தில் உள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு சொந்தமான வட்டக்கோட்டை ஓட்டலை தனியாருக்கு குத்தகைக்கு விட்டு, இயக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**63—**

## குடிநீர்த் தொட்டி அமைத்தல்

**வினா எண் 2919—திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கடற்கரை சாலையிலுள்ள காமராஜர் மணிமண்டபம் அருகே குடிநீர்த் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இந்தியத் திருநாட்டின் தெற்கு எல்லையில், வங்காள விரிகுடா, இந்திய பெருங்கடல், அரபிக்கடல் ஆகிய முக்கடலும் சங்கமிக்கும் இடத்தில் அமைந்துள்ள கன்னியாகுமரி ஒரு சர்வதேச சுற்றுலாத் தலமாக விளங்குகிறது. சூரியன் உதயம், மறையும் காட்சிகள், விவேகானந்தர் நினைவுப் பாறை, குமரி அம்மன் கோயில், காந்தி மற்றும் காமராஜர் நினைவு மண்டபங்கள் ஆகியன சுற்றுலாப் பயணிகளை கவர்ந்து ஈர்க்கின்றன.

காமராஜர் மணிமண்டபம் அருகே சுற்றுலாப் பயணிகளுக்கு தேவையான குடிநீர் வசதிகள் கன்னியாகுமரி பேரூராட்சிமூலம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், பருவ காலங்களில் தற்காலிக குடிநீர்த் தொட்டிகள் அமைக்கப்பட்டு, கடற்கரை சாலை மற்றும் முக்கிய இடங்களில் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

எனவே, தற்போது காமராஜர் மணிமண்டபம் அருகே குடிநீர்த் தொட்டி அமைக்க அவசியம் எழவில்லை.

[2018 ஜனவரி 11

**64—**

## மீன்காட்சி சாலை அமைத்தல்

**வினா எண் 2925—திருமதி எஸ். விஜயதரணி:** *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கன்னியாகுமரியில் மீன்காட்சி சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இந்தியத் திருநாட்டின் தெற்கு எல்லையில், வங்காள விரிகுடா, இந்திய பெருங்கடல், அரபிக்கடல் ஆகிய முக்கடலும் சங்கமிக்கும் இடத்தில் அமைந்துள்ள கன்னியாகுமரி ஒரு சர்வதேச சுற்றுலாத் தலமாக விளங்குகிறது. சூரியன் உதயம், மறையும் காட்சிகள், விவேகானந்தர் நினைவுப் பாறை, குமரி அம்மன் கோயில், காந்தி மற்றும் காமராஜர் நினைவு மண்டபங்கள் ஆகியன சுற்றுலாப் பயணிகளை கவர்ந்து ஈர்க்கின்றன.*

*கன்னியாகுமரி கடற்கரை சாலையில் தமிழ் அன்னை பூங்கா அருகில் தனியார் மீன்காட்சி சாலை நடத்துவதற்கு கன்னியாகுமரி பேரூராட்சிமூலம் அனுமதி வழங்கப்பட்டு சுற்றுலாப் பயணிகள் பயன்பாட்டில் உள்ளது.*

*எனவே, கன்னியாகுமரியில் மேலும் ஒரு மீன்காட்சி சாலை அமைக்க அவசியம் எழவில்லை.*

**65—**

## சுற்றுலாப் பேருந்து இயக்குதல்

**வினா எண் 2927—திருமதி எஸ். விஜயதரணி:** *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2018 ஜனவரி 11]

*(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் தொகுப்பு சுற்றுலாப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின்மூலம் 1999 ஆம் ஆண்டு கன்னியாகுமரியிலிருந்து அந்த மாவட்டத்தில் உள்ள முக்கிய சுற்றுலாத் தலங்களுக்கு தொகுப்பு சுற்றுலாக்கள் நடத்தப்பட்டன. ஆனால், சுற்றுலாப் பயணிகளிடமிருந்து போதிய வரவேற்பு இல்லாததால் அச்சுற்றுலாக்களை தொடர்ந்து நடத்த இயலவில்லை. எனவே, கன்னியாகுமரி மாவட்டத்தில் தொகுப்புச் சுற்றுலா பேருந்து இயக்க தற்போது சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.*

**66—**

## சுனாமி பூங்காவை அழகுபடுத்துதல்

**வினா எண் 2929—திருமதி எஸ். விஜயதரணி:** *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கன்னியாகுமரியில் சுனாமி பூங்காவை அழகுபடுத்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இந்தியத் திருநாட்டின் தெற்கு எல்லையில், வங்காள விரிகுடா, இந்திய பெருங்கடல், அரபிக்கடல் ஆகிய முக்கடலும் சங்கமிக்கும் இடத்தில் அமைந்துள்ள கன்னியாகுமரி ஒரு சர்வதேச சுற்றுலாத் தலமாக விளங்குகிறது. சூரியன் உதயம், மறையும் காட்சிகள், விவேகானந்தர் நினைவுப் பாறை, குமரி அம்மன் கோயில், காந்தி மற்றும் காமராஜர் நினைவு மண்டபங்கள் ஆகியன சுற்றுலாப் பயணிகளை கவர்ந்து ஈர்க்கின்றன.*

[2018 ஜனவரி 11

கன்னியாகுமரி திருவேணி சங்கமத்தில் அமைந்துள்ள சுனாமி பூங்காவினை புதுப்பிக்கவும், முறையாக பராமரிக்கவும் பேரூராட்சிமூலம் நடவடிக்கை எடுக்கக்கோரி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**67—**

## பூங்காவிற்கு அடிப்படை வசதி செய்தல்

**வினா எண் 2930—திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரியில் அன்னை தமிழ் பூங்காவினுள் வண்ணமலர் செடிகள் வளர்த்து, குடிநீர் மற்றும் கழிப்பிட வசதி ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இந்தியத் திருநாட்டின் தெற்கு எல்லையில், வங்காள விரிகுடா, இந்திய பெருங்கடல், அரபிக்கடல் ஆகிய முக்கடலும் சங்கமிக்கும் இடத்தில் அமைந்துள்ள கன்னியாகுமரி ஒரு சர்வதேச சுற்றுலாத் தலமாக விளங்குகிறது. சூரியன் உதயம், மறையும் காட்சிகள், விவேகானந்தர் நினைவுப் பாறை, குமரி அம்மன் கோயில், காந்தி மற்றும் காமராஜர் நினைவு மண்டபங்கள் ஆகியன சுற்றுலாப் பயணிகளை கவர்ந்து ஈர்க்கின்றன.

அன்னை தமிழ் பூங்கா, கன்னியாகுமரி பேரூராட்சிமூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.இங்கு சிறுவர்கள் பொழுதுபோக்கிற்காக விளையாட்டு உபகரணங்கள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. இப்பூங்கா அருகில் கழிப்பிட வசதி மற்றும் குளியலறை வசதிகள் ஏற்படுத்தப்பட்டு சுற்றுலாப் பயணிகளின் பயன்பாட்டில் உள்ளன. மேலும், பேரூராட்சிமூலம் குடிநீர் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

எனவே, கழிப்பிட வசதி மற்றும் குளியலறை வசதிகள் ஏற்படுத்த அவசியம் எழவில்லை.



2018 ஜனவரி 11]

**68—**

## பூங்காவில் இருக்கை வசதி செய்தல்

**வினா எண் 2932—திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரியில் திரிவேணி சங்கமம் பூங்காவில் இருக்கை வசதி செய்து, நடைபாதை வியாபாரிகளை அப்புறப்படுத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

இந்தியத் திருநாட்டின் தெற்கு எல்லையில், வங்காள விரிகுடா, இந்திய பெருங்கடல், அரபிக்கடல் ஆகிய முக்கடலும் சங்கமிக்கும் இடத்தில் அமைந்துள்ள கன்னியாகுமரி ஒரு சர்வதேச சுற்றுலாத் தலமாக விளங்குகிறது. இங்குள்ள விவேகானந்தர் நினைவுப் பாறை, குமரி அம்மன் கோயில், காந்தி, காமராஜர் நினைவு மண்டபங்கள் மற்றும் சூரியன் உதயம், மறையும் காட்சிகள் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கின்றன. திரிவேணி சங்கமம் பூங்கா சுற்றுலாப் பயணிகளின் பயன்பாட்டில் உள்ளது.

தற்போது, திரிவேணி சங்கமம் பூங்காவில் சுற்றுலாத் துறைமூலம் ஏற்படுத்தப்பட்ட இருக்கை வசதிகள் நடைபாதை வியாபாரிகளால் ஆக்கிரமிக்கப்பட்டு பழுதடைந்துவிட்டன.

எனவே, இருக்கை வசதிகளை சீர்செய்யவும், நடைபாதை வியாபாரிகளை அப்புறப்படுத்தவும் கன்னியாகுமரி பேரூராட்சி மற்றும் இந்து சமய அறநிலையத் துறை (சுசீந்திரம்) அலுவலர்களுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

**69—**

## சுற்றுலா பகுதியாக மேம்படுத்துதல்

**வினா எண் 3256—திரு. வி.ஜி. ராஜேந்திரன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பூண்டி மற்றும் பூண்டி அருகில் உள்ள தொல்லியல் வரலாறு கொண்ட கூடியம் பகுதிகளைச் சுற்றுலாப் பகுதிகளாக மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், பூண்டி ஒன்றியத்தில், பூண்டி நீர்த்தேக்கம் 1944 ஆம் ஆண்டு கொசஸ்தலை ஆறு என்னும் கொற்றலை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது. சென்னையிலிருந்து 60 கி.மீ. தொலைவிலும், திருவள்ளூரிலிருந்து 11 கி.மீ. தொலைவிலும் இந்த நீர்த்தேக்கம் அமைந்துள்ளது.*

*மாநில அரசு நிதியிலிருந்து ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் பூண்டி நீர்த்தேக்கத்தில் மேம்பாட்டு பணிகள் செய்யப்பட்டு சுற்றுலாப் பயணிகளின் பயன்பாட்டில் உள்ளன.*

*எனினும், இனிவரும் காலங்களில் பூண்டி நீர்த்தேக்கத்திற்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிக்கும்பட்சத்தில், கூடுதல் அடிப்படை வசதிகள் தேவைப்படின், மாவட்ட ஆட்சியரிடமிருந்து கருத்துரு மற்றும் சுற்றுலா ஆணையரின் பரிந்துரை பெறப்பட்டு, சுற்றுலாத் துறையின் நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.*

**கூடியம்**

*திருவள்ளூர் மாவட்டம், பூண்டி ஊராட்சி ஒன்றியம், திம்மபூபாலபுரம் ஊராட்சியில் கூடியம் குகைப் பகுதி அமைந்துள்ளது. கூடியம், பூண்டியிலிருந்து 11 கி.மீ. தொலைவிலும், திருவள்ளூரிலிருந்து 21 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது.*

*கூடியம் குகைப் பகுதி பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியாக பராமரிக்கப்பட்டு வருவதால், சுற்றுலாத் துறையின்மூலம் வளர்ச்சி பணிகள் செய்ய இயலாத நிலை உள்ளது. எனினும், சுற்றுலாப் பயணிகளின் வரலாற்று ஆர்வலர்களும், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவியர்களும் இங்கு சென்றுவர வசதிகள் செய்வதற்கும், இதர அடிப்படை வசதிகள் செய்வதற்கும் வனத் துறையின் அனுமதி பெறுவதற்கும் சாத்தியக்கூறுகள் கண்டறிந்து, உரிய துறைகளுடன் கலந்தாலோசித்து மேம்பாடு செய்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*





**70—**

## படகு குழாம் அமைத்தல்

**வினா எண் 3876—திரு. எஸ். சுதர்சனம்:** *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மாதவரம் தொகுதி, இரட்டை ஏரியில் படகு குழாம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மாதவரம் தொகுதிக்குட்பட்ட இரட்டை ஏரிப் பகுதியில் ஈரப்பத நிலையை பாதுகாத்தல் மற்றும் புனரமைத்தல், ஏரியின் உள்ளே படிந்து கிடக்கும் படிமங்கள் மற்றும் கழிவுகள் போன்றவற்றை அகற்றுதல், ஏரிக்கரையில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கான கிரானைட் கல் பதித்த நடைப்பாதை அமைத்தல், ஏரியின் நடுவே சிறு தீவு அமைத்தல் மற்றும் தேசிய நெடுஞ்சாலையின் இருபுறமும் கம்பிவேலிகள் அமைத்தல் போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன.*

*மேற்கூறப்பட்ட அனைத்து பணிகளும் முடிவடைந்தபின், இரட்டை ஏரியில் படகு குழாம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பின், அதற்கான கருத்துரு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரையுடன் பெற்று சுற்றுலாத் துறையின்மூலம் மாதவரம் தொகுதி இரட்டை ஏரியில் படகு குழாம் அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**71—**

## படகு இல்லம் அமைத்தல்

**வினா எண் 4612—திருமதி வி. கஸ்தூரி வாசு:** *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வால்பாறை தொகுதி, வால்பாறை பகுதியில் படகு இல்லம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2018 ஜனவரி 11

**விடை—**

**மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்ட நிருவாகம் மற்றும் தொடர்புடைய துறைகள் மூலமாக வால்பாறையில் படகு இல்லம் அமைக்க இடம் தெரிவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாவட்ட நிருவாகம் மற்றும் தொடர்புடைய துறைகள் மூலமாக தகுந்த இடம் தெரிவு செய்யும்பட்சத்தில், வால்பாறை தொகுதி, வால்பாறையில் படகு இல்லம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**72**—

## தோரணவாயில் அமைத்தல்

**வினா எண் 8080—திரு. கே.ஏ. பாண்டியன்:** *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சிதம்பரம் அருகே உள்ள பிச்சாவரம் சுற்றுலா மையத்திற்கு பிச்சாவரம் சுற்றுலா மையம் எனும் வாசகத்துடன் தோரணவாயில் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டை ஒன்றியம், கிள்ளை பேரூராட்சியில் பிச்சாவரம் அமைந்துள்ளது. 2004–2005 ஆம் ஆண்டு மத்திய அரசு நிதியுதவி திட்டத்தின்கீழ் ரூ.104.50 இலட்சம் மதிப்பீட்டில் பரங்கிப்பேட்டை மற்றும் பிச்சாவரத்தில் ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல் திட்டத்தின்கீழ் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. 2011–2012 ஆம் ஆண்டு மாநில அரசு நிதி திட்டத்தின்மூலம் ரூ.90.00 இலட்சம் மதிப்பீட்டில் கடலூர்–சிதம்பரம்–பிச்சாவரம் சுற்றுலா சுற்றுச் சாலை மேம்பாடு செய்து முடிக்கப்பட்டுள்ளது.*



2018 ஜனவரி 11]

*மேலும், சிதம்பரம் அருகே உள்ள பிச்சாவரம் சுற்றுலா மையத்திற்கு, பிச்சாவரம் சுற்றுலா மையம் எனும் வாசகத்துடன் தோரணவாயில் அமைக்க சுற்றுலா ஆணையரின் பரிந்துரையின் அடிப்படையில், சுற்றுலாத் துறையின்மூலம் நிதி ஒதுக்கீடு செய்வதற்கு பரிசீலிக்கப்படும்.*

**73**—

## வன விலங்குகளைத் தடுத்தல்

**வினா எண் 16257—திரு. எஸ். சுதர்சனம்:** *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கொடைக்கானல் படகு குழாமில் காட்டெருமை போன்ற வன விலங்குகள் புகாமல் தடுக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கொடைக்கானல் படகு குழாமில் காட்டெருமை போன்ற வன விலங்குகள் புகாமல் தடுப்பதற்காக, வேட்டைத்தடுப்பு காவலர்கள் 37 பேர் நியமிக்கப்பட்டு, அவர்கள் 3 குழுக்களாக ரோந்து பணி மேற்கொண்டு வருகின்றனர். காட்டெருமைகள் நகருக்குள் வந்துவிட்டால் அதனை விரட்டி வனப் பகுதிக்கு அனுப்பி விடுகின்றனர். எனவே, கொடைக்கானல் படகு குழாமில் காட்டெருமை போன்ற வன விலங்குகள் புகாமல் தடுக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

**74**—

## மோட்டல் அமைத்தல்

**வினா எண் 16671—திரு. கே.எஸ். மஸ்தான்:** *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) செஞ்சி கோட்டை அருகில் தங்கும் விடுதியுடன்கூடிய அரசு சுற்றுலா மோட்டல் (Motel) அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2018 ஜனவரி 11

**விடை—**

**மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள செஞ்சி கோட்டை இந்திய தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. மேலும், இந்திய தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் விதிமுறைகளின்படி கோட்டை நினைவுச் சின்னத்தை சுற்றி 300 மீட்டர் தொலைவிற்கு எவ்வித கட்டுமான பணிகளும் மேற்கொள்ள அனுமதி இல்லை. மேலும், செஞ்சியில் தனியாருக்குச் சொந்தமான தங்கும் விடுதிகள் போதுமான அளவிற்கு உள்ளன. எனவே, செஞ்சி கோட்டை அருகில் தங்கும் விடுதியுடன்கூடிய அரசு சுற்றுலா மோட்டல் (Motel) அமைக்க சாத்தியக்கூறுகள் ஏதும் தற்போது இல்லை.*

**75—**

## அடிப்படை வசதிகள் செய்தல்

**வினா எண் 20202—திரு. சே. கருணாஸ்:** *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருவள்ளூர் அருகில் உள்ள பூண்டி நீர்த்தேக்கப் பகுதியில் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்துதர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், பூண்டி ஒன்றியத்தில், பூண்டி நீர்த்தேக்கம் 1944 ஆம் ஆண்டு கொசஸ்தலை ஆறு என்னும் கொற்றலை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது. சென்னையிலிருந்து 60 கி.மீ. தொலைவிலும், திருவள்ளூரிலிருந்து 11 கி.மீ. தொலைவிலும் இந்த நீர்த்தேக்கம் அமைந்துள்ளது.*

*2008–2009 ஆம் ஆண்டு மாநில அரசு நிதி திட்டத்தின்கீழ் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் பூண்டி நீர்த்தேக்கத்தில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.*



2018 ஜனவரி 11]

*இனிவரும் காலங்களில் திருவள்ளூர் மாவட்டம், பூண்டி நீர்த்தேக்கத்திற்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்பட்சத்தில், கூடுதல் அடிப்படை வசதிகள் தேவைப்படின், சுற்றுலாத் துறையின் நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.*

**76—**

## பூங்காக்களைச் சீரமைத்தல்

**வினா எண் 20235—திரு. வி.ஜி. ராஜேந்திரன்:** *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருவள்ளூர் தொகுதி, பூண்டி நீர்த்தேக்கப் பகுதியில் உள்ள பூங்காக்களைச் சீரமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், பூண்டி ஒன்றியத்தில், பூண்டி நீர்த்தேக்கம் 1944 ஆம் ஆண்டு கொசஸ்தலை ஆறு என்னும் கொற்றலை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது. சென்னையிலிருந்து 60 கி.மீ. தொலைவிலும், திருவள்ளூரிலிருந்து 11 கி.மீ. தொலைவிலும் இந்த நீர்த்தேக்கம் அமைந்துள்ளது.*

*2006–2009 ஆம் ஆண்டு மாநில அரசு நிதி திட்டத்தின்கீழ் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் பூண்டி நீர்த்தேக்கத்தில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.*

*பூண்டி நீர்த்தேக்கப் பகுதியில் உள்ள பூங்காக்களைச் சீரமைக்க பூண்டி நீர்த்தேக்கத்தைப் பராமரித்துவரும் பொதுப் பணித் துறையினருடன் கலந்தாலோசித்து, சுற்றுலாத் துறையின் நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.*

**77—**

## படகு போக்குவரத்து ஏற்படுத்துதல்

**வினா எண் 22184—திரு. ஏ.கே. போஸ்:** *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருப்பரங்குன்றம் தொகுதி, தென்கால் கண்மாயின் கரையை சுற்றிலும் நடைபாதை அமைத்து, பூங்காக்கள், மின் விளக்குகள் அமைப்பதுடன் படகு போக்குவரத்து வசதி ஏற்படுத்தவும் அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

*2001–2002 ஆம் ஆண்டு மாநில அரசு நிதி உதவி திட்டத்தின்கீழ், திருப்பரங்குன்றத்தில் ரூ.36.00 இலட்சம் மதிப்பீட்டில் அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளன. 2009—2010 ஆம் ஆண்டு மத்திய அரசு நிதியுதவி திட்டத்தின்கீழ் ரூ.387.67 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு, கிரிவலப் பாதையில் சுற்றுச்சூழல் பூங்கா அமைக்கப்பட்டு, சுற்றுலாப் பயணிகளின் பயன்பாட்டில் உள்ளன. மேலும், திருப்பரங்குன்றம் தென்கால் கண்மாயில் நீர் ஆதாரம் குறைவாக உள்ளதால் படகு போக்குவரத்து ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் ஏதும் தற்போது இல்லை.*

**78**—

## படகு குழாம்களைத் தூர்வாருதல்

**வினா எண் 22232—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள அனைத்து படகு குழாம்களுக்கும் தூர்வாரும் இயந்திரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் உள்ள படகு குழாம்களை தூர்வாருவதற்கு, தூர்வாரும் இயந்திரம் வாங்க தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால்*





*உத்தேசிக்கப்பட்டது. ஆனால், அவ்வியந்திரத்தின் விலை மற்றும் பராமரிப்புச் செலவுகள் அதிகம் என்பதால் தூர்வாரும் இயந்திரம் வாங்கும் திட்டம் கைவிடப்பட்டது.*

**79**—

## தென்னை சார்ந்த தொழிற்சாலை

**வினா எண் 22257—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதி, அம்மாண்டிவிளை பகுதியில் தென்னை மரத்திலிருந்து கிடைக்கும் மூலப்பொருட்களைக் கொண்டு தென்னைச் சார்ந்த தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பா. பென்ஜமின், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) குளச்சல் தொகுதியில் அம்மாண்டிவிளை பகுதியில் தென்னை மரத்திலிருந்து கிடைக்கும் மூலப்பொருட்களைக் கொண்டு தென்னைச் சார்ந்த தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**80**—

## கூடுதல் கட்டணம் வசூலிப்பதைத் தடுத்தல்

**வினா எண் 11021—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கேபிள் டி.வி. இணைப்பிற்கு அரசு நிர்ணயித்த கட்டணத்தைவிட கூடுதல் கட்டணம் வசூலிப்பதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் எம். மணிகண்டன், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 30–8–2011 அன்று சட்டமன்றத்தில் ஆற்றிய உரையில், தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனம் மாதம் ரூ.70/- என்ற கட்டணத்தில் தனது கேபிள் டி.வி. சேவையை பொதுமக்களுக்கு கேபிள் ஆப்பரேட்டர்கள்மூலம் வழங்கும் எனவும், இதில் ரூ.20/-ஐ கேபிள் ஆப்பரேட்டர்கள் தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத்திற்கு செலுத்துவார்கள் எனவும் அறிவிப்பு வெளியிட்டார்கள். இதுகுறித்து அரசாணை (நிலை) எண் 16, தகவல் தொழில்நுட்பவியல் (நிர்.1) துறை, நாள் 11–11–2011 வாயிலாக ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

எனினும், அரசு நிர்ணயித்த மாத சந்தாக் கட்டணமாக ரூ.70/– ஐவிட அதிக தொகையினை கேபிள் டி.வி. ஆப்பரேட்டர்கள் பொதுமக்களிடம் வசூல் செய்கிறார்கள் என புகார்கள் வரப்பெற்றதால், அதிகக் கட்டண வசூல் செய்வதைத் தடுப்பதற்காக, பொதுமக்கள் நிர்ணயிக்கப்பட்ட கேபிள் டி.வி. கட்டணத்தை தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத்திற்கு நேரடியாக ஆன்லைன் முறையில் இணையதளத்தின்மூலம் செலுத்தும் வசதியினை ஏற்படுத்தி, இதுதொடர்பான விளம்பரம் தமிழகம் முழுவதும் அனைத்து செய்தித்தாள்களில் 20–2–2013 அன்று வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி கட்டணத்தினை நேரடியாக செலுத்த விரும்பும் மக்கள் இவ்வசதியினை பயன்படுத்தி வருகின்றனர். அரசு நிர்ணயித்த கட்டணம் மட்டுமே வசூல் செய்யப்படவேண்டும் என்பதை உறுதி செய்யும்பொருட்டு, அரசு கேபிள் டி.வி. நிறுவனம் மாத சந்தாக் கட்டணமான ரூ.70/–க்கு அச்சடித்த இரசீது வழங்கும் முறையினை அறிமுகப்படுத்தவுள்ளதாக 1–2–2014 அன்று செய்தி வெளியிட்டது. இந்த செய்திக் குறிப்பினை எதிர்த்து சில கேபிள் டி.வி. ஆப்பரேட்டர்கள் சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில் (வழக்கு எண் 4663/2014) மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம் 17–2–2014 அன்று வழங்கிய இடைக்கால தீர்ப்பில், இந்த வழக்கின் இறுதித் தீர்ப்பு வரும்வரையில், தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனம் இரசீது வழங்கும் பணி தொடரலாம் எனக் குறிப்பிட்டுள்ளது. இதனடிப்படையில் இரசீது வழங்கும் முறை குறித்தும், அரசு நிர்ணயித்த கட்டணத்தினை மட்டுமே பொதுமக்கள் செலுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தி 1–6–2014 அன்று செய்தித்தாள்கள்மூலம் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது.





மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் நலத் திட்டமான குறைந்த மாத சந்தாக் கட்டணமாக ரூ.70/–ல் கேபிள் டி.வி. சேவையினை தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனம் வழங்குவது குறித்தும், இரசீது வழங்குவது குறித்தும் விளம்பர சுவரொட்டிகள்மூலம் தமிழகம் முழுவதும் பொதுமக்கள் கவனத்திற்காக, அரசு அலுவலகங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், உள்ளாட்சி அமைப்புகள், வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் போன்ற பல்வேறு முக்கிய இடங்களில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளன.

தற்பொழுது, ஆப்பரேட்டர்கள் அதிக கட்டணம் வசூல் செய்வதைத் தடுக்க சந்தாதாரர்கள் நேரடியாக அரசுக்கு சந்தாத்தொகை செலுத்த செல்பேசி செயலி (Mobile Application) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கடந்த 19–4–2017 அன்று செல்பேசி செயலி (Mobile Application) சேவையினை துவக்கி வைத்தார்.

**81—**

## தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைத்தல்

**வினா எண் 14670—திரு. என். முருகுமாறன்:** மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கடலூர் மாவட்டத்தில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் எம். மணிகண்டன், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* தமிழ்நாடு மின்னணு நிறுவனம், அரசு ஆணையின்படி, தமிழகத்தில் முதல் மற்றும் இரண்டாம் நிலை நகரங்களான சென்னை, கோயம்புத்தூர், மதுரை (2 இடங்கள்), திருச்சி, திருநெல்வேலி, சேலம் மற்றும் ஓசூரில் தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை (ELCOSEZS) நிறுவியுள்ளது. தற்போது உலகளாவிய தகவல் தொழில்நுட்பவியல் துறையில் ஏற்பட்டுள்ள மந்தநிலை/தேக்க

நிலையின் காரணமாக, முதன்மையான நிறுவனங்கள் இரண்டாவது நிலை நகரங்களுக்கு செல்ல தயக்கம் காட்டுவதால், மேற்கூறிய தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் முழு அளவில் இந்நிறுவனங்கள் பங்கேற்க இயலாமல் உள்ளன. மேற்குறிப்பிட்ட சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் போதிய இடவசதி உள்ளதால், தற்போது கடலூர் மாவட்டத்தில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்கும் உத்தேசம் ஏதுமில்லை.

**82**—

**உண்டியல் குறித்த விவரம்**

**வினா எண் 1596—திரு. எம். இராமச்சந்திரன்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*புன்னைநல்லூரிலுள்ள அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், தஞ்சாவூரிலுள்ள அருள்மிகு பிரகதீஸ்வரர் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கு 1–4–2015 முதல் 31–3–2016 வரை பொதுமக்களிடம் காணிக்கையாக உண்டியல் மூலமாக பெறப்பட்ட தொகை எவ்வளவு என்பதைத் தெரிவிக்க அரசு முன்வருமா?*

**விடை**—

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

| புன்னைநல்லூர், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் உண்டியல் திறப்பின்மூலம் வரப்பெற்ற தொகை | அருள்மிகு பிரகதீஸ்வரர் திருக்கோயிலில் உண்டியல் திறப்பின்மூலம் வரப்பெற்ற தொகை |
|---|---|
| ரூ. பை | ரூ. பை |
| 1,47,04,887.00 (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்து ஏழு இலட்சத்து நான்காயிரத்து எண்ணூற்று எண்பத்து ஏழு மட்டும்) | 93,44,646.00 (ரூபாய் தொண்ணூற்று மூன்று இலட்சத்து நாற்பத்து நான்காயிரத்து அறுநூற்று நாற்பத்து ஆறு மட்டும்) |





**83**—

**பிறந்த நாளைக் கொண்டாடுதல்**

**வினா எண் 2962—திரு. கே. பழனி:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, ஸ்ரீபெரும்புதூர் பேரூராட்சி, ஸ்ரீபெரும்புதூர் பகவத் இராமானுஜரின் ஆயிரமாவது திருநட்சத்திரத்தை முன்னிட்டு அவரது பிறந்த நாளை சிறப்பாகக் கொண்டாட அரசு ஆவன செய்யுமா?*

**விடை**—

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர், அருள்மிகு ஆதிகேசவப்பெருமாள் மற்றும் பாஷ்யகார சுவாமி திருக்கோயில் மற்றும் தமிழ்நாட்டில் இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டில் உள்ள இதர வைணவத் திருத்தலங்களிலும் ஸ்ரீராமானுஜர் 1000–வது அவதார திருவிழா 21–4–2017 முதல் 1–5–2017 முடிய வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

**84**—

**குளத்தைத் தூர்வாரி, கரைகளைச் சீரமைத்தல்**

**வினா எண் 4159—திரு. எம். இராமச்சந்திரன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) ஒரத்தநாடு தொகுதி, ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், கண்ணந்தங்குடி, மேலையூர் ஊராட்சியில் உள்ள செட்டிமண்டபம் அருள்மிகு காசி விஸ்வநாதர் கோயில் குளத்தைத் தூர்வாரி நான்கு கரைகளையும் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், கண்ணந்தங்குடி, மேலையூர் ஊராட்சி, அருள்மிகு காசி விஸ்வநாத சுவாமி திருக்கோயில் சட்டப் பிரிவு 46(i)—ன்கீழ் பிரசுரம் செய்யப்பட்ட பட்டியலைச் சார்ந்த திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலுக்கு அருள்மிகு விநாயகர் சன்னதி, அருள்மிகு நந்தி மண்டபம், திருமதிற்சுவர் மகாமண்டபம் ஆகியவை புதிதாகக் கட்டுவதற்கு திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன. இத்திருக்கோயில் திருக்குளம், முழுமையாகத் தூர்வாரி, ஆழப்படுத்தி நான்கு கரைகளையும் கட்டுவதற்கு மதிப்பீடு தயார் செய்து திருக்குளத்தைத் திருப்பணி செய்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**85—**

## வழிபாட்டுக் கட்டணத்தைக் குறைத்தல்

**வினா எண் 4277—திரு. என். சுரேஷ் ராஜன்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள கன்னியாகுமரி மாவட்ட கோயில்களில் வசூலிக்கப்படும் வழிபாட்டுக் கட்டணத்தைக் குறைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டிலுள்ள கன்னியாகுமரி மாவட்ட திருக்கோயில்கள் நிருவாகத்தின்கீழ் 490 திருக்கோயில்கள் உள்ளன. இவற்றில் நடைமுறையில் உள்ள திருக்கோயில்களில் வசூலிக்கப்பட்டுவரும் வழிபாட்டுக் கட்டணம் 10 ஆண்டுகளுக்கு முன்னர் நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணங்கள் ஆகும். எனவே, தற்போது அக்கட்டணங்களைக் குறைக்க வேண்டிய அவசியம் ஏதுமில்லை.*





**86—**

## கிரிவலப் பாதை அமைத்தல்

**வினா எண் 5011—திரு. அ. பிரபு:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கள்ளக்குறிச்சி தொகுதி, தியாகதுருகம் ஒன்றியம், மலையம்மன் கோயிலுக்கு கிரிவலப் பாதை அமைக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டம், தியாகதுருகம், அருள்மிகு மலையம்மன் திருக்கோயில், தியாகதுருகத்தில் உள்ள மலையின்மீது அமைந்துள்ளது. மலையின் கீழே மலையைச் சுற்றி சிறு பாதை உள்ளது. இப்பாதையை பொதுமக்களும், பக்தர்களும் கிரிவலப் பாதையாகப் பயன்படுத்தி வருகின்றனர். பாதை அமைந்துள்ள இடம் இந்து சமய அறநிலையத் துறைக்கு சொந்தமானது அல்ல. பாதை ஊராட்சி நிருவாகத்திற்கு சொந்தமானது என்பதால், அத்துறையின் தமிழ்நாடு ஊரக சாலை மேம்பாட்டுத் திட்டம் (TRRIS) மூலம் தார்ச் சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.*

**87—**

## திருக்கோயிலை மேம்படுத்துதல்

**வினா எண் 5032—திரு. சி. ராஜா:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சங்ககிரி தொகுதி, அரசிராமணி பேரூராட்சி, பழக்காரன்காடு பகுதியிலுள்ள அருள்மிகு சோழேஸ்வரர் திருக்கோயிலை இந்து சமய அறநிலையத் துறை மூலமாக மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், அரசிராமணி, அருள்மிகு சோமேஸ்வரர் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள சிறிய திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலில் மூலவர் சன்னதி மட்டுமே உள்ளது. 2015–2016 ஆம் ஆண்டு கிராமப்புற திருக்கோயில்கள் திருப்பணி நிதியுதவி திட்டத்தின்கீழ் இத்திருக்கோயிலில் முன்மண்டபம் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு 24–9–2016–ல் முடிவுற்றுள்ளது. பொதுமக்கள் பங்களிப்பில் இத்திருக்கோயிலின் மராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**88—**

## திருக்கோயிலைப் பராமரித்தல்

**வினா எண் 5036—திரு. சி. ராஜா:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சங்ககிரி தொகுதி, ஒலக்கச்சின்னானூர், அருந்ததியர் தெருவிலுள்ள அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலைப் பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், ஒலக்கச்சின்னானூர், அருந்ததியர் தெருவிலுள்ள திருக்கோயிலைப் புனரமைக்க 2017–2018 ஆம் நிதியாண்டில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள திருக்கோயில்கள் திருப்பணி திட்டத்தின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் நிதியுதவி வழங்க பரிசீலிக்கப்படும்.





**89—**

## கோயில் நிலத்தினைப் பயன்பாட்டிற்கு கொண்டு வருதல்

**வினா எண் 5617—திரு. ஆர். நடராஜ்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* மாதா சர்ச் சாலை, மந்தைவெளி சந்திப்பில் மசூதிக்கு அருகில் இந்து சமய அறநிலையத் துறைக்கு சொந்தமான கோயில் நிலத்தினைப் பயன்பாட்டிற்கு கொண்டு வர அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* சென்னை மாவட்டம், மயிலாப்பூர் வட்டம், மந்தைவெளி மாதா சர்ச் சாலை சந்திப்பில், மசூதிக்கு அருகிலுள்ள காலியிடம் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள எந்தத் திருக்கோயிலுக்கும் சொந்தமானது இல்லை. எனவே, இந்து சமய அறநிலையத் துறைமூலம் இந்நிலத்தினை பயன்பாட்டிற்கு கொண்டுவர வழிவகை ஏதும் இல்லை.

**90—**

## விளையாட்டு மைதானத்தை பயன்பாட்டிற்கு கொண்டு வருதல்

**வினா எண் 6027—திரு. ஆர். நடராஜ்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை, மைலாப்பூரில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டிலுள்ள உடற்பயிற்சி மையம் மற்றும் விளையாட்டு மைதானத்தை பி.எஸ். மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அனுமதிக்க அரசு முன்வருமா?

[2018 ஜனவரி 11

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*சென்னை, மைலாப்பூர் அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலுக்கு சொந்தமாக சர்வே எண் 3543/1—ல் 76 கிரவுண்ட் நிலம் உள்ளது. இதில் 46.0886 கிரவுண்ட் நிலம் பி.எஸ். உயர்நிலைப் பள்ளி நிருவாகத்தால் விளையாட்டு மைதானமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், மீதமுள்ள 30 கிரவுண்ட் நிலம், திருக்கோயில் சுவாதீனத்தில் இருந்து வருகிறது. மேற்கூறிய இடங்களில் உடற்பயிற்சி மையம் ஏதும் இல்லை.*

**91**—

## சிமெண்ட் சாலை அமைத்தல்

**வினா எண் 7172—திருமதி மு. பரமேஸ்வரி:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மண்ணச்சநல்லூர் தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம், திருப்பைஞ்ஞீலி சிவன் கோயிலைச் சுற்றி தேரோடும் வீதியில் சிமெண்ட் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், திருப்பைஞ்ஞீலி, அருள்மிகு ஞீலிவனேஸ்வரர் திருக்கோயிலின் வருடாந்திர சித்திரை மாத பிரம்மோற்சவ விழாவின்போது திருத்தேர் நான்கு மாடவீதிகளை சுற்றி வலம் வரும். இத்திருக்கோயிலின் மூன்று பக்கம் கிழக்கு, தெற்கு மற்றும் வடக்கு பகுதிகளில் தார்ச் சாலை அமைக்கப்பட்டு நல்ல நிலையில் உள்ளன. மேற்கு பக்கம் மண் சாலை உள்ளதால், மேற்படி மண் சாலையினை சிமெண்ட் சாலையாக அமைக்க உள்ளாட்சி நிருவாகம்மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*



2018 ஜனவரி 11]

**92**—

## தெப்பக்குளத்தை சுத்தப்படுத்துதல்

**வினா எண் 9810—திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருநெல்வேலி தொகுதி, திருநெல்வேலியில் உள்ள அருள்மிகு நெல்லையப்பர் கோயிலின் தெப்பக்குளத்தை சுத்தப்படுத்தி, பராமரிக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி வட்டம் மற்றும் நகர், அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயில் தெப்பக்குளத்தினை “தமிழ் அன்னை தாமிரபரணி நல அறக்கட்டளை” மூலம் உபய திருப்பணி செய்ய ஏற்றுக்கொள்ளப்பட்டு, தூர்வாரப்பட்டு தெப்பக்குளம் தற்போது நல்ல நிலையில் உள்ளது.*

**94**—

## சுற்றுச்சுவர் கட்டுதல்

**வினா எண் 12640—திரு. டி. செங்குட்டுவன்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கிருஷ்ணகிரி தொகுதி, போகனப்பள்ளி அருகிலுள்ள அருள்மிகு ஸ்ரீ ஆஞ்சநேய சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு சுற்றுச்சுவர் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

[2018 ஜனவரி 11

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், போகனப்பள்ளி வட்டம், காட்டிநாயனப்பள்ளி அருள்மிகு ஸ்ரீ ஆஞ்சநேய சுப்பிரமணிய சுவாமி (முருகர்) திருக்கோயிலைச் சுற்றி சுமார் 3.23.50 ஹெக்டேர் நிலம் அமைந்துள்ளது. இந்நிலத்தை சுற்றி சுற்றுச்சுவர் கட்டுவதற்கு பெருமளவில் நிதி தேவைப்படுகிறது. இத்திருக்கோயிலில் நிதிப் பற்றாக்குறை உள்ளதால், திருக்கோயிலைச் சுற்றி சுற்றுச்சுவர் கட்டுவதற்கு தற்போது திட்டம் ஏதும் இல்லை.

**95**—

## கோயிலுக்கு சுற்றுச்சுவர் கட்டுதல்

**வினா எண் 13855—திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு தொகுதி, கடையால் பேரூராட்சி, குழித்துறை தேவசம்போர்டு சரகத்திலுள்ள அரசநாடு ஆலஞ்சோலை அருள்மிகு ஸ்ரீ தர்ம சாஸ்தா திருக்கோயிலுக்கு சுற்றுச்சுவர் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை**—

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை தொகுதி, குழித்துறை, திற்பரப்பு உபதொகுதி செம்மருதங்காவு அருள்மிகு ஸ்ரீ தர்ம சாஸ்தா திருக்கோயிலில் திருப்பணிகள் மற்றும் சுற்றுச்சுவருக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலில் வரும் 2018 உத்ராயணத்தில் திருப்பணி வேலைகள் முடித்து, குடமுழுக்கு நடைபெறும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**96**—

## கட்டணமில்லா வாகன நிறுத்தம் அமைத்தல்

**வினா எண் 16326—திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2018 ஜனவரி 11]

(அ) தாம்பரம் தொகுதி, தாம்பரம் பேருந்து நிலையம் அருகிலுள்ள அருள்மிகு செல்வ விநாயகர் திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு கட்டணமில்லா வாகன நிறுத்தம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை**—

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதி, மேற்கு தாம்பரம் அருள்மிகு செல்வ விநாயகர் மற்றும் கோதண்டராமர் திருக்கோயில், தாம்பரம் ஜி.எஸ்.டி. சாலையில், இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான 14 சென்ட் நிலத்தில் அமைந்துள்ளது. மீதமுள்ள இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான 7 சென்ட் நிலத்தில் 24 கடைகள் கட்டப்பட்டு வாடகைக்கு விடப்பட்டுள்ளன. இத்திருக்கோயிலுக்கு சொந்தமாக வேறு எந்த காலி இடமும் இல்லை. இந்நிலையில் திருக்கோயிலுக்கு வருகைதரும் பக்தர்களுக்கு கட்டணமில்லா வாகனம் நிறுத்துமிடம் அமைக்க வழிவகை இல்லை.

**97**—

## கால்நடை கிளை நிலையக் கட்டடம்

**வினா எண் 12620—திரு. கே.எஸ். மூர்த்தி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பரமத்தி–வேலூர் தொகுதி, பரமத்தி–வேலூர் ஒன்றியம், வில்லிபாளையத்திலுள்ள கால்நடை துணை மருத்துவமனைக்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

**விடை**—

**மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

கால்நடை பராமரிப்புத் துறையின்கீழ் செயல்பட்டுவரும் கால்நடை மருந்தகம், கால்நடை மருத்துவனை, கால்நடை பன்முக மருத்துவமனை, கால்நடை பெரு மருத்துவமனை போன்ற

நிலையங்களுக்கு அரசின் பல்வேறு திட்டங்களின்கீழ் நிதி ஒதுக்கீடு பெற்று, புதிய கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. மேலும், கால்நடை கிளை நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவது அரசின் கொள்கை முடிவிற்கு உட்பட்டதல்ல என்பதால், வில்லிபாளையம் கால்நடை கிளை நிலையத்திற்கு உள்ளாட்சி நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு அல்லது தொகுதி மேம்பாட்டு நிதி ஒதுக்கீடு மற்றும் நிலம் பெறும்பட்சத்தில் கால்நடை கிளை நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட பரிசீலிக்கப்படும்.

**98**—

## கால்நடை கிளை நிலையம் அமைத்தல்

**வினா எண் 19179—திரு. சே. கருணாஸ்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு கால்நடை கிளை நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை**—

**மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும், அந்த ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள கிராமங்களின் தேவைக்கேற்ப கால்நடை மருந்தகம் மற்றும் கால்நடை நிலையங்கள் இயங்கி வருகின்றன. எனவே, எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும், புதியதாக கால்நடை கிளை நிலையங்கள் தோற்றுவிக்க வேண்டிய அவசியம் எழவில்லை. போதிய கால்நடை அலகுகளைக் கொண்ட தொலைதூர கிராமங்களில் இதுவரை கால்நடை கிளை நிலையங்கள் இல்லையெனில், அங்கு புதிய கால்நடை கிளை நிலையங்கள் தோற்றுவிக்க அரசு தொடர்ந்து பரிசீலித்து வருகிறது.



**99**—

## கால்நடை ஆய்வாளர் பணியிடங்களை நிரப்புதல்

**வினா எண் 19180—திரு. சே. கருணாஸ்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கால்நடை பராமரிப்புத் துறையில் காலியாக உள்ள கால்நடை ஆய்வாளர் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை**—

**மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் (காப1) துறையில் 2011–2012, 2012–2013 ஆம் ஆண்டுகளில் கால்நடை ஆய்வாளர் பயிற்சி முடித்த 291 மற்றும் 314 நபர்களுக்கு கால்நடை ஆய்வாளர் நிலை–2 ஆக பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது. 2013–2014 ஆம் ஆண்டுக்கு சென்னை உயர் நீதிமன்ற வழிகாட்டுதலின்படி இரண்டு நாளிதழ்களில் விளம்பரம் அளிக்கப்பட்டு, விண்ணப்பங்கள் பெறப்பட்டு கணினியில் பதிவேற்றம் செய்யும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. தேர்வு நடத்திடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தேர்வில் தேர்ச்சிப் பெற்றவர்கள் இனச்சுழற்சியின்படி, கால்நடை ஆய்வாளர் நிலை–2 பதவிக்கு தேர்வு செய்யப்பட்டு, கால்நடை ஆய்வாளர் பயிற்சி முடித்தபின் காலியாக உள்ள கால்நடை ஆய்வாளர் பணியிடங்களில் பணியமர்த்தப்பட உள்ளனர்.

**100**—

## கால்நடை மருத்துவமனையைச் சீரமைத்தல்

**வினா எண் 5517—திரு. வெ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திட்டக்குடி தொகுதி, மங்களூரில் உள்ள கால்நடை மருத்துவமனையைச் சீரமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2018 ஜனவரி 11

**விடை—**

**மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், திட்டக்குடி தொகுதி, மங்களூர் ஊராட்சியில் இயங்கிவரும் கால்நடை மருந்தகத்திற்கு புதிய கட்டடம் ரூ.26.66 இலட்சம் செலவில் 2011–2012 ஆம் ஆண்டு நபார்டு RIDF XVII திட்டத்தின்கீழ் கட்டப்பட்டு, நாளது தேதிவரை நல்ல நிலையில் உள்ளது.*

*(18–9–2017 முதல் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களால் தகுதி நீக்கம் செய்யப்பட்ட உறுப்பினர்களால் கொடுக்கப்பட்ட வினா வரிசை எண்கள் 48 மற்றும் 93–க்கான வினாக்கள்–விடைகள் பட்டியல் 4-ல் இடம் பெறவில்லை.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### (அ) வெளி மாநிலங்களில் கல்வி பயிலும் தமிழக மாணவர்களுக்கு பாதுகாப்பு வழங்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சற்று பொறுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கக்கூடிய மாணவர்கள் வெளி மாநிலங்களுக்குச் சென்று கல்வி பயிலக்கூடிய நேரத்தில் அவர்களுக்கு உரிய பாதுகாப்பு இல்லாத ஒரு சூழ்நிலை அமைந்திருக்கிறது. எனவே, அதுகுறித்து விவாதிக்க அவசரமாக இந்த அவையினுடைய கவனத்திற்கு நான் அதைக் கொண்டு வர விரும்புகிறேன். வெளி மாநிலங்களில் படிக்கச் செல்லக்கூடிய மாணவர்கள் பல்வேறு இன்னல்களுக்குத் தொடர்ந்து ஆளாகிக்



2018 ஜனவரி 11] [திரு. மு.க. ஸ்டாலின்]

கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே புது டில்லியிலுள்ள AIIMS மருத்துவமனையில் மருத்துவ மாணவர் சரவணன் அவர்கள் மர்மமான முறையிலே இறந்தார் என்பது எல்லோருக்கும் தெரியும். அது தற்கொலையாக இருக்க வாய்ப்பில்லை என்று பிரேதப் பரிசோதனை அறிக்கையிலேயே மிகத் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும், அதுகுறித்து இதுவரையிலே எந்தவித மேல் நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றே நான் கருதுகிறேன். ஆக இப்படிப்பட்ட இந்தச் சூழ்நிலையிலே, அண்மையில் குஜராத் மாநிலம், அகமதாபாத்தில் மருத்துவ மேற்படிப்பு படித்துக் கொண்டிருக்கக்கூடிய திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த டாக்டர் மரியராஜ், தமிழர் என்கிற காரணத்தால் பல்வேறு தொல்லைகளுக்கும், torture–க்கும் ஆளாகியிருக்கிறார். ஆக, இந்த நிலையிலே அவர் தற்கொலை முயற்சியிலும் ஈடுபட்டிருக்கிறார். எனவே, இதுபற்றி Indian Medical Association–ன் State Secretary திரு. ஸ்ரீதர் என்பவர் நம்முடைய சுகாதாரத் துறைச் செயலாளருக்கு ஒரு புகார் கடிதம் அனுப்பி வைத்திருக்கிறார். 10–1–2018 அன்று அந்தக் கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. அதிலே மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார். ஆகவே, உடனடியாக நம்முடைய அரசு குஜராத் அரசைத் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுத்து, அந்த மாணவருக்கு உரிய பாதுகாப்பை வழங்கிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–05*

அதுமட்டுமல்ல, வெளி மாநிலங்களில் படிக்கக்கூடிய தமிழக மாணவர்களுக்கு உரிய பாதுகாப்பை இந்த அரசு உறுதி செய்திட வேண்டும். எந்தவகையில் உறுதி செய்ய வேண்டுமென்று சொன்னால், மருத்துவக் கல்வி இயக்குநரகத்திலே இதற்கென்று ஒரு தனிப் பிரிவை ஏற்படுத்தினால்தான் உரிய பாதுகாப்பை நிச்சயமாக ஏற்படுத்தித் தர முடியும். வெளி மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டுக்கு வந்து, 'NEET' தேர்வின் காரணமாக இன்றைக்கு ஏராளமான மாணவர்கள் சுதந்திரமாகப் படித்துக் கொண்டிருக்கிறார்கள்; பாதுகாப்போடு படித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், தமிழ்நாட்டிலிருந்து ஒருவரோ, இருவரோ வெளி மாநிலத்திற்குச் செல்கின்ற இடத்தில் இப்படிப்பட்ட கொடுமைகளுக்கு ஆளாக்கப்படுகின்ற நேரத்தில், இது உண்மையிலேயே வருந்தத்தக்கதாக இருக்கிறது; வேதனைப்படக்கூடிய ஒரு நிகழ்ச்சியாக அமைந்திருக்கிறது.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2018 ஜனவரி 11

உடனடியாக அரசு இதிலே உரிய வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, நான் அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகை மற்றும் தொலைக்காட்சிகளில் இந்தச் செய்தி வந்தவுடனே, மக்கள் நல்வாழ்வுத் துறையினுடைய அரசுச் செயலாளர் டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள்மூலம் உடனடியாக குஜராத் மாநிலத்தினுடைய அரசுச் செயலாளரைத் தொடர்பு கொண்டு, உரிய விளக்கங்களையெல்லாம் கேட்டுப் பெற்றிருக்கிறோம். அந்தவகையில், திருநெல்வேலி மாவட்டம், ஒத்தவேடு, இராமேஸ்வரம் கிராமத்தைச் சார்ந்த திரு. மாரியப்பன் என்பவருடைய மகன் திரு. மரியராஜ் என்பவர் ஏற்கெனவே திருநெல்வேலியில் M.B.B.S., படித்துவிட்டு, அதற்குப்பின் மேற்படிப்புக்கு தேசிய நுழைவுத் தேர்வு மூலமாக 2015 ஆம் ஆண்டு M.S. (General Surgery) அங்கே படித்துக் கொண்டிருக்கிறார். அங்கு படித்துக் கொண்டிருந்த மாணவரை சக மாணவர்களும், பேராசிரியர்களும் தன்னை இன ரீதியாக மனம் புண்படும்படி பேசுகிறார்கள் என்ற புகார் எழுந்து, அந்தப் புகாரை அவர் 26–9–2017 அன்று தேசிய ஆதி திராவிடர் நல ஆணையத்துக்கு அனுப்பியிருக்கிறார். குஜராத் மாநிலத்திற்குப் புகாராக அனுப்பியிருக்கிறார். அதைத் தொடர்ந்து, அதுமாதிரியான தொந்தரவுகள் இருந்ததற்குப் பின்பும், அவருக்கு உரிய வாய்ப்புகள் M.S. (General Surgery)–ல் வழங்கப்படவில்லை என்ற மன அழுத்தத்தில் அவர் 5–1–2018 அன்று கல்லூரி விடுதியிலே அளவுக்கு அதிகமாக தூக்க மாத்திரைகளை உட்கொண்டு மயக்க நிலையிலே இருந்திருக்கிறார். மயக்க நிலையிலே இருந்த அந்த மாணவரை உடனடியாக சக மாணவர்கள் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று, தற்போது அவர் நல்ல நிலையிலே சிகிச்சை பெற்று வருகிறார். தொடர்ந்து இதுகுறித்து உரிய வழக்குப் பதிவுசெய்ய வேண்டும். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைப்போல, தமிழகத்திலிருந்து செல்லக்கூடிய மாணவர்களுடைய பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டுமென்ற முதலமைச்சருடைய அறிவுரையின்படி, அந்த அரசுச் செயலாளருக்கு அறிவுறுத்தியதன் பேரில், உடனடியாக குஜராத் மாநிலத்தில் உள்ள Shahibabad காவல் நிலையத்தில் வழக்கு தற்போது பதிவு செய்யப்பட்டு, உரிய விசாரணையை அவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள். அந்த மாணவருடைய



2018 ஜனவரி 11] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

குடும்பத்தாரிடமும் நம்முடைய அரசு அதிகாரிகள் தொடர்பு கொண்டு பேசுகிறார்கள். நல்ல ஆக்கப்பூர்வமான கருத்துகள். தமிழ் மாநிலத்திலிருந்து, இந்தியாவிலுள்ள எந்த மாநிலமாக இருந்தாலும் அங்கு சென்று படிக்கக்கூடிய மாணவர்களுடைய பாதுகாப்பை உறுதிசெய்யக்கூடிய நிலையை நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

## (ஆ) அரசு நிகழ்ச்சிக்கான அழைப்பிதழில் தொகுதி சட்டமன்ற உறுப்பினரின் பெயர் விடுபட்டுள்ளது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நான் என்னவென்று இன்னும் சொல்லவில்லை. மாண்புமிகு அமைச்சர்கள் தயாராக இருக்கமாட்டார்கள். (குறுக்கீடு) என்னவென்று சொல்லுங்கள்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக அரசு நிகழ்ச்சிகள் ஒரு தொகுதியில் நடைபெறுகின்றபோது, அந்தத் தொகுதியினுடைய எம்.எல்.ஏ. வின் பெயரையும் போடுவது வழக்கம்; போட வேண்டும். திருவள்ளூர் தொகுதியில் பள்ளி மாணவ, மாணவியருக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொகுதியின் எம்.எல்.ஏ., திரு. வி.ஜி. ராஜேந்திரன் அவர்கள். ஆனால், பொன்னேரி எம்.எல்.ஏ.–வின் பெயரை இந்தத் தொகுதியில் போட்டிருக்கிறார்கள்; தொகுதி எம்.எல்.ஏ.–வின் பெயரைப் போடவில்லை. இது நியாயம்தானா என்பதைத்தான் நான் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், இதுகுறித்து நேற்றையதினமே என்னுடைய கவனத்திற்கு வந்தது. (குறுக்கீடு) உடனடியாக நான் தலைமைச் செயலாளருக்கு அறிவுறுத்தியிருக்கிறேன். சரியான உத்தரவுகளை நான் வழங்கியிருக்கிறேன். மேற்கொண்டு, இந்தமாதிரி நடக்காமல் பார்த்துக்கொள்ள நான் ஏற்பாடுகளைச் செய்திருக்கிறேன். ஆகவே, இந்தப் பதிலோடு திருப்தியடையுங்கள். (குறுக்கீடு)

[2018 ஜனவரி 11

**திரு. துரைமுருகன்:** இந்த நீதி தவறாத நடவடிக்கைக்காகத்தான் நாங்கள் உங்களிடத்தில் சொல்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றி. (குறுக்கீடுகள்) இல்லை, அனைத்துத் தொகுதிகளிலும் இந்தமாதிரி நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று தலைமைச் செயலாளருக்கு நான் அறிவுரை வழங்கியிருக்கிறேன். (குறுக்கீடு) இனிமேல் அதுமாதிரி இல்லாமல் பார்த்துக்கொள்ளலாம். (குறுக்கீடு)

## (இ) கன்னியாகுமரி மாவட்டம், வர்த்தகத் துறைமுகம் அமைப்பதில் எழுந்துள்ள பிரச்சினை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின், நீங்கள் என்னவென்று சொல்லுங்கள்.

*முற்பகல் 11–10*

**திரு. எஸ். ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்வதேச சரக்குப் பெட்டக மாற்று முனையம் என்ற ஒரு மெகா துறைமுகத்தை கடந்த ஓராண்டுக்கு முன்பாக மத்திய அரசு, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கிள்ளியூர் தொகுதிக்குட்பட்ட இனையம் மீனவர் கிராமத்தில் அமைக்கப்படுமென அறிவித்தது. அந்தப் பகுதி மக்களுடைய கடுமையான எதிர்ப்புகளுக்கிடையே தற்போது ஒரு மாத காலத்திற்கு முன்பாக அந்த இடத்தை மாற்றி கன்னியாகுமரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கோவளம் மற்றும் கீழமணக்குடி மீனவக் கிராமங்களுக்கு இடையே அமைப்பதாக அறிவித்திருக்கிறது. இந்த அறிவிப்பு வந்தவுடனேயே அந்தப் பகுதி மக்களிடத்திலே மிகப் பெரிய பதட்ட சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியிலே வாழக்கூடிய மீனவர்களும், மீனவர்கள் அல்லாதவர்களும் இந்தத் துறைமுகம் இங்கே அமைக்கப்படுமானால் தங்களுக்கு மிகப் பெரிய பாதிப்பு ஏற்படும் என்ற தங்களது அச்சத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். குறிப்பாக, மீனவர்களைப் பொறுத்தவரையில், மத்திய அரசு அதிகாரிகள் என்ன சொல்கிறார்கள் என்று சொன்னால், கடலுக்கு வெளியே நாங்கள் கட்டுமானப் பணிகளைச் செய்யவில்லை; கடலுக்கு உள்ளேயே கட்டுமானப் பணிகளைச் செய்கின்றோம். அதனால், வீடுகளுக்கும், விளைநிலங்களுக்கும் பாதிப்பு ஏற்படாது என்ற ஒரு கருத்தைச் சொல்கிறார்கள். மீனவர்களுக்கு என்ன அச்சம் ஏற்படுகிறது என்று சொன்னால், கடலுக்கு உள்ளே



2018 ஜனவரி 11] [திரு. எஸ். ஆஸ்டின்]

கிட்டத்தட்ட 30 மீட்டர் ஆழத்திற்கு மண்ணைத் தோண்டி கடலின் மறுபகுதியில் போட்டுவிட்டு அங்கே கட்டுமானப் பணியைத் தொடர்வார்கள் என்று நினைக்கிறார்கள். தற்பொழுது தூண்டில் வளைவினை நூறு மீட்டர் அளவுக்குப் போடுகின்றபொழுதே, அடுத்துள்ள கடற்கரைக் கிராமங்களுக்குப் பாதிப்பு ஏற்படுவதோடு, மணல் அரிப்பு ஏற்பட்டு வீடுகளுக்கும் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே, மிகப்பெரிய ஒரு கட்டுமானத்தை கடலுக்குள்ளே செய்கின்றபொழுது அதனுடைய இரண்டு பகுதிகளிலும் கிட்டத்தட்ட மூன்று, நான்கு மீனவ கிராமங்களிலே மணல் அரிப்பு ஏற்பட்டு தங்களுடைய வீடுகள் முழுமையாக அழிந்துவிடும், அந்தப் பகுதியிலே மீன்பிடித் தொழிலைச் செய்ய முடியாது; தங்களுடைய வாழ்வாதாரம் அழிந்துவிடும் என்ற பயம் அவர்களுக்கு இருக்கிறது. மீனவர்கள் அல்லாதவர்களுக்கு என்ன பயம் என்று சொன்னால், கடலுக்குள்ளே துறைமுகம் அமைக்கப்பட்டால்கூட, அதன் பயன்பாட்டுப் பகுதி என 5 கிலோ மீட்டர், 10 கிலோ மீட்டர் தூரத்திற்கு உருவாக்குவார்கள். கன்னியாகுமரி மாவட்டம், மிக அடர்த்தியான, நெருக்கமான மக்கள்தொகை கொண்ட மாவட்டம். அப்படிக் கட்டுமானம் செய்கின்றபோது, நான்கு வழிச் சாலைகள் அமைக்கப்படும், Railway track, approach track அமைக்கப்படும். இவையெல்லாம் அமைக்கப்படும்பொழுது தங்கள் விளைநிலங்களும், வீடுகளும் பாதிக்கப்படும். மிகப் பெரிய trucks, container lorries எல்லாம். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும். நீங்கள் அரசின் கவனத்தை ஈர்த்து உட்காருங்கள்.

**திரு. எஸ். ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு) ஒரே நிமிடம். காற்றிலே மாசு ஏற்படும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்ன என்பது தெரிய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சருக்குத் தெரியும். நீங்கள் என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. எஸ். ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்காலத்தில் மிகப் பெரிய பாதிப்பு ஏற்படும் என்ற பயம் அவர்களுக்கு இருக்கிறது. எங்களுக்கு என்ன பயமென்றால் அங்கே இரண்டு அமைப்புகள் உருவாகியிருக்கின்றன. ஒன்று, துறைமுகம் எதிர்ப்பு இயக்கம். இன்னொன்று துறைமுகம் ஆதரவு

இயக்கம். இந்த இரண்டு இயக்கங்களுமே மக்களுக்கு மத்தியிலே பல்வேறு கருத்துகளைச் சொல்லி தங்களுக்கு ஆதரவினைத் திரட்டி வருகிறார்கள். இதிலே சில விஷமிகள் உள்ளே புகுந்து ஜாதி, மத உணர்வுகளை மக்களிடத்திலே தூண்டிவிடுகிறார்கள். எனவே, எதிர்காலத்திலே விரும்பத்தகாத சில அசம்பாவித சம்பவங்கள் அங்கே ஏற்பட்டுவிடுமோ, அதனால் மக்களுக்கிடையே போராட்டம் வந்துவிடுமோ, அந்த நிலை வரும்பொழுது சட்டம்–ஒழுங்கு பாதிக்கப்படுமோ, அப்படிப் பாதிக்கப்படுகின்றபொழுது அரசாங்கத்திற்கும், மக்களுக்குமிடையே ஒரு போராட்டம் வருகின்ற சூழ்நிலை எதிர்காலத்தில் ஏற்பட்டுவிடக் கூடாது என்ற அடிப்படையில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசியது போதும். நீங்கள் அரசின் கவனத்தை ஈர்த்துவிட்டீர்கள். உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். நீங்கள் எப்பொழுதும் முடிக்கமாட்டீர்கள். நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின் அவர்கள் அங்கே துறைமுகம் அமைப்பது குறித்து கவன ஈர்ப்பு கொடுத்திருக்கிறார்கள். மத்திய கடல் மற்றும் தரை வழி போக்குவரத்துத் துறை அமைச்சகம், கன்னியாகுமரி மாவட்டம், இனையம் மற்றும் மேல்மிடாலம் மீனவக் கிராமங்களுக்கிடையே 28,000 கோடி ரூபாய் செலவில் வர்த்தகத் துறைமுகம் ஒன்றை அமைக்க முடிவுசெய்து, அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது. இத்திட்டத்திற்கு தூத்துக்குடி வ.உ.சி. துறைமுக நிருவாகத்தை முகமை நிறுவனமாக நியமித்ததோடு, ரயில் இந்தியா டெக்னிக்கல் மற்றும் எக்கனாமிக் சர்வீசஸ் லிமிடெட் (RITES) என்ற மத்திய அரசு நிறுவனத்துடன் துறைமுக கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள இவ்வமைச்சகம் ஒப்பந்தம் செய்தது.

RITES நிறுவனத்தினர், கடந்த 2015 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கல்லுக்குட்டி மற்றும் தொழிக்கோடு கிராமங்களுக்கு இடையே துறைமுகம் கட்டுவதற்கான முதற்கட்ட ஆய்வுப் பணிகளை மேற்கொண்டனர். இந்நிலையில், இனையம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள மீனவக் கிராமத்தினர், மேற்படி வர்த்தகத் துறைமுகம் அமைக்கப்பட்டால் தங்களது வாழ்வாதாரமான மீன்பிடித் தொழில் பாதிக்கப்படும் என்றும், அப்பகுதியில் தங்களுக்குச்





சொந்தமான நிலங்கள், கல்வி நிறுவனங்கள், வழிபாட்டுத் தலங்கள் ஆகியவை அத்திட்டத்தினால் பாதிப்படையும் என்றும் கூறி துறைமுகம் அமைக்கும் திட்டத்திற்கு "இனையம் வர்த்தகத் துறைமுகம் எதிர்ப்புக் குழு" என்ற ஓர் அமைப்பை ஏற்படுத்தி எதிர்ப்பு தெரிவித்ததோடு, அத்திட்டத்தைக் கைவிடுமாறு கோரி உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டம், ஆய்வுப் பணிகளை தடுத்து நிறுத்துதல், கருப்புக் கொடியேற்றுதல், மீன் பிடிக்கச் செல்லாமல் வேலைநிறுத்தம் செய்தல் போன்ற போராட்டங்களிலும் ஈடுபட்டு வந்தனர்.

இதுதொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பலமுறை போராட்டக் குழுவினருடன் பேச்சுவார்த்தை நடத்தியும், துறைமுகத்தின் பயன்கள் பற்றி எடுத்துக் கூறியும், அக்குழுவினர் அதனை ஏற்காமல் தொடர்ந்து துறைமுகம் அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து வந்தனர். இந்நிலையில், மத்திய அரசு வர்த்தகத் துறைமுகத்தை இனையம் பகுதியில் அமைப்பதற்குப் பதிலாக வனத் துறைக்குச் சொந்தமான நிலம் அதிகமாக உள்ள கோவளம் பகுதியில் அமைக்க உத்தேசித்து, அதற்கான நடவடிக்கைகளைத் துவங்கியது. அதன் ஒரு பகுதியாக 20–12–2017 அன்று திட்ட அதிகாரிகள் கோவளம் கிராமம் அருகில் பூமி பூஜைக்கு ஏற்பாடுகள் செய்தபோது, உள்ளூர் மீனவர்கள் சுமார் 200 பேர் அதற்கு எதிர்ப்பு தெரிவித்ததால், அப்பணிகள் நிறுத்தப்பட்டன. மேலும், இத்திட்டப் பணி தொடர்பாக சில அதிகாரிகள் கடலில் நீர் மாதிரிகளை சேகரிக்கச் சென்றபோதும் மீனவர்கள் அதனைத் தடுத்தனர்.

முற்பகல் 11–15

கடந்த 23–12–2017 அன்று கோவளத்தில் திரு. சுப. உதயகுமார் தலைமையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில், கோவளம் பகுதியில் வர்த்தகத் துறைமுகம் அமைவதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதெனவும், இது தொடர்பாக கோவளத்தில் போராட்டக் குழு ஒன்றை அமைப்பதெனவும் முடிவு செய்தனர். இக்கூட்டத்திற்கு எதிராக, கோவில்விளை என்ற கிராமத்தில் 25–12–2017 அன்று நடைபெற்ற மற்றொரு கூட்டத்தில் வர்த்தகத் துறைமுகம் அமைக்க அதிகாரிகளுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவது என்று முடிவு செய்தனர்.

கடந்த 30–12–2017 அன்று மாவட்ட ஆட்சியர் மற்றும் வருவாய்த் துறை அதிகாரிகள் துறைமுக திட்ட ஆய்வுப் பணிகள் தொடர்பாக கீழமணக்குடி கிராமத்திற்குச் சென்றபோது, மீனவர்கள் சுமார் 500 பேர் அவர்களை முற்றுகையிட்டு தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்து, காவல் துறையினர் தலையீட்டின் பேரில் கலைந்தனர்.

வர்த்தகத் துறைமுகம் அமைவதற்கு ஆதரவு தெரிவிக்கும் பொதுமக்கள் சுமார் 2,400 பேர், 31–12–2017 அன்று துறைமுகத்தை அப்பகுதியில் அமைக்கக் கோரி முகிலன் குடியிருப்பில் ஆர்ப்பாட்டம் செய்தனர். தமிழ்நாட்டின் பொருளாதார ரீதியான முன்னேற்றத்திற்கு இந்த வர்த்தகத் துறைமுகம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்ற கருத்தின் அடிப்படையிலும், அனைத்துத் தரப்பு மக்களுக்கும் இதனால் ஏற்படும் பாதிப்புகளைக் கண்டறிந்து அதனைக் களைவதற்கும், திரு. விஷ்ணு, இ.ஆ.ப., என்ற அதிகாரியை சிறப்புப் பணி அலுவலராக நியமித்து உத்தரவிடப்பட்டு இருக்கிறது. அங்குள்ள அனைத்துத் தரப்பு மக்களின் கோரிக்கைகளையும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கனிவுடன் பரிசீலித்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### (ஈ) துறையூர் தொகுதி, நாகலாபுரம் கிராமம், மாற்றுத் திறனாளி மாணவருக்கு அரசின் உதவித் தொகை வழங்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார் அவர்கள்.

**திரு. செ. ஸ்டாலின் குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம், துறையூர் தொகுதி, நாகலாபுரம் கிராமத்தைச் சேர்ந்த காமராஜ்–செல்வி ஆகியோரின் மகன் மணிகண்டன் என்பவர் 9–வது வகுப்பு பயிலும் மாணவர் ஆவார். இவர் பிறவியிலிருந்தே காது கேளாமை, வாய் பேசாமை குறைபாடுள்ள மாற்றுத்திறனாளி. இவர் ஜார்கண்ட் மாநிலம், ராஞ்சியில் நடந்த தேசிய காது கேளாதோர் விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டு, 100 மீட்டர், 200 மீட்டர் ஓட்டப்பந்தயத்திலும், உயரம் தாண்டுதல் போட்டியிலும் பங்கேற்று தங்கப் பதக்கமும், தொடர் ஓட்டத்தில் வெள்ளிப் பதக்கமும் பெற்றார். இவர் உலக காது கேளாதோர் ஒலிம்பிக்



போட்டியில் இந்தியாவின் சார்பில் பங்கேற்க உள்ளார். இந்த ஏழை கிராமப்புற மாற்றுத் திறனாளி மாணவரான மணிகண்டனை ஊக்கப்படுத்தும்வகையில், மேலும் பல பரிசுகளை பெறுவதற்கு, தமிழக அரசின் சார்பில் சிறப்புப் பயிற்சியும், அரசின் உதவித் தொகை வழங்கவும் வேண்டி அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். அம்மாவின் கனவை நனவாக்க ஆட்சி செய்து கொண்டிருக்கும் மரியாதைக்குரிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும் எனது பணிவான வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் முக்கியத்துவம் இல்லாதிருந்த விளையாட்டுத் துறைக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்து, இந்தியாவிலேயே முதன் முறையாக விளையாட்டுக்கு என ஒரு தனி பல்கலைக்கழகம் அமைத்து மாணவர்களையும், இளைஞர்களையும் ஊக்குவித்து தேசிய, ஆசிய மற்றும் உலக அளவிலான போட்டிகளில் பங்கு பெறுவதற்கு பல்வேறு வகையான சலுகைகள் ஊக்கத் தொகையை வழங்கியும், மேற்படி போட்டிகளில் பரிசு வென்று வருபவர்களுக்கு ஏற்கெனவே வழங்கிய பரிசுத் தொகையை இரு மடங்காக உயர்த்தி அளித்தும் விளையாட்டுத் துறையை ஊக்குவித்து வந்தார்கள்.

கடந்த தி.மு.க. ஆட்சியில், ஐந்து ஆண்டுகளில் மொத்த நிதியொதுக்கீடு சுமார் 139 கோடி ரூபாய். ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் மொத்த நிதியொதுக்கீடு ரூ.554.00 கோடி. (மேசையைத் தட்டும் ஒலி)

2011 வரை 13 விளையாட்டு விடுதிகளில் 860 மாணவர்கள் இருந்தனர். தற்போது 29 விடுதிகளாக உயர்த்தி 2,060 மாணவர்கள் தங்கி பயிற்சி பெற மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. (குறுக்கீடுகள்)

[*2018 ஜனவரி 11*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும் உட்கார்ந்துகொண்டு பேசாதீர்கள்.

**மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு துறையூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அவரது தொகுதியைச் சார்ந்த மணிகண்டன் என்னும் மாணவர் சர்வதேச காது கேளாதோர் தடகள விளையாட்டுப் போட்டியில் பங்குபெற நிதி உதவியும், உபகரணங்களும் வழங்கக் கோரியுள்ளார்.

அரசு விதிமுறைகளின்படி, சர்வதேச அளவிலான அங்கீகாரம் பெற்ற போட்டிகளில் கலந்துகொள்ள வெளிநாடுகளுக்குச் சென்று வர விமான கட்டணமாக ரூ.30,000 வழங்கப்படும். அவர் போட்டியில் கலந்து கொண்டு, உரிய ஆவணங்களை அரசுக்கு வழங்கிய பிறகு நிதியுதவி வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அவர் பயிற்சி பெற திருச்சியில் உள்ள அண்ணா மாவட்ட விளையாட்டு அரங்கத்திற்குச் சென்றால் உரிய பயிற்சியும், தேவையான உபகரணங்களும் இலவசமாக வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–20*

## 3. விதி 110–ன்கீழ் அறிக்கை

### 'தமிழ்நாடு' பொன்விழா ஆண்டு கொண்டாடுதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள், அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை படிக்கின்றார், அதனைக் கேளுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை படிக்கின்றார்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் வரலாறும், தமிழ் மக்களின்



*2018 ஜனவரி 11*][திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

பண்பாடும் மிகவும் தொன்மை வாய்ந்தவை ஆகும். "பூமியில் முதல் மனிதன் தோன்றியது தமிழ் பேசும் நிலத்தில்தான்" என்று மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் சொல் ஆராய்ச்சிகளால் விளக்கியுள்ளார்.

"வட வேங்கடம் தென்குமரி ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகம்"

என்று வடக்கே வேங்கட மலை முதல் தெற்கே குமரி வரை தமிழ்நாடு, சீரோடும் சிறப்போடும் விளங்கியதை வரையறுத்துச் சொல்கிறார்.

தொடர்ந்து இருபதாம் நூற்றாண்டில் இணையில்லா தமிழ்ப்பெருங்கவியாய் விளங்கிய மகாகவி பாரதியார்,

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே–தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"

என்றும்,

"கல்வி சிறந்த தமிழ்நாடு–புகழ்
கம்பன் பிறந்த தமிழ்நாடு"

என்றும், தமிழ்நாடு என்ற உணர்வோடு பாடி அன்றைக்கே பரவசப்படுத்தினார்.

"நம் நாடு தமிழ்நாடு,
நாமெல்லாம் தமிழ் மக்கள்"

என்று புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசனார் ஆணித்தரமாக உரைத்தார். இவ்விதமாக ஆளுமைத் திறன்கொண்ட தமிழ்ப் புலவர்கள் 'தமிழ்நாடு' என்று வாயாரப் பாடி மனதார அழைத்த நாடு நம் தமிழ்நாடு!

நம்மோடு, ஆந்திரம், கர்நாடகம், கேரளம் இணைந்து 'பிரசிடன்சி ஆப் மெட்ராஸ்' என்று ஆங்கிலத்திலும், 'சென்னை மாகாணம்' என்று தமிழிலும் அழைக்கப்பட்டு வந்த நிலையில், இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி மாநிலப் பிரிவினை ஏற்படுத்தப்பட்ட பிறகு, 'சென்னை மாகாணம்' என்னும் பெயரை மாற்றி 'தமிழ்நாடு' எனப் பெயர் மாற்றப்பட வேண்டும் என்று அன்றைக்கு ஆளுங்கட்சியாக இருந்த காங்கிரஸ் அரசின்முன் 1956, ஜூலையில் கோரிக்கையினை தியாகி சங்கரலிங்கனார் அவர்கள் முன்வைத்தார்கள்.

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2018 ஜனவரி 11

பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையிலான அரசு அமைந்தவுடன், 1967 ஆம் ஆண்டு அப்போதைய சென்னை மாகாணத்திற்கு 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்ட, சட்டமன்றப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, 1969 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14 ஆம் நாள் 'தமிழ்நாடு' என்று நமது மாநிலத்திற்கு பெயர் சூட்டப்பட்டது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் 2–வது உலகத் தமிழ் மாநாட்டினையும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 5–வது உலகத் தமிழ் மாநாட்டினையும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 8–வது உலகத் தமிழ் மாநாட்டினையும் சிறப்பாக நடத்தி, தமிழின் பெருமையையும், தொன்மையையும் உலகறியச் செய்தார்கள்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழுக்கென்று தனி பல்கலைக்கழகத்தை தஞ்சாவூரில் நிறுவினார்கள். மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கத்தை தோற்றுவித்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழுக்கு மேலும் பெருமை சேர்க்கும் வகையிலும், தமிழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் வகையிலும் சித்திரை முதல் நாளை மீண்டும் தமிழ்ப் புத்தாண்டாக அறிவித்தார்கள். உலக நீதி நூலான திருக்குறளை அதிக மக்கள் பேசும் சீன, அரபு மற்றும் கொரிய மொழிகளிலும், பாரதியார், பாரதிதாசன் பாடல்கள் மற்றும் ஔவையாரின் "ஆத்திச்சூடி" ஆகியவை சீன மற்றும் அரபு மொழிகளிலும் மொழிபெயர்த்து தமிழர்களின் பெருமைகளை உலகறியச் செய்தார்கள். தமிழ் அறிஞர்களை சிறப்பிக்கும் வகையில் "முதலமைச்சர் கணினித் தமிழ் விருது", "தமிழ்த் தாய் விருது", "தமிழ்ச் செம்மல் விருது", "அம்மா இலக்கிய விருது" போன்ற 55 விருதுகளை அறிவித்தார்கள்.

தமிழுக்கு மேலும் மகுடம் சூட்டும் வகையில், தமிழ் மொழியின் தொன்மை, இலக்கியம், இலக்கணம் மற்றும் பண்பாடு தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு, தமிழ் மொழியின் சிறப்பினை ஆவணப்படுத்தி உலகெங்கும் கொண்டு செல்ல அமெரிக்காவில் உள்ள ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைக்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அம்மாவின் அரசு 10 கோடி ரூபாய் வழங்கி உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)



2018 ஜனவரி 11] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

வரும் ஜனவரி 14 ஆம் நாள், வரலாற்றுச் சிறப்புமிக்க நமது மாநிலம் 'தமிழ்நாடு' என்ற பெயரோடு 50–வது ஆண்டில் காலடி எடுத்து வைப்பதை முன்னிட்டு (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு பொன்விழா ஆண்டாக மாண்புமிகு அம்மாவின் அரசு கொண்டாட முடிவு செய்துள்ளது என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நம் கண் போன்ற தமிழ் மொழி மற்றும் தமிழர்களின் பெருமையைப் பறைசாற்றும் வகையில், கலை, விளையாட்டு, கட்டுரை, கவிதை, பேச்சுப் போட்டி போன்ற நிகழ்ச்சிகள் சென்னையிலும், அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பாக நடத்தப்படும். தமிழ் ஆராய்ச்சியில் சிறந்து விளங்கும் இளம் தமிழ் ஆய்வாளர்கள் தெரிவு செய்யப்பட்டு, சென்னையில் நடைபெறும் நிறைவு விழாவில் இவர்கள் அனைவரும் சிறப்பிக்கப்படுவார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அம்மாவின் அரசு, "தமிழுண்டு, தமிழ் மக்களுண்டு– இன்பத் தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு" என்ற பாவேந்தரின் வரிகளுக்கேற்ப தமிழ் மொழியையும், தமிழ்நாட்டையும் கண்ணின் மணி போல தொடர்ந்து காத்து வரும் என்பதை இந்த மாமன்றத்தில் பெருமையோடு தெரிவித்துக்கொண்டு அமைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–25

## 4. 'தமிழ்நாடு' பொன்விழா ஆண்டு கொண்டாடுதல் குறித்த முதலமைச்சரின் அறிவிப்பிற்கு நன்றி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அறிவிலே தெளிவு, நெஞ்சத்திலே உறுதி, அகத்திலே அன்பினோர் வெள்ளம், பொறிகளின்மீது தனி அரசாணை, பொழுதெல்லாம் இறைப் பேரருள், நெறியிலே நாட்டம்" என்ற பாரதி கண்ட புதுமைப் பெண்ணாய் வாழ்ந்து, உலகத் தமிழினத்தின் ஒரே அடையாளமாக உயர்ந்து ஓங்கி நிற்கும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு முதல் வணக்கம்.

[திரு. க. பாண்டியராஜன்] [2018 ஜனவரி 11

(மேசையைத் தட்டும் ஒலி) புத்தம் புதிய கலைகள் பஞ்சபூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும் "மெத்த வளருது மேற்கே, அந்த மேன்மைக் கலைகள் தமிழிலே இல்லை, சொல்லவும் கூடுவதில்லை, அவை சொல்லும் திறமை தமிழ்மொழிக்கு இல்லை, மெல்லத் தமிழ் இனி சாகும் அந்த மேற்கு மொழிகள் புவி மிசை ஓங்கும்" என்று கூறிய பேதைக்கு மாற்றாக, "சென்றிடுவீர் எட்டுத்திக்கும், கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்" என்ற பாரதியின் வார்த்தைக்கிணங்க, தமிழகத்தின் பொன்விழா ஆண்டை, தமிழ் மொழி, கலை, பண்பாடு ஆகிய அனைத்து விழுமியங்களின் உன்னத உயரத்தைத் தொடும் பொன்விழாவாக உருமாற்ற 11 முத்தான திட்டங்களுக்கு ஆணை பிறப்பித்து, இந்த வருடம் 2018 என்பதை, தமிழ் கலை, தமிழ் மொழி, தமிழ்ப் பண்பாட்டின் உன்னத உயரத்தைத் தொடும் ஆண்டாக அறிவித்திருக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும் இதயம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 11 திட்டங்களில், தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தனித் தன்மையை மீட்டெடுத்தல், இசை/கவின் கலைப் பல்கலைக்கழகத்திற்கு உயிரூட்டல், உலகமெங்கும் தமிழ் வளர் மையங்களை உருவாக்குதல், இசை நடனப் பள்ளிகளை உலகமெங்கும் ஒருங்கிணைத்து, தமிழ்ப் பண்பாட்டு மையத்தை அமைத்திடுதல், 'ஒன்றே பாரதம் உன்னத பாரதம்' திட்டத்தின்கீழ் ஜம்மு மற்றும் காஷ்மீரில் 100 பள்ளிகளில் தமிழ் கற்றுக் கொடுக்கும் வாய்ப்பளித்தல், தமிழ் corpus–சொற்குவை என்ற திட்டத்தின் மூலமாக மாதத்திற்கு 1,000 சொற்களை தமிழுக்கு வரமாக அளித்தல் மற்றும் ஹார்வர்டு தமிழ் இருக்கை, டொரான்டோ தமிழ் இருக்கை, மொரீஷியஸ் தமிழ் இருக்கை என்று நோக்கும் திசையெல்லாம் தமிழ் ஆய்வை மிளிரச்செய்து, இதை ஒருங்கிணைத்து ஒரு research portal–ஆராய்ச்சி நுழைவாயில் அமைத்தல் மற்றும் 36 அருங்காட்சியகங்களையும் தமிழர் தொன்மையினை உலகத்திற்கு உணர்த்தும் தரம் மிக்க வரலாற்றுக் காட்சிக் கூடங்களாக உருமாற்றல், தமிழர் தொன்மையினைக் கண்டெடுத்த சான்றுகளாக கீழடி, கொற்கை, ஆதிச்சநல்லூர் அழகன்குளத்தில் அகழ்வைப்பகங்கள், மதுரையில் உலகத் தமிழ் அமைப்புகளின் பங்களிப்புடன் 50 கோடியில் தமிழர் பண்பாட்டு மையத்தை உருவாக்குதல், நமது பண்பாட்டின் ஆணிவேர்களான 12,000 கலைக் குழுக்களை அடையாளப்படுத்தி வெளிச்சம் தந்து, வலுப்படுத்துதல் ஆகிய அனைத்துத் திட்டங்களுக்கும் ஆக்கமும் ஊக்கமும் தந்து, UNESCO இசை நகரமாக இன்றைக்கு சென்னையை



2018 ஜனவரி 11] [திரு. க. பாண்டியராஜன்]

அறிவித்ததன் நீட்சியாக இந்தப் பொன்விழா ஆண்டை தமிழ்க் கலை, தமிழ்ப் பண்பாடு, தமிழ் மொழியின் உன்னத உயரத்தின் ஆண்டாக அறிவித்திருக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 'மெல்லத் தமிழ் இனி ஓங்கும், மெல்லத் தமிழ் இனி வெல்லும்' என்று சூளுரைத்த இருவருக்கும் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

[2018 ஜனவரி 11

## (ஆ) தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கைகள் வரிச் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கைகள் வரிச் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

*முற்பகல் 11–30*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*“2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கைகள் வரிச் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (இ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*



2018 ஜனவரி 11]

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*“2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”*

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன், என்ன சொல்லுங்கள். இந்தச் சட்டமுன்வடிவை ஆதரிக்கிறீர்களா அல்லது எதிர்க்கிறீர்களா என்று சொல்லி முடியுங்கள்.

**திரு. மா. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஆரம்ப நிலையிலேயே எதிர்க்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை ஆரம்ப நிலையிலேயே காங்கிரஸ் கட்சி எதிர்க்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், என்ன சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை ஆரம்ப நிலையிலேயே இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பாக எதிர்க்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (ஈ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.





## (உ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

[2018 ஜனவரி 11

## (ஊ) தமிழ்நாடு உள்ளாட்சி மன்றங்களின் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி மன்றங்களின் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி மன்றங்களின் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.



2018 ஜனவரி 11]

## (எ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, சொல்லுங்கள்.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயகப் படுகொலையாக தொடர்ந்து தனி அலுவலர் பதவி நீட்டிப்பிற்காக, கிராம ஊராட்சிகளுக்குத் தேர்தல் நடத்தாத இந்தச் சட்டமுன்வடிவை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக கடுமையாக எதிர்க்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனி அலுவலர்களின் பதவிக் காலத்தை நீட்டிக்கக்கூடிய 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவை ஆரம்ப நிலையிலேயே காங்கிரஸ் கட்சியின் சார்பாக எதிர்க்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை ஆரம்ப நிலையிலேயே இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பாக எதிர்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஏ) தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம், சென்னை (திருத்தம்) சட்டமுன்வடிவு, 2018

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம், சென்னை (திருத்தம்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம், சென்னை (திருத்தம்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.





ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

முற்பகல் 11–35

## 6. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது மேலும் விவாதம். தீர்மானத்தை வழிமொழிந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், இன்றைக்கு நிறைய அலுவல்கள் இருப்பதனால் நேரம் அதிகமாக இல்லை. விரைவாக அலுவல்களை முடிக்க வேண்டியிருப்பதால், தங்களது உரையை 15 நிமிடங்களில் நிறைவு செய்யும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. என். முருகுமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னிகரற்ற தலைமைப் பண்பு; வியக்க வைக்கும் அறிவாற்றல்; அசைக்க முடியாத மன உறுதி; உறுதியான தன்னம்பிக்கை; தெளிவான சிந்தனை; திறமையான திட்டமிடல்; துணிச்சலான நிருவாகம்; எதிர்ப்புகளை எதிர்கொள்ளும் தீரம்; எவருக்கும் அஞ்சாத வீரம்; ஏழு மொழிகளில் சரளமாகப் பேசும் பேச்சுத்திறன்; ஏனைய மாநிலங்கள் பின்பற்றும் ஆட்சித்திறன்; தவறு செய்தவர் எவராயினும் தண்டிக்கும் குணம்; ஏழைகளைக் கண்டு இரக்கம்கொள்ளும் மனம்; இத்தனை அருங்குணங்களோடு இந்தியத் துணைக் கண்டத்தையே தன் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்த மகத்தான மக்கள் தலைவர்! (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. என். முருகுமாறன்] [*2018 ஜனவரி 11*

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

பாமரர் முதல் படித்தவர் வரை "அம்மா" என்று அழைத்த ஒற்றைச் சொல்லுக்கு சொந்தக்காரர். மூலையில் கிடந்த என்னை, இம்மாமன்றத்திற்குக் கொண்டுவந்த பெருமாட்டியார். நினைவாலும், கனவாலும் எங்களை ஆளும் தாயார்! மாண்புமிகு அம்மா அவர்களின் பொன்னடிகளைப் போற்றி முதற்கண் வணங்குகின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "எதையும் தாங்கும் இதயம் வேண்டும்" என்றார் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள். அந்த இதயத்தை இன்று பெற்று "போற்றுவார் போற்றட்டும், புழுதிவாரி தூற்றுவார் தூற்றட்டும்; என் கடன் பணி செய்து கிடப்பதே" என்றெண்ணி, நாடும் ஏடும் போற்றிட, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் நல்லாட்சியினை நடத்தி வருகின்ற சேலத்துச் சிங்கம்; தமிழர்களின் தங்கம்; *(மேசையைத் தட்டும் ஒலி)* எங்கள் அங்கம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சம் நிறைந்த வணக்கத்தையும், நன்றியினையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "நன்றி மறப்பது நன்றன்று" என்ற வள்ளுவப் பேராசானின் வைர வரிகளுக்கு இலக்கணமாக, *2011* ஆம் ஆண்டைத் தொடர்ந்து, *2016* ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றப் பொதுத் தேர்தலில் வென்று, இன்று உங்கள் முன் நின்று உரையாற்றுவதற்கு, எனக்கு வழியாகவும், விழியாகவும் இருந்த சோழமண்டலத்தின் கழகக் காவலர், கழகத் துணை ஒருங்கிணைப்பாளர் நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர், எங்கள் ஆருயிர் அண்ணன் திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்களுக்கும், *(மேசையைத் தட்டும் ஒலி)* கடலூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர், கடலூர் நாடாளுமன்ற உறுப்பினர் அன்பிற்கினிய அண்ணன் திரு. ஆ. அருண்மொழிதேவன் அவர்களுக்கும், சாதியை சாய்த்து, சாதனைகளை நிலைத்து, எனக்கு வாக்களித்து வெற்றிபெற வைத்த காட்டுமன்னார்கோவில் தொகுதிவாழ் வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய இதயங்கனிந்த நன்றியினை அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.



*2018 ஜனவரி 11*] [திரு. என். முருகுமாறன்]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாபிலோன் தொங்கும் தோட்டத்தை சின்னக் குழந்தையின் சிரசிலே வைத்ததைப்போல், எளியவன் என்னை பதினைந்தாவது சட்டமன்றப் பேரவையின் கூட்டத் தொடரில் தொடர்ந்து இரண்டாவது முறையாக இம்மாமன்றத்தில் மேதகு ஆளுநரின் உரையை வழிமொழிந்து உரையாற்றுகின்ற உயர்ந்ததோர் சந்தர்ப்பத்தினை உளமார உவந்தளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரான தங்களுக்கும் மற்றும் மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்களுக்கும் என்னுடைய உளங்கனிந்த நன்றியினை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிகழும் திருவள்ளுவராண்டு *2048*, ஹேவிளம்பி, மார்கழி திங்கள் *24* ஆம் நாள், *2018* ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் *8* ஆம் நாள், மேதகு ஆளுநர் அவர்கள் "பாதங்கள் இவையன்னில் படிவங்கள் எத்தனையோ" என கம்பன் சொன்னதைப்போல் மிகுந்த உற்சாகத்தோடு, உவகைப் பெருக்கோடு, உள்ளன்போடு, எழுச்சியோடு, ஏற்றத்தோடு, பெருமையோடு நல்வாழ்த்துகளோடு தனது உரையை ஆற்றியிருக்கின்றார்.

மேதகு ஆளுநர் அவர்களின் உரை, உயிர்த் தமிழில் *50* பக்கங்களையும், ஆங்கிலத்தில் *51* பக்கங்களையும் கொண்டதாக அமையப் பெற்றுள்ளது.

தமிழ் மாதம் மார்கழி திங்கள் *24* ஆம் நாளை முழுமைப்படுத்திக் கூட்டினால் "*6*" என்ற எண் வருகின்றது. ஆங்கில மாதம் ஜனவரித் திங்கள் *8* ஆம் நாளை முழுமைப்படுத்திக் கூட்டினால் "*8*" என்ற எண் வருகின்றது. இந்த எண்கள் எதைக் காட்டுகின்றன என்றால், "ஆறு எப்பொழுதும் முன்னோக்கிதான் செல்லும், ஒருபோதும் பின்னோக்கி செல்லாது". கணித எண்களில் எந்த எண்ணை எழுதினாலும் கீழே முடியும். ஆனால் "*8*" என்ற எண்ணை எழுதினால் மேலே முடியும். ஆக, "*8*" என்ற எண் எதைக் காட்டுகிறது என்றால், இந்த ஆட்சி தொடர்ந்து முன்னே செல்லும், ஒருபோதும் பின்னோக்கிச் செல்லாது என்பதைக் காட்டுகிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

[திரு. என். முருகுமாறன்] [2018 ஜனவரி 11 முற்பகல் 11–40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வானம், வானவில்லுக்கு வளைகாப்பு நடத்துகின்ற ஒரு வசந்த காலத்தில் சாரங்கன் உதிர்த்த சரமழையா அல்லது வானம் அவிழ்த்துவிட்ட வண்ண மழையா என மேதகு ஆளுநர் உரை, அணுக்கள்தோறும் அன்பே ஊறுகின்ற கணுக்கள் இல்லாத கரும்பாய் இனிக்கிறது. குற்றால அருவியாய், கொல்லிமலை தேனாய், வற்றாத நதியாய், வாசமுள்ள ரோஜாவாய் ஒவ்வொருவர் கரங்களிலும் வலம் வருகின்றது. பூ மணக்க, பால் மணக்க, புதுப் பொங்கல் நெய் மணக்க, வாயார, மனதார வழிமொழிந்து முதலில் நான் வரவேற்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு தமிழக ஆளுநர் அவர்களின் உரையை பார்த்து பலரும் பல்வேறு கருத்துகளை வெளிப்படுத்தி உள்ளார்கள். இம்மாமன்றத்தில் சட்டமன்றப் பிரதிநிதிகளாக உள்ளவர்களும், பிரதிநிதிகள் அற்ற அரசியல் கட்சித் தலைவர்களும், அரசியல் நோக்கர்களும், பொதுமக்களும் தங்களுக்குப் புலப்பட்ட கருத்துகளை வெளிப்படுத்தி உள்ளார்கள். பலர் பாராட்டியும், சிலர் ஏமாற்றம் அளிக்கிறது என்றும், சிலர் சம்பிரதாயமான அறிக்கை என்றும், ஆளுநர் உரை வெறும் கண் துடைப்பு என்றும் தங்கள் பார்வையை, அதாவது தங்கள் கருத்தை வெளிப்படுத்தி இருக்கின்றார்கள். இதிலே முக்கியமாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், ஆளுநர் உரை என்பது 'மஸ்கோத் அல்வா' போல் அமைந்துள்ளது என்று தன்னுடைய கருத்தை வெளிப்படுத்தி இருக்கின்றார். "இலக்கியத்திறன்" என்னும் நூலில் ஆசிரியர் மு.வ. அவர்கள் இரண்டு பார்வையை படம் பிடித்துக் காட்டுகிறார். "விண்ணை இடிக்கும் தலை இமயம்" என்பது கலை, அதாவது ஒரு கலைஞரின் பார்வை. விண் என்று ஒன்று இல்லை என்றும் இமயமலைச் சிகரம் எதுவும் அந்த விண்ணைத் தாங்கி இடிப்பதும் இல்லை என்றும் இருபத்தொன்பதாயிரத்து நூற்று நாற்பத்தோரடி உயரம் உடையது என்றும் அறிவது அறிவியல். அதாவது ஓர் அறிவியல் அறிஞரின் பார்வை. எனவே, ஓர் உரையைப் படிக்கும்பொழுது, பார்க்கும்பொழுது ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு பார்வை, அதாவது கருத்து தோன்றுகிறது. அந்த வகையில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஆளுநர் உரை, மஸ்கோத் அல்வாபோல் அமைந்துள்ளது என்று தனது பார்வையை வெளிப்படுத்தியிருக்கின்றார்.



[திரு. என். முருகுமாறன்]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய பார்வையில் அவர் சொன்ன கருத்தைப் பார்க்கையில், மஸ்கோத் அல்வா எல்லோருக்கும் பிடித்த இனிப்புதான். எங்களுக்கும் மிகவும் பிடிக்கும், நாட்டு மக்களுக்கும் மிகவும் பிடிக்கும். எங்கள் மாவட்டத்தில் பரங்கிப்பேட்டையில் தயாரிக்கின்ற மிகவும் பிரசித்திப்பெற்ற இனிப்பு வகைகளில் ஒன்று மஸ்கோத் அல்வா. வெளிநாடுகளுக்குச் செல்கின்ற நம்முடைய சகோதர சகோதரிகள் அங்குள்ள நண்பர்களுக்குக் கொடுக்க நாள்தோறும் வாங்கிச் செல்கின்றனர். ஆக, உலகப் புகழ்பெற்ற இனிப்பு, மஸ்கோத் அல்வா ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) மஸ்கோத் அல்வா தயாரிக்க, கோதுமை மாவு, சர்க்கரை, பாதாம், பிஸ்தா, முந்திரி, திராட்சை, ஏலம், நெய் பயன்படுத்தப்படுகிறது. இதில் உடலுக்குக் கேடான பொருள் ஒன்றும் இல்லை என்பதை நான் ஆணித்தரமாக முதலிலே இங்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சர்க்கரை நோயாளிக்கு நான் பொறுப்பேற்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் இந்த ஆளுநர் உரையை மறைமுகமாகப் பாராட்டி இருக்கின்றார் என்றுதான் என்னால் உணர முடிகிறது. குறையாகச் சொல்லியிருந்தால் அது அவருடைய பார்வையின் குற்றமே தவிர, உரையில் எந்தக் குற்றமுமில்லை என்பதை நான் இந்த அவைக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையில் பக்கம்–4, பத்தி–4–ல் நிதிநிலை மேலாண்மையில் தமிழ்நாடு அரசு மிகப் பொறுப்புடனும், கவனத்துடனும் செயல்பட்டு வருவதால் பொருளாதார மந்த நிலை போன்ற கடுமையான சூழ்நிலைகளையும் இந்த அரசு சமாளித்து வந்துள்ளது. மாநில வருவாயில் எதிர்பாராத இழப்புகள் ஏற்பட்டுள்ளபோதும், மாநிலத்தின் நிதிநிலை சீராகவும், சிறப்பாகவும் பராமரிக்கப்பட்டு வருகிறது. வருவாய் வரவுகளின் வளர்ச்சி குறைந்து, வருவாய்ப் பற்றாக்குறை கடுமையாக உயர்ந்து வரும் நிலையிலும்கூட, நிதிப் பற்றாக்குறையையும், மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் கடனின் விகிதத்தையும் வரையறுக்கப்பட்ட அளவிற்குள் இந்த அரசு தொடர்ந்து கட்டுக்குள் வைத்திருக்கிறது. தற்போது நிலவி வரும் கடுமையான நிதி நெருக்கடியையும் சமாளித்து அரசுப் பணியாளர்கள் மற்றும் ஒப்பந்த ஊதியதாரர்களுக்கு ஏழாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளையும் பல்வேறு மக்கள்

[திரு. என். முருகுமாறன்] [2018 ஜனவரி 11

நலத் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டையும் குறைக்காமல், அத்திட்டங்களையும் இந்த அரசு தொடர்ந்து நிறைவேற்றி வருவது, நாமெல்லாம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பல்கலைக்கழகத்தில் முறையாகப் பயின்று மக்கள் நலன் காக்கும் அரசாக உள்ளதைக் காட்டுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் அரசு தடம் மாறாமல் நடந்து வருகிறது என்பதற்கு இந்த ஆளுநர் உரை காலக்கண்ணாடியாய் இருந்து வருகிறது.

*முற்பகல் 11–45*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவையில் மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையில் மறைந்த முன்னாள் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆழ்ந்த அறிவும், உள்ளார்ந்த சிந்தனைகளுமே இந்த அரசுக்குத் தொடர்ந்து வழிகாட்டியாக உள்ளன என்று குறிப்பிட்டிருப்பது இவ்வரசு மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் சிறிதும் பிறழாமல் வெற்றி நடை போடுகிறது என்பதற்கு நற்சான்றாக அமைந்திருக்கிறது.

தமிழக மக்களின் நல்வாழ்வுக்காகவும், வளர்ச்சிக்காகவும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆற்றிய அரும்பணிகள், எடுத்த துணிச்சலான முடிவுகள், உன்னதமான மக்கள் பணிகள் ஆகிய அனைத்தும் தமிழகத்தின் சமகால வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை. இத்தகைய மாபெரும் மக்கள் தலைவருக்கு மரியாதை செலுத்தும்விதமாக அவரது தன்னலமில்லா வாழ்வுக்கு பொருத்தமாக மெரினா கடற்கரையில் மிகப் பெரிய நினைவு மண்டபத்தை அமைக்க இந்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது தமிழக மக்களின் பாராட்டினைப் பெற்றுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

தனது ஆட்சிக் காலத்தில் செய்நன்றி மறவாது, செஞ்சோற்று கடன் தீர்க்க வழி செய்திட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும் என்றும் தமிழ்கூறும் நல்லுலகம் போற்றிப் பாராட்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விண்ணிலும், மண்ணிலும் இடம் பிடித்து தமிழ் மண்ணில் உள்ள எட்டு கோடி தமிழர்களின் இதயங்களிலும் நீக்கமற நிறைந்திருக்கின்ற இதய தெய்வம் மாண்புமிகு அம்மா



[திரு. என். முருகுமாறன்]

அவர்கள் வாழ்ந்து, மறைந்த போயஸ் தோட்ட இல்லத்தை அரசுடைமையாக்கி, நினைவிடமாக மாற்ற வேண்டுமென்ற வேண்டுகோளை ஏற்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்ற அறிவிப்பு உலகெங்கும் வாழும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஒன்றரை கோடி கழகத் தொண்டர்களுக்கும் மிகுந்த மகிழ்ச்சியும், மன நிறைவும் ஏற்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் உலகெங்கும் வாழும் தமிழர்களின் நெஞ்சங்களில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மதிப்புயர்ந்துள்ளது. இது போற்றுதலுக்கும், பாராட்டுதலுக்கும் உரியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீழ்ந்து கிடக்கின்ற ஏழையெளிய மக்களின் வாட்டம் போக்கிட, நாட்டம் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லரசு அனைத்து அரிசி அட்டைதாரர்களுக்கும் ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் இதர பொருட்கள் அடங்கிய பொங்கல் பரிசுப் பொருட்களை வழங்கி, பொங்கலோ பொங்கல் என தமிழர் திருநாளைக் கொண்டாடிட வகை செய்திட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு தமிழ்கூறும் நல்லுலகு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்மொழியைப் பேணிக்காப்பதில் கழக அரசு என்றைக்கும் முழுமுனைப்புடன் செயல்பட்டு, உலகம் முழுவதும் தமிழ்மொழியின் ஆளுமையை, பெருமையை, மாண்பை, சிறப்பை பரவ, விரவ வழிவகுத்துள்ளது. கழக நிறுவனர் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் 5–வது உலகத் தமிழ் மாநாட்டை நடத்தி தமிழுக்குப் பல்கலைக்கழகம் கண்டார். அவரது ஒரே அரசியல் வாரிசான மாண்புமிகு அம்மா அவர்கள், 8–வது உலகத் தமிழ் மாநாட்டை நடத்தி, பேரறிஞர் அண்ணாவின் நூல்களை அரசுடைமையாக்கி, அறிவியல் தமிழ் என்னும் நான்காம் தமிழ் தந்து எட்டாத உயரத்திற்கு தமிழ்மொழியை இட்டுச் சென்றார். மேலும், சித்திரை மாதத்தை பத்திரமாக மீட்டு காத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர், மாண்புமிகு புரட்சித்

[திரு. என். முருகுமாறன்] [*2018 ஜனவரி 11*

தலைவி அம்மா ஆகியோரின் வழியில் நடக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கையினை நிறுவிட பத்து கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து பார்போற்ற தமிழைப் பெருமைப்படுத்தியதற்கு மேதகு ஆளுநர் அவர்கள் பாராட்டியிருப்பது பெருமைக்குரியதாகும். சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் அவர்களின் பெயரில் ஏற்படுத்தப்பட்டுள்ள விருது, பார் உள்ளவரை நிலைத்து நிற்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை பக்கம் 1, பத்தி இரண்டில் "அனைத்து மக்களையும் உள்ளடக்கிய சமூகப் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதுடன் அவர்களின் நலனை மேம்படுத்துவதையே அரசு நிருவாகத்தின் முக்கிய கொள்கையாகக் கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செயல்பட்டு வருகிறது. மறைந்த முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள் கண்ட தொலைநோக்குப் பார்வையை வழிகாட்டியாகக் கொண்டு, தமிழ்நாட்டை உன்னதமான மக்கள் நலன் பேணும் மாநிலமாக உருவாக்குவதற்கு அவர்கள் வகுத்துத் தந்த பாதையில் இந்த அரசு வழுவாது வெற்றிநடை போடுகிறது" என்று ஆளுநர் உரையில் குறிப்பிட்ட அந்த வரிகள் தங்கக் கிரீடத்தில் வைரக் கற்கள் பதித்ததைப்போல் மின்னுகின்றன, மிளிர்கின்றன. *(மேசையைத் தட்டும் ஒலி)* தொடர்ந்து மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையில் நடக்கும் ஆட்சி வெற்றி நடை போடும் என்பதற்கு இதுவே சாட்சியாக இருக்கும் என்பதை நான் இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை பக்கம் 8, பத்தி 7–ல் மாண்புமிகு அம்மா அவர்கள் உருவாக்கிய தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம், 2023–ல் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளையும், நோக்கங்களையும் எய்திட அரசு உறுதிபூண்டுள்ளது. சுகாதாரம், கல்வி, குழந்தைகள் நலன், சமூகப் பாதுகாப்பு போன்ற துறைகளில் தமிழ்நாடு அரசு பெரிய அளவில் நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது. இதன்மூலம் இளைஞர்கள், முதியோர்கள், நலிவடைந்த பிரிவினர்கள், பொருளாதாரப் பாதுகாப்பு பெறுவதற்காக இவ்வரசு வழிவகை செய்து, மாண்புமிகு அம்மா அவர்களின் இலட்சியங்களை



[திரு. என். முருகுமாறன்]

முன்னெடுத்துச் சென்று அவர் காட்டிய பாதையில் தடம் மாறாமல் தமிழக அரசு தொடர்ந்து பயணித்து மாநிலத்தின் மேம்பாட்டிற்கு வழிவகுக்கும் என நம்பிக்கை தெரிவித்திருப்பது மாண்புமிகு அம்மா அவர்களின் இலட்சியங்களை மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் வெல்வது நிச்சயம் என்பதை இந்த ஆளுநர் உரை காட்டுகின்றது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 11–50*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"வென்கோர் அமுதுண்டும்சாவ
யாரும் எண்ணாத நஞ்சுண்டு இருத்தல் செய்தாய்"

என்று ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் விளிக்கின்றார். அதன்பொருள் பாற்கடலை கடைகின்றபொழுது அதிலிருந்து வருகின்ற அமிழ்தத்தை தேவர்கள் உண்ணுகிறார்கள். நஞ்சை, விஷத்தை சிவபெருமான் உண்ணுகிறான். அமிழ்தத்தை உண்டவர்களெல்லாம் மாண்டு போகின்றார்கள். நஞ்சை அதாவது, விஷத்தை உண்ட சிவபெருமான் நிலைத்து நிற்கிறான். இன்று மகிழ்ச்சியில், பூரிப்பில், கேலியில், கிண்டலில் உள்ளவர்களெல்லாம் மறைந்து போவார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* சோதனைகளைத் தாங்கி, இழிசொல்லையும், பழிசொல்லையும் கேட்டு மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் நல்லாட்சி நடத்தி சாதனை படைக்கும் எம்பெருமான் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் நிலைத்து நிற்பார், தொடர்ந்து நல்லாட்சியை நடத்துவார். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2017 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 29 மற்றும் 30 ஆம் தேதிகளில் ஒகி புயலின் கோரத் தாண்டவத்தை கன்னியாகுமரி மாவட்ட மக்கள் சந்தித்தார்கள். பல்வேறு பாதிப்புகளின் சுவடுகளே தெரியாமல் நிவாரணப் பணிகளை உடனடியாகச் செயல்படுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு, போர்க்கால அடிப்படையில் மாநில அரசு மிகவும் சிறப்பாகவும் துரிதமாகவும் செயல்பட்டுள்ளது என்று குறிப்பிட்டிருப்பது பாராட்டுக்குரியது. மத்திய அரசின் உறுதியான ஆதரவை வெளிப்படுத்தி தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உடனடியாக 133 கோடி ரூபாயை முன்பணமாக வழங்கிய மாண்புமிகு பாரதப் பிரதமர்

[திரு. என். முருகுமாறன்] [*2018 ஜனவரி 11*

அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்திருப்பது தமிழர்களின் நன்றி உணர்வை மேதகு ஆளுநர் உரை காட்டுகிறது. சுனாமியின் சுவடு தெரியாமல் உலகுக்கு மாற்றிக் காட்டிய ஆட்சி, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சி. *(மேசையைத் தட்டும் ஒலி)* தானே புயலே வெட்கப்படுகின்ற அளவிற்கு சுவடு தெரியாமல் மாற்றிக் காட்டிய ஆட்சி, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி. *(மேசையைத் தட்டும் ஒலி)* வர்தா புயலின் வருகையே தெரியாமல் வண்ணத் தமிழ்நாட்டைக் காத்திட்ட ஆட்சி, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி. *(மேசையைத் தட்டும் ஒலி)* ஒகி புயலின் கோரக் காட்சிகளை நேரடியாகச் சென்று பார்த்து பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறி, தேவையான நிவாரணங்களை வழங்க உத்தரவிட்டவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் என்பதைப் பெருமையோடு இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காணாமல் போன கடைசி மீனவரைக் கண்டுபிடிக்கும்வரை மீட்பு நடவடிக்கைகளைத் தொடர இந்த அரசு உறுதிக் பூண்டுள்ளது என்பது கடைசி மனிதரைக்கூட மதிக்கின்ற, காப்பாற்றுகின்ற, மனிதநேயமுள்ள மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு என்பதற்கு ஒரு சாட்சியாக மேதகு ஆளுநர் உரை விளங்குகின்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைதி என்றால் அம்மா அரசு, அம்மா அரசு என்றால் அமைதி, அமைதி என்றால் கழக அரசு என்னும் வகையில் இனவாத, மதவாத, தீவிரவாத, பிரிவினைவாத, சாதிகளுக்கு இடம் தராமல், சாதிச் சண்டை, மதச் சண்டை, நில அபகரிப்பு, கள்ளச் சாராயம், கந்து வட்டிக் கொடுமை, கட்டப் பஞ்சாயத்து, கள்ள லாட்டரி கொடுமை ஆகியவை இல்லாத சமத்துவம் மிகுந்த, சகோதரத்துவம் நிறைந்த, ஒழுக்கமான, சட்டம்–ஒழுங்கைப் பராமரிக்கின்ற தமிழக அரசையும், மக்களையும் மேதகு ஆளுநர் அவர்கள் பாராட்டியிருப்பது மிகவும் போற்றுதலுக்குரியது, பெருமைக்குரியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தில்லையைக் காண நந்தன் வேண்டும். திருவிழாவைக் காண குழந்தைகள் வேண்டும். கண்ணனைக் காண மீரா வேண்டும். காவேரியைக் காண கரிகால் சோழன் வேண்டும். மழையைக் காண



[திரு. என். முருகுமாறன்]

மயில் வேண்டும். மயிலைக் காண பேகன் வேண்டும். அப்பரைக் காண அப்பூதி அடிகள் வேண்டும். அண்ணாவின் ஆட்சி காண அண்ணன் எம்.ஜி.ஆர். வேண்டும். அண்ணன் எம்.ஜி.ஆரின் ஆட்சி காண மாண்புமிகு அம்மா அவர்கள் வேண்டும், மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சி காண சேலத்துச் சிங்கம் அண்ணன் எடப்பாடியார் வேண்டுமென்பதை இந்த நேரத்திலே சொல்லி, *(மேசையைத் தட்டும் ஒலி)* குடிமராமத்துப் பணி, விவசாயிகளின் குடி காத்த பணி. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், உரையை முடியுங்கள்.

**திரு. என். முருகுமாறன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே நிமிடத்தில் உரையை முடித்து விடுகிறேன். ஆங்கிலேயர் அரசுக்குப்பின் வேளாண் பெருமக்களின் நலன் காக்க, எவருடைய சிந்தையிலும் உதிக்காத உன்னதத் திட்டத்தை நாடும், ஏடும் போற்றிய போற்று, தலுக்குரிய திட்டத்தை நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நிறைவேற்றியிருப்பது இன்றைக்கு தமிழ் மக்களின் நெஞ்சங்களில் பால் வார்த்ததைப் போல் உள்ளது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்த் தாயின் தலைமகனாய், தன்னிகரற்ற முதல்வராய், தமிழ் மண்ணில் தரணி போற்றும் நல்லாட்சி நடத்திய எங்கள் தாயை இழந்ததற்குப் பின்னாலும் தலை குனியாமல். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், உரையை முடியுங்கள்.

**திரு. என். முருகுமாறன்:** எவருக்கும் அடிபணியாமல் உயர்ந்து நிற்கின்ற உன்னதக் கழகம். . . *(மணியடிக்கப்பெற்றது)* உரையை முடித்து விட்டேன். *(குறுக்கீடு)* conclusion–தான். நாற்றல்ல, பிடுங்கி நடுவதற்கு. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள்.

*முற்பகல் 11–55*

**திரு. என். முருகுமாறன்:** நாடும் ஏடும் போற்றிட, கற்பக விருட்சகமாய் காலூன்றி, இந்தியாவின் மூன்றாவது பேரியக்கமாய் நிமிர்ந்து நிற்கின்ற இந்தக் கழக ஆட்சியை காளான் குடைக்குக்கீழ் முளைத்த சிறு புற்களால் ஒரு காலத்திலும் அழிக்க முடியாது,

வீழ்த்த முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) 'யானைக்கும் அடி சறுக்கும்' என்பார்கள். ஆம், ஓரடி சறுக்கியதால் யானை பூனையாகுமா? (மேசையைத் தட்டும் ஒலி) மக்களால் இழுக்காகி, மனமெல்லாம் அழுக்காகி போனவர்கள் நம் இயக்கத்தைத் தூற்றி வரலாம்; பழுக்கின்ற இடம் தேடிச் சென்று கொழுக்கின்ற நபர்கள் நம் பாதையில் முட்கள் இடலாம்; இலட்சிய ஆட்சியின் மாட்சி பொறுக்காதோர், வயிற்றெரிச்சலில் பேட்டி தரலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர், உரையை முடியுங்கள்.

**திரு. என். முருகுமாறன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அன்னைத் தமிழுக்கும், ஆருயிர் தமிழ் உறவுகளுக்கும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழியிலே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களும் இறுதி வரை உழைப்பார்கள். தமிழ்ச் சமுதாயம் உங்கள் பின்னே நிற்கும் என்று சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினைக் கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன் அவர்கள். உங்களுக்கு முன்பு பேசிய உறுப்பினர் போன்று சரியாக 15 நிமிடங்களில் உரையை முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுவதற்கு வாய்ப்பாகத்தான் இதைச் சொல்கிறேன்.

***திரு. பழனிவேல் தியாக ராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒன்று, 15 நிமிடங்களில் உரையை முடியுங்கள் என்று சொல்லுங்கள். இல்லையெனில், எனக்கு முன்பு பேசிய உறுப்பினர் போன்று பேசி உரையை முடியுங்கள் என்று சொல்லுங்கள். ஏனெனில், அவர் கிட்டத்தட்ட 25 நிமிடங்கள் பேசியிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேச காலதாமதமாகிவிடும். அதற்காகத்தான் சொல்கிறேன்.



**திரு. பழனிவேல் தியாக ராஜன்:** சரி. எனக்குப் பேச இந்த வாய்ப்பினை அளித்தமைக்கு எனது நன்றியை முதலிலே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் தளபதி அண்ணன் அவர்களுக்கும், உங்களுக்கும், எதிர்க்கட்சிக் கொறடா அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். முன்னெச்சரிக்கையாக உங்கள் எல்லோரிடமும் கொஞ்சம் நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில், இரண்டு மணி நேரத்திற்கு முன்புதான், எனக்குப் பேச இன்று வாய்ப்பு கிடைக்கும் என்பது உறுதியாகத் தெரிய வந்தது. அதனால், அவசர, அவசரமாக சில குறிப்புகளை எடுத்து வந்திருக்கிறேன்.

முக்கியமாக ஓர் ஆளுநர் உரை என்பது, எந்த விதிமுறையின் அடிப்படையில் இருக்க வேண்டும்; என்ன காரணத்திற்காக உருவாக்கப்பட்டது என்பதை நான் கொஞ்சம் ஆராய்ந்து பார்த்தேன். ஏனென்றால், இங்குள்ள பல உறுப்பினர்கள் 10 ஆண்டு காலங்கள் அரசியல் வாழ்க்கையில், பொது வாழ்க்கையில் இருந்திருக்கிறார்கள்; நான் 2 ஆண்டுகளாகத்தான் சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறேன். அந்த வகையிலும், ஒரு நல்ல மாணவன் என்ற வகையிலும், எல்லாவற்றையும் ஒழுங்காகப் படித்துதான் செயல்படுத்த வேண்டும் என்பதால் இந்திய அரசமைப்புச் சட்டம், பிரிவுகள் 175, 176 மற்றும் 87, President's Address ஆகிய எல்லாவற்றையும் ஆராய்ந்து பார்த்தேன். ஆராய்ந்து பார்த்தபோது, ஆளுநர் உரை எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றித் தெரிய வந்தது. அரசாங்கத்தின் வரும் வருடத்திற்கான முக்கிய Policy goals–இலக்குகள், எந்தெந்த area–வில் Legislation and Execution கொண்டு வரப்படும் என்பதைத் தெரிவிப்பதாக ஆளுநர் உரை இருக்க வேண்டும். அந்த வகையில் பார்த்தால், இந்த ஆளுநர் உரை, முன்பு இருந்த ஆளுநர் உரையுடன் compare பண்ணும்போது ஓரளவுக்குக் கொஞ்சம் சுமாராகத்தான் இருக்கிறது. பல விவரங்களுடன் இதுவரை என்னென்ன திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன என்று சொல்லப்பட்டுள்ளது. மேலும், இந்த ஆளுநர் உரையில், ரூ.200 கோடி, ரூ.300 கோடி, ரூ.500 கோடி என்ற சிறிய அளவிலான திட்டங்கள் பற்றிச் சொல்லப்பட்டிருக்கின்றன. ஒரு மாநில அரசாங்கம் ரூ.2 இலட்சம் கோடி நிதிநிலையில் நடைபெறும் நிலையில், முக்கியமான திட்டங்களை focus செய்யாமல், ரூ.200 கோடி, ரூ.300 கோடி அளவிலான சிறிய திட்டங்கள் பற்றிச் சொல்லியிருப்பதால், இந்த ஆளுநர் உரை ஓரளவிற்கு சுமாராகத்தான் இருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. இரண்டாவது, ஆளுநர் உரை என்பது. . .

[2018 ஜனவரி 11

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆளுநர் உரை, பக்கம் 29–ஐ கொஞ்சம் கவனமாகப் படித்துப் பார்க்க வேண்டும். அதில், இதுவரைக்கும் எந்த ஆளுநர் உரையிலும் இல்லாத அளவிற்கு ரூ.6,400 கோடி அளவிலான திட்டம் பற்றி உள்ளது. அத்திட்டம் பற்றி, திரு. அன்பழகன் அவர்கள்கூட, 100 மில்லியன் டாலர் என்றால் என்ன என்று மிகவும் அழகாகக் கேட்டார்கள். 6,400 கோடி ரூபாய் அளவிலான Tamil Nadu Rural Transformation Project என்பது இதுவரை எந்த ஆளுநர் உரையிலும் வராத project. MSME, Rural Development and Agriculture ஆகிய மூன்று துறைகளையும் ஒருங்கிணைத்து, Producers' Companies–ஐ உருவாக்கிச் செயல்படுத்தும் ரூ.6,400 கோடி அளவிலான புதிய திட்டம் இதிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. இது சித்தாந்தரீதியாகவும் நமக்குப் புதிது. ரூ.100 கோடி, ரூ.200 கோடி, ரூ.500 கோடி என்ற அளவிலான சிறிய திட்டங்கள் மட்டுமல்லாது, ரூ.6,000 கோடிக்கும் மேற்பட்ட ஒரு திட்டம் முதன்முறையாக இந்த ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன் அவர்கள்.

**திரு. பழனிவேல் தியாக ராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நான் நன்றி கூறுகிறேன். நான், ஆளுநர் உரையில் எதுவுமே நல்லது இல்லை என்று சொல்லவில்லை. ஆளுநர் உரையில் முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்கள் பற்றிய கருத்துகள் மட்டும் இருந்தால்தான் சரியாக இருக்கும் என்பதுதான் என்கருத்து.

சிறிய அளவிலான திட்டங்கள் இருக்கக் கூடாது என்று சொன்னால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஆளுநர் உரையில் நல்ல பெரிய திட்டம் இருக்கிறது என்று சொல்கிறார். நான் இல்லவே இல்லை என்று சொல்லவில்லை. நல்ல, பெரிய திட்டம் மட்டும் இடம் பெற்றிருந்தால் நன்றாக இருக்கும் என்று நான் சொன்னேன். ஆளுநர் உரையில் 10 மணி நேரம் பேச முடியாது.



2018 ஜனவரி 11] [திரு. பழனிவேல் தியாக ராஜன்]

அப்படியிருக்கும் நிலையில், பெரிய, பெரிய திட்டங்கள் visionary, big projects–க்கு முக்கியத்துவம் தர வேண்டும் என்று சொன்னேன். அதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஓர் உதாரணம் கூறினார். மிக்க மகிழ்ச்சி. நான் பேசும்போது, ஆளுநர் உரையில் இவையெல்லாம் இடம் பெற்றிருந்தால் நன்றாக இருக்கும் என்று சிலவற்றைச் சொல்கிறேன். சிறிய திட்டங்களுக்குப் பதிலாக பெரிய திட்டங்கள் இடம் பெற்றிருந்தால் நன்றாக இருக்கும் என்று சொல்கிறேன்.

நண்பகல் 12–00

ஆனால், அதே நேரத்தில் இன்னோர் அனுபவம் என்னவென்றால் May's Parliamentary Practice–ல் பார்த்தாலோ, தமிழ்நாடு வரலாற்றிலோ அல்லது இந்திய வரலாற்றிலோ பார்த்தால் ஆளுநர் உரையென்பது ஜனநாயகத்தின் முக்கியமான அடிப்படைத் திட்டம். ஏனென்றால், In democracy there is a separation between the Legislature and the Government. அரசாங்கம் முக்கியத்துவம் கொடுக்கின்ற திட்டங்களெல்லாம் ஆளுங்கட்சியோ, எதிர்க்கட்சியோ என்று பார்க்காமல் அதற்கு அப்பாற்பட்டு எந்தெந்தத் தொகுதிக்கு எது, எது முக்கியம் என்பது குறித்து இருக்க வேண்டும். அரசு கொடுத்திருக்கக்கூடிய திட்டங்களில் இதில் குறைவாக இருக்கிறது, இன்னும் நிறைய செய்யலாம் என்று ஆளுங்கட்சி உறுப்பினர்கூடப் பேசுகின்ற வரலாறு, international level-ல் யாரெல்லாம் பிரிட்டிஷ் சிஸ்டத்தை follow பண்ணுகிறார்களோ, அந்த வரலாறு இருக்கிறது. ஆனால், இது ஒரு குறையாக இருக்கிறது.

மூன்றாவது முறையாக நான் ஆளுநர் உரையைக் கேட்கிறேன். ஆளுங்கட்சியில் யாருமே திருத்தம் சொல்வதில்லை. எதிர்க்கட்சியிலே மட்டும் திருத்தம் சொல்கிறார்கள். அதுமட்டுமல்ல, நான் அரசியல் ரீதியாகப் பேச வேண்டாம் என்பதால் சொல்கிறேன். திருத்தங்களை நான் கடந்த முறை கொடுத்தேன். திருத்தங்களை நிரம்ப detail oriented ஆக, ரோடு, பாதாளச் சாக்கடை என்று நிறைய திருத்தம் கொடுப்பதற்குப் பதிலாக, ஆளுநர் உரையில் பெரிய கொள்கை திருத்தம் கொடுத்தால்தான் நன்றாக இருக்கும். இந்த ஆளுநர் உரையில் இவ்வளவு details கொடுக்க வேண்டியது ஏன் என்று ஓர் ஆராய்ச்சி செய்தேன். இந்த ஆராய்ச்சி வேறு ஒரு

கட்டுரை paper–ல் எழுதுவதற்காகச் செய்ததால் இந்த detail–ஐச் சொல்வது கொஞ்சம் useful ஆக இருக்கும் என்று நினைக்கிறேன்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்) தலைமை]

*1991–லிருந்து 1996 வரை 10–வது சட்டசபை. 1996–லிருந்து 2001 வரை 11–வது சட்டசபை. கடைசி 5, 6 சட்டசபைகளைப் பார்த்தால், 1991–லிருந்து 1996 வரை அ.தி.மு.க. ஆட்சி செய்யும்போது சட்டசபை சராசரியாக 40 நாட்கள் ஒரு வருடத்தில் கூடியது. 1996–லிருந்து 2001 வரை ஒரு வருடத்தில் 52 நாட்கள் கூடியது. அப்போது தி.மு.க. ஆட்சி நடந்தது. 2001–2006–ல் வருடத்திற்கு 37 நாட்கள்; இது அ.தி.மு.க. ஆட்சி. தி.மு.க. ஆட்சி இருக்கிறபோது சராசரி வருடத்திற்கு 48 நாட்கள் சட்டசபை கூடியிருக்கிறது.* உறுப்பினர்கள் தொகுதிப் பிரச்சினைகளையும், மசோதாக்களையும் நன்றாக விவாதம் செய்வதற்கு வாய்ப்பு இருந்திருக்கிறது. ஆனால், *அ.தி.மு.க. ஆட்சியில் இருக்கும்போது வருடத்திற்கு வெறும் 38.75 நாட்கள்தான் சராசரியாக கூடியிருக்கிறது.*

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

என் முதல் கோரிக்கை, ஆளுநர் உரையில் திருத்த வேண்டியது, தயவுசெய்து சட்டசபையின் role, பலத்தை, மாண்புகளை மேலும் வலுப்படுத்தி பல நாட்கள் சட்டசபை கூடவேண்டும். சட்டசபை கூடுவது என்பது குறைந்த நாட்களாக இருக்கிறது. இரண்டாவது, பல பெரிய structural problems என்பது, நாட்டிற்காக இந்தத் திட்டங்களையெல்லாம், இந்தப் பிரச்சினைகளையெல்லாம் நாம் ஆராய்ச்சி செய்து, அரசியலுக்கு அப்பாற்பட்டு ஒரு long term vision *5 வருடம், 10 வருடம் யார் ஆட்சியில் இருந்தாலும் செய்ய வேண்டுமென்ற வகையில். . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன் அவர்கள் சட்டமன்றம் கூடுகின்ற நாட்கள் அதிகரிக்கப்பட வேண்டுமென்ற கருத்தைச் சொல்கின்ற வகையில் இங்கே பேசிக் கொண்டிருக்கிறார்கள். நேற்றுகூட நம்முடைய சட்டமன்றக் கூட்டம் நடைபெற்றது. 10–00 மணிக்கு ஆரம்பித்த கூட்டம் 2–00 மணிக்கு முடிக்கப்பட வேண்டும். ஆனால், 4–51 மணி*





*வரை நடைபெற்றது. கூடுதலாக 3 மணி நேரம். இப்படி கூடுதலாக 3 முதல் 4 மணி நேரம் தினமும் நடைபெறுகின்றபோது உங்களுடைய கருத்துப்படியே அதையும் ஆராய்ச்சி செய்து பார்த்தால் அதிக நாட்கள் சட்டமன்றம் அண்ணா தி.மு.க. ஆட்சியில்தான் கூடியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**திரு. பழனிவேல் தியாக ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கடந்த முறை, முதல் முறையாக நிதிநிலை அறிக்கையில் பேசும்போது கணக்கு கணக்குதான் என்று சொன்னேன். என் பக்கமோ உங்கள் பக்கமோ ஆளுக்கு வேறு கணக்கு போட முடியாது. யாருக்கெல்லாம் கணக்கு போடத் தெரியுமோ அவர்கள் website–ல் போய், தேதிகளை எடுத்து அதை வருடங்களால் வகுத்தால் என்ன average? அவர் சொல்வது *நிமிடங்கள்; அவர் தவறாகச் சொல்கிறார். தினங்களில் நான் சொல்வது சரி.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிவேல் தியாக ராஜன், நீங்கள் சொல்வது நாள் கணக்கு. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் சொல்வது மணி கணக்கு. அதுதான் அதிகம். மணி கணக்கு போடும்போது அதிகம் வருகிறதல்லவா? அதுதான். வேறு ஒன்றும் அல்ல.

**திரு. பழனிவேல் தியாக ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாதிரி ஒரு கேள்வி வரும் என்ற காரணத்திற்காகவே நான் நிமிடக் கணக்கையும் போட்டு வைத்திருக்கிறேன். ஆனால், உறுதியாக எனக்குத் தோன்றுகிறது; முன்னாள் முதலமைச்சர், இப்போதைய துணை முதலமைச்சர் அவர்கள் கணக்கு போட்டிருக்க மாட்டார் என்று கருதுகிறேன். ஏனென்றால், நான் இப்போது சொல்கிறேன். *1996–லிருந்து 2001 வரை ஒரு வருடத்தில்* average *ஆக 210* hours *கூடியது ஆனால், 2001–2006–ல் 148* hours *தான் அ.தி.மு.க. ஆட்சியில் கூடியது.* No. of hours and minutes *பற்றிய குறிப்பு அரசாங்க* website*–ல் இல்லாததால் ஆராய்ச்சி பண்ண முடியவில்லை.* Website*–ல் இல்லாததால் என்னால் ஆராய்ச்சி செய்ய முடியவில்லை. துணை முதலமைச்சர் அவர்கள், ஏற்கெனவே நான் பேசப்போகிறேன் என்று தெரிந்து, நேற்றே* staff*–ஐ கூப்பிட்டு* analysis *செய்து வைத்திருக்கிறாரா? எப்படி அவர் சொல்கிறார்? அவர் சொல்கின்ற கருத்து தவறு என்ற கேள்வி எனக்கு உருவாகிறது.*

[2018 ஜனவரி 11

*பிற்பகல் 12–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையில் பேசுவோர் பட்டியலைப் பார்க்கும்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன் பெயர் அதில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் வற்புறுத்திக் கேட்டதனால்தான், நான் அவருக்கு அனுமதி கொடுத்தேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நாங்கள் எல்லோரும் அந்தப் பட்டியலை பார்த்தபோதுதான், சட்டமன்றத்தில் உட்கார்ந்த பிறகுதான், மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன் அவர்கள் பேசப் போகிறார் என்கின்ற தகவல் எங்களுக்குக் கிடைத்தது. ஆகவே, முன்கூட்டியே எதையும் நாங்கள் தீர விசாரணை செய்து உங்களுக்குப் பதிலாகத் தரவில்லை. நீங்கள் கேட்கின்ற கேள்விக்கு அவ்வப்போது பதில் தருகின்றோம். புள்ளிவிவரங்களின்படி கணக்கு பார்த்துச் சொல்ல வேண்டுமென்ற நிலை வருகின்றபோது, அதையும் சொல்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன் அவர்கள்.*

**திரு. பழனிவேல் தியாக ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு இங்கே பலர் கூறியதுபோல், காலையில்தான் வாய்ப்பு கொடுத்ததனாலும், பலர் பேச இருப்பதாலும் எனக்குக் கொடுத்த 15 நிமிடங்களில் 5 நிமிடங்கள் ஏற்கெனவே முடிந்துவிட்டன. மீதி 10 நிமிடங்கள்தான் இருக்கின்றன. தயவுசெய்து நான் தவறாகச் சொன்னால் மட்டும் என் உரையில் குறுக்கிட்டுச் சொல்லுங்கள். தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர்களிடம் கேட்டுக்கொள்வது, நான் சொல்கிற கருத்து கொஞ்சம் scientific ஆக, technical ஆக, visionary ஆக இருக்கிறது. தயவுசெய்து. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*



**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், "எனக்கு 12–00 மணிக்கு பேச வாய்ப்புக் கொடுக்க வேண்டும்" என்று சொன்னதன் அடிப்படையில், பேசுபவர்களை கொஞ்சம் நேரத்தைச் சுருக்கிப் பேசுமாறு கேட்டுக்கொண்டு வந்திருக்கின்றார். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதியில்லை. *(குறுக்கீடு)*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அது ஏற்கெனவே முடிவு செய்தது. *(குறுக்கீடு)* அது ஏற்கெனவே முடிவு செய்தது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் அதுகுறித்துப் பேசவேண்டாம், விட்டுவிடுங்கள். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் உட்காருங்கள். நான் பேசி முடித்துவிடுகிறேன். *(குறுக்கீடு)* நான் பேசி முடித்தபிறகு, நீங்கள் பேசுங்கள். *(குறுக்கீடு)* உங்களுக்கு எப்போது வேண்டுமானாலும் பேசுவதற்கு மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் வாய்ப்புக் கொடுக்கிறார்; பேசுங்கள். ஆகவே, அதற்குத்தான் 15 நிமிடங்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு வரையறுக்கப்பட்டது. நீங்கள் கூடுதலாகப் பேச வேண்டுமென்றால் பேசிக்கொள்ளலாம். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதியில்லை. அதுகுறித்துப் பேச வேண்டாம். அதை விட்டுவிடுங்கள். அது நாம் பேசியது; நாம் பேசியது வெளியில் ஒன்றும் வரவேண்டாம். நாம் பேசி முடித்துவிட்டோம், அதை விட்டுவிடுங்கள். *(குறுக்கீடு)* அதை விட்டுவிடுங்கள். பேசும்போது பேசலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன் அவர்கள்.

**திரு. பழனிவேல் தியாக ராஜன்:** மாண்புமிகு துணை முதல்வர் அவர்களின் பெருந்தன்மைக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்தபடியாக, மாநிலத்தின் சில முக்கியமான பிரச்சினைகளைப் பற்றி நான் பேச விரும்புகிறேன். இவையெல்லாம் ஆளுநர் உரையில் இடம்பெற்றிருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும் என்று நான் நினைக்கிறேன். முதலாவதாக, ground water level. தமிழ்நாடு முழுவதும் ground water recharge என்ற பிரச்சினை மிகப் பெரிய பிரச்சினையாகிவிட்டது. ஒன்று

வெள்ளம், flooding from rains, இன்னொன்று drought–வறட்சி. போன வருடத்தில் நாம் இரண்டு நிகழ்வுகளையும் பார்த்திருக்கிறோம். நாம், மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் மாநகராட்சிப் பகுதியில் உள்ள எல்லோரும் தண்ணீருக்காக எவ்வளவு கஷ்டப்பட வேண்டி இருந்தது என்பதை நன்றாக அறிவார்கள். அதே சமயம், monsoon வந்தபோது எவ்வளவு flooding இருந்தது என்பதையும் அறிவார்கள். It is a structural problem due to lack of ground water recharge. It is not a problem that can be solved by one system or one scheme or one project. But it is basically a review of the fundamental development of what all has happened wrong, across parties. I am not talking about any party, how can we improve this with the right scientific input and the right kind of technical support and look at other countries that have gone through this என்பதைப் பார்த்து தண்ணீர் மட்டத்தை எப்படி sustainable ஆக வைக்கலாம் என்பதற்கு ஒரு திட்டத்தை உருவாக்கியிருக்கலாம். அது, அதில் இடம் பெற்றிருந்தால் நன்றாக இருந்திருக்கும். இரண்டாவது, urban congestion. நமது மக்கள் எண்ணிக்கையில், நிறைய பேர், பேரூராட்சிகள், ஊராட்சிகளிலிருந்து மாநகராட்சிகளுக்கு வந்து சேர்கின்றனர். இந்த urban congestion காரணமாக நமக்குப் பெரிய பிரச்சினை ஏற்படுகிறது. Drainage system is not able to keep up. Garbage disposal பிரச்சினையாக இருக்கிறது. இவ்வளவு குப்பையை அகற்றுவதற்கு வழியில்லை. அதுமட்டுமல்லாமல், traffic congestion–ம் வருகிறது. சென்னை போன்ற இடத்தில் நாம் public transport–Metro வசதி செய்திருக்கிறோம். மதுரை, கோயம்புத்தூர், திருச்சி போன்ற இடங்களிலும் இதுமாதிரி அறிவிக்கிறோம். ஆனால், ஓர் ஆராய்ச்சியை நான் இன்னும் செய்ய வேண்டுமென்று நினைக்கிறேன். நான் மூன்று வருடங்களுக்கு முன்னரே இதை ஒரு கோரிக்கையாக வைத்திருக்கிறேன். இதை ஒரு systematic approach to the whole problem of urban congestion and urban policy for renewal என்கின்றவரை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கொஞ்சம் உரையை முடியுங்கள். நேரமாகி விட்டது.

**திரு. பழனிவேல் தியாக ராஜன்:** எனக்கு உரையாற்ற 15 நிமிட நேரம் கொடுத்தீர்கள். இப்போது 8 நிமிடங்கள்தான் பேசியிருக்கிறேன். நீங்கள் அதற்குள்ளே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 15 நிமிடங்கள் ஆகிவிட்டன. அதனால்தான், நான் சொல்கிறேன்.



**திரு. பழனிவேல் தியாக ராஜன்:** நான் என் உரையை 12–00 மணிக்குத்தான் ஆரம்பித்தேன். தயவுசெய்து அவைக் குறிப்பைப் பாருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் 11–55 மணிக்கு உரையாற்ற ஆரம்பித்திருக்கிறீர்கள். உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. பழனிவேல் தியாக ராஜன்:** சரி. நீங்கள் எப்போது வேண்டுமானாலும் என் உரையை நிறுத்திவிடுங்கள். நான் பேசுகின்ற அளவுக்குப் பேசுகிறேன். தமிழ்நாட்டிற்கு ஒரு பெரிய பெருமை; High gross enrolment ratio. கிட்டத்தட்ட 48 சதவிகிதம் பேர் காலேஜுக்குச் செல்வதற்கு வாய்ப்பிருக்கிறது; உண்மைதான். இது திராவிடக் கொள்கையினால் 1920–ல் நீதிக் கட்சி ஆட்சியில் compulsory elementary education கொண்டு வந்ததிலிருந்து, எல்லாக் கொள்கைகளும் இதே நோக்கத்தில் இருப்பதனால் நமக்கு வந்த பெரிய பெருமை.

பிற்பகல் 12–10

we have a problem because most of the graduates are not able to find jobs. எனவே, நமக்கு வளர்ச்சி கஷ்டமாக இருப்பதனாலும், வேலைவாய்ப்பு கஷ்டமாக இருப்பதனாலும், large number of college graduates are not able to find employment. ஒரு நல்ல சமுதாயம், பொருளாதார வளர்ச்சிக்காகவும், சமுதாய மேன்மைக்காகவும் இருக்க வேண்டும். It should find a way to make the output of the education system match the requirements of the economic growth. அதாவது, பொருளாதாரத்தில் என்ன மாதிரி skills, என்ன மாதிரி தொழில்கள் தேவைப்படுகின்றனவோ, அதற்கேற்ற மாதிரி education system output வேண்டுமென்பது ஒரு பெரிய இலக்கு. அந்த இலக்கின் அடிப்படையில் high gross enrollment ratio என்ற பெருமையே நாளைக்குப் பிரச்சினையாகி, நிறைய பேர் வேலைவாய்ப்புகள் இல்லாமல் தவிக்கின்ற சூழ்நிலையில், கல்விக் கடனும் அதிகமாகின்ற சூழ்நிலையில், this is a way to match the economic needs to the growth என்பது பற்றி இடம்பெற்றிருந்தால் நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

[2018 ஜனவரி 11

**மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆங்கிலத்தில் பேசியதால், நானும் ஆங்கிலத்திலேயே சொல்கிறேன். தயவுசெய்து ஆளுநர் உரை, பக்க எண் 30–ல் Tamil Nadu Skill Development Mission has come up with the earth breaking project. It is a real real new scheme with Siemens what we have done, this was born out of the last Global Inverstors' Meet. The investment was done at that time. Five industries having competitive advantage have been identified, starting from automobile and automobile components, tourism and hospitality, healthcare, logistics and capital goods manufacturing, each of these sector– specific councils, these apex training institutions which is going to impart training to the master trainers, அம்மா அவர்கள் அறிவித்த ஒரு இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்புப் பயிற்சி என்பதை போட்டித் திறன் என்ற தத்துவத்தின் அடிப்படையில், உங்கள் language–ல் சொல்ல வேண்டுமென்றால் Michael Porter's competitive advantage base செய்து, ஒரு இலட்சம் இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்து, to absorb them in respective industries, industry linkages have been formed and to add to this, is the Tamil Nadu Rural Transformation Project which I had just mentioned, in which 3,20,000 jobs will get created. World Bank has lent Rs.6,426 crores to us, the State Government which has received the maximum loan in this year at the concessional rates from the World Bank. இரண்டு சதவிகித வட்டியில் பெற்று, 3,20,000 பேருக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தக்கூடிய அறிவிப்பு இந்த ஆளுநர் அறிக்கையில் இருக்கிறது என்பதை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:** அதோடு NEEDS–ல் ஒரு வருடத்திற்கு ஆயிரம் தொழில்முனைவோர்களை உருவாக்குவதற்காகத் திட்டம் தீட்டிய முதல் அரசாங்கம் அம்மாவின் அரசாங்கம்தான். (மேசையைத் தட்டும் ஒலி) வருடத்திற்கு ஆயிரம் நபர்களைத் தேடிப்பிடித்து ஒரு கோடி வரைக்கும் அவர்களுக்கு மானியமாகவும், கடனாகவும் வழங்கி, இன்றைக்கு மத்திய அரசாங்கத்தின் Start Up India, Stand Up India



[திரு. க. பாண்டியராஜன்]

Scheme–ல் முதலிடத்தில் இருப்பது தமிழக அரசாங்கம்தான் என்பதையும் நீங்கள் மனதிற்கொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் urban congestion குறித்தும், long run–ல் ஒரு foresight, அதாவது, தொலைநோக்குப் பார்வையோடு திட்டங்கள் தீட்டப்பட வேண்டுமென்ற ஒரு கருத்தையும் சொன்னார்கள். ஆளுநர் உரையில், பக்கம் 36–37–ஐ அவர் படிக்க வேண்டும். Urban congestion குறிப்பாக, சென்னை போன்ற பெரும் மாநகரங்களில், போக்குவரத்து நெரிசலைக் குறைத்து எளிதான முறைகளை உருவாக்க வேண்டுமென்பதற்காகத்தான் 79,962 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான திட்டத்திற்கு அயல்நாட்டு முகமையின் நிதியுதவியைப் பெறுவதற்காக மாநில அரசு அனுமதி வழங்கி, மத்திய அரசிற்குப் பரிந்துரை செய்துள்ளதை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன், என்று ஆளுநர் உரையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே, ஒவ்வொரு திட்டமும் தொலைநோக்குப் பார்வையுடன்தான் ஆளுநர் உரையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, வேண்டாம் விடுங்கள். அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) அவர் பேசி முடிக்கட்டும், விடுங்கள். (குறுக்கீடு) அதைப் பிறகு பார்க்கலாம், விடுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன், நீங்கள் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) இரண்டு நிமிடங்களில் பேசி முடித்து எனக்கு ஒத்துழைப்புக் கொடுங்கள். (குறுக்கீடுகள்) எனக்கு ஒத்துழைப்புக் கொடுங்கள். சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. பழனிவேல் தியாக ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர்கள் கொடுத்த குறிப்புகளுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். நான் State level–ல் across all subjects சொன்னேன். அவர்கள் ஒரு இலட்சம், மூன்று இலட்சம் என்று சொல்கிறார்கள். 85 இலட்சம் நபர்கள் list–ல் இருக்கும்போது, ஒரு இலட்சம், மூன்று இலட்சம் என்பது, it is a good start, I am not denying it, I am happy. நன்றாக இருக்கிறது. அது இன்னும் தொடர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பழனிவேல் தியாக ராஜன்] [2018 ஜனவரி 11

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இரண்டே இரண்டு topics பற்றி கூறிக்கொள்கிறேன். ஒன்று, நாம் Tamil Nadu Fiscal Responsibility Act–ன் அடிப்படையில், 3% GSDP, முக்கால்வாசி வருடங்களில் we are able to keep the fiscal deficit under control. Fiscal deficit control–ல் இருக்கிற 3 சதவிகித GSDP என நான் நிதிநிலை அறிக்கையில் கூறினேன், but what is driving the fiscal deficit? நான் ஒரு சின்ன உதாரணம் கொடுக்கிறேன். 2006–2011 ஆம் ஆண்டைய ஆட்சியின்போது net 5 years–க்கு ஒரு revenue surplus இருந்து, அதனால், முழுமையாக fiscal deficit–க்காக எடுக்கப்பட்ட கடனை எல்லாம் முதலீடாகச் செய்து, அது நாளைய வளர்ச்சிக்கான வாய்ப்பு கொடுத்தது.

பிற்பகல் 12–15

இந்த கடைசி 5 வருடம் அதாவது 2011–2016-ஐ பார்த்தீர்கள் என்றால், fiscal deficit–ல் majority of the fiscal deficit was taken simply to finance revenue deficit and therefore, capital investment went down. நான் பல முறை கூறியிருக்கின்றேன், fiscal deficit problem இல்லை என்றால்கூட, revenue deficit problem மிகவும் மோசமாக இருக்கிறது. அதாவது, current revenue–க்கும், current expenses–க்கும் பெரிய gap ஆகிக்கொண்டே இருக்கிறது. இதனால், we get what is called in banking-நான் முன்னாள் banker- It is a crowding out problem. இந்த வருடச் செலவுகளுக்கே நாம் கடன் எடுக்கும்போது முதலீட்டுக்கு அதற்குமேல் எவ்வளவு கடன் நாம் எடுக்க முடியும்? இதில் debt ceiling இருக்கிறது, FRA படி. அதனால், இந்த revenue problem–க்கு இந்த ஆளுநர் உரை ஓரளவு பலனைக் கொடுத்திருக்கிறது. ஆனால், நான் கடந்தமுறை நிதிநிலை அறிக்கையில் பேசுகிறபோதுகூட சொன்னேன், இது ஒரு big, big problem, the growth rate has slowed so much. முந்தைய வருடங்களில் 15 சதவிகிதத்திலிருந்து இப்போது 5 சதவிகிதம் வந்ததனால் கிட்டத்தட்ட 30 ஆயிரம் கோடி ரூபாய் வருவாயை நாம் இழந்திருக்கிறோம், because of the slow–down in revenue growth rate. இந்தப் பிரச்சினையை நாம் சரி செய்யவில்லையென்றால், this debt problem is going to become a vicious debt cycle. இதற்கு ஒரு வழிகாட்டி என்னவென்றால், தமிழ்நாட்டில் இருக்கிற தொழில்கள் i.e., the nature of Tamilnadu's economy has changed dramatically. 2011–ல் பார்த்தீர்களென்றால், தமிழ்நாட்டில் GSDP–ல் கிட்டத்தட்ட 22 சதவிகிதம் manufacturing; இப்போது கிட்டத்தட்ட 16 சதவிகிதம்தான். ஏனென்றால், to get manufacturing, you have to make investment. Investment நாமும்



[திரு. பழனிவேல் தியாக ராஜன்]

செய்கிறோம், third party–யும் செய்வார்கள். 4 ஆம் தேதி லோக் சபாவில் ஒரு கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கொடுத்திருக்கிறார், அதிலே தெரிகிறது. அதாவது, 2015–16–லிருந்து Foreign Direct Investment தமிழ்நாட்டிற்கு 4 பில்லியன் டாலருக்குமேல் இருந்து, 2.1 பில்லியன் டாலர் அதாவது 50 சதவிகிதம் தற்போது குறைந்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன், இன்னொரு வாய்ப்பு வரும்போது பேசலாம்.

**திரு. பழனிவேல் தியாக ராஜன்:** Because of the revenue deficit, நம்மால் தேவையான முதலீட்டைச் செய்ய முடியவில்லை. வெளியிலிருந்து வருகிற முதலீடும் குறைந்திருக்கிறது. ஒரு சிறிய உதாரணம் சொல்கிறேன். 2011–ல் இந்தியாவின் மொத்த manufacturing–ல் தமிழ்நாடு 11 சதவிகிதம் இருந்தது. இப்போது நாம் 9 சதவிகிதத்திற்குக் கீழே இறங்கியிருக்கிறோம். இதே ஐந்து வருடத்தில், Reserve Bank data–படி, குஜராத்தில் சராசரி 11 சதவிகிதம் இருந்தது. இப்போது 13 சதவிகிதம் ஆகிவிட்டது. பிரிக்கப்பட்ட ஆந்திராவில் 6 சதவிகிதத்திலிருந்து 8 சதவிகிதமாக ஆகிவிட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வருடத்தில் வருகிற FDI-அன்னிய நேரடி முதலீட்டை வைத்து அந்த மாநிலத்தினுடைய தொழில் வளர்ச்சியைக் கணக்கிட முடியாது. தொடர்ச்சியாக கடந்த 2011–லிருந்து 2017 வரை கிட்டத்தட்ட நமது மாநிலத்திற்கு ஒரு இலட்சத்து 14 ஆயிரம் கோடி ரூபாய் அன்னிய நேரடி முதலீடு வந்திருக்கிறது. அதே காலகட்டத்தில் குஜராத்தில் 63 ஆயிரம் கோடி ரூபாய்தான் முதலீடு வந்திருக்கிறது. அதை ஒப்பிட்டுப் பார்க்கும்போது incremental FDI என்ற அளவில் நமக்கு அந்த முதலீடு வந்திருக்கிறது. அது 253.1 சதவிகிதம் வந்திருக்கிறது. அதனால் ஓர் ஆண்டில் வருகிற முதலீட்டை வைத்து ஒரு மாநிலத்தினுடைய தொழில் வளர்ச்சியைக் கணக்கிட முடியாது. இந்த ஆண்டு 2018–ல் Global Investors Meet இருக்கிறது. 2014–2015, 2015–2016–ல் வந்த முதலீடு 53 ஆயிரம் கோடி ரூபாய் FDI வந்திருக்கிறது. 2016–2017–ல்தான் நமக்கு 13,900 கோடி ரூபாய் வந்திருக்கிறது. 2015–ல் Global Investors Meet இருந்தது. அதன்

[திரு. எம்.சி. சம்பத்] [2018 ஜனவரி 11

காரணமாக அன்னிய நேரடி முதலீடு அதிகமாக வந்திருக்கிறது. இந்த ஆண்டு 2018–ல் Global Investors Meet இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனைத்து M.N.C.–களோடு பேசியதால், நிறைய நிறுவனங்கள் நிச்சயமாக வரத் தயாராக இருக்கின்றன. இப்போதுகூட 15 நிறுவனங்கள் எங்களோடு தொடர்பு கொண்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 25 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேலாக அவர்கள் முதலீடு செய்வதற்கு எங்களோடு தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு நிச்சயமாக தொழில் வளர்ச்சியில் மிகப் பெரிய வளர்ச்சி நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் எட்டப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன fiscal deficit–ஓ revenue deficit–ஓ நிதிநிலை பொறுப்புடைமைச் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிற அனைத்துக் குறியீடுகளிலும் எந்தவிதத்திலும் நீங்கள் சொல்கிற அந்த debt trap-கடன் பொறி என்று சிக்குகிற அளவுக்கு எந்தக் குறியீடுகளும் இல்லை. அதனால்தான் இன்று உலக வங்கியிலிருந்து வேறு எந்த மாநிலத்திற்கும் கொடுக்காமல் 100 மில்லியன் டாலர், குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் அவர்களுக்குச் சொல்கிறேன். அதாவது, 6,426 கோடி ரூபாய் நமக்குக் குறைந்த வட்டியில் அவர்கள் இந்த வருடம் கொடுத்திருக்கிறார்கள். அந்தக் குறியீடுகளையெல்லாம் பார்த்துதான் அவர்கள் கொடுக்கிறார்கள், நம்பர் ஒன்று.

*பிற்பகல் 12–20*

இரண்டாவதாக, நீங்கள் சொன்ன முதலீடுகள் இங்கிருந்து செல்கின்றன என்பதற்கோ, 30 ஆயிரம் கோடி ரூபாய் நமக்குக் குறைவாக வந்திருக்கிறது என்பதற்கோ எந்த ஆதாரமும் கிடையாது. GST–ஐ எடுத்துக்கொண்டீர்கள் என்றால், 14 சதவிகிதம் வளர்ச்சி இருந்தால் எவ்வளவு வருமானம் வந்திருக்குமோ அந்த அளவுக்கு நமக்கு இழப்பீடு தரப்படுகிறது. நம்முடைய commercial tax வருமான வளர்ச்சியை எடுத்துக்கொண்டீர்கள் என்றால், ஒரு வருடத்திற்கு வளர்ச்சி என்று பார்த்தீர்கள் என்றால் சராசரி



[திரு. க. பாண்டியராஜன்]

மூன்றரை சதவிகிதம்தான். ஆனால், நமக்கு 14 சதவிகிதம் வளர்ச்சி இருந்தால் என்ன வருமானம் இருக்குமோ, அந்த வருமானத்தை அடிப்படையாக வைத்து இழப்பீடு தரப்படுகிறது. எந்த அளவுக்கு வருமானம் வளரும் என்று நாம் project செய்திருக்கிறோம் என்பதை அடுத்த budget session–ல் நிதி அமைச்சருடைய உரையைப் பார்க்கும்பொழுது உங்களுக்குத் தெரியும். கவர்னர் உரையில் அதை நீங்கள் estimate செய்ய முடியாது. Fiscal deficit, revenue deficit அனைத்தும் முறையாக நிதிப் பொறுப்புடைமைச் சட்டத்திற்கு உள்ளே இருக்கிறது என்பதைத்தான் ஆளுநர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன், இன்றைக்கு எனக்கு நேரம் இல்லை, உங்களுக்கு திடீரென்று வாய்ப்புக் கொடுத்தேன். போதும், நீங்கள் நிறைவாகப் பேசிவிட்டீர்கள். உரையை முடியுங்கள்.

**திரு. பழனிவேல் தியாக ராஜன்:** சரி. ஒரேயொரு குறிப்பு மட்டும். அதாவது, அவையில் எதிர்க்கட்சிக்கு ஒரு treatment இருக்கலாம். ஆளுங்கட்சிக்கு ஒரு treatment இருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. நான் எல்லோரையும் சமமாகத்தான் நடத்துகிறேன்.

**திரு. பழனிவேல் தியாக ராஜன்:** சரி. இங்கே நான் சொன்ன கருத்தையெல்லாம் பல நாளேடுகளிலும், magazines–லும் publish செய்யப் போகிறேன். அமைச்சர் அவர்கள் publish செய்யட்டும். யாருக்கெல்லாம் படிக்கத் தெரியுமோ அவர்களெல்லாம் யாருடைய கருத்தில் உண்மை இருக்கிறது என்று தெரிந்துகொள்ளட்டும். கடைசியாக ஒன்றே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு மாநில ஆட்சி என்கிற வகையிலும், அண்ணா பெயர் வைத்திருக்கின்ற கட்சி என்ற வகையிலும், மாநில உரிமைகளையும், சுயாட்சியையும் காப்பாற்ற வேண்டியது இந்த அரசாங்கத்தின் கடமை. நீங்களே சொல்லியிருக்கிறீர்கள், மிகவும் சிறப்பாகச் செய்கிறீர்கள் என்று. நான் கேட்க விரும்புவது, when the Central Government does things that are either anti–States, rights or anti–democratic traditions like trying to force. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் நிறைய subject–க்குப் போனீர்கள் என்றால், பிறகு அமைச்சர்கள் பதில் சொல்வார்கள். எனக்கு நேரம் இல்லை. தயவுசெய்து உரையை முடியுங்கள்.

[2018 ஜனவரி 11

**திரு. பழனிவேல் தியாக ராஜன்:** இதோடு உரையை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள்.

**திரு. பழனிவேல் தியாக ராஜன்:** ஒரு வேண்டுகோள் மட்டும் வைக்கிறேன். எங்கள் நோக்கத்தில் மத்திய அரசின் செயல்பாடு பல வகையில் மாநில உரிமைகளுக்கும், ஜனநாயக வளர்ச்சிக்கும் விரோதமாக இருக்கிறது. தயவுசெய்து, அதை இன்னும் முற்றிலும் மறுத்து, எதிர்த்து, போராடி நம் உரிமைகளையும், நம் பொருளாதாரத்தையும் காப்பாற்றுங்கள் என்ற ஒரு கருத்தை நான் முன் வைக்கிறேன். கடைசியாக. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** கடைசியாகச் சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. பழனிவேல் தியாக ராஜன்:** என் மலைப் பகுதி சக உறுப்பினர் கேட்டபடி ஒரேயொரு கோரிக்கை. தமிழ்நாடு அரசு தேயிலைத் தோட்டத்தில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கு இதுவரைக்கும் மாதச் சம்பளம் வரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள், உங்கள் உரையை முடியுங்கள். இன்னொரு உறுப்பினருக்காகப் பேச ஆரம்பித்தீர்கள் என்றால் நேரமிருக்காது. (குறுக்கீடு) முடியாது, உட்காருங்கள்.

**திரு. பழனிவேல் தியாக ராஜன்:** தயவுசெய்து இதை எவ்வளவு சீக்கிரம் முடியுமோ. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு) கொஞ்சம் அமைதியாக இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன் அவர்கள் மாநில உரிமைகளையும், மாநிலத்தினுடைய அதிகாரங்களையும் எந்த அளவுக்குப் பேணிக் காக்கின்ற அரசாக இந்த அரசு இருக்கின்றது என்பதற்கு சிலபல உதாரணங்களைச்



[திரு. ஓ. பன்னீர்செல்வம்]

சொன்னார். அது அவருடைய கடமை. ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இதுவரை தமிழகத்தில் இருந்த முதலமைச்சர்களைக் காட்டிலும் தலைசிறந்த முதலமைச்சராக, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் உரிமையை நிலைநாட்டுவதில் முன்னணி முதலமைச்சராக இருந்தார்கள் என்பதற்குப் பல்வேறு உதாரணங்கள் இருக்கின்றன. அந்த உதாரணங்களெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன் அவர்களுக்குத் தெரியாது. ஏனென்றால், அவர் அப்பொழுது வெளிநாட்டில் இருந்தார். காவேரி நீரைப் பெறுவதற்கான தாவாவில், காவேரி நீரைப் பெறுவதில் நமக்கும் கர்நாடக மாநிலத்திற்கும் இடையில் பிரச்சினை ஏற்பட்டு காவேரி நடுவர் மன்றம்... (குறுக்கீடு) திரு. ரங்கநாதன், நீங்கள் கொஞ்சம் அமைதியாக இருங்கள். காவேரி நடுவர் மன்றம் நிறுவப்பட்டு, 17 ஆண்டுகளாக அந்த வழக்கை விசாரித்து, 2007–ல் காவேரி நடுவர் மன்றத்தில் இறுதித் தீர்ப்பு வழங்கப்பட்டது. மாண்புமிகு அம்மா அவர்கள் 'நீங்கள் மத்தியிலும் ஆளுகின்றீர்கள், மாநிலத்திலும் ஆளுகின்றீர்கள். உங்களுடைய ஆலோசனையைப் பெற்றுத்தான் மத்திய அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்று உலகளாவிய பிரச்சாரங்களை செய்து கொண்டிருக்கிறீர்கள். ஆகவே, மத்திய அரசிடம் சொல்லி காவேரி நடுவர் மன்றத்தினுடைய இறுதித் தீர்ப்புக்கு முழு வடிவம், அதிகாரம் பெற வேண்டுமென்றால் மத்திய அரசினுடைய அரசிதழில் வெளியிட வேண்டும். அதற்கு நீங்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று அப்பொழுது தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்த திரு. கருணாநிதி அவர்களிடம் சொன்னார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் மரியாதையாகத்தான் சொன்னார். வேறு ஒன்றும் தவறாகச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்)

பிற்பகல் 12–25

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** சரி, அப்போதிருந்த முதலமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்னார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, பிறகு அவர் முதலமைச்சர் என்று சொல்லிவிட்டார், விடுங்கள். திருத்திக்கொண்டு விட்டார், விடுங்கள். (குறுக்கீடுகள்) திருத்திக்கொண்டு விட்டார் விடுங்கள். (குறுக்கீடுகள்) விடுங்கள், விடுங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** சரி, அப்போதிருந்த முதலமைச்சர் அவர்களிடம் சொன்னார்கள். ஆனால், உங்களால் அது முடியவில்லை. மாநில உரிமைகளைக் காக்கின்றவகையில், உரிமைகளைப் பெறுவதற்கு நீங்கள் மத்தியில் ஆண்டு கொண்டிருந்தாலும், மாநிலத்தில் ஆண்டு கொண்டிருந்தாலும் உங்களால் முடியவில்லை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு அம்மா அவர்கள் அதற்காக உண்ணாவிரதம் மேற்கொண்டார்கள். (குறுக்கீடுகள்) திரு. அன்பழகன், உட்காருங்கள். எல்லாம் தெரியும், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) மீண்டும் மாண்புமிகு அம்மா அவர்கள். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பழகன், திரு. ரங்கநாதன் இந்தமாதிரி குறுக்கீடு செய்தீர்களென்றால் நான் எப்படிச் சபையை நடத்துவது? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், அவர் பதில் சொல்கிறார் அல்லவா? (குறுக்கீடுகள்) அதெல்லாம் ஒன்றும் கிடையாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு அம்மா அவர்கள் மீண்டும் 2011 ஆம் ஆண்டிலே தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பின்னால். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இது சரியாக இல்லை. நீங்கள் செய்வது சரியில்லை, முறையில்லை. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது நீங்கள் அமைதியாக அமர்ந்திருந்தால் நல்லது. இப்படிக் குறுக்கீடு செய்வது முறையில்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் உங்களை எச்சரிக்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எச்சரிக்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் உங்களைக் கடுமையாக எச்சரிக்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அப்போது ஆண்டு கொண்டிருந்த பாரதப் பிரதமர் திரு. மன்மோகன் சிங் அவர்களுக்கு





பலமுறை கடிதங்கள் எழுதி பலன் இல்லாமல், நேரடியாகச் சென்று கோரிக்கை வைத்தும் பலன் இல்லாமல், மாண்புமிகு அம்மா அவர்கள் உச்ச நீதிமன்றம் வரை சென்று வாதாடி, போராடி, சட்டப் போராட்டம் நடத்தி உச்ச நீதிமன்றத்தின் மூலமாகத்தான் அந்தத் தீர்ப்பைப் பெற்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசிதழில், Gazette–ல் உடனடியாக காவேரி நடுவர் மன்றத்தினுடைய இறுதித் தீர்ப்பை வெளியிட வேண்டுமென்று போராடினார்கள். ஆக, யார் உரிமையைப் பாதுகாத்தார்கள்? நீங்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தும் அது உங்களால் முடியவில்லை.

இதைப்போலத்தான் முல்லைப் பெரியாறு பிரச்சினை. முல்லைப் பெரியாறு பிரச்சினை குறித்து உங்களுக்கு நன்றாகவே தெரியும். அந்தப் பகுதியில் எவ்வாறெல்லாம் விவசாயம் நடந்து கொண்டிருக்கின்றது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். அணையின் பராமரிப்புப் பணிக்காக 152 அடி உயரம் 136 அடியாகக் குறைக்கப்பட்டது. மாண்புமிகு அம்மா அவர்கள் பல கோடி ரூபாய் செலவழித்து அந்த அணையினுடைய பராமரிப்புப் பணிகளை முடித்ததற்குப் பின்னர் மத்திய நீர்வளக் குழுமத்திடம், 'நீங்கள் சொல்லியிருந்த பணிகளையெல்லாம் 100 சதவிகிதம் முடித்துவிட்டேன், நீங்கள் உயரத்தை அதிகரித்துக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று சொன்னபோது, கேரள அரசு மறுத்தது. இந்தப் பிரச்சினையையும் மாண்புமிகு அம்மா அவர்கள் 2001–2006–ல் தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்தபோது, உச்ச நீதிமன்றம் வரை சென்று வாதாடி, போராடித்தான் 2006 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பினைப் பெற்று முல்லைப் பெரியாறு அணையினுடைய நீர்மட்டத்தினை 136 அடியிலிருந்து 142 அடியாக முதல் கட்டமாகத் உயர்த்தி கொள்ளலாம் (குறுக்கீடுகள்) பேபி அணையையும், சிற்றணையையும் பழுது நீக்கம் செய்த பின்னால் முழு கொள்ளளவான 152 அடி வரை நீரைத் தேக்கிக் கொள்ளலாம் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பினைப் பெற்றுத் தந்தார்கள். (குறுக்கீடுகள்) பொறுமையாக இருங்கள். நான் முழுவதுமாகச் சொல்லி விடுகிறேன். (குறுக்கீடுகள்) சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருங்கள், இருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். அவர் பேசி முடிக்கட்டும், நான் உங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) இல்லை, அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்)

[2018 ஜனவரி 11

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்களென்றால், கேரள அரசு அவசரச் சட்டம் போட்டதைச் சொல்ல வருகிறீர்கள். (குறுக்கீடுகள்) கேரள அரசு உடனடியாக சட்டமன்றத்தைக் கூட்டி. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ரங்கநாதன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு துணை முதலமைச்சர், ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கநாதன், திரு. அன்பழகன், இதுமாதிரி குறுக்கீடு செய்வதைக் குறித்து முதலிலேயே உங்களை நான் எச்சரித்தேன். (குறுக்கீடுகள்) திரும்பவும் எச்சரிக்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் அமைதியாக இருந்து அவைக்கு ஒத்துழைப்புத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். மீண்டும் இதுமாதிரி செய்தால் எனக்கு வேறு வழியில்லை. உங்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். அமைதியாக இருக்கும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** கேரள அரசு உடனடியாக சட்டமன்றத்தைக் கூட்டி, ஏற்கெனவே அவர்கள் நீர் பாதுகாப்புச் சட்டம் என்று 2003 ஆம் ஆண்டு ஒரு சட்டம் இயற்றியிருக்கிறார்கள். அந்த நீர் பாதுகாப்புச் சட்டத்தில் முல்லைப் பெரியாறு அணையினுடைய நீர்மட்டத்தை 136 அடியாக அவர்கள் வரையறுத்து ஒரு amendment–சட்டத் திருத்தம் கொண்டு வந்தார்கள். உடனே மாண்புமிகு அம்மா அவர்கள் உச்ச நீதிமன்றம் சென்று, உச்ச நீதிமன்றத் தீர்ப்பிற்கு எதிராக எந்தச் சட்டமன்றத்திலும் amendment, சட்டத் திருத்தம் கொண்டு வரக் கூடாது என்று உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார்கள். வழக்கு தொடுத்து, மத்திய அரசின் கவனத்திற்கும் எடுத்துச் சென்றார்கள். என்ன நடந்தது? 2006 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் இது நடக்கின்றது. மார்ச் மாதம் 1 ஆம் தேதி தேர்தல் தேதி அறிவித்துவிட்டார்கள். தேர்தலுக்குப் பின்னால் நீங்கள் ஆட்சிக்கு வந்துவிட்டீர்கள். 5 வருடங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள் பெற்றுத் தந்த தீர்ப்பின்படி முல்லைப் பெரியாறு அணையினுடைய நீர்மட்டத்தை உங்களால் உயர்த்த முடியவில்லை. 2006–2011 ஆம் ஆண்டு வரை உங்களுடைய ஆட்சி முடிந்துவிட்டது. மீண்டும் 2011 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின்னர்தான். . . (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் உங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன், இருங்கள். (குறுக்கீடுகள்) அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இந்தப் பிரச்சினையையும் உச்ச நீதிமன்றம் எடுத்துச் சென்றார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்தவுடன் உங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** பேசுவதற்கு வாய்ப்புத் தருவார்கள், நீங்கள் பேசுங்கள். நான் பேசி முடித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) நான் பேசி முடித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொல்வது. . . (குறுக்கீடுகள்) இருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நான் பேசி முடித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) நான் முடித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) இல்லை, நான் பேசுகிறேன். (குறுக்கீடுகள்) நான் பேசி முடித்த பிறகு தவறு இருந்தால், நீங்கள் அதன்பிறகு பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசுங்கள். தவறு இருந்தால் நீங்கள் சொல்லுங்கள். நாங்கள் திருத்திக்கொள்கிறோம்.

பிற்பகல் 12–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர், அவர் பேசுவதில் உங்களுக்கு மாறுபட்ட கருத்து இருந்தால், நான் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். அப்போது உங்களுடைய பதிலைச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) இப்போது அவரைப் பேசவிடுங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இந்தப் பிரச்சினையையும், முல்லைப் பெரியாறு பிரச்சினையையும் அவர்கள் உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்று, வாதாடி, போராடித்தான் 2013–ல் மாண்புமிகு அம்மா அவர்கள் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பைப் பெற்றுத்தான் முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தினை 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்திக் காட்டினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நல்லவேளை, அப்போதே மழை பெய்து

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2018 ஜனவரி 11

தண்ணீர் நிறைய வந்தது. மாண்புமிகு அம்மா அவர்கள் shutter–ஐ இறக்கி, 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்திக் காட்டினார்கள். இதுதான் ஒரு மாநிலத்தினுடைய உரிமையைப் பாதுகாப்பதில் எந்த அரசு, எந்த முதலமைச்சர் நல்ல பல நடவடிக்கைகளை எடுத்தார்கள் என்பதற்கு உதாரணம். (மேசையைத் தட்டும் ஒலி) இதேபோல் நிறைய இருக்கிறது. கூடை கூடையாக இருக்கிறது. உங்களுக்கு நேரம் இருக்காது என்பதால் நிறுத்திக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள். (குறுக்கீடு) திரு. ஆஸ்டின், உட்காருங்கள். (குறுக்கீடு) எதிர்க்கட்சித் துணைத் தலைவர், என்ன ? சொல்லுங்கள்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்தியது நாங்கள்தான் என்று முன்னாள் பொதுப் பணித் துறை அமைச்சர், மதிப்பிற்குரிய அவையின் முன்னவர், திரு. ஓ.பி.எஸ். அவர்கள் பேசினார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யாராக இருந்தாலும் உட்கார்ந்துகொண்டு பேசாதீர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோருக்கும்தான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) உங்களுக்கும் சொல்கிறேன். அவர்களுக்கும் சொல்கிறேன். அமைதியாக இருங்கள்.

**திரு. துரைமுருகன்:** அவர் ஒன்று சொன்னார்; கேரள அரசு ஒரு சட்டத்தை நிறைவேற்றிவிட்டது. அதை எதிர்த்து நாங்கள் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று வாதாடினோம் என்று சொன்னார். அந்தச் சட்டத்தை எதிர்த்து நீங்கள் உச்ச நீதிமன்றத்திலே ஒரு I.A. file செய்தீர்கள். எல்லோருக்கும் தெரியும். ஒரு I.A. file செய்தால் உடனே case ஆகிவிடாது. Number ஆக வேண்டும். Number ஆன பிறகுதான் case hearing–க்கு வரும். அந்த number கூட வாங்காமல் காலத்தைக் கழித்துவிட்டு நீங்கள் போய்விட்டீர்கள். ஆனால் number வாங்கி, அந்த வழக்கை நடத்தியது நாங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டாவது, இறுதியாக அந்த வழக்கு எப்படி உச்ச நீதிமன்றத்திற்குப் போனது ? 136 அடிக்குமேல் தண்ணீரை தேக்கக்



[திரு. துரைமுருகன்]

கூடாது என்று கேரள விவசாயிகள், கேரள உயர் நீதிமன்றத்தில் வழக்கு போட்டார்கள். 142 அடி வரை தண்ணீரைத் தேக்க வேண்டுமென்று நம்முடைய விவசாயிகள் இங்கே உயர் நீதிமன்றத்தில் வழக்கு போட்டார்கள். இரண்டுதரப்பும் ஒரே case–க்காக இரண்டு மாநிலத்தில் வழக்கு நடப்பது சாத்தியமல்ல என்று இரண்டு வழக்குகளையும் உச்ச நீதிமன்றத்திற்கு மாற்ற வேண்டுமென்று Transfer petition போட்டு, உச்ச நீதிமன்றத்திற்குக் கொண்டு போய், வாதாடி, 136 அடியை 142 அடியாக உயர்த்த வேண்டுமென்று வாதாடினோம். Judgement வரும்போது நீங்கள் ஆட்சிக்கு வந்து உட்கார்ந்தீர்கள். காக்கா உட்கார பனம்பழம் விழுந்த கதையாகிவிட்டது. உடனே எங்களால்தான் வந்தது என்று நீங்கள் சொல்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மறுபடியும் நான் கேட்கிறேன். மூன்றாவதாக அவர் சொன்னார். காவேரிக்காக discussion போயிருந்தோம் என்று அவர் சொல்லியிருந்தார். அம்மா அவர்கள் உண்ணாவிரதம் உட்கார்ந்தார்கள் என்றார். நீங்களே வம்புக்கு இழுத்து எங்களை அந்த அம்மா பற்றிப் பேச வைக்கிறீர்கள். என்ன ஆனது ? உண்ணாவிரதம் உட்கார்ந்தார்கள். எதற்காக ? தண்ணீர் வந்ததா ? கேட்டதற்குப் பிறகு திரு. சுக்லா வந்து பார்த்தார். திரு. சுக்லா வந்து பார்த்துவிட்டு ஒரு கமிட்டி போடுகிறேன் என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். முதலமைச்சர் அவர்கள் உண்ணாவிரதத்தில் உட்கார்ந்ததற்குப் பிறகு, திரு. சுக்லா அவர்கள் வந்து ஒரு கமிட்டி போடுகிறேன் என்று சொன்னாரே ! அந்த கமிட்டியை இதுநாள்வரையில் போட்டிருக்கிறார்களா ? இல்லை. எதற்கு வந்தார் ? தண்ணீர் கொடுக்கவா வந்தார் ? தண்ணீர் கொடுத்து உயிரைக் காப்பாற்றவா வந்தார் ? வரவில்லை. நான் சாதாரணமாகச் சொல்கிறேன். காவேரி நீர் வழங்குவதில் கர்நாடகா நமக்கு துரோகம் செய்கிறது என்று முதன்முதலாகக் குரல் கொடுத்தவர் எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இதுகுறித்து நீதிமன்ற விசாரணை வேண்டுமென்று கேட்டவரும் கலைஞர் தான். இந்த மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியவரும் கலைஞர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக முதன்முதலாக பக்கத்தில் இருக்கிற கர்நாடக முதல்வரோடு முதல் பேச்சுவார்த்தையை நடத்தியவரும் எங்கள் தலைவர் கலைஞர்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பிரச்சினையை மத்திய அரசிடம் கொண்டுபோய் அன்றைக்கு இருந்த திரு. கே.என். ராவ் அவர்களிடத்தில் இந்தப் பிரச்சினையைக் கொண்டு வந்தவரும் கலைஞர் அவர்கள்தான். (மேசையைத்

[திரு. துரைமுருகன்] [*2018 ஜனவரி 11*

*தட்டும் ஒலி)* காவேரியில் தண்ணீரைப் பங்கிட வேண்டுமானால் எவ்வளவு நீர் இருக்கிறதென்பது தெரியாது. எனவே, காவேரி உற்பத்தியாகிற இடத்திலிருந்து கீழணை வரையில் இருக்கிற தண்ணீரை எவ்வளவு என்று கணக்கிட வேண்டுமானால் Fact Finding Committee வேண்டுமென்று சொல்லி, அதற்காக Fact Finding Committee–ஐ போட்டு அதைக் கொண்டு வந்தவரும் கலைஞர் அவர்கள்தான். *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆதலால், மொத்தம் 720 டி.எம்.சி. நீர் என்று வந்தது. அந்த நீரைத்தான் இன்றைக்குப் பிரித்துக் கொடுத்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு திரு. வி.பி. சிங் அவர்களிடத்திலே வாதாடி, நடுவர் மன்றத்தைக் கொண்டு வந்ததும் கலைஞர் அவர்கள்தான். *(மேசையைத் தட்டும் ஒலி)* நடுவர் மன்றம் என்று வந்துவிட்டால் நீண்டநாள் ஆகும். இடையிலே எங்களுக்கு இடைக்காலத் தீர்ப்பு வேண்டும் என்று கேட்டவரும் கலைஞர் அவர்கள்தான். *(மேசையைத் தட்டும் ஒலி)* இடைக்காலத் தீர்ப்பைத் தர முடியாது என்று நடுவர் மன்றம் சொன்னவுடன் உச்ச நீதிமன்றத்திற்குப் போய் நடுவர் மன்றத்திற்கு அந்த அதிகாரம் உண்டா, இல்லையா என்று வாதாடியவரும் கலைஞர் அவர்கள்தான். *(மேசையைத் தட்டும் ஒலி)* அந்த இடைக்காலத் தீர்ப்பு. . . *(குறுக்கீடு)*

*பிற்பகல் 12–35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வாய்ப்பு இல்லை, நீங்கள். . .

**திரு. துரைமுருகன்:** No, no, no. முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உங்களுடைய பேச்சை முடியுங்கள். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார். *(குறுக்கீடு)*

**திரு. துரைமுருகன்:** முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, நீங்கள் உங்கள் உரையை முடியுங்கள்.

**திரு. துரைமுருகன்:** இடைக்காலத் தீர்ப்பை வாங்கி வந்தவரும் கலைஞர் அவர்கள்தான். அந்த இடைக்காலத் தீர்ப்பின்படி 85 டி.எம்.சி. வாங்கிக் கொடுத்தவரும் கலைஞர் அவர்கள்தான். *(மேசையைத் தட்டும் ஒலி)* அந்த 205 டி.எம்.சி.–ஐ அமல்படுத்துவதற்காக ஓர் ஆணையத்தை, திரு. வாஜ்பாய்



[திரு. துரைமுருகன்]

அவர்களுடைய தலைமையில் அமைத்த கலைஞர் அவர்கள்தான். *(மேசையைத் தட்டும் ஒலி)* இறுதித் தீர்ப்பை வாங்கியவரும் கலைஞர் அவர்கள்தான். *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆக, ஆரம்பம் முதல் கடைசி வரையிலே, இதற்காக அனைத்தையும் செய்தவர் கலைஞர் அவர்கள்தான். *(மேசையைத் தட்டும் ஒலி)* முல்லைப் பெரியாறு விவகாரத்திலே, நியாயமாக தண்ணீர் அதிகமாக இருந்தது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், போதும், இதோடு போதும். இன்று நேரம் இல்லை. இதைப்பற்றி நிறைய விவாதம் செய்திருக்கிறோம். *(குறுக்கீடு)* திரும்பத் திரும்ப நீங்கள் அதைப் பற்றிச் சொல்கிறீர்கள். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள், இதற்குப் பதிலைச் சொல்லுங்கள். அதோடு அந்தப் பிரச்சினையை முடித்துவிடலாம். *(குறுக்கீடு)* எனக்கு இன்றைக்கு நேரமில்லை.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் தனது பேச்சில் அடுக்கிக் கொண்டே போனார். இந்தப் பிரச்சினைகளுக்கெல்லாம் மூலக் காரணம் என்னவென்றால், கர்நாடக அரசு, ஹேமாவதி மற்றும் கபினி அணைகளைக் கட்டியதால், அதுசம்பந்தமான வழக்கு உச்ச நீதிமன்றத்தில் இருந்தது. அந்த வழக்கை வாபஸ் வாங்கிக்கொண்டு அணையைக் கட்டிக்கொள்ளலாம் என்று சொன்னதும் நீங்கள்தான். *(மேசையைத் தட்டும் ஒலி)* மாண்புமிகு அம்மா அவர்கள் உண்ணாவிரதம் இருந்தது, நீரைப் பெறுவதற்காக அல்ல, நடுவர் மன்றத்தினுடைய இறுதித் தீர்ப்பை மத்திய அரசினுடைய Gazette–ல் publish செய்ய வேண்டும் என்பதற்காகத்தான். அவர் ஏட்டையே மாற்றுகிறார். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வாய்ப்பு இல்லை, உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** 2007–ல் வள்ளுவர் கோட்டத்திற்குப் பக்கத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள் உண்ணாவிரதம் இருந்தது நடுவர் மன்றத்தினுடைய இறுதித் தீர்ப்பு மத்திய அரசினுடைய அரசிதழில் வெளியிட வேண்டும் என்பதற்காகத்தான். மத்திய அரசையும், அப்போது கூட்டணியிலிருந்தஉங்களுடைய அரசையும் வலியுறுத்த வேண்டுமென்பதற்காகத்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் உண்ணாவிரதம் இருந்தார்களேயொழிய, திரு. சுக்லா அவர்களிடம்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2018 ஜனவரி 11

சென்று தண்ணீர் கேட்கவில்லை. அதில் பல்வேறு பிரச்சினைகள் இருந்தன. (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் பேச வேண்டும் என்பதற்காக, தப்புத் தப்பாகப் பேசாதீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள், என்னவென்று சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, தமிழ்நாட்டில் Fiscal Responsibility and Budget Management Act, 2003–ன் அளவுகோலைவிட அதிகமாகிவிட்டது என்று சொன்னார்கள். அதற்காக மூன்று காரணங்களைச் சொல்லியிருக்கிறார்கள். அந்த மூன்றுக்கும் பதில் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கின்றேன். Tamil Nadu Fiscal Responsibility and Budget Management Act–ஐப் பொறுத்தவரையில் fiscal deficit 3 சதவிகிதம் இருக்க வேண்டும். அதற்கு மேலாக அதிகரித்ததற்குக் காரணம் என்னவென்றால், மின்சார வாரியத்தினுடைய ரூ.22,815 கோடி கடனை அரசு ஏற்றுக்கொண்ட காரணத்தினால், ரிசர்வ் வங்கியும் அதற்கு அனுமதி கொடுத்திருக்கின்ற காரணத்தினால்தான் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல, வளர்ச்சியை பற்றிச் சொன்னார்கள், தொழில்நுட்பத்தைப் பற்றியும் சொன்னார்கள். கார் உற்பத்தியில் தமிழகம்தான் முதல் மாநிலமாக இருக்கின்றது. Textiles–ல் தமிழகம்தான் முதலிடத்தில் இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) Health tourism–ல் தமிழகம்தான் முதலிடத்தில் இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல உள்நாட்டு, வெளிநாட்டு tourism–லும் தமிழகம்தான் முதலிடத்தில் இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) தோல் தொழிற்சாலைகளில் தமிழகம்தான் முதலிடத்தில் இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, two wheeler, lorry போன்றவற்றை எடுத்துக்கொண்டோமென்று சொன்னால், தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் இருக்கின்றது. இதை வைத்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தமிழகத்தில் வளர்ச்சியில்லை என்று சொல்ல முடியாது. நிறைய தொழிற்சாலைகள் நம்முடைய மாநிலத்தில் இருக்கின்றன. ஒரு புதிய மாநிலத்தில் இரண்டு தொழிற்சாலைகள் வந்தால், அது 100 சதவிகித வளர்ச்சி என்று பத்திரிகைகளில் செய்தி வருவதற்கு வாய்ப்பு இருக்கின்றது.



[திரு. பி. தங்கமணி]

அதனால்தான், அதை வளர்ச்சி என்று சொல்கின்றார்கள். ஆக அந்த வளர்ச்சிக்கும், நமது மாநிலத்தில் 11 சதவிகிதத்திலிருந்து 9 சதவிகிதமாகக் குறைந்துவிட்டது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதற்கும் இதுதான் காரணம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெளிவுபடுத்த நான் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இதுபற்றி நன்றாகத் தெரியும். ஏனென்று சொன்னால், தமிழகம் வளர்ந்த மாநிலம். வளரப் போகின்ற மாநிலத்தில் எதைப் பற்றிச் சொன்னாலும், அங்கு 100 சதகிவித வளர்ச்சி என்று சொல்வார்கள். உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமென்று சொன்னால், வளர்ந்த மாநிலத்தில், textiles–ல் இப்போது நாம் 45 சதவிகிதம் இருக்கிறோம் என்று சொன்னால் 2 சதவிகிதம், 3 சதவிகிதம் அதிகரித்தால்கூட அதனை வளர்ச்சி என்று சொல்ல மாட்டார்கள். ஆனால், அதுவே 5 சதவிகிதமாக இருக்கின்ற மாநிலத்தில், 10 சதவிகிதமாக வளர்ச்சி ஏற்படுகின்றபோது, 100 சதவிகித வளர்ச்சி என்று அதனைச் சொல்வார்கள். அதைத்தான் அவர்கள் வளர்ச்சி என்று சொல்வார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், திரு. பழனிவேல் தியாக ராஜன், இதற்கு மேல் வாய்ப்பில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள். நான் ஏற்கெனவே சொன்னமாதிரி, இன்று 10 நிமிடங்கள்தான். உங்களுடைய உரையை 10 நிமிடங்களில் முடித்துக்கொள்ளும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. எம். தமிமுன் அன்சாரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கும், இந்தப் பேரவையில் இருக்கும் அனைத்து உறுப்பினர்களுக்கும், எனது பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

**திரு. டிடிவி தினகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் உட்காருங்கள். இதில் பாயிண்ட் ஆஃப் ஆர்டர் போன்று எதுவும் இல்லையே! (குறுக்கீடு) திரு. தமிமுன் அன்சாரி, சற்று பொறுங்கள். மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் என்னவென்று சொல்லுங்கள்.

[பேரவைத் தலைவர்] [*2018 ஜனவரி 11*

*(குறுக்கீடு)* வாய்ப்பு இல்லை. இதைப்போல குறுக்கே பேச நான் அனுமதிப்பதில்லை. நீங்கள் என்னவென்று சொல்லுங்கள். என்ன விஷயம் என்று சொல்லுங்கள். *(குறுக்கீடு)* மாண்புமிகு உறுப்பினருக்கு மைக் கொடுங்கள்.

*பிற்பகல் 12–40*

**திரு. டிடிவி தினகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் நேற்று இரவு வரை இன்றைக்கு எனக்குப் பேசுவற்கு permission தருகிறேன் என்று சொன்னீர்கள். நேற்று இரவுகூட நீங்கள் சொன்னீர்களா, இல்லையா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இன்றைக்கு நான் முதல் வரிசை கட்சித் தலைவர்கள் பேசுவதற்கு மட்டும்தான் அனுமதி வழங்கியிருக்கிறேன். மற்றபடி நீங்கள் பேசக் கூடாது என்ற எண்ணம் எனக்குக் கிடையாது. உங்களைப் பேச விடுவதற்கு நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. *(குறுக்கீடு)* அடுத்து வருகிற வாய்ப்புகளில் நான் உங்களைப் பேச அனுமதிக்கிறேன். *(குறுக்கீடு)* உங்களைப் பேச விடக் கூடாது என்ற எண்ணம் எனக்கு இல்லை. *(குறுக்கீடு)* இன்றைக்கு முதல் வரிசை கட்சித் தலைவர்கள் பேச வேண்டும் என்பது BAC–ல் எடுக்கப்பட்ட முடிவு. நான் முயற்சி செய்து, உங்களுக்குப் பேச வாய்ப்புக் கொடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்று பார்த்தேன். *(குறுக்கீடு)* முதல் வரிசை கட்சித் தலைவர்கள் பேசுவோர் பட்டியலில் நிறைய இருந்ததால்தான் நான் உங்களுக்குப் பேச வாய்ப்புத் தரவில்லை. ஆகையால், இன்றைக்கு உங்களுக்கு வாய்ப்புத் தர முடியாமல் போய்விட்டது. *(குறுக்கீடு)* எதிர்காலத்திலே உறுதியாக உங்களுக்குப் பேச வாய்ப்புத் தரப்படும். *(குறுக்கீடு)* அப்போது, உங்களுடைய பேச்சை நீங்கள் நிச்சயமாகப் பதிவு செய்யலாம். *(குறுக்கீடு)* இப்போது எனக்கு வேறு வழியில்லை, நேரமில்லை. *(குறுக்கீடு)* இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவர் பேச வேண்டிய நிலை இருக்கிறது. அதனால் நான் வேக, வேகமாக சபை அலுவல்களை முடிக்க வேண்டியிருக்கிறது. *(குறுக்கீடு)* என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. டிடிவி தினகரன்:** நீங்கள் நேற்று இரவு வரை நாளைக்கு எனக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன் என்று சொன்னீர்களா, இல்லையா? நீங்கள் நேற்று இரவு வரை சொன்னீர்கள். நேற்று இரவு வரை எனக்கு. . .



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, நான் முயற்சி செய்கிறேன் என்றுதான் சொன்னேன். *(குறுக்கீடு)* இல்லை, நான் முயற்சி செய்கிறேன், வாய்ப்பு இருந்தால் கொடுக்கிறேன் என்றுதான் சொன்னேனேயொழிய, உறுதியாகத் தருகிறேன் என்று சொல்லவில்லை. *(குறுக்கீடு)* ஆகவே, உங்களுக்கு மீண்டும் சொல்கிறேன், இன்றைக்கு வாய்ப்பில்லை. இன்னொருமுறை நான் உங்களுக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன். *(குறுக்கீடு)* தயவுசெய்து அமருங்கள். *(குறுக்கீடு)* இல்லை. வேண்டாம், உட்காருங்கள். போதும். *(குறுக்கீடு)* மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி, நீங்கள் பேசி முடியுங்கள். *(குறுக்கீடு)* இல்லை, நேரமில்லை. உட்காருங்கள். *(குறுக்கீடு)* தயவுசெய்து உட்காருங்கள். *(குறுக்கீடு)*

**திரு. எம். தமிமுன் அன்சாரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் இன்னொரு நாளைக்கு உங்களுக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன். *(குறுக்கீடு)* உறுதியாக, உங்களுக்கு அடுத்து வருகிற வாய்ப்பில் பேச வாய்ப்புத் தருவேன். *(குறுக்கீடு)* இல்லை, பேரவைத் தலைவரை நீங்கள் குற்றம்சாட்ட முடியாது. *(குறுக்கீடு)* உங்களைப் பேச அனுமதிப்பது பேரவைத் தலைவருடைய உரிமை. *(குறுக்கீடு)* வாய்ப்பு இருந்தால் தருவேன். வாய்ப்பு இல்லையென்றால் நீங்கள் என்னை வற்புறுத்த முடியாது. *(குறுக்கீடு)* உங்களுக்கு அடுத்து வருகின்ற வாய்ப்பிலே நிச்சயமாக நான் வாய்ப்புத் தருகிறேன். அவ்வளவுதான். இதை நீங்கள் ஒரு right–ஆக claim செய்ய முடியாது. *(குறுக்கீடு)* நான் உங்களுக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன். நீங்கள் உட்காருங்கள். *(குறுக்கீடு)* மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி. *(குறுக்கீடு)* நான் உங்களுக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன். நிச்சயமாக வாய்ப்புத் தருவேன். இன்றைக்கு முடியாது. அவ்வளவுதான். *(குறுக்கீடு)* இன்றைக்கு எனக்கு நெருக்கடி நிறைய இருக்கின்றது. *(குறுக்கீடு)* எதிர்க்கட்சித் தலைவர்கள் பேச வேண்டியிருப்பதால் உங்களுக்குப் பேச வாய்ப்புத் தர முடியவில்லை. *(குறுக்கீடு)* முதல் வரிசை கட்சித் தலைவர்களை நான் பேச அழைப்பதனால், உங்களுக்குப் பேச வாய்ப்புத் தர முடியாமல் போய்விட்டது. *(குறுக்கீடு)* அடுத்து வருகின்றபோது வாய்ப்புத் தருகிறேன். அவ்வளவுதான். *(குறுக்கீடு)* மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி. *(குறுக்கீடு)*

[2018 ஜனவரி 11

**திரு. எம். தமிமுன் அன்சாரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இதில் ஒன்றும் இல்லை. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அடுத்து வருகின்றபோது நான் வாய்ப்புத் தருகிறேன். இப்போது வேண்டாம். (குறுக்கீடு) இப்போது வேண்டாம். (குறுக்கீடு) அவர் பேசுவார், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அவர் பேசுவார், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அவர் பேசுவார், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. எம். தமிமுன் அன்சாரி, நீங்கள் பேசுங்கள்.

**திரு. எம். தமிமுன் அன்சாரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கும், இந்தப் பேரவையிலே இருக்கக்கூடிய அனைத்து உறுப்பினர்களுக்கும். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தமிமுன் அன்சாரி, உங்களைப் பேச அழைத்திருக்கிறேன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினருக்கு விளக்கமாக என்னுடைய பதிலையும் நான் சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) தெளிவாகவும் அவருக்கு என்னுடைய பதிலைச் சொல்லிவிட்டேன். நீங்கள் அதற்குமேல் என்னை வற்புறுத்துவதில் நியாயம் இல்லை. நான் என்ன செய்ய முடியும்? (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. தமிமுன் அன்சாரி.

(சுயேட்சை உறுப்பினர் திரு. டிடிவி தினகரன் அவையிலிருந்து வெளியேறினார்.)

**திரு. எம். தமிமுன் அன்சாரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் இருங்கள். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் ஏதோ சொல்ல வருகிறார். நீங்கள் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணபுமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன் அவர்கள் நிதிப் பற்றாக்குறை, வருவாய்ப் பற்றாக்குறை, கடன் அளவைப் பற்றியெல்லாம் இங்கே சொன்னார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் நிதிப் பற்றாக்குறை வரையறை அளவான 3 சதவிகிதத்திற்கு உட்பட்டுத்தான். . . (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. அவர் சொன்னதற்கு விளக்கம் சொல்ல வேண்டும் அல்லவா! (குறுக்கீடுகள்) பதில் சொல்ல வேண்டாமா?



[திரு. ஓ. பன்னீர்செல்வம்]

(குறுக்கீடுகள்) பதில் சொல்ல வேண்டாமா? (குறுக்கீடுகள்) எப்போது வேண்டுமானாலும் சொல்லலாம். (குறுக்கீடுகள்) எப்போது வேண்டுமானாலும் சொல்லலாம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் துணைத் தலைவர் tension ஆகாதீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் சென்று காபி சாப்பிட்டுவிட்டு வாருங்கள். (குறுக்கீடுகள்) திரு. அன்பழகன், நீங்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** ஒரேயொரு வருடம். அதாவது, 2016–2017 ஆம் ஆண்டு exceed ஆனது. அதற்கு மத்திய அரசிடம் விலக்கு வாங்கியிருக்கிறோம். (குறுக்கீடு) 22 ஆயிரத்து 815 கோடி ரூபாய் மின் பகிர்மானக் கடனை மாநில அரசே ஏற்றுக்கொண்டதால் exceed ஆனது. அதேமாதிரி, வருவாய்ப் பற்றாக்குறையும் வரையறை அளவுக்குள்தான் இருக்கிறது. மத்திய அரசு சொன்ன வரையறை அளவுக்குள்தான் இருக்கிறது. கடனளவும் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் வரையறை அளவுக்குள்தான் இருக்கிறது என்பதைத் தற்போது சுருக்கமாகச் சொல்லி, நிதிநிலை அறிக்கை வரும்போது உங்களுக்கு விளக்கமாகச் சொல்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள். இப்பொழுது மணி 12–44 ஆகிறது. நீங்கள் 12–54 மணிக்கு உரையை முடித்துவிட வேண்டும். நீங்கள் எனக்கு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும்.

பிற்பகல் 12–45

**திரு. எம். தமிமுன் அன்சாரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய உணர்வுகளைப் புரிந்துகொண்டு நான் 10 நிமிடங்களில் என்னுடைய உரையை முடித்து விடுகிறேன். மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, என்னுடைய உரையின்போது தயவுசெய்து. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன், நான் இன்றைக்கு உங்களுடைய கட்சியின் தலைவர்கள் வற்புறுத்தியதால் உங்களைப் பேசுவதற்கு அனுமதித்தேன். உங்களுடைய பேச்சால் 1 மணி நேரம் 20 நிமிடங்கள் கூடுதலாக ஆகியிருக்கிறது. 15 நிமிடங்கள் பேசுவதற்கு உங்களுக்கு அனுமதியளித்து, அவையின் நேரம் 1 மணி, 20 நிமிடங்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடு) பாருங்கள், எதிர்க்கட்சித்

தலைவர் பேச வாய்ப்பு இன்னும் கொடுக்கவில்லை என்று சொல்கிறார். இதற்குமேல் பேச அனுமதி தர முடியாது. (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காரவில்லையென்றால் நடவடிக்கை எடுத்துவிடுவேன்.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன் அவையிலிருந்து வெளியேறினார்.)*

**திரு. எம். தமிமுன் அன்சாரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து குறுக்கீடுகள் வருகின்ற காரணத்தினால், நியாயமாக எனக்குக் கிடைக்க வேண்டிய நேரம் பறிபோய்க் கொண்டிருக்கிறது. நான் 12–45 மணிக்குதான் பேசத் தொடங்குகிறேன் என்பதைக் கருத்திற்கொண்டு தொடர்ந்து பேச என்னை அனுமதிக்க வேண்டும். மரியாதைக்குரிய மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் என்னுடைய உரையிலே குறுக்கிடாமல் நான் முழுமையாகப் பேசி முடித்தபிறகு, என்னுடைய உரையின்மீது உங்களுடைய பதில் விளக்கங்களைத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால் 10 நிமிடங்களில் நான் முழுமையாகப் பேசுவதற்கு இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள விரும்புகின்றேன்.

‘மத்தியிலே கூட்டாட்சி, மாநிலத்திலே சுயாட்சி’ என்ற பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கொள்கையை நாங்கள் விட்டுக் கொடுக்கமாட்டோம் என்ற அடிப்படையில் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் மாநில உரிமைகளை விட்டுக் கொடுக்கமாட்டோம் என்று இந்த அவையிலே உறுதி கூறியதற்காக அவருக்கும், இந்த அரசுக்கும் முதலிலே நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால் தமிழ்நாட்டுடைய உரிமைகளை விட்டுக்கொடுப்பதை தமிழ்நாட்டு மக்கள் எப்பொழுதுமே விரும்புவதில்லை. யாரெல்லாம் உரிமைகளை விட்டுக்கொடுக்கிறார்களோ, அவர்களை மக்கள் விட்டுக்கொடுக்கிறார்கள் என்பதுதான் யதார்த்தமாக இருக்கிறது. அந்த அடிப்படையிலே இந்த அரசு அம்மாவின் வழியிலே தொடர்ந்து சிறப்பான துணிச்சலான அரசாக நடைபோடும் என்ற நம்பிக்கையை முதலிலே நான் வெளிப்படுத்தி, இந்த அரசின் சில பணிகளுக்கு என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக உலகப் புகழ்பெற்ற ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை தொடங்கப்படுவதற்கு 10



கோடி ரூபாய் அறிவித்ததற்கு அம்மாவின் அரசிற்கு நெஞ்சார்ந்த பாராட்டுகளை தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதுபோன்று தமிழக அரசின் இந்த நடவடிக்கையைத் தொடர்ந்து, உலகமெங்கும் வாழ்ந்து கொண்டிருக்கிற தமிழர்களும், தமிழ் அமைப்புகளும் ஹார்வர்டு பல்கலைக்கழகத்திற்கு தொடர்ந்து நிதியுதவிகளை செய்து கொண்டிருக்கிறார்கள். கடைசியாக 5 கோடி ரூபாய் பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. கருணை உள்ளம் கொண்ட அம்மா அவர்களுடைய அரசு அந்தப் பற்றாக்குறை தொகையையும் அளித்துவிட்டால் உலகத் தமிழர்களுக்கு சேவகம் செய்த ஒரு மிகப் பெரிய அரசாக இந்த அரசு வரலாற்றில் குறிப்பிடப்படும் என்பதை இந்த நேரத்திலே பதிவுசெய்து, என்னுடைய இந்தக் கோரிக்கையை அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று இந்தப் பேரவையிலே நம்முடைய சபாநாயகர் அவர்கள் அமர்ந்திருக்கக்கூடிய இதே இருக்கையிலே இதற்கு முன்பாக சபாநாயகராகப் பணியாற்றிய இதழியல் துறையில் முன்னோடியான பெரும் மரியாதைக்குரிய அய்யா சி.பா. ஆதித்தனார் அவர்களுடைய எழுத்துச் சீர்திருத்தத்தைப் பற்றி பாடப் புத்தகங்களில் சேர்க்கப்படும் என்று அறிவித்ததற்காக தமிழக அரசுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த பாராட்டுகளை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று தமிழர்களுடைய கலாச்சாரத்தை எடுத்துக்கூறும் விதத்திலே கீழடி அகழாய்வு அமைந்திருப்பதாக பத்திரிகைகளில் செய்தி வந்தது; அது நிறுத்தப்பட்டிருக்கிறது. நம்முடைய திராவிட கலாச்சாரத்தையும், தமிழர்களுடைய பண்பாட்டையும் தொடர்ந்து மீட்டெடுக்க நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள், நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி கூறியிருந்தார். அதை நான் வரவேற்று அவருக்கு என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று ஒகி புயலால் கன்னியாகுமரி மாவட்டம் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் அடிப்படையில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அங்கே முகாமிட்டு 5 நாட்களில் மின்சார இணைப்புகளைக் கொடுத்ததற்கு

[திரு. எம். தமிமுன் அன்சாரி] [*2018 ஜனவரி 11*

அவர்களுக்கு நான் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று நானும், அண்ணன் தனியரசு அவர்களும் அங்கே சென்றிருந்தபொழுது கேரள அரசு புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்ததுபோல தமிழக அரசும் உதவி செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை விடுத்திருந்தோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒகி புயலால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு, உயிரிழந்த மீனவர்களுக்கு 20 இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்றும், அரசு வேலை வழங்கப்படும் என்றும் கூறியிருந்தார்கள். அதற்கு என்னுடைய நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒகி புயலால் உயிரிழந்த அனைவருக்கும் இந்தத் தொகையைக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். மீனவர்களை தேடும் பணி நடைபெற்றுக் கொண்டிருப்பதாகக் கூறியிருக்கிறீர்கள். கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் மட்டுமல்ல, கடலூர், தேவனாம்பட்டு, நாகப்பட்டினம் உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த மீனவர்களும் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றிருக்கிறார்கள். எனவே, மீனவர்களுக்கு ஆதரவான மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, தொடர்ந்து அந்த மீனவர்களைக் கண்டுபிடிக்கும் பணியில் துரிதம் காட்ட வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மிக முக்கியமாக, முத்தலாக் மசோதாவை மத்திய அரசு கொண்டு வந்திருந்த நிலையிலே, எந்த நிலையிலும் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய முஸ்லிம் சமுதாய மக்களுடைய உணர்வுகளுக்குக் குந்தகம் விளைவிக்க மாட்டோம் என்று உறுதிகூறி, கடந்த டிசம்பர் மாதம் 7 ஆம் நாள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் அவர்களுடைய இல்லத்தில் சந்தித்தபோது என்ன வாக்குறுதி கொடுத்தார்களோ, அதையே தமிழக அரசின் நிலைப்பாடாக அறிவித்ததற்காக தமிழக முஸ்லிம் சமுதாயத்தின் சார்பாக மாண்புமிகு அம்மாவின் அரசுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எத்தனையோ விஷயங்களில் சில நெளிவுசுளிவுகளை கடைபிடித்திருந்தாலும், இந்த விஷயத்திலே நாங்கள் ஒரு காலத்திலும் விட்டுக்கொடுக்க



[திரு. எம். தமிமுன் அன்சாரி]

மாட்டோம், சிறுபான்மை மக்களுடைய உரிமைகளை மதிப்போம் என்ற நிலைப்பாடு எடுத்ததற்காக மீண்டும், மீண்டும் என்னுடைய பாராட்டுகளை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–50*

மிக முக்கியமான ஒரு subject–க்கு நான் வர இருக்கின்றேன். நீண்ட நெடுங்காலமாக, நான் இந்த அவையிலே நுழைந்ததிலிருந்து, ஆயுள் கைதிகளினுடைய முன் விடுதலை சம்பந்தமாக நான் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றேன். இந்தக் கருத்திலே நானும், அண்ணன் திரு. தனியரசு, திரு. கருணாஸ் அவர்கள் மட்டுமல்ல, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், ஆளுங்கட்சி உறுப்பினர்களும், எதிர்க்கட்சி உறுப்பினர்களும், எல்லோருமே ஒரே மன நிலையிலே இருக்கின்றோம். இந்த நிலையிலே, இந்தக் கோரிக்கைக்கு சிறப்பு சேர்க்கும் வகையிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திண்டுக்கல்லில் நடைபெற்ற பொன்மனச் செம்மல் ஐயா எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவிலே பேசுகின்றபோது, 'பத்து ஆண்டுகள் நிறைவு செய்த, 60 வயதைக் கடந்த ஆயுள் தண்டனைக் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்படுவார்கள்' என்று அறிவித்தார்கள். நான் உண்மையிலேயே சொல்கிறேன், இப்படிப்பட்ட ஒரு துணிச்சலான முடிவை, அறிவிப்பை வெளியிட்டமைக்காக உங்களுக்கும், இந்த அரசுக்கும் மனமார்ந்த நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இந்த நேரத்திலே, ஒரு தாழ்மையான கோரிக்கையை நான் முன்வைக்கின்றேன். நிச்சயமாக ஆளுங்கட்சி உறுப்பினர்களும், எதிர்க்கட்சி உறுப்பினர்களும் மனிதாபிமானத்தோடு இந்த விஷயத்திலே உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அது என்னவென்று சொன்னால், ஆயுள் கைதிகள் விடுதலையிலே பாரபட்சம் பார்க்கக் கூடாது. சாதி, மதம், வழக்கு பேதமின்றி அனைவரையும் விடுதலை செய்ய நீங்கள் முயற்சி எடுக்க வேண்டும். இந்த விவகாரத்தில் சட்டச் சிக்கல்கள் இருந்தால் அதற்காக ஒரு தனி அரசாணையையும் நீங்கள் வெளியிடுவதற்கான முயற்சியை செய்ய வேண்டும். மிக முக்கியமாக, கோவை குண்டு வெடிப்பில் தொடர்புடைய கைதிகள் 20 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் வாடி வதங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய குடும்பங்கள் கண்ணீரிலே

கதறி அழுது கொண்டிருக்கின்றன. அவர்கள் ஒவ்வொருவரின் பேச்சுக்களை ஐந்து நிமிடங்கள் கேட்டாலே உருகாத மனமும் உருகும் என்ற அளவிற்கு அவர்களின் வேதனை இருந்து கொண்டிருக்கின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, கட்சி பேதங்களைப் பார்க்காமல், அரசியல் பேதங்களைப் பார்க்காமல், கருத்து வேறுபாடுகளைப் பார்க்காமல், உங்களுடைய இரண்டு கரங்களை நான் பற்றிக் கேட்பதாகப் புரிந்துகொள்ளுங்கள். தயவுசெய்து அந்தக் கைதிகளையும் இந்த விடுதலையில் உள்ளடக்க நீங்கள் நடவடிக்கை எடுங்கள். வரலாறு உங்களைப் பாராட்டும் என்பதை நீங்கள் மறந்துவிடாதீர்கள். அதுமட்டுமல்லாமல், ஆயுள் தண்டனை பெற்ற நளினி, பேரறிவாளன் உள்ளிட்ட ஏழு தமிழர்களின் விடுதலை குறித்தும் தமிழ்நாடு எங்கும் பேசப்படுகிறது. அந்த விஷயத்திலே நீங்கள் தொடர்ந்து மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பத்து ஆண்டுகளுக்கு மேல் சிறையில் இருக்கின்ற சிறைவாசிகள், பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு விடுதலை செய்யப்படுவார்கள்' என்று அறிவிப்பு தந்தோம். அப்போதே நாங்கள் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றோம். உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில், சட்டத்தின் அடிப்படையில், சிறை விதிகளின் அடிப்படையில்தான் நாம் கைதிகளை விடுதலை செய்ய முடியும். அந்த அதிகாரம்தான் நமக்கு இருக்கின்றது. அந்த அதிகாரத்திற்குள் யார் யாரெல்லாம் வருகிறார்களோ அவர்கள் அனைவருமே விடுதலை செய்யப்படுவார்கள். இதில் ஜாதி, மதம் எதற்குமே இடமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தச் சட்ட திட்டத்திற்குள் வருகின்றவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்படுவார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்வதைப்போல, எங்களது அதிகாரத்திற்கு உட்பட்டு இருந்தால், நிச்சயமாக அவர்களையெல்லாம் விடுதலை செய்வோம் என்பதை இந்தத் தருணத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள்.



**திரு. எம். தமிமுன் அன்சாரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நேற்றையதினம் சட்ட வல்லுநர்களோடு நானும், அண்ணன் திரு. தனியரசு அவர்களும் கலந்து ஆலோசித்தோம். அரசியல் சாசனச் சட்ட இறையாண்மைக்குட்பட்டு, மாநில உரிமைகளுக்குட்பட்டு, 161—ன்படி நிச்சயமாக அனைவரையும் விடுதலை செய்ய முடியும் என்ற ஷரத்து இருக்கிறது. அந்த ஷரத்தை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு இந்த நேரத்திலே பயன்படுத்தி, நான் சுட்டிக்காட்டிய கைதிகளையெல்லாம் விடுதலை செய்வதற்கு நீங்கள் உதவி செய்ய வேண்டும். இல்லையென்று சொன்னால், ஆளுங்கட்சி உறுப்பினர்களும், நம்முடைய எதிர்க்கட்சி உறுப்பினர்களும் இணைந்து தமிழ்நாடு சட்டமன்றத்திலே ஒத்த சிந்தனையோடு ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற தாழ்மையான ஒரு கோரிக்கையை இந்த நேரத்திலே வைக்கிறேன். நான் அடுத்த தகவலுக்குச் செல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. எம். தமிமுன் அன்சாரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேச ஆரம்பித்து ஐந்து நிமிடங்கள்கூட ஆகவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேச ஆரம்பித்து ஐந்து நிமிடங்கள் முடிந்துவிட்டன, சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. எம். தமிமுன் அன்சாரி:** திரை கடல் ஓடியும், திரவியம் தேடு என்ற பழமொழிக்கேற்ப, நம்முடைய தமிழர்கள் பிழைப்பிற்காக உலகமெங்கும் சென்று பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். வளைகுடா நாடுகள், சிங்கப்பூர், மலேசியா உள்ளிட்ட தென்கிழக்கு ஆசிய நாடுகளில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். கேரள அரசு வெளிநாடுகளில் பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய மலையாளிகளுக்காக தனி அமைச்சகத்தை உருவாக்கி இருக்கிறது. இதன்மூலம் கேரளாவிற்கும் வருமானம் குவிகிறது. மலையாளிகளும் பெருமளவிலே நன்மைகளைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதைப் பின்பற்றி நம்முடைய தமிழ்நாடு அரசும் வெளிநாடுவாழ் தமிழர்களுக்காக தனி அமைச்சகத்தை உருவாக்க வேண்டுமென்று

[திரு. எம். தமிமுன் அன்சாரி] [*2018 ஜனவரி 11*

இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இதைக் கனிவோடு பரிசீலிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, மிக முக்கியமான, தமிழ்நாடு சந்திக்கக்கூடிய ஓர் அபாயத்தை இந்த நேரத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். அது என்னவென்று சொன்னால், இந்த மண்ணின் மைந்தர்களுக்கு அரசு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்க வேண்டும். (குறுக்கீடு) தயவுசெய்து குறுக்கிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் பேசிய பிறகு குறுக்கிடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். TNPSC–தமிழ்நாடு அரசு தேர்வாணையம் எதிர்வரும் 11–2–2018 அன்று 9,531 பணியிடங்களுக்கு எழுத்துத் தேர்வை நடத்த இருக்கிறது. இதில் இந்தியாவின் எல்லா மாநிலங்களைச் சேர்ந்தவர்களும், பூடான், நேபாளம் போன்ற வெளிநாடுகளைச் சேர்ந்தவர்களும் பாகிஸ்தான், பங்களாதேஷ், திபெத், மியான்மர் போன்ற நாடுகளின் அகதிகளும் எழுதலாம் என 14–11–2017 அன்று அறிவிக்கை வெளியிடப்பட்டிருக்கின்றது. ஏற்கெனவே, பாலிடெக்னிக் விரிவுரையாளர் பணியில் 1,058 பேருக்கான தேர்வில் வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்களை அனுமதித்ததனால், பல நூறு தமிழர்கள் வேலைவாய்ப்புகளை இழந்திருக்கின்றார்கள்.

*பிற்பகல் 12–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி, சீக்கிரம் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தமிழ்நாடு தேர்வாணையத்தின்மூலம் வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் தேர்வு செய்யப்படுவதற்கு ஏதோ இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு புதியதாக இந்த விதிகளை சேர்த்திருப்பதைப் போன்ற ஒரு மாயத் தோற்றத்தை இங்கே ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். இந்த விதி 1952–லிருந்து கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது என்பதை இங்குள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். 2011–ல் உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு நடைபெற்றது. ஒரு வேலையில் ஒருவருடைய seniority fix செய்யும்போது ஏற்பட்ட வழக்கு



[திரு. சி.வி. சண்முகம்]

சம்பந்தமாக அந்த விதி சட்டமாக்கப்பட்டிருக்கின்றதே தவிர, இந்த விதி 1952 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். 2011 முதல் 2016 வரை தேர்வாணையத்தின்மூலம் தேர்வு நடத்தப்பட்டு, வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் மொத்தம் 30 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அதில் 22 பேர் பாண்டிச்சேரி மாநிலத்தைச் சேர்ந்தவர்கள், 3 பேர் கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். இதுபோன்று 30 பேர்தான் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றார்கள். இந்த விதியானது அனைத்து மாநிலங்களிலும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். 2000 ஆம் ஆண்டிற்கு முன்பு தேர்வு செய்யப்பட்ட வெளி மாநிலத்தைச் சேர்ந்தவர்களின் கணக்கெடுப்பு தேர்வாணையத்தில் இல்லை என்பதால் அந்தக் கணக்கெடுப்பை நான் உங்களுக்குத் தெரிவிக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி, உரையை முடியுங்கள்.

**திரு. எம். தமிமுன் அன்சாரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அந்தக் கருத்தை நான் வரவேற்கின்றேன், ஏற்றுக்கொள்கின்றேன். ஆனால் மண்ணின் மைந்தர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை இல்லை என்பதால் நாம் சட்டம் இயற்றும்போது, கர்நாடகா, குஜராத்தைப் போன்று பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, நாகப்பட்டினம் மாவட்டத்தில் இந்த வருடம் கடுமையான மழை பெய்த காரணத்தினால் 11 ஆயிரம் ஹெக்டேர் நெற் பயிர்கள் மூழ்கிவிட்டன. அந்த விவசாயிகள் நம்முடைய அம்மா அவர்களுடைய அரசிடமிருந்து உதவித் தொகையை எதிர்பார்க்கின்றார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 11 ஆயிரம் ஹெக்டேர் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய நிலையில், விவசாயிகளினுடைய பிரச்சினையை மனதிற்கொண்டு அவர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய நாகப்பட்டினம் மாவட்டத்தில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி, சீக்கிரம் உரையை முடியுங்கள்.

[2018 ஜனவரி 11

**திரு. எம். தமிமுன் அன்சாரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டே நிமிடங்களில் என்னுடைய உரையை முடித்து விடுகின்றேன். நாகப்பட்டினம் மாவட்டத்தில் விவசாயிகளுக்கு இன்சூரன்ஸ் தொகை கிடைக்காமல் இருக்கின்றது. நேற்றையதினம்கூட, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசினார்கள். அந்தத் தொகை விரைவாகக் கிடைக்க, அந்தத் தனியார் நிறுவனத்துடன் விரைவில் பேச்சுவார்த்தை நடத்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். அதன்மூலமாக என்னுடைய தொகுதி மக்களுக்கும், நாகை மாவட்ட மக்களுக்கும் உதவி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். மணல் தட்டுப்பாடு குறித்து . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், திரு. எம். தமிமுன் அன்சாரி, நீங்கள் உட்காருங்கள்.

**திரு. எம். தமிமுன் அன்சாரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடத்தில் என்னுடைய உரையை முடித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, நீங்கள் 25 நிமிடங்களில் பேசி உங்கள் உரையை முடியுங்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேச வேண்டியுள்ளதால், நான் ஏற்கெனவே கேட்டுக்கொண்டதற்கிணங்க 25 நிமிடங்களில் உங்கள் உரையை முடிக்கும்படி அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். (குறுக்கீடு) மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர், அவர் பேசி முடித்ததற்குப் பின்னால் நீங்கள் பதில் சொல்லலாம், உட்காருங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த உங்களுக்கு முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்திலே ஒகி புயல் தாக்கியபோது எங்களுடைய தலைவர் திரு.ராகுல் காந்தி அவர்கள் உடனடியாக கன்னியாகுமரி வந்தார்கள். கன்னியாகுமரி வந்து ஏழையெளிய மக்களை, மீனவர்களை நேரடியாகச் சென்று பார்த்து ஆறுதல் கூறினார்கள். அதற்காக அவருக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோல நம்முடைய பிரதமர் அவர்கள் கன்னியாகுமரிக்கு வருகை தந்தார்கள். ஆனால், அவர்கள் என்ன காரணத்தினாலோ விருந்தினர் மாளிகையைவிட்டு வெளியே வரவில்லை. அவர் பாதிக்கப்பட்ட மக்களை நேரடியாகச் சந்தித்திருக்க வேண்டும்;



[திரு. கரி. இராமசாமி]

அழைத்துப் பேசியதாக நான் கேள்விப்பட்டேன். அதற்குப் பிறகு நம்முடைய அரசு நிதி தர வேண்டும் என்று மத்திய அரசிடம் பல கோரிக்கைகளைத் தொடர்ந்து வற்புறுத்தியும் நாம் கேட்கின்ற நிதி இன்னும் நமக்குக் கிடைக்கப் பெறவில்லை. அதற்கு என்ன காரணம் என்று எனக்குப் புரியவில்லை. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள், நாங்கள் இணக்கமாக இருப்பதற்குக் காரணம், அவர்களுடைய உதவி தேவை என்று. உண்மைதான். நீங்கள் இணக்கமாகத்தான் இருக்க வேண்டும் என்பதில் மாறுபட்ட கருத்து கிடையாது. நான் ஒரு சில தகவல்களை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழகத்தில் முன்னாள் முதலமைச்சர் அவர்கள் இருந்தபோது, தமிழகத்தினுடைய உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கத் துணிந்து நின்றார்கள்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்) தலைமை]

பிற்பகல் 1–00

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், காவேரி நீர் பெறுவதில் நமது உரிமையை நிலைநாட்டுகின்ற வகையில், காவேரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும் என்ற தமிழகத்தின் கோரிக்கையை பா.ஜ.க. அரசு தொடர்ந்து புறக்கணித்து வருகிறது, தமிழகத்தின்மீது திணிக்கப்பட்ட NEET தேர்வை இரத்து செய்யக்கோரும் முயற்சியில், இந்த அரசு முற்றிலும் தோல்வியடைந்துவிட்டது. மத்திய அரசின் ONGC நிறுவனம், தமிழகத்தில் நெடுவாசல், கதிராமங்கலம் உள்ளிட்ட பல இடங்களில் Hydrocarbon எடுக்க மத்திய அரசு எடுத்த முயற்சிக்கு எதிராக பல்வேறு போராட்டங்கள் நடைபெற்றன. ஆனால், அந்த விவசாயிகளின் போராட்டங்கள் நிறைவேறவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக, 2015 டிசம்பரில் வெள்ளப் பெருக்கினால் ஏற்பட்ட பகுதிகளுக்கு நிவாரண நிதியாக ரூ.25,912 கோடியும், 2016 ஆம் ஆண்டு 'வர்தா' புயலினால் ஏற்பட்ட பாதிப்பிற்காக ரூ.22,573 கோடியும் தமிழக முதலமைச்சரால் மத்திய பா.ஜ.க. அரசிடம் கேட்கப்பட்டது. அதேபோல், தமிழகம் வறட்சி மாநிலமாக அறிவிக்கப்பட்டதையொட்டி, நிவாரணத் தொகையாக ரூ.39,565 கோடி வேண்டி, பிரதமர் நரேந்திர மோடியை நேரில் சந்தித்து தமிழக முதலமைச்சர் கோரிக்கை விடுத்தார். ஆக மொத்தம், தமிழக அரசு கேட்டது மட்டும் ரூ.88 ஆயிரம் கோடி ஆகும். இந்நிலையில் 'ஒகி' புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக மத்திய

[திரு. கரி. இராமசாமி] [2018 ஜனவரி 11

அரசிடம் தமிழக முதலமைச்சர் கேட்டது ரூ.9,300 கோடி. ஆனால், மத்திய பா.ஜ.க. அரசு வழங்கியதோ, 280 கோடியை ரூபாய் ஆகும். இந்நிலையில் தமிழக அரசு நிதி கேட்பதும், மத்திய அரசு அலட்சியப் போக்குடன் பாராமுகமாக இருப்பதுமாக, ஒரு நாடகம் நடைபெறுவதுபோல் தோன்றுகிறது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது, ஆளுநர் உரையைப் பற்றிப் பேசுவார் என்று பார்த்தால், அவர், நீட், நெடுவாசல் என்று ஒவ்வொன்றாகப் பேசி வந்தார். அவர் கடந்த காலத்தை மறந்துவிட்டுப் பேசுகின்றார் என்று நினைக்கின்றேன். ONGC, நெடுவாசல் போன்றவையெல்லாம் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்ட திட்டங்கள். அவர்கள் கொடுத்த approval தான், அவர்கள் கொடுத்த அனுமதிதான் என்பதை மறந்துவிட்டுப் பேசுகிறார் என்பது ஒன்று. (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டாவதாக, NEET தேர்வைப் பொறுத்தவரை, உங்கள் ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்டதுதான் அது. ஏதோ நாங்கள் வந்ததற்குப் பின்னால் வரவில்லை. அது தமிழகத்திற்கு மட்டும் திணிக்கப்படவில்லை. இந்தியா முழுவதும் இருக்கின்றது. அது உச்ச நீதிமன்ற ஆணையின்படி வந்தது. மேலும், எங்களால் முடிந்தவரை முயற்சி செய்தோம். நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் பலமுறை இதற்காகச் சென்றதோடு, மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் கிட்டத்தட்ட 10 நாட்கள் அங்கேயே இருந்து, தமிழகத்தில்தான் கடைசியாக வந்தது என்று சொல்லும் அளவிற்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது. ஆக, இவை நீங்கள் கொண்டு வந்த திட்டங்கள். தற்போதுள்ள மத்திய அரசு கொண்டு வந்ததாகவும், நாங்கள் கண்டும் காணாமல் இருப்பதாகவும் ஒரு தவறான எண்ணத்தை இந்தச் சபையில் பதிய வைக்க வேண்டாம் என்பதற்காகத்தான் சொல்கிறேன். அதேபோல், காங்கிரஸ் ஆட்சி மத்தியில் இருந்தபோதும் இதுபோன்றே வறட்சி நிவாரணம், வெள்ள நிவாரணம் எல்லாம் கேட்டிருக்கின்றோம். கேட்டதையெல்லாம் நீங்கள் கொடுத்துவிட்டீர்களா என்பதையும், அதன் குறிப்புகள் இருந்தால் அதையும் சொல்ல வேண்டும் என்பதையும் மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாக



[திரு. பி. தங்கமணி]

மாண்புமிகு காங்கிரஸ் சட்டமன்றக் குழுத் தலைவர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எம். நரசிம்மன்):** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1–05

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தச் சம்பவத்திற்குள்ளே செல்ல வேண்டாம் என்று நினைத்திருந்தேன். இருந்தாலும் ஒரு கருத்தை நான் சொல்ல விரும்புகின்றேன். இந்த ஆண்டு இந்தியாவில் இருக்கக்கூடிய அத்தனை மாநிலங்களும் இந்தப் பிரச்சினையை கைவிட்ட பிறகு, அந்தக் கொள்கையிலே உறுதியாக நின்ற தமிழ்நாடு அரசு, உச்ச நீதிமன்றத்திலே மிகக் கடுமையாக சட்டப் போராட்டம் நடத்தி, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பலமுறை சந்தித்து அதற்காக அழுத்தத்தைக் கொடுத்தார்கள். உச்ச நீதிமன்றத்தினுடைய தலைமை வழக்கறிஞர்–Attorney General அவர்களிடம் தமிழ்நாடு அரசுக்கு exemption வேண்டுமென்ற சாதகமான opinion–ஐ வாங்கி, உள் துறை மற்றும் சட்ட அமைச்சகத்திடம் நாம் ஒப்புதலை வாங்கிய பிறகு, உங்களுடைய காங்கிரஸ் கட்சியின் சார்பில் முன்னாள் மத்திய அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்களின் மனைவி திருமதி நளினி சிதம்பரம் தொடர்ந்த வழக்கிலே தமிழக அரசுக்கு பாதகமான தீர்ப்பு வந்தது என்பதை இன்றைக்கு காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றக் குழுத் தலைவர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியினர் மத்தியிலே நீண்டகாலம் ஆட்சி செய்தவர்கள். எனவே, உங்களுடைய ஆட்சிக் காலத்திலே தமிழ்நாட்டிற்கு நம்முடைய மாநில அரசின் மூலமாக அனுப்பப்பட்ட கருத்துருக்களுக்கு எவ்வளவு நிதி ஒவ்வோர் ஆண்டிற்கும் கொடுக்கப்பட்டது? கேட்கப்பட்டதெல்லாம்

கொடுக்கப்பட்டதா என்பதை முதலிலே நீங்கள் சொல்லிவிட்டு, அதன் பிறகு இதைச் சொல்லியிருந்தால் ஓர் ஒப்பீடாக இருக்கும். எனவே, பொத்தாம் பொதுவாகச் சொல்லக் கூடாது.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 'நீட்' தேர்வைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 'நீட்' தேர்வைப் பற்றிய தீர்ப்பு வருவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பாகக்கூட, நாங்கள் 'நிச்சயமாக சாதகமாகப் பெற்றுவிடுவோம்' என்று நீங்கள் சொன்னீர்களா, இல்லையா? *(குறுக்கீடு)* சொன்னீர்கள். ஏன்? *(குறுக்கீடு)* நான் பேசி முடித்துவிடுகிறேன். அந்த மாணவர்கள். . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியின் சட்டமன்றக் குழுத் தலைவர் அவர்கள், தயவுசெய்து உண்மை நிலைமையை, நடந்த சம்பவத்தை புரிந்துகொள்ள வேண்டும். நாங்கள் சொன்னோம். இந்த வழக்கு குறித்து உச்ச நீதிமன்றத்தினுடைய தலைமை வழக்கறிஞரிடம் சாதகமான கருத்துரையைப் பெற்றோம். We got a valuable opinion in favour of NEET exemption from the Attorney General. அதற்குப் பின் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுடைய ஒப்புதலோடு, இரண்டு அமைச்சகத்திடமும் ஒப்புதல் பெற்றோம். அந்த நிலையிலே உங்கள் காங்கிரஸ் கட்சியினுடைய முன்னாள் மத்திய அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்களுடைய மனைவி திருமதி நளினி சிதம்பரம் தொடர்ந்த வழக்கிலே நமக்குப் பாதகமான தீர்ப்பு வந்தது. இது நாடறிந்த உண்மை. இதுபற்றி அத்தனைப் பேருக்கும் தெரியும். அவர்கள் தீர்ப்பைப் பெற்றுவிட்டு வெளியிலே வந்து, தமிழ்நாடு அரசுக்குப் பாதகமாக பேட்டியளித்தார்கள். இதுபற்றி உங்களுக்கும் தெரியும். *(குறுக்கீடு)*

**திரு. கரி. இராமசாமி:** தயவுசெய்து. . . *(குறுக்கீடு)*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் வேறு சப்ஜெக்ட்டுக்குப் போங்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மற்றவர்கள் இந்தக் கருத்தைப் பற்றிப் பேசலாம். காங்கிரஸ் கட்சி பேசுவது பொருத்தமற்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு நான் தெரிவித்துக்கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. கரி. இராமசாமி:** என்னுடைய கருத்து, மாணவர்கள் தேர்வுக்குத் தயாராக முடியாத நிலையை வகுத்தது இந்த அரசு. ஏனென்றால், நீங்கள் கடைசி நேரம் வரை இந்தத் தேர்வு இருக்காது என்று சொன்னீர்கள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 'நீங்கள் கடைசி நிமிடம் வரை மாணவர்களுக்கு நம்பிக்கை கொடுத்துக் கொண்டிருந்தீர்கள்' என்று சொல்கின்றார். ஒரு வழக்கைத் தொடுக்கின்றபோது, இந்த வழக்கில் தோல்வியடைந்து விடுவேன், தோல்வியடைந்து விடுவேன் என்று யாராவது வழக்குத் தொடுப்பார்களா? நாம் வழக்கைத் தொடுக்கின்றோம். *(மேசையைத் தட்டும் ஒலி)* அந்த வழக்கிலே நாம் வாதாடி நிச்சயம் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையில்தான் வழக்கைத் தொடுக்கின்றோம். அம்மா அவர்களுடைய அரசு இதற்காக உச்ச நீதிமன்றத்திலே இறுதி வரை போராடிக் கொண்டிருக்கின்றது. வழக்கில் இன்னும் இறுதித் தீர்ப்பு வரவில்லை. இந்த வழக்கிலே தமிழக அரசு கண்டிப்பாக தன்னுடைய இறுதி வாதத்தை வைத்து வெற்றி பெறுவதற்குப் பாடுபடும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் வேறு சப்ஜெக்ட்டுக்குப் போங்கள்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

**திரு. கரி. இராமசாமி:** நீங்கள் சொல்கிறபடி நான் வேறு சப்ஜெக்ட்டுக்குப் போகிறேன். *(குறுக்கீடு)* அவர் அங்கேயிருந்து எனக்கு உத்தரவு போடுகிறார். நீங்கள் சொல்கிறபடி கேட்டுக்கொள்கிறேன். தனிப்பட்ட நபர்களை பற்றிப் பேசுவதற்கு நான் தயாராக இல்லை. ஏனென்றால், நீங்கள் சொல்வதற்கு நான்

பதில் சொல்ல ஆரம்பித்தால் முன்னாள் முதலமைச்சரையும் இதிலே நான் இழுக்க வேண்டிவரும். (குறுக்கீடு) வேண்டாம். அவர்கள்மீதும் நான் மரியாதை வைத்திருக்கிறேன். (குறுக்கீடு) கொஞ்ச நேரம் பொறுமையாக இருங்கள். அநாவசியமாக, எங்கோ இருப்பவர்களைப் பற்றி நாம் பேசக் கூடாது. சட்டமன்றத்திலே, தமிழகத்திற்கு என்ன முன்னேற்றம் வேண்டுமோ அதைப் பற்றி நாம் discuss செய்வோம். வீம்பிற்கு நீங்கள் எதையாவது சொன்னீர்கள் என்றால், அதற்கு நான் பதில் சொன்னால், அது இன்னும் விபரீதமாகப் போய்விடும். அது வேண்டியதில்லை, அதற்கு நான் தயாராகவும் இல்லை. நான் அடுத்த சப்ஜெக்ட்டுக்குப் போகிறேன்.

பிற்பகல் 1–10

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அவர்கள், காங்கிரஸ் கட்சி தமிழ்நாட்டுக்கு ஒரு மிகப் பெரிய தியாகத்தை செய்ததைப் போலவும், ஆளுகிற அரசு விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதைப் போலவும் இந்த அவையில் ஒரு செயற்கையான குற்றச்சாட்டுகளை சுமத்திக் கொண்டிருக்கிறார்.

காவேரி நீர் பிரச்சினையில் தமிழ் மக்களுடைய உணர்வுகளுக்கு, உரிமைகளுக்கு மாறான செயலைத் தொடங்கியது காங்கிரஸ் கட்சி. முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினையில் தமிழ்நாட்டு மக்களுடைய உரிமைகளுக்கு மாறான செயலை செய்ததும், தமிழ்நாட்டு மக்களுடைய உணர்வுகளுக்கு செவி சாய்க்காத செயலை செய்ததும் காங்கிரஸ் கட்சிதான். கச்சத்தீவு பிரச்சினையில் தமிழ்நாட்டு மீனவர்கள், அன்றாடம் தாங்க முடியாத தொல்லைகளை அனுபவிப்பதற்கு, மரணத்தை சந்திப்பதற்கு, உடைமைகளை இழப்பதற்கு, சிறை சென்று திரும்புவதற்கெல்லாம் காரணமாக இருந்திருப்பதும் காங்கிரஸ் கட்சிதான். தமிழ்நாட்டினுடைய உரிமைகளுக்கு, உணர்வுகளுக்கு, உணர்ச்சிகளுக்கு என்றைக்கும் செவி சாய்க்காமல், மாறாகச் செயல்பட்டது காங்கிரஸ் கட்சிதான் என்பதை இங்கே தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர், எப்போதும் நீங்கள் கோபமாகப் பேசமாட்டீர்களே!



**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் என்ன வேண்டுமானாலும் பேசுங்கள். நான் கோபமே படவில்லையே!

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், எப்போதும்போல பேசுங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் "நீட்" தேர்வு பற்றிப் பேசும்போது பிரச்சினை ஏற்பட்டது. அனிதா என்ற ஒரு பெண் இறந்துவிட்டார். அவர் இறந்துபோனதற்கு என்ன செய்வது? அதற்கு என்ன பதில்? அதை விட்டுவிடுவோம். அதை நான் விவாதத்திற்குக் கொண்டுவர விரும்பவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், காங்கிரஸ் என்னென்ன செய்தது என்று இங்கே தெரிவித்தார். காங்கிரஸ் செய்தவற்றை முழுவதுமாக சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தியாவிற்கு சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்ததே காங்கிரஸ்தான். சுதந்திரம் பெற்றதால்தான் நீங்கள் இன்றைக்கு அமைச்சராக இருக்கிறீர்கள். இதையெல்லாம் நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். (குறுக்கீடு) சரி, அதை விட்டுவிடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுதந்திரம் கிடைக்கப்பெற்றதற்கு காங்கிரஸ்தான் காரணம் என்று சொன்னார். சுதந்திரம் வாங்கிய உடனேயே மகாத்மா காந்தியடிகள் காங்கிரஸை உடனடியாகக் கலைத்து விடுங்கள் என்றுதான் சொன்னார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேசுங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** புயலைப் பற்றி நாம் விரிவான. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் புயலை விட்டுவிட்டு தென்றலுக்கு வாருங்கள். அடுத்த சப்ஜெக்ட்டில் பேசுங்கள்.

[*2018 ஜனவரி 11*

**திரு. கரி. இராமசாமி:** அடுத்து, புயல் சம்பந்தமாகத்தான் பேசப்போகிறேன். புயலால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு இழப்பீடு வழங்கியிருக்கிறீர்கள். அதைப்போல, புயலால் பாதிக்கப்பட்ட அந்தப் பகுதியைச் சார்ந்த மற்றவர்களுக்கும், அதே அளவு இழப்பீடு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மீனவர்களுக்கு 20 இலட்சம் ரூபாய் இழப்பீட்டுத் தொகையை வழங்கியிருக்கிறீர்கள் என்று நான் எண்ணுகிறேன். அதே அளவுக்கு, புயலால் பாதிக்கப்பட்ட மற்றவர்களுக்கும், விவசாயிகளுக்கும் மற்றும் புயலால் இறந்தவர்களுக்கும் இழப்பீடு வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–15*

அடுத்தபடியாக, போக்குவரத்துத் துறை. இந்தத் துறையைப் பற்றியும் நாம் விரிவாகப் பேசியிருக்கிறோம். மீண்டும் சொல்கிறோம். இது தொடர்ந்து நடந்து வருகிறது. இதனால் அப்பாவி மக்கள் கடுமையாகப் பாதிக்கப்படுகிறார்கள். அந்தத் தொழிற்சங்கங்களைச் சார்ந்தவர்களும், நம்முடைய அரசும், நம்முடைய முதலமைச்சர் அவர்களும் இதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து, கூடிய விரைவிலே எல்லா இடங்களுக்கும் போதிய பேருந்து வசதிகளை செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் 80 சதவிகித பேருந்துகள் இயங்குவதாகச் சொல்கிறீர்கள். எங்களுக்கு வரக்கூடிய தகவல்கள் மாறாக உள்ளன. 50 சதவிகிதம் கூட இயங்குவதாகத் தெரியவில்லை. இதுதான் தமிழகத்தினுடைய இன்றைய நிலை. இதை ஏன் சொல்கிறீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை. நீங்கள் உடனடியாக அவர்களை அழைத்துப் பேச வேண்டும். நீதிமன்றத்திலே இன்றைக்கு அந்தப் பிரச்சினை எழுப்பப்படுகிறது என்று நான் எண்ணுகிறேன். உடனடியாக நீங்கள் அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்ட பிரச்சினை. காரைக்குடி நகராட்சியை மாநகராட்சியாக்க வேண்டும். அதற்கு அனைத்து வகை வாய்ப்புகளும் இருக்கின்றன. அதற்குரிய பரிந்துரைகள் எல்லாம் அரசாங்கத்திற்கு வந்திருக்கின்றன.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

நீங்கள் உடனடியாக மாநகராட்சியாக உயர்த்துவதற்குரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று நான்



[திரு. கரி. இராமசாமி]

கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, குப்பை கொட்டுவதற்கு சரியான இடம் இல்லாமல் சுற்றி வீடுகள் இருக்கும் இடத்தின் நடுவிலே கொட்டிக்கொண்டு வருகிறார்கள். அந்த இடத்தை மாற்றி அமைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அரசு மருத்துவமனையைக் குறித்து தொடர்ந்து நான் கோரி வருகிறேன். அங்கே கட்டடம் கட்டுவதற்குப் போதுமான இட வசதி இருக்கிறது. இட வசதி என்றால் மிகப் பெரிய இடம். 50, 60 ஏக்கர் நிலம் இருக்கிறது. அங்கே கட்டடம் கட்ட வேண்டும். இரண்டு இடங்களில் மருத்துவமனை இருக்கிறது. அதை ஒன்றாகச் சேர்க்க வேண்டும். மாவட்ட தலைமை மருத்துவமனை என்ற அந்தஸ்திற்குரிய வசதிகளை நீங்கள் உடனடியாகச் செய்து தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக காரைக்குடியில் சட்டக் கல்லூரி வேண்டுமென்று நாங்கள் தொடர்ந்து வற்புறுத்தி வருகிறோம். அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது, விவசாயிகள் பிரச்சினை. மிக, மிக முக்கியமான பிரச்சினை. விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தமிழகத்திலே எங்களது மாவட்டத்தின் நிலை வேறு, மற்ற மாவட்டங்களினுடைய நிலை வேறு; வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறது. குடிப்பதற்குக்கூட தண்ணீர் இல்லை. இந்த நிலை அங்கே நீடிக்கிறது. சென்ற ஆண்டு வறட்சியிலே பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இன்னும்கூட காப்பீட்டுத் தொகை வழங்கப்படவில்லை. (குறுக்கீடு) நான் உரையை முடித்து விடுகிறேன். பிறகு நீங்கள் பேசுங்கள். நான் சென்ற ஆண்டு பேசும்போது ஒருவருக்குக்கூட காப்பீட்டுத் தொகையை நீங்கள் வழங்கவில்லை என்று சொன்னேன். இப்பொழுது அப்படிச் சொல்லவில்லை. ஏறத்தாழ சிவகங்கை மாவட்டத்தில் மட்டும் 13 ஆயிரம் நபர்களுக்கு இழப்பீட்டுத் தொகை கிடைக்கவில்லை. அதை உடனடியாக வழங்க வேண்டும். இப்போது வறட்சியால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதற்குரிய கணக்கு எல்லாம் எடுப்பதற்குரிய நடவடிக்கையை நீங்கள் மேற்கொள்ள வேண்டும். இந்த ஆண்டு கடுமையான வறட்சி. அனைத்து இடங்களிலும் வெள்ளம். ஆனால், அங்கே கடுமையான வறட்சி ஏற்பட்டிருக்கிறது. இதைப் புரிந்துகொள்ள வேண்டும். புரிந்து,

அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1–20

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றக் குழுத் தலைவர், சென்ற முறை ஏற்பட்ட வறட்சியின்போது எந்த நிவாரணமும் வழங்கப்படவில்லையென்று சொல்லியிருக்கிறார்கள். சிவகங்கை மாவட்டத்தில் மட்டும் 94,712 விவசாயிகளுக்கு 80 கோடியே 9 இலட்சத்து 66 ஆயிரம் ரூபாய் வறட்சி நிவாரணமாக வழங்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) தற்போது விவசாயிகளுக்குக் காப்பீட்டுத் தொகையாக சிவகங்கை மாவட்டத்தில் மட்டும் 64,689 விவசாயிகளுக்கு 236 கோடியே 882 இலட்சத்து 8 ஆயிரம் ரூபாய் பயிர்க் காப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், ஒன்றை நான் தெரிவித்துக்கொள்கிறேன். வேளாண்மைத் துறையும், வருவாய்த் துறையும் தற்போது இழப்பீடு தொகையை வழங்க கணக்கு எடுத்துக்கொண்டு வருகின்றார்கள். அதோடுமட்டுமல்லாமல், காப்பீட்டு நிறுவனத்திடம் நாங்கள் உரிமையுடன் தொகையைக் கேட்டு, காப்பீட்டுக் கழகமும் இதுவரை 2,655 கோடி ரூபாயை விடுவித்து விவசாயிகளுக்கு வழங்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, எனக்கு ஒத்துழைப்பு கொடுத்து, உங்கள் உரையை சீக்கிரம் முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியின் சட்டமன்றக் குழுத் தலைவர் திரு. கரி. இராமசாமி அவர்கள் இங்கே உரையாற்றினார்கள். இந்தியாவிலேயே பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் தமிழகத்தில்தான் விவசாயிகளுக்கு அதிகளவில் காப்பீட்டுத் தொகையை பெற்றுக் கொடுத்திருக்கிறது. குறிப்பாக 9 இலட்சத்து 27 ஆயிரத்து 909 விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, இதில் ஏறத்தாழ 2,979.67 கோடி ரூபாய்





நிதி வழங்கப்பட்டிருக்கிறது. இதுவரை 7,83,544 விவசாயிகளுக்கு 2,546.49 கோடி ரூபாய் 5–1–2018 வரை வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, சிவகங்கை மாவட்டத்தில் ஏறத்தாழ 3 கோடியே 63 இலட்சத்து 71 ஆயிரம் கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. மேலும், சூராணம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கத்தில், சட்டப் பிரிவு 81–ன்கீழ் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிற காரணத்தினால், 67 இலட்சத்து 63 ஆயிரம் ரூபாய் மட்டும் வழங்க முடியாமல் இருக்கின்றது. விசாரணை நடந்து முடிந்த பின், அந்தத் தொகை வழங்கப்படும். அந்தப் பகுதியில் உள்ள அனைவருக்கும் தொகை வழங்கப்பட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவு வங்கி மூலமாக பயிர்க் கடன் பெற்ற விவசாயிகளுக்கு, இன்னும் வழங்க வேண்டியது 18 கோடியே 55 இலட்சம் ரூபாய் மட்டும்தான். அதையும் கூடிய விரைவில் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. நேற்று திரு. எ.வ. வேலு அவர்கள் கேட்டபோதுகூட, அவருக்கும் இந்தப் பதிலைத்தான் நான் சொல்லியிருக்கிறேன். அங்கு எதற்காகப் போராட்டம் நடக்கிறது என்ற விவரத்தை நான் பெற்று, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்களுக்குக் கொடுத்திருக்கிறேன். எனவே, இந்திய அளவில் மகராஷ்டிரா, உத்தரப்பிரதேசம், ஆந்திரம் என எந்த மாநிலங்களை எடுத்துக்கொண்டாலும், எந்த மாநிலத்திலும் இல்லாத அளவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அரசு, மாண்புமிகு அம்மாவின் அரசு காப்பீட்டுத் தொகையைப் பெற்றுக் கொடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் கொடுக்கவேயில்லை என்று சொல்லவில்லை; கொடுத்திருக்கிறீர்கள். அதில் சில நபர்களின் பெயர்கள் விடுபட்டுப் போய் இருக்கின்றன. அவர்களுக்கும் காப்பீட்டுத் தொகையைக் கொடுக்க வேண்டும் என்றுதான் கேட்கிறேன். ஒரு விவசாயி பயிர்க் காப்பீடு செய்து, பிரிமியம் தொகையையும் செலுத்தி, அவர் காப்பீட்டுத் தொகையைப் பெற தகுதி இருக்கிறது என்கிறபோது ஏன் அவருக்கு காப்பீட்டுத் தொகையைக் கொடுக்கக் கூடாது?

ஓர் ஆண்டுகாலம் ஆகிவிட்டது. ஓர் ஆண்டுகாலமாக காப்பீட்டுத் தொகை கிடைக்கவில்லை என்றால், அதற்கு யார் பொறுப்பு? அரசுதான் பொறுப்பு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள் காப்பீட்டுத் தொகையைப் பெற்றுத் தரவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டை வைத்திருக்கிறார். இந்தியாவிலேயே அதிகளவில் காப்பீட்டுத் தொகையை பெற்றுத் தந்த மாநிலம் தமிழ்நாடு. (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் தொடர்ந்து மத்திய அரசிடமும், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடமும் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, காப்பீடு செய்த பயிர்களுக்கு, முறையாகக் கிடைக்க வேண்டிய காப்பீட்டுத் தொகையைப் பெற்றுத் தருவதற்கு அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. எனக்கு முன்பு பேசிய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும்கூட காப்பீட்டுத் தொகை கொடுத்திருப்பதை புள்ளிவிவரத்தோடு சொன்னார். காப்பீட்டுத் தொகையைக் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட காரணத்தால்தான், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு காப்பீட்டுத் தொகையை பெற்றுத் தந்திருக்கிறது. விடுபட்டவர்களுக்கு தொகையைப் பெற்றுத் தருவதற்கான நடவடிக்கைகளையும் இந்த அரசு எடுத்து வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, சீக்கிரம் உங்கள் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நேரம் இல்லை, சீக்கிரமாக உங்கள் உரையை முடித்து விடுங்கள்.

பிற்பகல் 1–25

**திரு. கரி. இராமசாமி:** இரண்டு நிமிடங்களில் என் உரையை முடித்து விடுகிறேன். (குறுக்கீடு) சரி முடித்து விடுகிறேன். அதை முழுமையாகப் பெற்றுத்தர இந்த அரசு உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும். விவசாயிகளுக்கு நெல்லின் விலையை நிர்ணயித்திருக்கிறீர்கள். அது போதாது. அதனுடைய விலையை





இன்னும் அதிகப்படுத்த வேண்டும். ஏறத்தாழ குவிண்டால் ஒன்றுக்கு 2,500 ரூபாயாவது நீங்கள் தர வேண்டும். அதைப்போல, கரும்பு; கரும்புக்கு டன் ஒன்றுக்கு 3,500 ரூபாயாவது நீங்கள் கொடுக்க வேண்டும். நிலுவையிலே இருக்கக்கூடிய பணம் கரும்பு விவசாயிகளுக்குக் கிடைப்பதற்கு நீங்கள் உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, உரையை முடியுங்கள், இன்றைக்குக் கொஞ்சம் ஒத்துழைப்பு கொடுங்கள். உரையை முடியுங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரையை முடித்து விடுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர், இருங்கள் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, உரையை முடியுங்கள். நீங்கள் உரையை முடியுங்கள். மாண்புமிகு அமைச்சர், பிறகு வாய்ப்புத் தருகிறேன்.

**திரு. கரி. இராமசாமி:** தமிழகத்திலே மணல் தட்டுப்பாடு அதிகமாக இருக்கிறது. மணல் கிடைக்கவில்லை. இப்பொழுது மணலில் இருந்து நீங்கள் M–sand–க்கு மாறியிருக்கிறீர்கள். அதேசமயத்திலே, வெளிநாட்டிலிருந்து வந்த மணலை நீங்கள் தூத்துக்குடி துறைமுகத்திலே வைத்திருக்கிறீர்கள். வெளிநாட்டில் இருந்து குறைவான விலைக்கு மணல் கிடைத்தால் அந்த மணலை ஏன் நாம் பயன்படுத்தக் கூடாது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினமே விளக்கமாக, தெளிவாக மணலைப் பற்றிக் குறிப்பிட்டேன். தரமற்ற மணலை இறக்குமதி செய்கின்ற காரணத்தாலே பொதுமக்கள் பாதிக்கப்பட்டுவிடுவார்கள். அதற்குத்தான் பல விதிகளுக்குட்பட்டு மணல் இறக்குமதி செய்யப்பட வேண்டுமென்று 3 தினங்களுக்கு முன்பு அரசின் சார்பாக அறிவிப்பு வெளியிட்டிருக்கின்றோம். ஆகவே, எதை எதை எல்லாம் பின்பற்ற வேண்டும், மணலை இறக்குமதி செய்தால் அதை அரசாங்கத்தின் மூலமாக

விற்பனை செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கின்றோம். நீதிமன்றத்திலே வழக்கு இருக்கின்றது, ஆகவே, வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது; தீர்ப்பு வரும். தீர்ப்பு வந்த பிறகு அனைவருக்கும் மணல் எளிதாகக் கிடைக்கக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மணல் தட்டுப்பாட்டைப் பொறுத்தவரையில், உயர் நீதிமன்ற மதுரை கிளையிலே 2 வழக்குகள் நடைபெற்ற காரணத்தாலே மணல் தட்டுப்பாடு இடையில் ஏற்பட்டது. 2 வழக்குகளுக்கான விசாரணை முடிவுற்று, தீர்ப்பு வழங்க வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. அரசுக்குச் சாதகமான தீர்ப்பு கிடைக்குமென்று நம்புகின்றோம். அப்படி கிடைக்கப் பெறுகின்றபோது புதிய மணல் குவாரிகள் திறக்கப்பட்டு, ஏற்கெனவே இருக்கின்ற மணல் குவாரிகள் இயக்கப்பட்டு, பொதுமக்களுக்குத் தேவையான அளவுக்குக் குறைந்த விலையிலே தரமான மணலை அரசு வழங்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றக் குழுத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, உரையை முடியுங்கள். நீங்கள் உரையை முடியுங்கள். பிறகு இன்னொரு வாய்ப்புத் தருகிறேன். இன்னொரு வாய்ப்பில் பார்த்துக்கொள்ளலாம். உரையை முடியுங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மணலைப் பொறுத்தமட்டில் தரமில்லாத மணலை நாம் அனுமதிக்கக் கூடாது. (குறுக்கீடு) உண்மைதான். தரமிருக்கிறதா, இல்லையா என்று பரிசோதித்துப் பார்த்து முடிந்து விட்டதா? அதைத் தமிழக அரசு பரிசோதனை செய்ததா? மத்திய அரசு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குத்தான் 3 நாட்களுக்கு முன்பு அரசு தெளிவுபட அறிவித்திருக்கின்றது. எப்படி எல்லாம் வரைமுறை இருக்க வேண்டும், எப்படி இறக்குமதி செய்யப்பட வேண்டும், இறக்குமதி செய்யப்பட்ட மணலை எப்படி விற்பனை செய்ய வேண்டுமென்பது பற்றியெல்லாம் வரைமுறைப்படுத்தப்பட்டு வெளியிடப்பட்டிருக்கின்றது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மணல் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு உரிய நடவடிக்கையை நீங்கள் எடுக்க வேண்டும். அடுத்தபடியாக, ரேஷன் கடை; ரேஷன் கடையிலே மசூர் பருப்பு என்ற ஒன்றை வழங்குகிறீர்கள். அது தரமில்லாமல் இருக்கிறது. ஏன் நீங்கள் துவரம் பருப்பிலிருந்து இதற்கு மாறினீர்கள்? துவரம் பருப்பு வேண்டுமென்று அங்கே இருக்கக்கூடிய ஏழையெளிய மக்கள் கேட்கிறார்கள். ஆனால், மசூர் பருப்புதான் இப்பொழுது இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, உரையை முடியுங்கள். கொஞ்சம் எனக்கு ஒத்துழைப்புக் கொடுங்கள். இத்துடன் உரையை முடியுங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** உரையை முடித்து விடுகிறேன். அந்த மசூர் பருப்பை மாற்றி துவரம் பருப்பு கிடைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுங்கள். அதேபோல, பாமாயில் கொடுக்கிறீர்கள். ஆனால், போதுமான அளவு கொடுக்கவில்லை. கடைகளிலே பல பிரச்சினைகள் இருக்கின்றன. அதையெல்லாம் சரி செய்வதற்கு உரிய நடவடிக்கையை நீங்கள் எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள். (குறுக்கீடு) உரையை முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர், நீங்கள் ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடு) உறுப்பினர், நீங்கள் உரையை முடியுங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** உள்ளாட்சித் தேர்தலை உடனடியாக நடத்துங்கள். (குறுக்கீடு) தயவுசெய்து உள்ளாட்சித் தேர்தலை நடத்துங்கள். மத்திய அரசிடமிருந்து நாம் அதிகாரத்தைப் பெற விரும்புகிறோம். ஆனால், அதேசமயத்தில், நாம் இங்கேயே அதிகாரத்தை வைத்துக்கொள்ளக் கூடாது. அதிகாரத்தை மக்கள் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்க வேண்டும். தேர்தலை நடத்தினால்தான், மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க முடியும். தற்போது எந்த வேலையும் நடைபெறவில்லை. உள்ளாட்சித் துறைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். ஆனால், அவர்களுக்கு இன்னும் கீழே இருக்கக்கூடிய அமைப்புகள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், உங்களை உரையை முடிக்கச் சொன்னால், நீங்கள் மீண்டும் வேறோர் அமைச்சர் விளக்கம் சொல்கிற மாதிரி பேசினால் நான் என்ன செய்ய முடியும்? கொஞ்சம் உரையை முடியுங்கள். எனக்கு கொஞ்சம் ஒத்துழைப்பு தாருங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** உள்ளாட்சித் தேர்தலைப் பற்றி பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுகுறித்துதான் பேசி முடித்துவிட்டீர்களே! உரையை முடியுங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** உள்ளாட்சித் தேர்தலை உடனடியாக நடத்துங்கள்; அமைப்புகளை ஏற்படுத்துங்கள். தனி அதிகாரிகளின் பணிகளை இன்னும் நீங்கள் நீட்டிப்பு செய்வது நல்லதல்ல என்பது என்னுடைய கருத்து. வாய்ப்பு கொடுத்த உங்களுக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மிக்க நன்றி. உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2018 ஆம் ஆண்டிற்கான ஆளுநர் உரை இந்த அவையில் தாக்கல் செய்யப்பட்டது. ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது நடைபெற்று வரும் விவாதத்தில் பங்கேற்று என்னுடைய கருத்துகளை எடுத்துச் சொல்லக்கூடிய வாய்ப்பினை வழங்கிய தங்களுக்கு முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு பேரவைத் தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் முதலில் என்னுடைய தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துகளையும், பொங்கல் திருநாள் வாழ்த்துகளையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

ஆளுநர் உரையினுடைய விவாதத்தில், பிரதான எதிர்க்கட்சியினுடைய தலைவராக இருக்கக்கூடிய நான் பேசியதற்குப் பிறகு, அதே நாளில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலளிக்கும் முறைதான் மரபு வழியாகக் கடைபிடிக்கப்பட்டு வந்திருக்கிறது. நீங்கள் கடந்த காலங்களில் நடந்த நிகழ்வுகளை எடுத்துப் பார்த்தால் இதுகுறித்து தெரியும். 2007 ஆம் ஆண்டு, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப்





பொறுப்பிலே இருந்தபோது, அன்றைக்கு எதிர்க்கட்சியிலேயிருந்த திரு. ஜி.கே. மணி அவர்கள் மற்றும் திரு. டி. சுதர்சனம் ஆகியோர் உரையாற்றியதற்குப் பிறகு, கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது அதே நாளில் பதிலுரை ஆற்றியிருக்கிறார். 2008 ஆம் ஆண்டு அதே முறை கடைபிடிக்கப்பட்டிருக்கிறது; அதே முறை, 2009 ஆம் ஆண்டும் கடைபிடிக்கப்பட்டிருக்கிறது; 2010 ஆம் ஆண்டும் கடைபிடிக்கப்பட்டிருக்கிறது; 2011 ஆம் ஆண்டும் கடைபிடிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், 2012 ஆம் ஆண்டு அம்மையார் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, சில சூழ்நிலைகளின் காரணமாக, தேவைப்படக்கூடிய நிலையில் அந்த மரபு கொஞ்சம் தளர்த்தப்பட்டு, எதிர்க்கட்சித் தலைவர் உரையாற்றியதற்கு மறுநாள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலுரை ஆற்றக்கூடிய ஒரு நிலை கடைபிடிக்கப்பட்டது. ஆனால், இப்பொழுதும் அதே நிலை தொடரக் கூடாது என்பதுதான் என்னுடைய கருத்தாகும். இதே கருத்தை, தங்கள் தலைமையில் கூடிய அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில்கூட நான் தெளிவாக எடுத்துச் சொன்னேன். ஆனால், அதற்கு அப்போது நீங்கள் சம்மதம் தெரிவிக்காத காரணத்தால், நானும் உங்களிடத்தில் கொஞ்சம் உரிமையோடு, “அப்படியென்றால் நான் பேசுவதையே தவிர்த்துவிடுகிறேன்” என்றுகூட குறிப்பிட்டு, அந்த அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்திலிருந்து வெளிநடப்புச் செய்தேன். இதுகுறித்து அந்தக் கூட்டத்தை நடத்திய உங்களுக்கும், அதில் இடம் பெற்ற உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் தெரியும். ஆனாலும், இன்றைக்கு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் நான் பேச வந்திருக்கிறேன்; கருத்துகளைக் கூற முற்பட்டிருக்கிறேன் என்றால், அதற்குக் காரணம், இந்த மன்றத்தில் எடுத்துக் கூறக்கூடிய அளவிற்கு பல பிரச்சினைகள் இருப்பதே ஆகும். ஒரு மிகப் பெரிய கடமை எனக்கு இருக்கிறது என்கிற காரணத்தால், நான் இந்த ஆளுநர் உரையில் பேச முற்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 1–35*

ஆளுநர் உரை என்பது statement of policy அதாவது, கொள்கை அறிவிப்பாக அமைந்திட வேண்டும். இதுதான் ஆளுநர் உரையின் இலக்கணம் ஆகும். அந்த அடிப்படை இலக்கணத்தை அனுசரித்து 2018 ஆம் ஆண்டிற்கான ஆளுநர் உரை அமையாதது உள்ளபடியே ஒரு பெரிய ஏமாற்றத்தைத் தந்திருக்கிறது. ஆளுநருடைய உரையின்

[திரு. மு.க. ஸ்டாலின்] [*2018 ஜனவரி 11*

முதல் பக்கத்திலே தொடங்கி, இறுதி பக்கம் வரை நான் படித்துப் பார்த்தேன். அதனால் கொஞ்சம் வித்தியாசமாக ஆளுநர் உரையினுடைய இறுதிப் பக்கத்தில் கூறப்பட்டிருக்கக்கூடிய கருத்தை நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

'மக்களாட்சியின்மீது தமிழ்நாட்டு மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை மெய்ப்பிக்கக்கூடிய வகையில்' என்று ஆளுநர் தனது உரையின் இறுதியில் குறிப்பிட்டு இருக்கிறார். அது ஒரு முக்கியமான வாசகம் என்பதை நான் மட்டுமல்ல இந்த அவையில் இருக்கக்கூடிய அத்தனை பேரும் நன்றாக அறிவோம். ஆம். மக்களாட்சியினுடைய தத்துவத்தை நிலைநிறுத்துவதற்காக இந்த மன்றத்தில் அனைத்து உறுப்பினர்களும் பாடுபடுகிறோம், பணியாற்றுகிறோம், செயல்படுகிறோம், பிரச்சினைகளை இங்கே எடுத்துச் சொல்கிறோம். அதிலும் குறிப்பாக, எதிர்க்கட்சியாக இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகம் சார்பாக இன்றைக்கு தொடர்ந்து அந்தப் பணியை நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம். அந்த உணர்வை பிரதிபலிக்கக்கூடிய வகையில் ஆளுநர் அவர்கள் தன்னுடைய உரையிலே மக்களாட்சித் தத்துவத்தின் மாண்பினைச் சுட்டிக்காட்டியிருக்கிறார். அதற்காக முதலில் ஆளுநர் அவர்களுக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதே மக்களாட்சித் தத்துவத்தினை மாண்புமிகு ஆளுநர் அவர்கள் நிலைநாட்டுவார் என்ற நம்பிக்கை இந்த வாசகத்திற்குப் பிறகு எங்களுக்கு, அதாவது திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வந்திருக்கிறது. அந்த உணர்வோடு இந்த ஆளுநர் உரையிலே நானும் பங்கேற்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துகளைப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

என் கண்களுக்கு முதலில் தென்பட்டது, மத்திய அரசுக்கும், பிரதமருக்கும் இந்த அரசு தெரிவித்துக் கொண்டிருக்கக்கூடிய நன்றிதான். அதுவும் பல இடங்களில் திரும்பத் திரும்ப நன்றி தெரிவித்திருக்கிறீர்கள். மத்திய அரசுக்கு நன்றிக் கடன்பட்டிருக்கிறோம் என்பதை இந்த அரசு வெளிப்படையாக ஒப்புக்கொண்டிருக்கிறது. ஆனால், இத்தனை நன்றி தெரிவிக்கக்கூடிய நீங்கள் தமிழக நலன்களுக்காக மத்திய அரசிடமிருந்து எதையாவது சாதிக்க முடிந்திருக்கிறதா என்று நான் இந்த ஆளுநர் உரையிலே தேடித் தேடிப் பார்த்தேன். குறிப்பாக, டிசம்பர் 2015–ல் ஏற்பட்ட வெள்ளம். அதற்காக 25,912 கோடி ரூபாய்



[திரு. மு.க. ஸ்டாலின்]

நிதி கேட்டீர்கள். அது கொடுக்கப்பட்டுள்ளதா என்று தேடினேன்; கிடைக்கவில்லை. வர்தா புயல் நிவாரண நிதியாக 22,573 கோடி ரூபாய் மத்திய அரசிடம் கேட்டிருந்தீர்கள். அதையாவது பெற்றிருக்கிறீர்களா என்று பார்த்தேன்; அதையும் காணவில்லை. வறட்சி நிவாரணத்திற்காக 39,565 கோடி ரூபாய் கேட்டீர்கள். அதைப் பெற்றீர்களா? ஆளுநர் உரையிலே தேடித் தேடிப் பார்த்தேன்; அதுவும் கிடைக்கவில்லை. அண்மையிலே ஒகி புயலுக்கு 13,520 கோடி ரூபாய் நிதி கேட்டிருந்தீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடம். மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசிடம் நாம் கோரிக்கை வைக்கின்றபோது, தற்காலிக நிவாரணமாகவும், நிரந்தர நிவாரணமாகவும், நீண்டகால நிவாரணமாகவும் நாம் வைக்கின்றோம். அந்த வகையில் 2015–ல் ஏற்பட்ட வெள்ளத்திலே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைப்போல, 25,912.45 கோடி ரூபாய் தேவையென நாம் கோரிக்கை வைத்தோம். மத்திய அரசு 1,365 கோடி ரூபாய் விடுவித்தது. அதை மாநில அரசு, அம்மாவினுடைய அரசு பெற்றிருக்கிறது. அதை நிவாரணமாக வழங்கியிருக்கிறோம். அதேபோல, வர்தா புயலின்போது 22,573.26 கோடி ரூபாய் தேவையென நாம் கோரிக்கை வைத்தோம். அதில் 218.76 கோடி ரூபாயை மத்திய அரசு விடுவித்தது; அதை நாம் பெற்றிருக்கிறோம். அதேபோல, வறட்சி நிவாரணமாகக் கேட்ட 39,565 கோடி ரூபாயிலே 1,447.99 கோடி ரூபாயை மாநில அரசு, அம்மாவினுடைய அரசு பெற்றிருக்கிறது. கடந்த காலங்களிலே இதுபோன்ற பேரிடர்கள், வெள்ளம், வறட்சியைச் சந்திக்கின்றபோது, இதேபோன்றுதான் தற்காலிக நிவாரணமாக, நீண்டகால நிவாரணமாக அவர்கள் கேட்பதும், உடனடியாக தற்காலிக நிவாரணத்திற்காக வழங்குவதும், இதுவொரு நடைமுறையாக, மரபாகத்தான் இருக்கிறது. ஆகவே, இது ஏதோ மாநில அரசு, மத்திய அரசிடமிருந்து நிதியைப் பெற முடியாத அரசாக ஒரு தோற்றத்தை உருவாக்குவதற்கு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முயற்சி செய்கின்றார்கள். நிச்சயமாக மாநில அரசினுடைய உரிமைகளுக்காக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மற்ற மாநிலங்களைக் காட்டிலும், இந்தியாவில் இருக்கின்ற 29

மாநிலங்களைக் காட்டிலும் அதிக நிதியினைப் பெற்றிருக்கிறது என்பதை என்னால் புள்ளிவிவரமாகச் சொல்ல முடியும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–40*

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விளக்கத்தையெல்லாம் ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருந்தால் இந்தப் பிரச்சினையை நான் பேச முற்பட்டிருக்க மாட்டேன். ஆளுநர் உரையிலே இடம்பெறாத காரணத்தால்தான் அதை நான் இங்கே எடுத்துச் சொல்கிறேன்.

ஆக, நிதி ஒரு பக்கம். அதேபோல, கன்னியாகுமரி மாவட்டத்தைத் தேசிய பேரிடர் மாவட்டமாக அறிவிக்க வேண்டுமென்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அப்படி அறிவிக்கப்பட்டுவிட்டதா என்ற நிலை, இந்த கவர்னர் உரையில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறதா என்றால், இல்லை. 14–வது மத்திய நிதி ஆணையத்திடம் இழப்புகளுக்காக 2,000 கோடி ரூபாய் சிறப்பு நிதி கேட்டிருந்தீர்கள். அது கிடைத்து விட்டதா என்று பார்த்தேன். அதுவும் இல்லை. பண மதிப்பிழப்பு நடவடிக்கையால் பல பாதிப்புகள் நாட்டிலே உருவாகின. அப்போது அரசின் சார்பில் மத்திய அரசு மானியத்தில் அமல்படுத்தக்கூடிய திட்டங்களுக்கு 90 சதவிகித நிதி கொடுங்கள் என்று சென்ற ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருந்தீர்கள். அது அறிவிக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தேன். அதுவும் இல்லை. அதேபோல, ஹைட்ரோ கார்பன் திட்டம், கதிராமங்கலம் திட்டம், கெயில் திட்டம், விவசாயிகளுக்குரிய கடன் தள்ளுபடி, காவேரி மேலாண்மை வாரியம், இப்படி ஏதாவது ஒன்றில் மத்திய அரசு உங்களுக்கு துணை நின்றிருக்கிறதா என்று நான் தேடித் தேடிப் பார்த்தேன். ஆக, அப்படி எதுவும் இந்த ஆளுநர் உரையில் காண முடியவில்லை. மாநில அரசு கேட்டது எதையும் மத்திய அரசு கொடுக்கவில்லை என்பதைத்தான் இந்த ஆளுநர் உரையில் நான் உணர்ந்துகொள்ள முடிகிறது. ஆனால், நீங்கள் மனதார இந்த ஆளுநர் உரையில் மத்திய அரசைப் பாராட்டி இருக்கிறீர்கள். அதற்காக நான் வருத்தப்படவில்லை. மத்திய அரசைப் பாராட்டி, தமிழக மக்களுக்கு பல திட்டங்களைக் கொண்டு வருவீர்கள் என்று சொன்னால், மாநிலத்திற்குத் தேவையான நிதியை நீங்கள்





பெற்றுத் தருவீர்கள் என்று சொன்னால், அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டு பாராட்ட திராவிட முன்னேற்றக் கழகம் தயாராக இருக்கிறது; காத்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், எதிரிக் கட்சியாக இல்லை; எதிர்க்கட்சியாக என்றைக்கும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதை இப்போது அல்ல, தொடர்ந்து இந்த அவையிலே நான் பதிவு செய்து கொண்டிருக்கிறேன். ஆனால், மாநில அரசு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்தியிலே பல்வேறு கோரிக்கைகளை வைத்தீர்கள்; அந்தக் கோரிக்கைகளெல்லாம் மத்திய அரசால் நிறைவேற்றப்பட்டனவா; பல்வேறு திட்டங்களுக்கு நிதி கேட்டீர்கள், அதெல்லாம் மத்திய அரசால் வழங்கப்பட்டதா; ஆகவே, அப்படி வழங்காத மத்திய அரசை நீங்கள் பாராட்டுகிறீர்கள் என்ற ஒரு கருத்தின் அடிப்படையில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், இங்கே தெரிவித்திருக்கின்றார். திராவிட முன்னேற்றக் கழகமும் மத்தியிலே பாரதிய ஜனதா கட்சியின் ஆட்சியில், அமைச்சரவையில் இடம்பெற்று, ஆட்சி அதிகாரத்தில் இருந்தீர்கள். அதற்குப் பிறகு மத்தியில் காங்கிரஸ் கட்சி ஆட்சியின்போதும், ஆட்சி அதிகாரத்தில் இடம் பெற்றிருந்தீர்கள். குறைந்தபட்சம் 14 ஆண்டுகாலம் மத்திய அரசாங்க ஆட்சி அதிகாரத்திலே இருந்தீர்கள். மத்தியிலும் இருந்தீர்கள்; மாநிலத்திலும் இருந்தீர்கள். அப்போதெல்லாம் எவ்வளவு தொகை பெற்றீர்கள் என்று தெரிவித்திருந்தால் அழகாக இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டில் எவ்வளவு வளர்ச்சித் திட்டங்கள் வந்திருக்கின்றன என்று சொன்னால் நன்றாக இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) எவ்வளவு தொழிற்சாலைகள் வந்திருக்கின்றன; எத்தனை திட்டங்களை நீங்கள் நிறைவேற்றியிருக்கிறீர்கள் என்பதையெல்லாம் தெரிவித்திருந்தால் நன்றாக இருக்கும். அதோடு நீங்கள் அதிகாரத்தில் இருந்தீர்கள். பாரதிய ஜனதா கட்சி ஆட்சியில் இருந்தபோது மத்தியிலும் அதிகாரத்தில் இருந்தீர்கள். காங்கிரஸ் கட்சி மத்தியிலே ஆட்சி அதிகாரத்தில் இருந்தபோதும் அவர்களோடு கூட்டணி அமைத்து, அவர்களுடைய அமைச்சரவையிலே அங்கம் வகித்தீர்கள். அதிகாரம் உங்களிடத்திலே இருந்தது. அதிகாரம் இருந்தபோதே நீங்கள் எந்த நிதியும் பெற முடியவில்லை.

அதிகாரம் இல்லாத நாங்கள் கோரிக்கைதான் வைக்க முடியும். *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆகவே, இந்த நிலையிலிருந்துதான் நாங்கள் கோரிக்கை வைத்து, தமிழ்நாட்டு மக்களுக்கு எவ்வளவு திட்டங்களைப் பெற முடியுமோ, எவ்வளவு நிதிகளைப் பெற முடியுமோ, அதற்காக நாங்கள் போராடிக் கொண்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல; நான் ஏற்கெனவே இந்த அவையிலே குறிப்பிட்டிருக்கிறேன். அண்மையில் மாண்புமிகு மத்திய தரைவழி மற்றும் கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் சென்னைக்கு வந்திருந்தார். அப்போது, நானும் அவருடன் சென்றிருந்தேன். அவரிடம் பல்வேறு கோரிக்கைகளை வைத்தோம். விமான நிலையத்தில் எப்படி இருக்கிறதோ, அதேபோன்று கோயம்புத்தூர், சேலம், மதுரையில் Bus Port அமைக்க வேண்டுமென்று கேட்டேன். அதை அனுமதித்து, மாநில அரசு வைத்த கோரிக்கையை விரைவாக நிறைவேற்றுவேன் என்று சொல்லியிருக்கிறார். “கோயம்புத்தூரில் Bus Port–Bus Stand அதாவது நவீன பேருந்து நிலையம், சேலத்தில் நவீன பேருந்து நிலையம், மதுரையில் நவீன பேருந்து நிலையம் அமைப்பதற்குத் தேவையான இடத்தை ஒதுக்குங்கள்; உங்களுக்கு அனுமதி வழங்குகிறேன்” என்று சொல்லியிருக்கிறார்கள். அதேபோல, பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாயிலே சாலைகள் அமைப்பதற்கு நிதியொதுக்கீடு செய்யப்படும் என்ற அறிவிப்பையும் தந்திருக்கின்றார். அந்த அறிவிப்பெல்லாம் தெளிவாக எல்லாப் பத்திரிகைகளிலும் வந்திருக்கின்றது. அவரே அதைத் தெரிவித்தார். ஆகவே, மாநில அரசு மத்திய அரசுடன் இணக்கமாக இருக்கின்ற காரணத்தினாலே, மத்திய அரசிடம் பல்வேறு கோரிக்கை வைத்ததன் காரணத்தினாலே பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் சாலை மேம்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தங்கள் வாயிலாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 1–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*



**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இவற்றையெல்லாம் சொல்கின்றபோது, ‘மத்தியிலே கூட்டணியில் ஆட்சியில் இருந்தபோது நீங்கள் என்னென்ன செய்தீர்கள்’ என்று நிச்சயமாக என்னைக் கேட்பீர்கள் என்று நன்றாகத் தெரியும். அதனால்தான் ஒரு பெரிய பட்டியலோடு வந்திருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

திராவிட முன்னேற்றக் கழகம், மத்திய அரசுடன் அங்கம் வகித்திருந்த நேரத்தில் தமிழ்நாட்டு மக்களுக்காக பெற்றுத் தந்திருக்கக்கூடிய சாதனைகளில் சிலவற்றை தலைப்புச் செய்திகளாக நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். மண்டல் கமிஷன் பரிந்துரைகளை நிறைவேற்றியது கலைஞர் ஆட்சியில் இருந்தபோதுதான். *(மேசையைத் தட்டும் ஒலி)* ‘POTA’ சட்டத்தை இரத்து செய்வதற்கு குரல் கொடுத்தது தி.மு.க. ஆட்சிதான். *(மேசையைத் தட்டும் ஒலி)* CENVAT வரியை இரத்து செய்யும் உறுதிமொழியை நிறைவேற்றித் தந்தது தி.மு.க. ஆட்சிதான். *(மேசையைத் தட்டும் ஒலி)* காவேரி நடுவர் மன்றம் அமைத்தது, காவேரி வழக்கில் இடைக்காலத் தீர்ப்பு பெற்றது, இடைக்காலத் தீர்ப்பின்படி காவேரி நதிநீர் ஆணையம் அமைத்தது, காவேரி இறுதித் தீர்ப்பைப் பெற்றது, தமிழுக்குச் செம்மொழி அந்தஸ்தைப் பெற்றது, *(மேசையைத் தட்டும் ஒலி)* எண்ணூர் காமராசர் துறைமுகத்தை நாட்டிற்கு அர்ப்பணித்தது, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் அமைத்தது; *(மேசையைத் தட்டும் ஒலி)* *4,676* கிலோ மீட்டர் தேசிய நெடுஞ்சாலையில் *3,226* கிலோ மீட்டர் நெடுஞ்சாலைகள் *56,000* கோடி ரூபாய் மதிப்பீட்டில் நான்கு வழிச் சாலைகளாக மாற்றியமைக்கப்பட்டதுடன், மேம்பாலங்கள், துறைமுக விரிவாக்கப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. *(மேசையைத் தட்டும் ஒலி)* சென்னை அருகிலுள்ள ஒரகடத்தில் *470* கோடி ரூபாய் மதிப்பீட்டில் தேசிய ஆட்டோமொபைல் நிறுவனமும், இதர உட்கட்டமைப்பு வசதிகளும் ஏற்படுத்தப்பட்டன. *1,553* கோடி ரூபாய் மதிப்பீட்டில் சேலம் ரோலிங் மில் சர்வதேசத் தரத்திற்கு உயர்த்தப்பட்டது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

தாம்பரத்தில் தேசிய சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையம் நிறுவப்பெற்றது, சேலத்திற்கென தனி இரயில்வே கோட்டம் ஏற்படுத்தப்பட்டது, *(மேசையைத் தட்டும் ஒலி)* *120* கோடி ரூபாய் மதிப்பீட்டில் சேலத்திலுள்ள மோகன் குமாரமங்கலம்

[திரு. மு.க. ஸ்டாலின்] [2018 ஜனவரி 11

அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை super speciality மருத்துவமனையாகத் தரம் உயர்த்தியது, (மேசையைத் தட்டும் ஒலி) 1,650 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை துறைமுகம்–மதுரவாயல் பறக்கும் சாலைத் திட்டம் தொடங்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) 2,427 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வரலாற்றுச் சிறப்புக்குரிய சேது சமுத்திரத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது, (மேசையைத் தட்டும் ஒலி) 908 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நெம்மேலியில் கடல் நீரைச் சுத்திகரிக்கும் திட்டம், (மேசையைத் தட்டும் ஒலி) 640 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை மற்றும் எண்ணூர் துறைமுகங்களை இணைக்கக்கூடிய சாலைகளை அகலப்படுத்தக்கூடிய திட்டம், (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்து metre gauge இரயில் பாதைகளையும் broad gauge இரயில் பாதைகளாக மாற்ற ஒப்புதல், (மேசையைத் தட்டும் ஒலி) 1,828 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 90 இரயில்வே மேம்பாலங்கள் மற்றும் சுரங்கப் பாதைகள் ஆகியவை அமைக்கப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) 14,600 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை மெட்ரோ இரயில் திட்டம், (மேசையைத் தட்டும் ஒலி) 1,928 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம், (மேசையைத் தட்டும் ஒலி) சர்வதேசத் தரத்தில் தேசிய கடல்சார் பல்கலைக்கழகம், திருவாரூரில் தேசிய பல்கலைக்கழகம், (மேசையைத் தட்டும் ஒலி) திருச்சியிலே இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனம், சென்னையில் மத்திய அதிரடிப்படை, மத்திய அரசின் மூலமாக 72,000 கோடி ரூபாய் விவசாயக் கடன் மற்றும் வட்டித் தொகை தள்ளுபடி, (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசின் கல்வி நிறுவனங்களில் 27 சதவிகித இட ஒதுக்கீடு என அனைத்தும் செய்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

நாங்கள் பாராட்டக் கூடாது என்று சொல்லவில்லை. பாராட்டக்கூடிய அளவிற்கு தமிழகத்திற்குத் திட்டங்களைத் தருகிறபோது, நீங்கள் மனதாரப் பாராட்டுங்கள். ஆக, உங்களோடு சேர்ந்து பாராட்ட நாங்களும் காத்திருக்கிறோம், தயாராக இருக்கிறோம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், மத்திய அரசுடன் கூட்டணி வைத்துக்கொண்டு எந்த



[திரு. டி. ஜெயக்குமார்]

அளவிற்கு மாநிலத்தினுடைய வளர்ச்சிக்கு நிதியைப் பெற்றார்கள் என்ற சாதனையைச் சொன்னார். மற்றொரு சாதனையையும் நீங்கள் சேர்த்துக்கொள்ளலாம். முள்ளி வாய்க்காலில் ஒன்றரை இலட்சம் தமிழர்கள் கொல்லப்பட்டார்களே அதையும் சேர்த்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுவார். (குறுக்கீடுகள்) அவர் பேசுவார், நீங்கள் உட்காருங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களை ஆதாரம் இருந்தால் சொல்லச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், அவர் பேசுவார்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** நான் கையிலே ஆதாரத்தை வைத்துக்கொண்டு சொல்லியிருக்கிறேன். ஆதாரமின்றி, நான் தவறாகச் சொல்கிறேன் என்று சொன்னால், அதற்கு பொறுப்பேற்றுக்கொள்ள நான் தயார். எனவே, அவர் தவறான ஒரு தகவலை இங்கே பதிய வைக்கிறார். விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனை தூக்கிலிட வேண்டுமென்று பேசியவர்கள் நீங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதை மூடி மறைத்துவிட்டு இப்படி தவறான தகவலைத் தருவது தவறு. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1–50

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் தீவிரவாதத்தை ஒழிக்க வேண்டும் என்பதிலே கடுமையாக இருந்தார்கள். அதிலே எங்களுக்கு எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது. தீவிரவாத இயக்கத்தை ஒழிக்க வேண்டும், அதேநேரத்தில் இலங்கைத் தமிழர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்களின் கொள்கை. அந்தக் கொள்கையின் அடிப்படையில்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்னார்கள். நீங்கள் ஒரு நாள் உண்ணாவிரதம் இருந்துவிட்டு, அங்கே போர் முடிந்துவிட்டது

என்று சொன்னபிறகு, அடுத்த நாளே ஒன்றரை இலட்சம் பேரை அங்கே கொன்றுவிட்டார்கள் என்பதைத்தான் மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். இத்தனை சாதனைகளைச் சொன்னீர்கள், அதுவும் உங்கள் சாதனைதான் என்பதைத்தான் இந்த நேரத்தில் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள். . . (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன், நீங்கள் ஏன் இங்கு உட்கார்ந்து பேசுகிறீர்கள்? (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேசுகிறார், மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்கிறார்கள். (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) அதற்கு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேசுவார். நீங்கள் எல்லோரும் பேசினீர்கள் என்றால் எப்படி? அவை விவாதம் நன்றாக நடந்து கொண்டிருக்கும்போது. . . (குறுக்கீடு) திரு. ராஜா, நீங்கள் உட்காருங்கள். நான் சொல்வதைக் கேளுங்கள். அவையில் நல்லபடியாக விவாதம் போய்க் கொண்டிருக்கிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேசுகிறார். பேசுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர்கள் விளக்கங்களைத் தருகிறார்கள். ஆகவே, விவாதம் நல்லபடியாகப் போய்க் கொண்டிருக்கின்றபோது, நீங்கள் உட்கார்ந்துகொண்டே பேசினால் உங்களுடைய தலைவர் பேசுவதற்கே இடையூறாக வராதா? ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? இதெல்லாம் செய்யாதீர்கள். அமைதியாக உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேசுவார். அவர் விளக்கம் சரியாகச் சொல்கிறார். மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்கிறார்கள். நல்லபடியாக விவாதம் போய்க்கொண்டிருக்கும்போது தயவுசெய்து இப்படி குறுக்கிட வேண்டாம். (குறுக்கீடு) உட்காருங்கள். திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். அது எங்களுக்குத் தெரியும். (குறுக்கீடு) நான் சொல்கிறேன், உட்காருங்கள். நீங்கள் எல்லோரும் எனக்கு உத்தரவிட வேண்டாம்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது, அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் மத்தியிலிருந்து என்னென்ன திட்டங்கள் வந்தது என்று வரிசைப்படுத்தினார்கள். இப்போது அவர் வரிசைப்படுத்தியது அனைத்துமே routine





process. இதற்கு முன்னால் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி இருந்தது. அதற்கு முன்னால் இவர்களுடைய ஆட்சி இருந்தது. அனைத்துமே routine ஆக வருகிற திட்டங்கள்தான். மாண்புமிகு முதலமைச்சர் சொன்னதுபோல, நீங்களும் கூடுதல் fund வாங்கியிருக்கிறீர்கள். இன்றைக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வளர்ச்சித் திட்டத்தில் அதிகமான நிதியை நாங்கள் வாங்கியிருக்கிறோம். அதேபோல் PMGSY–ல் அதிகமாக நாங்கள் வாங்கியிருக்கிறோம். நீங்கள் ஆட்சியில் இருக்கின்றபோது, முல்லைப் பெரியாறு பிரச்சினை, காவேரி நதிநீர்ப் பிரச்சினை என உரிமைப் பிரச்சினைகள் இருந்தன. மத்தியிலும், மாநிலத்திலும் நீங்கள் ஆட்சியில் இருந்தீர்கள். இலங்கைப் பிரச்சினை, கச்சத் தீவு பிரச்சினையில் உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வரக்கூடிய வாய்ப்பு உங்களுக்கு இருந்தது. அதையெல்லாம் நீங்கள் செய்யாமல், routine process–ஐ புள்ளிவிவரமாகப் படித்தார். ஆக, இதற்கு முன்னால் எல்லா ஆட்சியிலும் படிப்படியாக அவை அனைத்தும் நடந்து கொண்டிருந்ததுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனால்தான் அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் உங்களிடத்தில் நான் திரும்பத் திரும்ப வலியுறுத்தினேன். ஆக, நான் பேசுகிற நாளிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொன்னால்தான் சரியாக இருக்கும். இல்லையென்றால், இப்படித்தான் பிரச்சினைகள் வரும் என்பதை அறிந்துதான் நான் உங்களிடத்திலே வலியுறுத்தினேன். அதுதான் இப்போது இருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தந்த இலாகா சம்பந்தப்பட்டு வருகின்றபொழுது, அந்தந்த அமைச்சர்கள் பதில் சொல்கிறார்கள். அதிலே எந்தத் தவறும் கிடையாது. (குறுக்கீடு) அதுமட்டுமல்ல, நீங்கள். . . (குறுக்கீடு) உட்காருங்கள், ஒரு நிமிடம். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர். உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்றபொழுது தன்னுடைய வாதங்களை எல்லாம் அடுக்கடுக்காகப் பேசிக்கொண்டிருந்தார்கள். அதில் என்ன பிரச்சினை என்பதைச் சுட்டிக்காட்டுவதற்கு அனைத்து மாண்புமிகு அமைச்சர்களுக்கும் உரிமை இருக்கின்றது. ஏற்கெனவே நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள், மாண்புமிகு அமைச்சர்களுக்குக் கூட்டுப் பொறுப்பு இருக்கிறது. முதலமைச்சர்தான் சொல்ல வேண்டுமென்பது கிடையாது. ஏற்கெனவே எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இதைப் பதிவு செய்திருக்கிறார். ஆகவே, ஒரு பிரச்சினை வருகின்றபொழுது பதில் சொல்வதற்கு அனைத்து அமைச்சர்களுக்கும் கூட்டுப் பொறுப்பு இருக்கின்றது. அந்த அடிப்படையிலே அவர்கள் பதில் சொன்னார்கள் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசினாலும் விவாதம் நன்றாகத்தானே போய்க் கொண்டிருக்கிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்கிறார், பதில் இங்கிருந்து வருகிறது. நன்றாகப் போய்க் கொண்டிருக்கிறது, அவ்வளவுதானே! அதனால் ஆரோக்கியமாகப் போகட்டும், பேசுங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்வதை நான் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறேன். துறை ரீதியாக நான் சொல்வதில் தவறு இருந்தால் எழுந்து மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்லட்டும். ஆனால், தேவையில்லாமல் மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் இலங்கைப் பிரச்சினையை எடுக்கிறார். அவர் இலங்கையிலே சம்பந்தப்பட்டிருக்கிறாரா? இலங்கையினுடைய அமைச்சராக வந்திருக்கிறாரா? அதுதான் என்னுடைய கேள்வி. அதனால்தான் பதில் சொல்ல வேண்டிய சூழ்நிலை வருகிறது. வேறு ஒன்றுமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விடுங்கள், அடுத்தது பேசுங்கள்.



**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்களே சொல்கிறீர்கள், விவாதம் ஆரோக்கியமாக நடந்து கொண்டிருக்கிறது என்று. ஆகவே, என்னுடைய உரையிலே நீங்களும் மயங்கி ஆர்வத்தோடு கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இரண்டு பேரும் argue செய்ய வேண்டாம். ஒரு பேரவைத் தலைவருக்கு அழகு என்னவென்றால், இரண்டு பக்கமும் ஆளுங்கட்சியும், எதிர்க்கட்சியும் நிறைய பேசி, விவரங்களை நாட்டு மக்களுக்குத் தெரிவிப்பது என்பது என்னுடைய கடமை என்கிற வகையிலே அதை நான் வரவேற்கிறேன். அவ்வளவுதான், வேறு ஒன்றுமில்லை.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசு கேட்டிருக்கக்கூடிய எந்த நிதியையும் மத்திய அரசு கொடுக்கவில்லை என்பதை நான் இங்கே புள்ளிவிவரத்தோடு எடுத்துச் சொல்லியிருக்கிறேன். ஆனாலும், பாராட்டுகிறீர்கள் என்று சொன்னால், தங்களுடைய நலனுக்காக அல்ல என்பதை தமிழக மக்கள் நன்கு தெரிந்து வைத்திருக்கிறார்கள் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது.

பிற்பகல் 1–55

அ.தி.மு.க. ஆட்சியால் இந்த அவையில் தாக்கல் செய்யப்பட்டிருக்கக்கூடிய 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான 3 ஆளுநர் உரைகள் என்னிடத்தில் இருக்கின்றன. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் 3 வது முதல்வராக தற்போது அமர்ந்திருக்கக்கூடிய முதலமைச்சரும் இங்கே இருக்கிறார். 2016 ஆளுநர் உரையில், லோக் ஆயுக்தா அமைப்பைக் கொண்டு வருவோம் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஊழலை ஒழிக்கப் பயன்படக்கூடிய இந்த அமைப்பைக் கொண்டு வருவதில் என்ன தயக்கம் என்று எனக்குப் புரியவில்லை. அதன் பிறகு தாக்கல் செய்த இரண்டு ஆளுநர் உரைகளிலும் லோக் ஆயுக்தா என்ற வார்த்தையே காணப்படவில்லை. லோக் ஆயுக்தா என்ற வார்த்தையின்மீது உங்களுக்கு என்ன அப்படி கோபம் என்று எனக்குப் புரியவில்லை. 2016 ஆம் ஆண்டு ஆளுநர் உரையில் இரண்டாவது உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

[2018 ஜனவரி 11

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் லோக் ஆயுக்தா பற்றிச் சொன்னார்கள். லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா 2013 என்ற சட்டம் மத்திய அரசால் 2014 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் நாள் முதல் அமல்படுத்தப்பட்டது. லோக் ஆயுக்தா அமைப்பினை தமிழ்நாட்டில் அமைப்பது தொடர்பான பல்வேறு கூறுகளை விவாதித்திட தலைமைச் செயலாளர் தலைமையில் 7 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது. இக்குழு தமிழ்நாட்டிற்கான லோக் ஆயுக்தா அமைப்பினை ஏற்படுத்த லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா சட்டம், 2013–ஐ விரிவாக ஆய்வு செய்து ஒரு வரைவு கட்டமைப்பு (Draft framework) உருவாக்கியது. 19–12–2012 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடந்த கூட்டத்தில் அவ்வரைவு கட்டமைப்பு ஆய்வு செய்யப்பட்டது. இந்நிலையில் மத்திய அரசு, லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா சட்டம், 2013–க்கு பல்வேறு திருத்தங்களை மேற்கொள்ள உத்தேசித்தது. எனவே, மாநிலத்தில் லோக் ஆயுக்தா அமைப்பினை ஏற்படுத்த, மத்திய அரசில் நிலுவையில் உள்ள லோக்பால் சட்டத்தின் திருத்தங்களை எதிர்நோக்கலாம் என்று 14–2–2016 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஆணையிடப்பட்டது. இந்நிலையில் லோக் ஆயுக்தா வரைவுச் சட்டத்தை மேலும் செம்மைப்படுத்தும் விதமாக அவ்வரைவுச் சட்டம், பிற மாநிலங்களில் நடைமுறையில் உள்ள லோக் ஆயுக்தா சட்டங்களுடன் ஒப்பீடு செய்யப்பட்டு வருகிறது. லோக்பால் சட்டத் திருத்த மசோதா மத்திய அரசில் நிலுவையில் உள்ளதால், முதன்மைச் சட்டமான லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா சட்டம், 2013–க்கு முரண்பாடு ஏற்படுவதைத் தவிர்க்கும்பொருட்டு முதன்மைச் சட்டத்துடன் அது தொடர்பான திருத்தங்களையும் கவனத்தில் கொண்டு, இம்மாநிலத்திற்கான லோக் ஆயுக்தா சட்டமுன்வடிவு இயற்றப்படும் என்பதை பேரவைக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொண்டு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் இந்த விளக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.



**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லோக் ஆயுக்தா சட்டம் கொண்டு வரப்படும் என்று 2016 ஆம் ஆண்டு ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டது. என்னைப் பொறுத்தவரையில், மத்திய அரசினுடைய அனுமதி பெற வேண்டிய அவசியம் இல்லை என்றுதான் நான் கருதுகிறேன். காரணம், இன்றைக்கு பக்கத்தில் இருக்கக்கூடிய ஆந்திர மாநிலம், கர்நாடக மாநிலம், கேரள மாநிலம் அங்கேயெல்லாம் அது அமல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, அதை உடனடியாக இந்த அரசு அமல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் விவரமாகச் சொன்னேன். மத்திய அரசு, லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா சட்டம், 2013–ல் பல்வேறு திருத்தங்களை மேற்கொள்ள உத்தேசித்தது. எனவே, மாநிலத்தில் லோக் ஆயுக்தா அமைப்பினை ஏற்படுத்த, மத்திய அரசில் நிலுவையிலுள்ள லோக்பால் சட்டத் திருத்தங்களை எதிர்நோக்கலாம் என்று 14–2–2016–ல் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா இருக்கின்றபொழுதே ஆணையிடப்பட்டது. அதெல்லாம் வந்த பிறகு லோக் ஆயுக்தா சட்டம் கண்டிப்பாகக் கொண்டு வரப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016 ஆம் ஆண்டு ஆளுநர் உரையில் இரண்டாவது உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், இந்த ஆளுநர் உரையில் அது பற்றி எதுவும் கூறவில்லை. உயர் நீதிமன்றத்தில் தமிழை ஆட்சி மொழியாக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு 2016 ஆம் ஆண்டு ஆளுநர் உரையில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. ஆனால், அதையும் இந்த உரையில் என்னால் பார்க்க முடியவில்லை. 2017 ஆம் ஆண்டு ஆளுநர் உரையில் Madras High Court என்பதை Tamil Nadu High Court என்று பெயர் மாற்றம் செய்ய வலியுறுத்தப்பட்டது. இன்னும் சொல்லப்போனால் அதுகுறித்து. . .

[2018 ஜனவரி 11

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் Global Investors Meet 2018 பற்றிக் கேட்டார். ஒரு வாரத்திற்குள்ளாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் High level committee கூட்டம் நடைபெறவுள்ளது. அதில் High level officers-ஐ எல்லாம் fix செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தேதி அறிவிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டு 2018–ல் அது அறிவிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 ஆண்டுகளாகத் தொடர்ந்து அறிவிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதற்காகத்தான் நான் வலியுறுத்தினேன். 2017 ஆம் ஆண்டு ஆளுநர் உரையில் Madras High Court என்பதை Tamil Nadu High Court என்று பெயர் மாற்றம் செய்ய வலியுறுத்தப்பட்டது.

*பிற்பகல் 2–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இதே அவையிலே அதைச் சட்டமாக்கி, எல்லாக் கட்சிகளும், திராவிட முன்னேற்றக் கழகமும் அதிலே ஆதரவு தந்து, 1–8–2016 அன்று. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) சரி, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், பேசுங்கள்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** 1–8–2016 அன்று இதே அவையிலே தீர்மானம் கொண்டு வந்தபோது எதிர்க்கட்சி என்றுகூட நாங்கள் பார்க்காமல், அரசியல் நோக்கம் பார்க்காமல் அதை நாங்கள்



[திரு. மு.க. ஸ்டாலின்]

முழு மனதோடு ஆதரித்து, நிறைவேற்றியும் தந்திருக்கிறோம். ஆனால், இந்த ஆளுநர் உரையில் அதுபற்றி எந்த உறுதிமொழியோ, வலியுறுத்தலோ இல்லை என்பதுதான் வேதனை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் நீதிமன்றத்திலே தமிழை ஆட்சி மொழியாக்குவோம் என்ற தீர்மானம் என்னவாயிற்று என்று கேட்கின்றார். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் பொறுப்பேற்றவுடனே பாரதப் பிரதமரை சந்தித்தபோது அந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று அவரிடம் கோரிக்கை வைத்திருக்கின்றார். அதேபோன்று 'Madras High Court' என்பதை 'சென்னை உயர் நீதிமன்றம்' என்று மாற்ற வேண்டுமென்று ஒரு கோரிக்கையை வைத்து, அதன்படி நாடாளுமன்றத்திலே 'சென்னை உயர் நீதிமன்றம்' என்று மாற்ற வேண்டுமென்று ஒரு சட்ட மசோதா கொண்டு வரப்பட்டது. ஆனால், அதற்குப் பிறகு மீண்டும் ஒரு கோரிக்கை என்னவென்றால், 'சென்னை உயர் நீதிமன்றம்' என்றால் ஏதோ சென்னை மாநகரத்தை மட்டும் குறிக்கும். இது தமிழ்நாடு, பாண்டிச்சேரி மாநிலத்தைக் குறிக்கின்ற ஓர் உயர் நீதிமன்றமாக இருப்பதால் இதை 'தமிழ்நாடு உயர் நீதிமன்றம்' என்று பெயர் மாற்றம் செய்ய வேண்டுமென்ற ஒரு கோரிக்கை எழுந்ததால், இப்போது அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி, நாங்கள் மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கின்றோம். இதேபோன்ற ஒரு கோரிக்கை கொல்கத்தா உயர் நீதிமன்றத்திலும், 'கொல்கத்தா உயர் நீதிமன்றம்' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு, அவர்களும் அந்த பெயர் மாற்றத்தை மாற்ற வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை வைத்திருப்பதால் இப்போது மத்திய அரசாங்கத்தினுடைய ஆலோசனையில் இருக்கிறது. கண்டிப்பாக 'சென்னை உயர் நீதிமன்றம்' என்பதை 'தமிழ்நாடு உயர் நீதிமன்றம்' என்று மாற்றுவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

[2018 ஜனவரி 11

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2017 ஆம் ஆண்டு ஆளுநர் உரையில் Madurai–Tuticorin Industrial Corridor பற்றியும் Chennai–Bengaluru Industrial Corridor பற்றியும் அறிவிக்கப்பட்டது. அதுவும் இந்த ஆளுநர் உரையில் இடம் பெறவில்லை. ஆக, 2016, 2017 ஆம் ஆண்டுகளின் ஆளுநர் உரைகளுக்கும், இந்த ஆளுநர் உரைக்கும் ஒரு தொடர்ச்சியும் இல்லை, புதிய அறிவிப்புகளும் இல்லை என்பதை என்னால் பார்க்க முடிகிறது. ஆளுநர் உரை என்பது. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Madurai–Tuticorin Industrial Corridor Road; அதற்காக 7 மாவட்டங்களை உள்ளடக்கி, 13 ஒன்றியங்களை உள்ளடக்கி ஒரு திட்டத்திற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. Mahindra & Mahindra consultancy; அதற்கு ஒரு பெரிய திட்டம் கொடுத்திருக்கிறார்கள். அதில் Heavy Industries Hub, I.T. Park, Refinery Unit, Cultural Programmes, Schools, Colleges போன்ற திட்டங்களையெல்லாம் கொடுத்திருக்கின்றார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட, 22, 23–ல் ஒரு date கொடுத்திருக்கிறார்கள். CII, FICCI, ASSOCHAM போன்ற அமைப்புகளையெல்லாம் அழைத்து உயர் மட்டக் குழுவோடு சேர்ந்து ஒரு meeting நடத்திவிட்டு, துரிதப்படுத்த வேண்டுமென்று கேட்டிருக்கின்றார். அந்தச் சூழ்நிலை இருக்கிறது. அடுத்து, பொன்னேரி முனையம். Ponneri–Bengaluru Industrial Corridor பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார். அது Delhi–Bombay concern–படி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதனையும் TIDCO மூலமாக துரிதப்படுத்துவதற்குண்டான நடவடிக்கைகளை மேற்கொண்டு தொடர் கண்காணிப்பில் இருக்கின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை என்பது ஏதோ மரபு சார்ந்த விஷயம் மட்டுமல்ல. இது அரசினுடைய கொள்கை முடிவுகளை மக்களுக்கு



[திரு. மு.க. ஸ்டாலின்]

அறிவிக்கக்கூடிய ஒரு மிகப் பெரிய சாசனம். குறிக்கோளோடு செயல்படக்கூடிய எந்த அரசும் கொள்கை முடிவுகளை ஆளுநர் உரையில் தெளிவான வகையில் தெரிவிப்பது வழக்கம். ஆனால், இந்த மூன்று ஆளுநர் உரைகளையும் ஒன்றுசேர வைத்து படித்துப் பார்த்தால், குறிக்கோள் இருப்பதைவிட ஏராளமான இடைவெளிகள் இருப்பதை என்னால் தெளிவாகக் காண முடிகிறது. குறிக்கோள் இல்லாமல் இந்த அரசு செயல்படுகிறது என்ற அடிப்படையில்தான் இந்த ஆளுநர் உரை அமைந்திருக்கிறது. அதேநேரத்தில் இந்த ஆளுநர் உரையில் இன்னொரு விநோதத்தையும் பார்க்க முடிகிறது. ஆளுநர் உரையின் பக்கம் 4, முதல் மற்றும் இரண்டாவது வரிகளில் 'நிதிநிலை மேலாண்மையில் தமிழ்நாடு அரசு மிகப் பொறுப்புடனும், கவனத்துடனும் செயல்பட்டு வருகிறது' என்று கூறப்பட்டுள்ளது. ஆனால், அதே பக்கத்தில் 14–வது வரியில் 'கடுமையான நிதி நெருக்கடி நிலவுகிறது' என்ற ஓர் உண்மையை நீங்கள் ஒப்புக் கொண்டிருக்கிறீர்கள். ஆளுநர் உரையின் ஒரே பக்கத்தில் இவ்வளவு பெரிய முரண்பாட்டை இந்த மன்றத்திற்கு நீங்கள் அறிவித்தாலும் கடுமையான நிதி நெருக்கடி என்பதை இதுவரை நாங்கள் சொல்லி வந்தோம். இப்போது நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள்.

பிற்பகல் 2–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் தனக்கு வசதியாக, விட வேண்டியதை விட்டும், சேர்க்க வேண்டியதைச் சேர்த்தும் இந்த ஆளுநர் உரையில் சொல்லிக் கொண்டிருக்கிறார். 'தற்போது நிலவிவரும் கடுமையான நிதி நெருக்கடியையும் சமாளித்து' என்கிற வார்த்தை இருக்கிறது. அதை நீங்கள் சொல்ல மறந்துவிட்டீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) திரும்பவும் உங்களுடைய திருவாய் மூலமாக அதை நீங்கள் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுமட்டுமல்ல, மாநில உரிமைகள் தொடர்புடைய தேசிய மருத்துவ ஆணையம் பற்றியோ, காவேரி மேலாண்மை வாரியம் அமைப்பது பற்றியோ, ஹைட்ரோ கார்பன் திட்டத்தைக்

கைவிடுவது பற்றியோ, பெட்ரோ கெமிக்கல் மண்டலத்தைக் கைவிடுவது பற்றியோ, கெயில் திட்டத்தை விவசாயிகளுக்குப் பாதிப்பில்லாமல் செயல்படுத்துவது பற்றியோ, விவசாயிகளுடைய கடன் தள்ளுபடி குறித்தோ ஆளுநர் உரையில் இந்த அரசு வலியுறுத்த மறந்தது ஏன்? அதற்கு மாறாக, ஆளுநர் உரையில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காவேரி மேலாண்மை வாரியத்தைப் பற்றிச் சொன்னார்கள். இன்னும் 4 வாரங்களுக்குள் தீர்ப்பு வழங்கப்படும் என்று உச்ச நீதிமன்றமே அறிவித்திருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சட்டப் போராட்டம் நடத்தி அதற்கு வழிவகை செய்திருக்கின்றார்கள். நீங்கள் சொல்வதையெல்லாம் போட்டால் ஒரு பெரிய புத்தகம்தான் வரும். ஏனென்றால், கடந்த வருடம், அதற்கு முந்தைய வருடம் உள்ள திட்டங்களை எல்லாம் போட்டால் கிட்டத்தட்ட ஒரு பெரிய புத்தகமாக வந்துவிடும். ஒவ்வொரு ஆண்டும், அந்தந்த ஆண்டில் என்னென்ன நிகழ்வுகள், திட்டங்கள் உள்ளன என்பதைத்தான் ஆளுநர் உரையில் சுட்டிக்காட்டி, சுருக்கமாக நாங்கள் சொல்லி வருகிறோம். ஆகவே, ஏற்கெனவே அறிவிக்கப்பட்டதையெல்லாம் நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, காவேரி மேலாண்மை வாரியத்தைப் பொறுத்தவரைக்கும் அரசு முழுமையான வாதங்களை எடுத்து வைத்து, அதன் மூலமாக நமக்குக் கிடைக்க வேண்டிய பங்கு நீரை நிச்சயமாக அம்மாவினுடைய அரசு பெற்றுத் தரும் என்பதை இந்தத் தருணத்திலே தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு மாறாக ஆளுநர் உரை பக்கம் 32–ல், ‘மாநிலத்தில் நான் மேற்கொண்டு வரும் சுற்றுப்பயணத்தின்போது, ‘தூய்மை இந்தியா’ இயக்கத்தினைத் திறமையாகச் செயல்படுத்த இந்த அரசு எடுத்து வரும் முயற்சிகளை நான் நேரில் காண





முடிந்தது’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது அரசினுடைய உரை. அதில் ஆளுநருடைய சுற்றுப்பயணம் குறித்தும், திட்டங்களைப் பார்வையிடுவது குறித்தும், அதாவது மாநில உரிமைகளைத் தாரைவார்க்கும் விதமாகச் சுட்டிக்காட்டப்பட்டிருப்பது ஏன்? ஆளுநர் உரை பக்கம் 35–ல் முதலமைச்சரின் பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டிருக்கக்கூடிய வீடுகள் பற்றிய குறிப்பு எதுவும் இல்லை. அந்தத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட வீடுகள் எத்தனை என்று குறிப்பிடப்படவில்லை. ஆனால், பிரதம மந்திரி வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் 3.84 இலட்சம் வீடுகள் கட்டப்படுவதற்கு ஒப்புதல் அளித்துள்ளதாக நீங்கள் தெரிவித்திருக்கிறீர்கள். நான் கேட்க விரும்புவது, மாநில அரசின் பசுமை வீடுகள் கட்டும் திட்டம் பற்றி விளக்கம் சொல்லாதது ஏன்?

இன்றைக்கு வேலையில்லாமல் இளைஞர்கள் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். படித்து முடித்துவிட்டு தங்கள் கல்விக் கடனைக்கூடத் திருப்பிச் செலுத்த முடியாத நிலைமையிலே இலட்சக்கணக்கான இளைஞர்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். புதிய தொழிற்சாலைகள் உருவாகவில்லை. பொருளாதார வளர்ச்சி ஒரு தேக்க நிலையை அடைந்திருக்கிறது. மாநில வளர்ச்சி, மாநில உற்பத்தித் துறை வளர்ச்சி அடியோடு குறைந்துவிட்டது. இதை நான் சொல்லவில்லை. மத்திய ரிசர்வ் வங்கியே குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறது. வேறு மாநிலத்தினுடைய முதலமைச்சர்கள் எல்லாம் தமிழகத்திற்கு வருகிறார்கள். ‘எங்கள் மாநிலத்தில் தொழில் முதலீடு செய்யுங்கள்’ என்று இங்குள்ள தொழில் முனைவோர்களை அழைத்துப் பேசுகிறார்கள். அவர்களை அழைத்துப் பேசி, அவர்களுடைய மாநிலத்திற்கு வரவேண்டுமென்று கேட்கிறார்கள். சமீபத்தில் அசாம் மாநிலத்தினுடைய முதல்வர், திரு. சோனாவால் சென்னை வந்தார். *(குறுக்கீடு)* நம்முடைய தொழிலதிபர்களையெல்லாம் வந்து சந்தித்தார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். *(குறுக்கீடு)* மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், ஒரு நிமிடம் இருங்கள். *(குறுக்கீடு)* சரி, சரி, பேசட்டும். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், பேசுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தொழிலதிபர்களையெல்லாம் சந்தித்துப்

[திரு. மு.க. ஸ்டாலின்] [2018 ஜனவரி 11

பேசியிருக்கிறார். ஏன் இதுபோன்ற முயற்சியை தமிழக அரசு எடுக்கவில்லை என்பதுதான் என்னுடைய கேள்வி. கடந்த செப்டம்பர் 2015–ல் தமிழகத்தில் உலக முதலீட்டாளர் மாநாடு நடத்தப்பட்டது. ரூ.2.42 இலட்சம் கோடி முதலீடு பெற 98 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. 2016 ஆம் ஆண்டு ஆளுநர் உரையில், உலக முதலீட்டாளர் மாநாட்டில் போடப்பட்ட ஒப்பந்தங்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று அறிவிக்கப்பட்டது. 2017 ஆம் ஆண்டு ஆளுநர் உரையில், பக்கம் 41–ல் 63,312 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் பல்வேறு கட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்பொழுது 2018 ஆம் ஆண்டு ஆளுநர் உரையில், பக்கம் 39–ல் 62,738 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாகக் கூறப்பட்டுள்ளது. நான் கேட்க விரும்புவது என்னவென்றால், செப்டம்பர், 2015 என்று சொன்னால் 2 வருடத்திற்கு மேலாகிவிட்ட நிலையில், ரூ.2.42 இலட்சம் கோடி அளவிற்குப் போடப்பட்ட 98 புரிந்துணர்வு ஒப்பந்தங்களினுடைய கதி என்ன என்பதை இந்த மன்றத்திற்கு இந்த அரசுதான் விளக்கிட வேண்டும்.

பிற்பகல் 2–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 98 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் 61 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பல்வேறு நிலைகளில் இருக்கின்றன. கிட்டத்தட்ட 10 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய திருக்கரங்களால் தொடங்கி வைக்கப்பட்டு, நடைமுறையில் இருக்கின்றன. மேலும், 7 நிறுவனங்கள் பல்வேறு நிலைப்பாடுகளில் இருக்கின்றன. தொடர்ச்சியாக முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். இது ஓராண்டில் முடிகிற திட்டம் அல்ல. ஏழு ஆண்டுகளில் முடிவடைகிற திட்டம் ஆகும். பல்வேறு திட்டங்களை உள்ளடக்கிய நிகழ்வு. Al kharafi Refinery Unit என்ற நிறுவனத்திற்கு தூத்துக்குடியில் இடம் கொடுக்க வேண்டும். அது கிட்டத்தட்ட ரூ.30,000 கோடி அளவில் investment செய்யும் நிறுவனம். NOCL investment இருக்கிறது. அது ரூ.30,000 கோடி அளவிலான investment செய்யும் நிறுவனம். அதனால் பெரிய நிறுவனங்கள் என்பதனால், அவர்களுக்காக இடம் கையகப்படுத்தப்பட்டு,



[திரு. எம்.சி. சம்பத்]

மேலும் அவர்களுக்கு IPS, Industrial incentives எல்லாம் கொடுக்க வேண்டியிருக்கிறது. அந்தச் சூழ்நிலைகளினால்தான் தடையாக இருக்கின்றனவே தவிர, மற்ற நிறுவனங்களின் பணிகளெல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கிட்டத்தட்ட 92,000 பேருக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது. ரூ.62,000 கோடி அளவில் அந்த நிறுவனங்களால் invest செய்யப்பட்டு, பல்வேறு நிலைகளில் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஆளுநர் உரையில் பசுமை வீடுகள் திட்டத்தைப் பற்றி குறிப்பிடவில்லை என்று குறிப்பிட்டார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்த பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ் ஐந்தாண்டுகளிலே 3 இலட்சம் வீடுகள் வெற்றிகரமாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. அதற்குப் பின்பு, 2016–2017–லும் 20,000 வீடுகள் ரூ.420 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டன. 2017–2018–லும் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டு, 20,000 வீடுகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, உத்தரவிடப்பட்டு ரூ.420 கோடி செலவில் பசுமை வீடுகள் கட்டும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டம் பற்றி ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டுள்ளதைப் பற்றிச் சொன்னார்கள். அதில் 1,30,000 வீடுகள்தான் தமிழகத்திற்கான allotment ஆகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக மற்ற மாநிலங்களில் கட்டப்படாத வீடுகளை, கூடுதலாக 45,858 வீடுகளை தமிழகத்திற்காகப் பெறுவதற்கு ஒப்புதல் வாங்கியிருக்கிறோம். அதுபற்றியும் mention செய்யப்பட்டிருக்கிறது. மேலும், Budget Book–ல் குறிப்பிடப்பட்டுள்ளதென்பதால், ஆளுநர் உரையில் அதுபற்றிக் குறிப்பிடவில்லை. பட்ஜெட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

[2018 ஜனவரி 11

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் 2 இலட்சத்து 42 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்குப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டதில் தற்போதைய நிலைமை என்ன என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டார்கள். அதுபற்றி ஒரு சிறிய விளக்கத்தைக் கொடுக்க கடமைப்பட்டிருக்கின்றேன். கிட்டத்தட்ட ஒரு இலட்சம் கோடி ரூபாய்க்கு மேல் மின் துறை சார்பாக ஒப்பந்தங்களில் கையெழுத்திடப்பட்டிருக்கின்றன. அந்த நிறுவனங்கள் தயாராக இருக்கின்றன. இப்போதுள்ள நிலைமை என்னவென்று சொன்னால், நமக்கு மின்சாரத் தேவை அந்தளவிற்கு இல்லாத காரணத்தினால், 'நீங்கள் tender மூலம் வாருங்கள்' என்று நாங்கள் சொன்னோம். அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று கேட்டால், 'நீங்கள் PPA–வில் கொடுத்தால் மட்டும்தான் நாங்கள் ஒப்பந்தம் போடுவோம்' என்று சொல்கிறார்கள். ஆக, நாம் PPA–வில் போட்டால் விலை அதிகமாக இருக்கும். Tender மூலம் வந்தால் விலை குறைவாக இருக்கும். அந்த அடிப்படையிலேதான் ஒரு இலட்சம் கோடி ரூபாய் அளவிலான ஒப்பந்தங்களில் முன்னேற்றமும் இல்லாமல் இருப்பதற்குக் காரணம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, தூய்மை இந்தியா திட்டத்தைப் பற்றி ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டுள்ளதைப் பற்றி அவர்கள் சொன்னார்கள். இந்த அரசு எவ்வளவு சிறப்பாகச் செயலாற்றிக் கொண்டிருக்கிறது என்பதை அவர் பார்வையிட்டுப் பாராட்டியிருக்கின்றார். அதிலென்ன தவறு இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர்



[திரு. டி. ஜெயக்குமார்]

புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்றைக்குமே மாநிலத்தினுடைய உரிமைகளைப் பாதுகாக்கின்ற அரசாகும். எனவே, அந்த அடிப்படையிலே, அது G.S.T. ஆக இருந்தாலும் சரி, முத்தலாக் குறித்த சட்டமாக இருந்தாலும் சரி, எந்தச் சட்டம் மாநில மக்களின் உரிமையைப் பறிக்கின்ற செயலாக இருக்கிறதோ, அதற்கெதிராகக் குரல் கொடுக்கின்ற ஒரே இயக்கம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. *(மேசையைத் தட்டும் ஒலி)* உதாரணத்திற்கு நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், இப்பொழுது ஆளுநர் உரையில் தேசிய மருத்துவ ஆணையம் சம்பந்தப்பட்ட சட்டமுன்வடிவு மத்திய அரசு கொண்டு வருகிறது என்றும், அதைப்பற்றி ஆளுநர் உரையில் குறிப்பிடப்படவில்லை என்பதையும் சொன்னார்கள்; படிக்க வேண்டும். ஆளுநர் உரையில் பக்கம் 43–ல் பத்தி 36–ல். . . *(குறுக்கீடு)* நான் ஆளுநர் உரையில் இருப்பதைத்தான் சொல்கிறேன். *(குறுக்கீடு)* அவர்கள் இல்லையென்று சொன்னார்கள், நான் இருக்கிறது என்று சொல்கிறேன். 'மாநிலத்தின் நலனையும், நமது மாணவர்கள் மற்றும் மருத்துவர்களின் நலனையும் காக்கும் வகையில் இந்த அரசு ஏற்கெனவே முன்வைத்துள்ள கருத்துகளின் அடிப்படையில் மருத்துவத் துறையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய தேசிய மருத்துவ ஆணையச் சட்டமுன்வடிவில் தகுந்த மாற்றங்களைக் கொண்டு வரவேண்டுமென மத்திய அரசை இந்த அரசு வலியுறுத்துகிறது' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. போதுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 2–15

**மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறிய ஓர் ஒப்புதல் வாக்குமூலத்திற்கு நான் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். அவர் சொன்ன 24 திட்டங்களில், இரண்டே இரண்டுதான் தொழில் திட்டங்கள். அதில் ஒரு திட்டம் NATRiP திட்டமாகும். *(குறுக்கீடு)* நீங்கள் கேட்டீர்கள் அல்லவா? அதற்கு நான் பதில் சொல்லி முடித்து விடுகிறேன். *(குறுக்கீடுகள்)*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)*

[*2018 ஜனவரி 11*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அமைச்சர், கொஞ்சம் சுருக்கமாகப் பதிலை முடியுங்கள்.*

**மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:** அந்த 24 திட்டங்களில் ஒரேயொரு திட்டம்தான் ஒரகடம் திட்டம். (குறுக்கீடுகள்) வாகனத் தொழிலில் ஒவ்வொரு தாய் தொழிற்சாலையும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்த தொழிற்சாலைகள்தான். Ford முதல் Hyundai வரை ஒவ்வொன்றும், அதாவது, Mitsubishi, Ford, Hyundai, Volvo, BMW, Daimler Benz, Nissan போன்ற தொழிற்சாலைகளைச் சார்ந்து இயங்கும் நீங்கள் சொன்ன NATRiP என்பது ஒரு குழந்தை தொழிற்சாலை. இத்தனை தாய் தொழிற்சாலைகளை வாகனத் தொழிலில் அம்மா கொண்டு வந்ததனால் விளைந்த ஒரு தொழில்தான் Research and Test track–NATRiP என்பது; அதை மட்டும்தான் உங்களால் list செய்ய முடிகிறது. இந்த இடத்தில் NATRiP–ஐவிட பன்மடங்கு பெரிய 25 தொழிற்சாலைகளுக்குமேல் அம்மா அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். அதை மட்டும் நான் பதிவு செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது, மத்திய அரசிடமிருந்து நீங்கள் என்னென்ன திட்டங்களைக் கொண்டுவந்து இங்கு சேர்த்திருக்கிறீர்கள் என்று அடுக்கடுக்காக சில கேள்விகளை இங்கே கேட்டார்கள். நான் இங்கு சில விளக்கத்தைச் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். மத்திய அரசின் அனைவருக்கும் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ், மத்திய அரசினுடைய நிதியாதாரம். . . (குறுக்கீடுகள்) நீங்கள்தானே உடனுக்குடன் பதில் சொல்ல வேண்டுமென்று சொன்னீர்கள். இப்போது நாளைக்குச் சொல்லுங்கள் என்று சொல்கிறீர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இல்லை, நீங்கள் கேட்டதற்கு மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நாளைக்குப் பதில் சொல்வார்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் கேட்டதற்கு அவர் குறுக்கிட்டுப் பதில் சொல்கிறார். விடுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, அவர் விளக்கம்தான் சொல்கிறார். (குறுக்கீடுகள்)*



[பேரவைத் தலைவர்]

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)*

*நீங்கள் கேட்டதற்கு அவர் பதில் சொல்கிறார். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும் மற்றும் உறுப்பினர்களும் எதற்காகக் கோபப்படுகிறார்கள் என்று தெரியவில்லை. (குறுக்கீடுகள்) ஒரேயொரு நிமிடம். (குறுக்கீடுகள்) எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தன்னந்தனியாக எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, அவையில் வந்து பேசுகின்றபோது எத்தனை முறை நீங்கள் குறுக்கிட்டீர்கள் என்பது அவைக் குறிப்பிலே பதிவாகி இருக்கின்றது. (குறுக்கீடுகள்) நீங்கள் ஒரு கருத்தைச் சொல்கின்றபோது. . . (குறுக்கீடுகள்) ஒரேயொரு நிமிடம். நான் பேசியபிறகு, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன். ஒரேயொரு நிமிடம், உட்காருங்கள். ஆகவே, நீங்கள் சில. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அமைதி காக்கவும்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** நீங்கள் சில கருத்துகளைச் சொன்னீர்கள். நீங்கள் கொண்டு வந்த திட்டங்களையெல்லாம் இங்கே சொன்னீர்கள். சில மாறுபட்ட கருத்துகள் இருக்கின்றபோது, அதற்கு அமைச்சர்கள் மறுப்பு தெரிவிக்கின்றார்கள். இதில் ஒன்றும் தவறே கிடையாது. வேறு ஒன்றுமே சொல்லவில்லை. எதைக் கொண்டு வந்தீர்கள், எதைச் சாதித்தீர்கள் என்று நீங்கள் கேள்வி கேட்கின்றபோது, 'நாங்கள் இதைச் செய்தோம்' என்று, நீங்கள் எப்படிச் சொல்கிறீர்களோ அதேமாதிரி நாங்களும் சொல்வதற்கு உரிமை இருக்கிறது. அந்த அடிப்படையிலே மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தெரிவிக்கின்றார்கள். மற்ற அமைச்சர்களும் தங்களுடைய இலாகாக்கள் சம்பந்தப்பட்டதை, கூட்டுப் பொறுப்பில் இருக்கின்ற காரணத்தால், இந்த அரசு என்ன சாதனை செய்திருக்கிறது என்பதைத் தெரிவிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர்களுக்கு உரிமை இருக்கிறது. அந்த அடிப்படையிலே தெரிவித்திருக்கின்றோம். நீங்கள் சொன்ன கருத்துகளெல்லாம் ஏற்கெனவே அவைக் குறிப்பிலே பதிவு செய்யப்பட்டிருக்கிறது. நீங்களெல்லாம் அமைச்சர்களாக இருந்தபோது, ஆளுங்கட்சியாக

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி][*2018 ஜனவரி 11*

இருந்தபோது சொன்ன கருத்துகளெல்லாம் அவைக் குறிப்பிலே பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. ஆரோக்கியமாகத்தான் நீங்களும் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். நாங்களும் ஆரோக்கியமாகத்தான் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆகவே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தங்களுடைய கருத்துகளைச் சொல்லலாம். மாறுபட்ட கருத்து இருந்தால் அதற்கு நாங்களும் பதில் அளிக்கின்றோம். ஆகவே, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களை 'நீங்கள் என்ன திட்டம் கொண்டு வந்தீர்கள்' என்று கேட்டீர்கள். மத்திய அரசிடமிருந்து நாங்கள் என்ன பெற்றோம் என்று அவர் இலாகா சம்பந்தப்பட்டதை இங்கே தெரிவிக்கிறார்கள் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். தயவுசெய்து நீங்கள் கோபப்பட வேண்டியதில்லை. நீங்கள் கேட்ட கேள்விக்குத்தான் பதில் சொல்கின்றோமேயொழிய வேறொன்றும் கிடையாது. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேண்டாம், வேண்டாம். இருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் மூத்த உறுப்பினர். பல ஆண்டுக்காலம் இந்த அவையிலே இருந்து பணியாற்றியவர். அவர்களும் இதே கருத்தைத்தான் பதிவு செய்திருக்கிறார்கள். அவர்களே பதிவு செய்திருக்கிறார்கள். வேண்டுமென்றால், அதற்கான விவரத்தை நாங்களே எடுத்துக் கொண்டுவந்து கொடுக்கின்றோம். எனவே, அந்த வழியைப் பின்பற்றிதான் நாங்களும் பதில் சொல்கிறோம். நீங்கள் என்ன வழியைப் பின்பற்றி பதில் சொன்னீர்களோ, அதே வழியில்தான் இப்போது இருக்கின்ற ஆளுங்கட்சியைச் சார்ந்த சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களும் சரி, அமைச்சர் பெருமக்களும் சரி, நீங்கள் சொல்கின்ற கருத்துக்கு மாறுபட்ட கருத்து இருந்தால் பதில் அளிக்கிறோம். இதில் எந்தவிதத் தவறும் இல்லையே! *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வாய்ப்புத் தருகிறேன், இருங்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வது என்பது வேறு. அவர் நாளைக்குப் பதில் சொல்வார். *(குறுக்கீடுகள்)* அவர் ஒரு விளக்கம்தானே சொல்கிறார். துணை முதலமைச்சர் ஒரு விளக்கம்தானே சொல்கிறார்! நீங்கள் சொல்லுங்கள். *(குறுக்கீடு)* மாண்புமிகு துணை முதலமைச்சர், ஒரு நிமிடம் இருங்கள்.



*பிற்பகல் 2–20*

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெரிய விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள். ஏற்கெனவே சொன்னார், நாங்கள் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறோம். எங்களுடைய துணைத் தலைவர் அவர்கள்கூட நிருவாக ரீதியாக இருக்கக்கூடிய அமைச்சர்கள் அல்லது கூட்டுப் பொறுப்பிலே இருக்கக்கூடிய அமைச்சர்கள் பதில் சொல்லட்டும், வேண்டாம் என்று சொல்லவில்லை என்று சொன்னார். எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் மட்டுமல்ல, சாதாரண ஓர் உறுப்பினர் பேசிக்கொண்டிருந்தாலும் குறுக்கிட்டுப் பேசும்போது, குற்றச்சாட்டு சொல்கிறபோது அதில் விளக்கம் சொல்வதற்கு மாண்புமிகு அமைச்சர்களுக்கு அதிகாரம் உண்டு. அதை மரபின்படி நீங்களும் அனுமதித்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால், இப்பொழுது நான் சொன்ன பிரச்சினைகளில் அவர் எதாவது குற்றம் சொல்கிறாரா அல்லது தவறான பதிவுகளைப் பதிவு செய்கிறேன் என்று சொல்கிறாரா? ஆக, அவர்கள் ஆட்சியில் செய்ததை இப்பொழுது சொல்கிறார்கள் என்று சொன்னால் அதற்கு எதற்கு நாளையதினம் பதிலுரை? அதுதான் என்னுடைய கேள்வி. *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபொழுது 68 முறை நீங்கள் குறுக்கீடு செய்திருக்கிறீர்கள். என்ன கருத்தை நீங்கள் சொன்னீர்களோ, அதேபோலத்தான் நீங்கள் சொல்கிற கருத்து மாறுபட்ட கருத்தாக இருந்தால், அதற்கு பதிலளிக்கக்கூடிய உரிமை மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கு இருக்கிறது. ஆகவே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்கிற கருத்துக்கு மாறுபட்ட கருத்து இருந்தால் நாங்கள் பதில் சொல்கிறோம். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்கிறேன், அமைச்சர்கள் குறுக்கிடுவது

தவறல்ல. நான் ஒப்புக்கொள்கிறேன். கூட்டுப் பொறுப்பு உண்டு, ஒப்புக்கொள்கிறேன். எப்படி என்று கேட்டால், பதில் சொல்வதற்கு வேறு யாரும் இல்லாமல் இருந்தால், ஓர் அமைச்சர் எழுந்து குறுக்கிட்டுச் சொல்லலாம். நாளைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லப் போகிறார்கள். இவர் தொழிற்சாலைகள் வரவில்லை என்று சொல்கிறார். வந்த தொழிற்சாலை இதோ என்று பட்டியல் போடுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். ஆனால், அடிக்கடி இவர் எழுந்துகொள்கிறார். "ஏன் மஞ்சள் அரைக்கிறாய் என்று ஒருவன் கேட்டதற்கு, ஒருத்தி சொன்னாளாம், பழைய ஞாபகமடா பேரா" என்று. அந்தமாதிரி இவர் அடிக்கடி முதலமைச்சர் போன்று எழுந்து பேசினால் என்ன அர்த்தம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிதித் துறையைச் சார்ந்த கேள்வி என்பதால், மாண்புமிகு துணை முதலமைச்சர் சில விளக்கங்கள் சொல்வதற்காக அனுமதி கேட்டிருக்கிறார். அதற்கு அனுமதிக்கிறேன். அவ்வளவுதான், வேறொன்றும் இல்லை. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அடுக்கிக்கொண்டே போனார். 'உங்கள் ஆட்சியில், இப்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கிற ஆட்சியில் மைய அரசிலிருந்து என்ன கொண்டுவந்து சேர்த்தீர்கள்' என்று கேட்டார். நீங்கள் பசுமை வீடுகள் பற்றி கேட்டீர்கள். என் இலாகா சம்பந்தப்பட்ட விஷயங்களைப் பற்றி நான் கூறுவதற்கு கடமைப்பட்டிருக்கிறேன். நீங்களே சொன்னீர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன். . . (குறுக்கீடுகள்) இது நன்றாகவா இருக்கிறது? இதெல்லாம் வேண்டாம். (குறுக்கீடுகள்) எத்தனை முறை கொடுத்தாகிவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன் அவர்கள் பேசும்போது, நிதிப் பற்றாக்குறை பற்றிக் கேட்டார். நீண்ட விளக்கம் வைத்திருந்தபோதிலும், அவர் நேரத்தை எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று சுருக்கமாகச் சொன்னேன். (குறுக்கீடு) சொல்வதைக் கேளுங்கள். நீங்களே சொன்னீர்கள் உடனடியாகச் சுடச்சுட பதில் கொடுக்க வேண்டுமென்று சொன்னீர்கள். (குறுக்கீடுகள்) அதனால்தான் பேசப் போகிறேன். கொஞ்சம் அமைதியாக இருந்து கேளுங்கள்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வீட்டு வசதித் துறைக்கும் அமைச்சர் என்ற முறையில் அவர் சில விஷயங்கள் சொல்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்; சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நாளைக்கு அவர் பேசுவார். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நீங்கள் வம்புக்குப் பேசுகிறீர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பேசும்போது 68 முறை குறுக்கிட்டதாகச் சொன்னேன். (குறுக்கீடுகள்) 'நிருவாக சம்பந்தமாக' என்று சொன்னார்கள். மாண்புமிகு துணை முதலமைச்சரும் அதைத்தான் சொன்னார். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும், நிதித் துறை பொறுப்பு வகிக்கிறார். அவரது துறை குறித்து கேட்கின்ற கேள்விகளுக்குப் பதில் சொல்கிறார். இதில் என்ன தவறு இருக்கிறது? நீங்கள் எதை வேண்டுமானாலும் கேட்கலாம், நாங்கள் எதுவும் கேட்கக் கூடாதா? இது எந்தவிதத்தில் சரியாக இருக்கும்? (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, ஆளுகின்ற கட்சிக்கும், எதிர்க்கட்சிக்கும் பொறுப்பு இருக்கிறது.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் நியாயமாகக் குறுக்கிட்டோம். அநியாயமாகக் குறுக்கிடவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் வாழைப்பழத்தில் ஊசி இறக்குவது போன்று இறக்குவார் என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும். அவர் மிக அனுபவம் வாய்ந்தவர். எப்படியெல்லாம் இந்த அவையில் நடக்க வேண்டும் என்பது அவருக்கு நன்றாக, அனுபவரீதியாகத் தெரியும். அந்த அளவுக்கு எங்களுக்கு அனுபவம் இல்லை. நீங்களெல்லாம் எப்படிக் கற்றுத் தெரிந்திருக்கிறீர்களோ, அதில் ஓரளவுக்கு எங்களுக்கும் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, நீங்கள் சொல்கின்ற கருத்துக்கு மாறுபட்ட கருத்துகள் இருக்கும்போது, எங்களுடைய மாண்புமிகு

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி][*2018 ஜனவரி 11*

*அமைச்சர் பெருமக்கள் பதில் சொல்கிறார்கள். அதில் எந்தவிதத் தவறும் இல்லை. இப்பொழுது மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள், அவர் வகிக்கும் துறை குறித்துப் பேசுகிறார். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், நீங்கள் மத்திய அரசிடமிருந்து என்ன திட்டத்தைக் கொண்டு வந்தீர்கள், என்ன திட்டத்தை மத்திய அரசிடமிருந்து பெற்றீர்கள் என்று கேட்டார்கள்; அதற்கு துறையின் சார்பாக என்ன திட்டங்களைப் பெற்றுத் தந்திருக்கிறோம் என்று பதில் சொல்கிறார்கள். வேறு ஒன்றும் இல்லை.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்) நான் எழுந்து பேசினாலே, உங்களுக்கு என்ன தாக்குகிறது என்று தெரியவில்லை. நாட்டிலுள்ள ஏழை, எளிய குடும்பங்கள் அனைவருக்கும் வீடு வழங்குதல், குடிநீர் மற்றும் கழிவுநீர் வசதிகள், மின் இணைப்பு ஆகிய அனைத்தும் வழங்கும் குறிக்கோளுடன் மாண்புமிகு பிரதமருடைய அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டம் துவங்கப்பட்டுள்ளது. மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதியுதவியுடன் இத்திட்டப் பணிகள் ஏற்கெனவே துவங்கப்பட்டு, மிகச் சிறந்த முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*பிற்பகல் 2—25*

*இந்தத் திட்டம் நான்கு வகைப்பாடுகளில் இப்போது நடைமுறையில் செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தகுதிவாய்ந்த குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு தனியார் பங்களிப்புடன் நிலத்தினை ஒரு வள ஆதாரமாகப் பயன்படுத்தி, குடிசைப் பகுதிகள் கள மேம்பாடு மற்றும் அனைத்து குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களுக்கு வீடுகள் அளிக்கப்படும். இதற்கு மத்திய அரசு வீடு ஒன்றிற்கு ரூபாய் ஒரு இலட்சம் வீதம் மானியம் வழங்கும்.*

*இரண்டாவது வகைப்பாடு. நகர ஏழை மக்களின் வீட்டு வசதித் தேவைகளுக்கு நலிவடைந்த குறைந்த வருவாய்ப் பிரிவினர் மற்றும் நகர ஏழைகளுக்கு வீடுகள் கட்ட, விரிவாக்க, வாங்குவதற்கு கடன் வங்கிகள்மூலம் வழங்கப்படும். பொருளாதாரத்தில் நலிவுற்ற மற்றும் குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கான ஒவ்வொரு பயனாளிக்கும் ரூபாய் ஆறு இலட்சம் வரை உள்ள கடன் தொகைக்கு வட்டியில் 6.50 சதவிகிதம் மானியமாக வழங்கப்படும். மேலும், நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கு ரூபாய் ஒன்பது இலட்சம் வரை உள்ள கடன் உதவிக்கு வட்டியில் மானியமாக 40 சதவிகிதமும், ரூபாய் பன்னிரெண்டு இலட்சம் வரை உள்ள கடன் உதவிக்கு மானியமாக மூன்று சதவிகிமும் இந்தத் திட்டத்தின் மூலமாக அளிக்கப்படும்.*



[திரு. ஓ. பன்னீர்செல்வம்]

*வகைப்பாடு மூன்று, பங்களிப்புடன்கூடிய திறனுக்கேற்ற வீடுகள். பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்கு மாநில அரசு அதன் நிறுவனங்களால் மலிவு விலையில் மக்கள் வாங்கும் திறனுக்கேற்ப வீடுகள் கட்டப்படும். இதற்கு மத்திய அரசின் மானியமாக ஒரு வீட்டிற்கு ரூபாய் 1.50 இலட்சம் வீதமும், மாநில அரசின் பங்காக ரூபாய் ஆறு இலட்சம் மானியமும் அளிக்கப்படும். இதில் பயனாளிகள் ரூபாய் 2.5 இலட்சம் வரை தங்கள் பங்களிப்புத் தொகையைச் செலுத்த வேண்டும் என்பது மூன்றாவது வகைப்பாடு.*

*நான்காவது வகைப்பாடு, பயனாளிகள் தாமாகவே வீடுகள் கட்டுவதற்குரிய திட்டம். இந்தத் திட்டம் பயனாளிகள் தங்களுக்குச் சொந்தமான நிலத்தில் தாங்களாகவே வீடுகள் கட்ட அல்லது விரிவுபடுத்த வகை செய்கிறது. மத்திய அரசு மானியமாக ஒவ்வொரு பயனாளிக்கும் ரூபாய் 1.50 இலட்சம் வீதமும், மாநில அரசு ரூபாய் 60,000 வீதமும் வழங்கும். வீடுகள் கட்ட ஆகும் ஊதியமில்லா தொகையை பயனாளிகள் தங்கள் பங்களிப்பாகச் செலவு செய்ய வேண்டும். இந்தத் திட்டம் தமிழகத்திலுள்ள 12 மாநகராட்சிகள், 124 நகராட்சிகள் மற்றும் 528 பேரூராட்சிகள் என மொத்தம் 666 நகரங்களில் செயல்படுத்தப்படும். தற்சமயம் வீடுகள் தேவை குறித்த கணக்கெடுப்பு செய்யப்பட்டு, மொத்தம் 8.29 இலட்சம் வீடுகள் தேவையெனக் கண்டறியப்பட்டுள்ளது. மேலும். . .*

**திரு. ஜெ. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்ன இது? ஏன் குறுக்கிடுகிறீர்கள்? உட்காருங்கள்.*

[2018 ஜனவரி 11

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பழகன், நீங்கள் அடிக்கடி எழுந்து நின்று, நீங்கள் அவையில் இருப்பதைக் காட்டுகிறீர்களா? நீங்கள் அவையில் இருப்பதுதான் தெரியுமே! எதற்கு சும்மா, சும்மா எழுந்து மாண்புமிகு துணை முதலமைச்சரின் உரையில் குறுக்கிடுகிறீர்கள். அவையில் உங்களைப் பேச அனுமதிக்கும் நேரம் தவிர, இப்படியெல்லாம் அமைச்சரின் உரையில் குறுக்கே பேசுவது முறையல்ல. (குறுக்கீடுகள்) நான் சொன்னால் கேளுங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. அன்பழகன், இங்கே பாருங்கள். எல்லோரும் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு துணை முதலமைச்சர் பதில் சொல்வதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்கத் தயாராக இருக்கிறார். நீங்கள் ஏன் குறுக்கே பேசுகிறீர்கள்? (குறுக்கீடுகள்) நீண்ட விளக்கம், குறுகிய விளக்கம் என்பதெல்லாம் இல்லை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் விளக்கம் அளிப்பார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இதெல்லாம் தேவையா? இந்த நடைமுறை சரியில்லாதது. (குறுக்கீடுகள்) அப்படி யாருமே பேச முடியாத ஒரு சூழ்நிலை இந்த அவையில் ஏற்படவில்லை, பார்த்துக்கொள்ளுங்கள்.

(திரு. ஜெ. அன்பழகன், எழுந்து நின்றுகொண்டு ஏதோ பேசினார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பழகன், நீங்கள் இந்த அவைக்கும் கட்டுப்பட மாட்டேன் என்கிறீர்கள். யாருக்கும் கட்டுப்பட மாட்டேன் என்கிறீர்கள். நீங்கள் இப்படிச் செய்வது முறைல்ல. நான் உங்களுக்கு இறுதியாக எச்சரிக்கை செய்கிறேன். இதற்குப் பிறகு இதுபோல் அவை நடவடிக்கையில் ஏதாவது குறுக்கீடு செய்தீர்கள் என்றால், உங்கள்மீது நடவடிக்கை எடுப்பதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை என்பதை நான் உங்களுக்கு இறுதி எச்சரிக்கையாகத் தெரிவிக்கிறேன். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** தற்சமயம் வீடுகள் தேவை குறித்த கணக்கெடுப்புகள் செய்யப்பட்டு, மொத்தம் 8.29 இலட்சம் வீடுகள் தேவை என்று கண்டறியப்பட்டுள்ளது. மேலும், இணையதளங்கள்மூலம் இதுவரையில் 9.04 இலட்சம் விண்ணப்பங்கள் வரப்பெற்று, அவற்றில் 5.26 இலட்சம்



[திரு. ஓ. பன்னீர்செல்வம்]

பயனாளிகள் தகுதியுள்ளவர்களாகக் கண்டறியப்பட்டுள்ளனர். ஆக மொத்தம், தமிழகத்தில் வீடுகள் கட்டும் தேவை 13.55 இலட்சமாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் வகைப்பாடு 3–ன்கீழ் 4,176.06 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 44,770 குடியிருப்புகள் கட்ட மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு, 14,160 குடியிருப்புகள் முடிவடைந்தும் மற்றும் முன்னேற்றத்திலும் உள்ளன. மீதமுள்ள குடியிருப்புகள் கட்டும் பணிகள் விரைவில் துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–30

வகைப்பாடு நான்கின்கீழ் 10,285.62 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 3 இலட்சத்து 39 ஆயிரத்து 493 வீடுகள் கட்ட மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இதில் இந்தியாவிலேயே தமிழகம்தான் அதிகமான ஒதுக்கீட்டைப் பெற்று முன்னணி மாநிலமாக இருக்கின்றது என்பதனை இங்கே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். இத்திட்டத்தைச் செயல்படுத்தி நாட்டிலேயே தமிழகம்தான் முன்னோடி மாநிலமாகத் திகழ்கின்றது. இதுவரை 1,58,625 வீடுகள் முடிவடைந்தும் மற்றும் முன்னேற்றத்திலும் உள்ளன. மீதமுள்ள வீடுகளைக் கட்டும் பணி விரைவில் தொடங்கப்படும். இத்திட்டங்களுக்காக மத்திய அரசின் மானிய நிதி 2,305.58 கோடி ரூபாய்க்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, அதில் 1,497.97 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை இந்த மாதத்தில் விடுவிக்கப்படும். மாநில அரசின் நிதி 501 கோடியே 67 இலட்சம் ரூபாய் அந்த வீடுகளுக்கு மானியமாக விடுவிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள நிதியை மத்திய அரசு விடுவித்தபின், மாநில அரசு 1,124.47 கோடி ரூபாயை மாநில நிதியாக விடுவிக்கும் என்பதை இங்கே நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) இப்போது பதிலை முடித்துவிடுகிறேன். பிரதம மந்திரியினுடைய அனைவருக்கும் வீடு கட்டுகின்ற திட்டத்தில், தமிழகம்தான் முன்னணி மாநிலமாக இருக்கின்றது என்பதனை இங்கே நான் பதிவு செய்ய விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். (குறுக்கீடு)

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

[2018 ஜனவரி 11

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இது நல்ல நடைமுறை இல்லை. பேசும்போது அனைவரும் அதிகமாக சத்தம் போடுவது என்பது சட்டமன்ற விதிக்கு முரணானது, நல்ல பண்பாடும் அல்ல, நல்ல நாகரிகமும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் சொல்வதை மனப்பூர்வமாக நான் ஏற்றுக்கொள்கிறேன். இதனை அமைச்சரவையில் இருக்கக்கூடிய குறிப்பாக, மீன் வளத் துறை அமைச்சர் அவர்களுக்கு நீங்கள் வலியுறுத்திச் சொல்ல வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) ஆமாம். இப்போது சம்பந்தமில்லாமல் பேசுகின்றீர்கள் அல்லவா, அதற்காகத்தான் சொல்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையில் பக்கம் 13–ல், சட்டம்–ஒழுங்கைச் சிறப்பாக நிலைநாட்டுவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டிருக்கின்றீர்கள் ஆனால், நிலைமை என்னவென்று சொன்னால், சமீபத்தில் வெளிவந்திருக்கக்கூடிய தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தினுடைய புள்ளிவிவரத்தை எடுத்துப் பார்த்தீர்களென்றால், நீங்கள் உரையில் சொல்லியிருப்பது உண்மை அல்ல என்பது தெளிவாகத் தெரிகின்றது. இந்திய தண்டனைச் சட்டப்படியான வழக்குகளில், தமிழ்நாடு 39 மாநிலங்களில் ஏழாவது இடத்தில் இருக்கிறது. தென் மாநிலங்களில் இரண்டாவது இடத்தில் இருக்கிறது. குற்ற ஆவணக் காப்பகம் பட்டியலிட்டிருக்கக்கூடிய 19 மாநகரங்களில் சிறப்புச் சட்டங்கள், குழந்தைகள், பெண்கள், தாழ்த்தப்பட்டோர் மற்றும் ஆயுத வெடிமருந்துகள் தொடர்பான சிறப்புச் சட்டங்கள் என்ற அடிப்படையில் பார்த்தீர்களென்றால், நடைபெற்றிருக்கக்கூடிய குற்றங்களில், சென்னை 32.9 சதவிகிதம் பெற்று முதல் மாநகரமாக



[திரு. மு.க. ஸ்டாலின்]

இருக்கின்றது. பொது அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய வழக்குகளில், பதிவு செய்யப்பட்டிருக்கின்ற வழக்குகளில் சென்னை மூன்றாவது இடத்தில் இருக்கின்றது. நான் சொல்வது, ஏதோ வருடக் கணக்கு அல்ல. 2014 முதல் 2016 வரையிலான அ.தி.மு.க. ஆட்சி பற்றி தற்போது சமீபத்தில் வெளியிட்டிருக்கக்கூடிய புள்ளிவிவரம் இதை எடுத்துக்காட்டுகிறது. சட்டம்–ஒழுங்கை நிலைநாட்ட சிறப்பாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று நீங்கள் சொல்வதை யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை நான் அழுத்தம் திருத்தமாகச் சொல்கின்றேன். அதேபோன்று தென்னக நதிகளை இணைக்க. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சில குற்றச்சாட்டுகளைச் சொன்னார்கள். தமிழ்நாட்டில் சட்டம்–ஒழுங்கு சிறப்பான முறையில் இருந்து வருகின்றது. இதற்கு சமீபத்திய காரணங்கள் சிலவற்றை இங்கே நான் குறிப்பிட விரும்புகின்றேன். குற்றங்களில் ஈடுபடுவோர் மற்றும் குண்டர்கள்மீது கடுமையான நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுத்ததால், மாநிலத்தில் குற்றங்கள் பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளன. தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் 2016 ஆம் ஆண்டுக்கான அறிக்கையின்படி, தமிழ்நாட்டில் சட்டம்–ஒழுங்கு மிகச் சிறப்பான முறையில் பராமரிக்கப்பட்டு வருவதன் காரணமாகத்தான், இந்தியாவிலேயே பெண்களுக்கு மிகவும் பாதுகாப்பான முதல் மெட்ரோ மாநகரமாக சென்னையும் (மேசையைத் தட்டும் ஒலி) பாதுகாப்பான பெருநகரில் முதலாவதாக கோயம்புத்தூரும் உள்ளன. கடந்த 2016 ஆம் ஆண்டில், பெண்களுக்கு எதிரான மொத்தக் குற்றங்களில் தமிழ்நாட்டின் குற்ற விகிதம் 10.7 ஆகும். இதனை தேசிய சராசரியான 51.4 சதவிகிதத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது 40.7 புள்ளிகள் குறைவாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இது சமீபத்தில் அறிவிக்கப்பட்ட ஒன்று. அகில இந்திய அளவில் சிறந்த காவல் நிலையம் தேர்வு செய்யப்பட்ட வகையில் குற்றத் தடுப்பினைக் கண்டுபிடித்தல், துரிதமாகக் கண்டுபிடித்தல், மதிநுட்பத்துடன் நிகழ்வைக் கையாளுதல், காவல் நிலையம் வந்தவர்களிடம் நடந்துகொள்ளுதல், குற்றவாளிகளைக் கையாளுதல் போன்ற பல்வேறு 80 காரணிகள்மூலம் தேர்வு

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி][2018 ஜனவரி 11

செய்யப்பட்டதில் கோவை ஆர்.எஸ். புரம் காவல் நிலையம் இந்தியாவிலேயே முதல் பரிசைப் பெற்றிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல், அண்ணா நகர் காவல் நிலையம் 5–வது பரிசைப் பெற்றுள்ளது. இந்தக் காவல் நிலையங்கள், இந்திய நாட்டிலுள்ள 15,000 காவல் நிலையங்களின் செயல்பாடுகளுடன் போட்டியிட்டு பரிசுகளைப் பெற்றுள்ளது என்பதை இந்த நேரத்தில் அவையின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது தமிழ்நாட்டுக்கே கிடைத்த பெருமையாகும். இது காவலர்கள் சிறப்பாக சட்டம்–ஒழுங்கைக் கையாள்வதற்கான சான்று. இந்தியாவிலுள்ள 15,000 காவல் நிலையங்களுள் இவை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன என்றால் தமிழகத்தில் சட்டம்–ஒழுங்கு சிறப்பான முறையில் இருக்கிறது என்பதற்கு இதுவே எடுத்துக்காட்டு என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பொத்தாம் பொதுவாகச் சொல்லவில்லை. கையில் ஆதாரம் இருக்கிறது. தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் புள்ளிவிவரம். வேண்டுமென்றால் மாண்புமிகு சபாநாயகர் மூலமாக உங்களிடத்தில் நான் தருகிறேன். நீங்கள் பார்த்துவிட்டு அதன்பிறகு முடிவு செய்யுங்கள்.

அடுத்து, தென்னக நதிகளை இணைக்க ஆர்வம் என்று இந்த ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆனால், இங்குள்ள அத்திக்கடவு–அவினாசி திட்டத்தை நிறைவேற்ற எடுத்திருக்கக்கூடிய மேல் நடவடிக்கை; அதேபோல் தாமிரபரணி–கருமேனியாறு–நம்பியாறு நதிநீர் இணைப்புத் திட்டத்தை நிறைவேற்றுவது பற்றி என்ன முடிவு எடுத்திருக்கிறீர்கள்? தாங்கள் முதலமைச்சரான உடனே புதுடில்லிக்குச் சென்றீர்கள். மாண்புமிகு பிரதமர் மோடி அவர்களை சென்று சந்தித்தீர்கள். 27–2–2017 அன்று மாண்புமிகு பிரதமர் அவர்களை சந்தித்து அவரிடம் ஒரு மனுவையும் சமர்ப்பித்துள்ளீர்கள். அந்த மனுவைப் பற்றி அனைத்துப் பத்திரிகைகளிலும் செய்திகள் வந்தன. அதில்



[திரு. மு.க. ஸ்டாலின்]

கேட்கப்பட்ட மத்திய அரசின் நிதி உதவிகள் அனைத்தும் தமிழகத்திற்குக் கிடைத்துவிட்டதா?அதில் குறிப்பிடப்பட்டுள்ள நதிநீர்த் திட்டங்களுக்கெல்லாம் நிதியுதவி கிடைத்துள்ளதா? குறிப்பாக கூடங்குளத்திலிருந்து கிடைக்கக்கூடிய மின்சாரம் முழுவதும் தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டுமென்ற கோரிக்கை என்ன ஆயிற்று? 10 Smart cities அறிவிக்கப்பட்டன. அது என்னவாயிற்று? தமிழகத்தில் AIIMS மருத்துவமனை அமைக்க 2015 ஆம் ஆண்டில் மத்திய நிதிநிலை அறிக்கையில் ரூ.2,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. அந்த AIIMS மருத்துவமனை இன்னும் வரவில்லை. உயர் நீதிமன்றமே தீர்ப்பு கொடுத்திருக்கிறது. 31–12–2017 ஆம் தேதிக்குள் AIIMS மருத்துவமனை அமைப்பதற்கான இடத்தினைத் தேர்வு செய்து, உடனடியாக அதற்கான பணிகளில் ஈடுபட வேண்டுமென்று உத்தரவும் பிறப்பித்திருக்கிறது. ஆனால், அதன் பிறகும் தமிழகத்தில் AIIMS மருத்துவமனைக்கான இடம் தேர்வு செய்யப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம்? அதேபோல், ஆளுநர் உரையில், பக்கம் 41–ல், பொது மக்கள் ஆரோக்கியமாக வாழ தேவையான மருத்துவ வசதி வழங்குவதில் நம்முடைய தமிழ்நாடுதான் முதலிடத்தில் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அதிக கேள்விகள் கேட்டிருக்கிறார்கள். அனைத்திற்கும் என்னிடம் பதில்கள் இருக்கின்றன. அனைத்திற்கும் நான் பதில் அளித்தால் நேரமாகிவிடும். (குறுக்கீடுகள்) எனவே, முக்கியமாக அத்திக்கடவு–அவினாசி திட்டம் (குறுக்கீடுகள்) அதற்கு விரிவாக. . . (குறுக்கீடுகள்) நீங்கள் பேசும்போது நாங்கள் அமைதியாக இருக்கிறோம். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, அவற்றைக் கேட்டு, அதற்கான பதிலைத் தெரிவிக்க வேண்டும் என்று நாங்கள் அவற்றைக் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தோம். நீங்கள் கேட்கின்ற கேள்விக்குத்தான் நாங்கள் பதில் சொல்கின்றோம். அத்திக்கடவு–அவினாசி திட்டம் மிக முக்கியமான ஒரு திட்டமாகும். ஏற்கெனவே ஒரு திட்டம் போடப்பட்டது. ஆய்வு செய்யப்பட்டு, அந்த ஆய்வில் மாற்றுத் திட்டம் தற்போது உருவாக்கப்பட்டிருக்கின்றது. அந்த மாற்றுத்

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி][*2018 ஜனவரி 11*

திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது. இந்த விரிவான திட்ட அறிக்கையின் மூலமாக காளிங்கராயன் வாய்க்காலிலிருந்து lift irrigation மூலமாகக் கிட்டத்தட்ட *1,850* கோடி ரூபாயில் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு, இத்திட்டத்தின்மூலம் *24,428* ஏக்கர் நிலத்திற்கு பாசன வசதி உறுதி செய்ய நடவடிக்கை எடுப்பதற்காக அரசால் இன்றைக்கு திட்டம் தீட்டப்பட்டு இருக்கிறது. ஆகவே, இவற்றையெல்லாம் விளக்கமாகச் சொல்ல வேண்டும் என்றால் *3, 4* பக்கங்கள் இருக்கின்றன. கால நேரம் அதிகமாக ஆகிவிட்ட காரணத்தினால், சுருக்கமாகச் சொல்கிறேன். எனவே, அத்திக்கடவு–அவினாசி திட்டத்தை விரைவில் செயல்படுத்துவதற்கான நடவடிக்கையினை அரசு எடுத்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நிறைய கேள்விகள் கேட்டிருக்கிறீர்கள். அவற்றுக்கெல்லாம் நாளைக்கு நான் என்னுடைய பதிலுரையில் விளக்கம் தெரிவிக்கிறேன் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) இதேபோன்று *10* புத்தகங்கள் வைத்திருக்கிறேன். நீங்கள் என்னென்ன கேள்விகள் கேட்பீர்கள் என்பது தெரியும். அனைத்திற்கும் பதில்களைத் தயாரித்து கொண்டு வந்திருக்கிறோம். ஆனால், அனைத்திற்கும் பதில்கள் சொல்வதென்றால், ஒவ்வொரு திட்டத்திற்கும் *3, 4* பக்கங்கள் இருக்கின்றன. அதைச் சொல்வதென்றால் காலதாமதம் ஏற்படும். எனவேதான், சுருக்கமாகச் சொல்கிறேன். விரிவான பதிலை நாளை தெரிவிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளைக்கு நாங்களும் முழுமையாக இருந்து உங்கள் பதிலுரையை கேட்கக் காத்திருக்கிறோம். ஆளுநர் உரை, பக்கம் *41*–ல் பொது மக்கள் ஆரோக்கியமாக வாழ்வதற்குத் தேவையான மருத்துவ வசதி வழங்குவதில் தமிழ்நாடுதான் முதலிடத்தில் இருக்கிறதென்று புகழ்ந்து சொல்லியிருக்கிறீர்கள். அண்மையில் டெங்கு காய்ச்சலால் திடீர் மரணங்களெல்லாம் ஏற்பட்டன. பொது மக்கள் அனைவரும் கடும் பீதியில் உறைந்து போனார்கள். குறிப்பாக மாண்புமிகு முதலமைச்சரின் சொந்த மாவட்டமான, சேலம் மாவட்டத்தில் எந்த அளவிற்கு டெங்கு காய்ச்சல் ஏற்பட்டு மக்கள் பீதிக்கு ஆளானார்கள் என்பது அனைவருக்கும் நன்றாகத் தெரியும். எனவே, அது பற்றி ஆய்வு செய்வதற்கு அக்டோபர்



[திரு. மு.க. ஸ்டாலின்]

*2017*–ல் AIIMS பேராசிரியர் Ashutosh Viswas தலைமையிலே மத்தியக் குழு தமிழகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. அந்தக் குழுவின் அறிக்கையின்படி, டெங்கு காய்ச்சல் அதிகம் பாதித்த மாநிலங்களின் வரிசையில் தமிழகம் முதலிடத்தில் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். *2011* முதல் *2017* வரை நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய அ.தி.மு.க. ஆட்சியில் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை *54,354*. இதிலே, இறந்தவர்களுடைய எண்ணிக்கை *158* பேர். இதை நான் சொல்லவில்லை, ஆய்வு செய்ய வந்த மத்தியக் குழு சொல்லியிருக்கிறது. அதுமட்டுமல்ல, டெங்கு காய்ச்சலுக்குக் காரணம் என்ன? அதைப் பற்றியும் ஒரு பட்டியல் போட்டிருக்கிறார்கள். அவற்றுள் டெங்குவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பதிலே தேசிய அளவிலான வழிகாட்டுதல்களை தமிழக அரசு கடைபிடிக்கவில்லை; திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்தை. . . . (குறுக்கீடு) நான் எல்லாவற்றையும் சொல்லிவிடுகிறேன். எல்லாவற்றுக்கும் சேர்த்து நீங்கள் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) Please, எல்லாவற்றுக்கும் சேர்த்தே பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) எல்லாவற்றுக்கும் சேர்த்தே பதில் சொல்லுங்கள். இன்னும் நிறைய இருக்கின்றன.

பிற்பகல் *2–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், இன்னும் சொல்லப் போகிறாராம். நீங்கள் சேர்த்தே பதில் சொல்லுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** இன்னும் *5, 6* விஷயங்கள் இருக்கின்றன. அதனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சேர்த்தே பதில் சொல்லுங்கள். ஒவ்வொன்றிற்கும் நீங்கள் எழுந்துகொள்ள வேண்டும், நானும் எழுந்துகொள்ள வேண்டும். அவற்றுள், திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்தைச் சரியாகச் செய்யவில்லை. முறையாகக் குடிதண்ணீர் விநியோகம் செய்யப்படவில்லை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத்திலே உள்ள *193* நாடுகளிலே டெங்கு காய்ச்சல் இருக்கிறது. இது பருவகால காய்ச்சல் என்று

*நாம் சொல்லியிருக்கிறோம். அதைத் தொடர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, 15 நாட்களுக்குள் டெங்கு காய்ச்சல் கட்டுப்படுத்தப்படும் என்று தெளிவாகச் சொன்னோம். அதே 15 நாட்களுக்குள் முழுமையாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதைக் கட்டுப்படுத்தியது. அதில் எந்தவிதமான மாற்றுக் கருத்தில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) ஒரு நிமிடம். மத்திய அரசின் சார்பில்* Viswas *தலைமையில் ஒரு குழு தமிழகத்திற்கு வந்தது. அந்தக் குழுவின் அறிக்கையை இப்பொழுது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மேற்கோள் காட்டி சட்டமன்றத்திலே பேசுகிறார். அதே அறிக்கையை நானும் கையில் வைத்திருக்கிறேன்.* Viswas *அவர்கள் முதல் நாள் சென்னை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையைப் பார்வையிட்டு, 'டெங்கு காய்ச்சலை தமிழக அரசு மிகச் சிறப்பாகக் கையாண்டு கொண்டிருக்கின்றது, (மேசையைத் தட்டும் ஒலி)* WHO–*னுடைய* protocol *மிகச் சிறப்பாக* follow–up *செய்யப்படுகிறது, அரசு மருத்துவமனைகளிலே நல்ல முறையிலே சிகிச்சை அளிக்கப்படுகிறது' என்று சொன்னார். அடுத்த நாள் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், 'இல்லை, மத்திய குழு* waste. *இவர்கள் தமிழக அரசை பாராட்டுவதற்காகத்தான் வந்தார்கள்' என்ற மாற்றுக் கருத்தை பத்திரிகையிலே சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி) 3 மாதங்களுக்குப் பிறகு டெங்குக் காய்ச்சல் கட்டுப்படுத்தப்பட்டது. மத்திய அரசின் 23 பக்கங்கள் கொண்ட அந்த அறிக்கை என்னிடமும் இருக்கிறது. அந்த அறிக்கையிலே, அனைத்து அம்சங்களையும் அந்தக் குழு பாராட்டியிருக்கிறது. ஒருசில இடங்களில் சில கருத்துகளை அவர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள். குடிதண்ணீர் விநியோகம் உள்ளிட்ட சில கருத்துகளை மட்டும் அவர் எடுத்துக்கொண்டு பேசுகிறார். கிட்டத்தட்ட 23 பக்கங்களையும் நான் படிக்க வேண்டுமென்றால்* I can read all the W.H.O. report. *(குறுக்கீடு) இல்லை, ஒரு சிலவற்றை மட்டும் சொல்கிறேன்.* Case Management–WHO Protocol is being strictly followed by Government of Tamil Nadu and private practitioners. (Thumping of desks) All PHCs and hospitals maintain adequate stock of medicine and IV fluids. Patients if needed are referred to higher and tertiary medical care facilities in 108 ambulance. Issues of late referrals are being addressed. *இந்த மாதிரி 25 கோடி ரூபாய் அளவிலே மேற்கொண்ட பணிகள்,* Cell counter *உட்பட, கிட்டத்தட்ட அத்தனைப் பக்கங்களிலும் தமிழக அரசினுடைய ஒட்டுமொத்த நடவடிக்கைகளை இந்த அறிக்கை*



*பாராட்டியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு சில ஊடகங்களில் இரண்டு, மூன்று கருத்துகள் சொல்லப்பட்டன. குடிதண்ணீர் விநியோகம் சீராக இல்லாத காரணத்தினாலே, வறட்சி. உங்களுக்குத் தெரியும், மிகப் பெரிய வறட்சியை ஒரு சில இடங்கள் சந்தித்தன. வறட்சியினால் ஒருசில இடங்களில் குடிதண்ணீர் சீராக இல்லாமல் அவர்கள் தண்ணீரைத் தேக்கி வைத்திருந்தார்கள் என்ற கருத்துகளைப் பிரதிபலித்திருந்தார்கள். இது ஏற்கெனவே நமக்குத் தெரிந்த, அறிந்த கருத்துகள்தான். இவற்றையெல்லாம் எதிர்கொண்டு பொதுமக்களிடம் மிகப் பெரிய விழிப்புணர்வை நாம் ஏற்படுத்தியிருக்கின்றோம். எத்தகைய நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றோம் என்ற எல்லாக் கருத்துகளும் இதில் இருக்கின்றன. மொத்தம் 23 பக்கங்கள் இருக்கின்றன. நான் வேண்டுமென்றால் மாண்புமிகு சபாநாயகரிடம் கொடுக்கிறேன். 23 பக்கங்களிலும் மத்திய அரசால் அனுப்பப்பட்ட குழு மிகப் பெரிய பாராட்டை, அங்கீகாரத்தை மாநில அரசுக்குத் தெரிவித்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நாங்களும் கட்டுப்படுத்தி அதை நிரூபித்திருக்கின்றோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏதோ பொத்தாம் பொதுவாக எந்தக் கருத்தையும் பேசவில்லை. மத்தியிலிருந்து டெங்கு காய்ச்சல் குறித்து ஆய்வு செய்வதற்காக வந்த குழு தந்த அறிக்கைதான். அதில் என்னென்ன குறைகள் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றனவோ, அதைச் சுட்டிக்காட்டுவது எதிர்க்கட்சியினுடைய கடமை. நீங்கள் அதை விட்டு, விட்டு, பாராட்டியதை விட்டு விட்டீர்களே, பாராட்டியதை விட்டு விட்டீர்களே என்று சொன்னால், பாராட்டுவதற்காக நாங்கள் இந்த அவையில் வந்து உட்காரவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) பிரச்சினைகளை எடுத்துச் சொல்வதற்காகத்தான் நாங்கள் வந்து உட்கார்ந்திருக்கிறோம். ஆக, எதிர்காலத்திலே இந்த ஆய்வுக் குழு எடுத்துச் சொல்லியிருக்கக்கூடிய கருத்துகளையும் அரசு பரிசீலனை செய்து, அதற்குரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும்.*

*பிற்பகல் 2–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

[2018 ஜனவரி 11

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாராட்டுகிற விஷயங்களை நாங்கள் பாராட்டுவோம் என்று சற்றுமுன்புதான் மாண்புமிகு எதிர்க்காட்சித் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், பாராட்ட வேண்டிய விஷயங்களை நாங்கள் பாராட்டுவோம் என்று நீங்கள் குறிப்பிட்டதைத்தான், இங்கே குறிப்பிட்டார். நீங்கள் ஆரம்பத்தில் அப்படிப் பேசியது அவைக் குறிப்பிலும் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நாங்கள் நிறைய விஷயங்கள் செய்திருக்கிறோம், அதை நீங்கள் பாராட்டவில்லை, சில விஷயங்களை மட்டும்தான் இங்கே நீங்கள் குறிப்பிட்டதாகச் சொன்னார். வேறு ஒன்றும் சொல்லவில்லை.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைச் சொல்ல வேண்டிய பொறுப்பு உங்களுக்கு. குறைகளைச் சுட்டிக்காட்டுவது எதிர்க்கட்சியினுடைய கடமை. அதனால்தான் நாங்கள் குறைகளைச் சுட்டிக்காட்டிக் கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் டெங்கு காய்ச்சலைப்பற்றி பேசும்போது, குடிநீர்ப் பிரச்சினை பற்றியும், திடக் கழிவு மேலாண்மைப் பற்றியும் இங்கே குறிப்பிட்டார்கள். திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்தைச் செயல்படுத்துவது என்பது எல்லோருக்குமே ஒரு சவாலான விஷயம்தான். துணை முதலமைச்சராகவும், உள்ளாட்சித் துறை அமைச்சராகவும் இருந்த தங்களுக்கும் அது நன்றாகத் தெரியும். வளர்ந்த நாடுகளில்கூட இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவது மிகப் பெரிய சவாலாகவே உள்ளது. திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்திற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 5 ஆண்டுகளில் மட்டும் 1,807.91 கோடி ரூபாயை ஒதுக்கினார்கள். அதேபோல, கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 398 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. எல்லா இடங்களிலும் அதை implement செய்து கொண்டிருக்கிறோம். அதுமட்டுமல்லாமல்,



[திரு. எஸ்.பி. வேலுமணி]

நீங்கள் ஆட்சியில் இருந்த காலத்தில் மொத்தமாகவே 303 கோடி ரூபாய் மட்டும்தான் ஒதுக்கியிருந்தீர்கள். இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவது மிகப் பெரிய சவாலாக இருந்தாலும்கூட, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் மிகச் சிறப்பாக செயல்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், குடிநீர் திட்டப் பணிகளைப் பொறுத்தவரையில் அதிகமான திட்டங்களை எடுத்து, அவற்றை நடைமுறைக்கும் கொண்டு வந்திருக்கிறோம். எல்லா இடங்களிலும் வறட்சி மற்றும் சில பருவ நிலை மாற்றங்கள் ஏற்படும்போது, தண்ணீரைக் கொஞ்சம் தேக்கி வைக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆனால், குடிநீர்த் திட்டப் பணிகளுக்காக மட்டும் சரித்திர சாதனையாக, இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும்தான் கிராமங்களில் குழாய்கள் மூலமாகக் குடிநீர் வசதி செய்து கொடுத்து 98.98 சதவிகிதம் அளவுக்குச் செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே வேறு எங்கும் இதுபோன்று கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே மட்டும்தான் இந்த திட்டம் மிகச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டுள்ளது.

அதைப்போல, காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு 21,958 கோடி ரூபாய் மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். அதற்குபின்னால், கடந்த இரண்டு ஆண்டுகளில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 4,711 கோடி ரூபாய் ஒதுக்கி, அதில் பல திட்டங்களைச் செயல்படுத்தியிருக்கிறோம். ஆனால், நீங்கள் மொத்தமாகவே ஐந்து ஆண்டுக் காலத்திற்கு 7,250 கோடி ரூபாய் மட்டும்தான் ஒதுக்கினீர்கள். நீங்கள் ஒதுக்கிய தொகையைவிட நாங்கள் 3 மடங்கு அதிகமாக ஒதுக்கியிருக்கிறோம். பல திட்டங்களை எடுத்து அதை நடைமுறைக்கும் கொண்டு வந்திருக்கிறோம். இயற்கையின் சூழ்நிலை காரணமாக இந்தப் பிரச்சினைகள் வருகின்றனவே தவிர வேறு ஒன்றும் இல்லை. அதைப்போல, பிளீச்சிங் பவுடர் போடுவது உள்ளிட்ட திட்டங்களை நல்ல முறையில் உள்ளாட்சித் துறை செயல்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2017–2018 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையிலே அரசுக்கு 3,14,366 கோடி ரூபாய் கடன் இருக்கிறது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதன்மூலம், தமிழக மக்கள் ஒவ்வொருவருடைய தலையிலும் 80,000 ரூபாய் கடன் சுமையை ஏற்றி வைத்திருக்கிறோம். அந்தப் பேராபத்திலிருந்து எப்படி மீளப் போகிறோம் என்ற அந்தக் கொள்கை அறிவிப்பும் இந்த ஆளுநர் உரையில் குறிப்பிடப்படவில்லை. இப்படிப்பட்ட நெருக்கடியான நிதிநிலை வளர்ந்துவரக்கூடிய இந்தக் கடன் சுமைகளுக்கிடையே இந்தத் திட்டங்களை எப்படி நிறைவேற்றப் போகிறோம்? ஆளுநர் உரையில் குறிப்பிட்டதைப்போல நிறைவேற்ற முடியுமா, அது சாத்தியமாகுமா என்பதுதான் என்னுடைய கேள்வி. இது எதைக் காட்டுகிறது என்று சொன்னால், சர்க்கரை என்று எழுதி, காகிதத்தை வாயிலே போட்டுக் கொண்டால், காகிதம் இனிக்குமா என்பதைத்தான் இது காட்டுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, நிதி நிருவாகம் எல்லாவற்றிலும் தமிழகம் இன்றைக்கு 20 ஆண்டுகள் பின்னோக்கிப் போயிருக்கிறது. இந்த ஆளுநர் உரை மட்டுமல்ல, இதுவரையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 3 ஆளுநர் உரைகளிலுமே அரசினுடைய திட்டங்கள் எதுவும் அறிவிக்கப்படவில்லை. அதிலும், குறிப்பாக இந்த ஆளுநர் உரையில் எந்தத் திட்டமும் அறிவிக்கப்படவில்லை. இந்த ஆளுநர் உரை அடிப்படை இலக்கணத்தை மீறியதாக, எதற்கும் பயனளிக்காத, பயனில்லாத உரையாக, வெற்று உரையாக, உயிரோட்டம் இல்லாத உரையாக, சடங்கிற்காகத் தயாரிக்கப்பட்டிருக்கிற சம்பிரதாய உரையாக மட்டுமே இருப்பதுதான் உண்மை.

நான் இன்னொரு கோரிக்கையை இந்த அவைமுன் வைக்க விரும்புகிறேன். எனக்கு முன்னால் இதே கோரிக்கைபற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள் பேசினார் என்று நான் கருதுகிறேன். எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா தமிழகம் முழுவதும் எல்லா மாவட்டங்களிலும் இன்றைக்கு அரசின் சார்பில் கொண்டாடப்பட்டு வருகின்றது. அதை நாங்கள் வரவேற்கிறோம். அப்படிக் கொண்டாடுகிற நேரத்தில் அந்த நூற்றாண்டு விழாவைப்பற்றி இந்த ஆளுநர் உரையிலே நீங்கள் குறிப்பிடவில்லை. அது ஒரு பக்கம். எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடும் அதேநேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் கோரிக்கை ஒன்றை வைத்தார். முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களுடைய கொலை வழக்கில்





தண்டனை பெற்று, 26 வருடங்களுக்கு மேலாக சிறையிலே வாடிக்கொண்டிருக்கிற பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேர் மற்றும் அதுபோல, பல்வேறு வழக்குகளில் சிக்கி, 20 வருடங்களுக்கும் மேலாக தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கின்ற பல்வேறு நபர்களை விடுதலை செய்வதற்கு இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையிலே நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 2–50

எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் அடிக்கடி சொல்வதைப் போல ஆளுநர் உரையைப் பற்றி சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், முள்ளு முனையிலே மூணு குளம் வெட்டினேன் என்ற பழைய நாடோடி கதை பாடலை போலத்தான் இந்த ஆளுநர் உரை அமைந்திருக்கிறது.

“முள்ளு முனையிலே மூணு குளம் வெட்டி வைத்தேன்
ரெண்டு குளம் பாழ், ஒரு குளத்திலே தண்ணியே இல்லை
வேகாத சட்டியிலே போட்ட அரிசி மூணு அரிசி
ரெண்டு அரிசி நறுக்கு, ஒரு அரிசி வேகவே இல்லை
வேகாத சோற்றுக்கு மோர் கொடுத்தது மூணு எருமை
ரெண்டு எருமை மலடு, ஒரு எருமை ஈனவே இல்லை
ஈனாத எருமைக்கு விட்ட காடு மூணு காடு
ரெண்டு காடு பொட்ட, ஒண்ணுலே புல்லே இல்லே
புல் இல்லா காட்டுக்கு வெள்ளி பணம் மூணு பணம்
ரெண்டு வெள்ளி கள்ள வெள்ளி, ஒண்ணு செல்லவே இல்லை”

(மேசையைத் தட்டும் ஒலி) என்ற நாடோடி பாடலைப் போலத்தான் ஆளுநர் உரை வெறும் வார்த்தை ஜாலத்தால், ஏதோ இருப்பது போல் தோன்றினாலும், (மேசையைத் தட்டும் ஒலி) எதுவும் இல்லை என்பதே எனது முடிவாக இருக்கிறது. நிறைவாக நான் சொல்ல விரும்புவது, அதிகரித்து வரக்கூடிய கடன் சுமை, பெருகி வரக்கூடிய வட்டி ஆகியவற்றின் காரணமாக பூஜ்யமாகி வரும் பொருளாரத்தில் நடக்கக்கூடிய ராஜ்ஜியத்திற்கு பொருத்தமான காகிதப் பூவாக இந்த ஆளுநர் உரை அமைந்திருக்கிறது என்று கூறி, அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[2018 ஜனவரி 11

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது, ராஜீவ் காந்தி கொலை வழக்கிலே சிறைத் தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கின்ற சிறைவாசிகளை விடுதலை செய்வதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். ராஜீவ் காந்தி கொலை வழக்கிலே சிறைத் தண்டனை பெற்று 25 ஆண்டு காலமாக சிறைவாசம் அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள். இவர்கள் சிறை சென்ற பிறகு 10 ஆண்டு காலம் தமிழகத்தினுடைய முதலமைச்சராக திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஆட்சிப் பொறுப்பிலே இருந்திருக்கின்றார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருக்கின்றபோது அந்தச் சிறைவாசிகளை விடுவிப்பதற்கு என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்பதை எதிர்க்கட்சித் தலைவர் சொல்லிவிட்டுப் பேசியிருக்க வேண்டும். எந்த ஒரு நடவடிக்கையும், ஏன் ஒரு துரும்பைக்கூட தூக்கிப் போடாத இவர்கள். . . (குறுக்கீடுகள்) ஆனால், தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் ராஜீவ் காந்தி கொலை வழக்கிலே சிறைத் தண்டனை பெற்றவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்பதற்காக வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு தீர்மானத்தை சட்டமன்றத்திலே நிறைவேற்றி, அதற்கான மேல் நடவடிக்கையை எடுத்தார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையினால், அந்த வழக்கு இப்போது உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதால் அவர்களை விடுதலை செய்வது சம்பந்தமாக இப்போது எந்த முடிவும் எடுக்க முடியவில்லை. தீர்ப்பு வந்த பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும். (குறுக்கீடுகள்) ஆனால், இலங்கைத் தமிழர்களுக்காக * பேசுவதற்கு உங்களுக்கு தார்மீக உரிமையில்லை. (குறுக்கீடுகள்)

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)*

25 ஆண்டு காலமாக சிறையிலிருக்கும் பேரறிவாளனை விடுதலை செய்ய எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் நீங்கள்? எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இத்தனை ஆண்டு காலத்திற்குப் பிறகு இந்த உலகத்தைப் பார்க்கும் வகையில் பேரறிவாளனை விடுப்பில் செல்வதற்கு மாண்புமிகு அம்மாவின் வழி நடக்கும் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று தமிழகத்தினுடைய முன்னாள் முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு 10 ஆண்டு காலத்திற்குமேல் சிறையிலிருக்கும் சிறைக் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்பதற்காக, மிகப் பெரிய அளவில் அறிவிப்புகளை வெளியிட்டிருக்கின்றார், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து குறுக்கிட்டனர்.)*

சிறையிலிருக்கின்ற அனைவரையும் விடுதலை செய்ய வேண்டுமென்று நீங்கள் சொல்கின்றீர்கள். ஆனால், 2007, 2008, 2009 மற்றும் 2010 இப்படி பல ஆண்டு காலமாக சிறைவாசிகளை விடுதலை செய்யக் கோரியபோது. . . (குறுக்கீடுகள்) சட்டவிதிகளுக்குட்பட்டு, சட்டப் பிரிவுகளிலே விடுதலை செய்ய முடியாது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். தெரிந்தே, விவகாரத்திற்காக இந்தக் கோரிக்கையை இப்போது வைத்திருக்கிறீர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், ஒரு நிமிடம் உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் பேசவில்லையா, சரி. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. தவறாக இல்லை. உட்காருங்கள். மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது அந்த வார்த்தையை. . . (குறுக்கீடுகள்) இருங்கள், இல்லை, இல்லை, full–ஆக இல்லை. அந்த வார்த்தைக்குப் பதிலாக, "வேண்டுகோள் வைக்க உங்களுக்கு உரிமையில்லை" என்று வேண்டுமானால் மாற்றிக்கொள்ளலாம் என்று நான் தீர்மானிக்கிறேன். ஆகவே, அந்த வார்த்தை நீக்கப்பட்டு, வேண்டுகோள் வைப்பதற்கு உங்களுக்கு உரிமையில்லை என்று மாற்றிக்கொள்ளப்படுகிறது. (குறுக்கீடுகள்) இல்லை, நாளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேச வேண்டும். (குறுக்கீடுகள்) இல்லை, அதனை நான் மாற்றச் சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) அந்த வார்த்தையை நான் எடுத்து விட்டேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச் சாலைகள் துறை அமைச்சர், நான் அந்த வார்த்தையை மாற்றி விட்டேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

[2018 ஜனவரி 11

பிற்பகல் 2–55

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்ன ** என்ற வார்த்தைகளுக்கு பதில், உங்களுக்கு தார்மீக உரிமையில்லை என்று மாற்றிக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, அதனை விட்டு விடுங்கள். (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொன்முடி, நீங்கள் உங்கள் இடத்திற்குச் சென்று அமருங்கள். (குறுக்கீடு) சபையை முடிக்கும் நேரத்தில், இது எதற்கு? நீங்கள், உங்கள் இடத்திற்குச் சென்று அமருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொன்முடி, உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின், உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நான் நின்று கொண்டிருக்கிறேன். திரு. ஆஸ்டின், உட்காருங்கள். (குறுக்கீடு) இது நல்லதல்ல, திரு. ஆஸ்டின், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது ஒரு வார்த்தையைச் சொன்னார்கள். அதற்கு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கடுமையாக தன்னுடைய ஆட்சேபணையைத் தெரிவித்து, அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று என்னிடத்தில் வேண்டுகோளை வைத்தார். நானும், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் சொல்லி, அந்த வார்த்தையை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டேன். அவரும் மறுக்காமல், அந்த வார்த்தையை மாற்றிக்கொண்டு, அதற்கு வேறு ஒரு வார்த்தையைச் சொல்லிவிட்டார். ஆகவே, அந்த வார்த்தையை நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்கி விட்டேன். மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன அந்த வார்த்தையை அவைக் குறிப்பில் சேர்த்து விட்டேன். எனவே, இந்தப் பிரச்சினையை இதோடு விட்டு விட்டு, அனைவரும் இந்த அவையை நடத்த ஒத்துழைப்புத் தந்ததற்கு, என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (12–1–2018) வெள்ளிக்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–57 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க **அகற்றப்பெற்றது.



## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

12. 2015–2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் இருபத்தாறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்–ஆங்கிலம்)

13. 2016–2017 ஆம் ஆண்டிற்கான சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் பத்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்–ஆங்கிலம்)

14. 2014–2015 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் நாற்பத்தொன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

15. 2015–2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் தணிக்கை அறிக்கை. [1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடல்சார் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1996) 89 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்–ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

11. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல் (2018). (மூன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

12. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல் (2018). (நான்காவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

———